123

123

43

கைமுறை அட்டவணை

123

123

Sir,

Palm leaf returned to individual on 28-12-63.

31-1-64.

[illegible]

தேதி:-25.9.63.
ஓலைச்சுவடியின் பெயர்:-"கை முறை அட்டவணை"-கட்டு.2.
உரிமையாளரின் பெயர்:- ஏ.ஆர்.பெருமாள் செட்டியார்.
இடம்:- சீராப்பள்ளி, ராசிபுரம், சேலம்.

***

1. <u>கடைத் திரவியம் குணம்</u>:-

குதிர விளைந்த காரம் முளகின் குணத்தைக் கேளாய்
அத்திரு தோஷம் போக்கும் அனல் சயித்திய முண்டாக்கும்
முத்த நோய்களை குன்மம் முதிர்ந்திடும் வாய்வு மாற்றும்
அத்த நல்லனகிருளே அக்கரம் தலை நோய் போமே.

2. சுக்கது சுரத்தை மாற்றும் சூழ்ந்திடுங் களிச்சல் மாற்றும்
விக்கலுஞ் சத்தி மாற் ம் விரும்பிய வயிற நோய்கள்
சுக்கிய யிருமல் மாற்றும் கடுகிய வாதம் போக்கும்
மிக்க தோர் பித்தம் போக்கும் மேனியுஞ் செல்வமாமே.

3. திப்பிலி யீளை காக்கும் சிதைந்திடும் வாதம்/ போகும்
அப்பு நீர் ஊக்காய்க் காய்ச்சி யருந்திடச் சன்னி போகும்
செப்பின முலையிருளே தேயுவு விளையுந்தானே.

4. விசைய னென்னுங் கடுக்காய் மேல்ட க குணம் செப்பக் கேளும்
அசைய வாதம் அகற்றி விடும் யிசைய பேச்ச் சுரைக்காய் போன்றிருக்கும்
பொய்யா தீளை சுரம் போமே.

5. தானிக்காய் குணங்கள் தன்னைத் தரணியோர் கேளு மெல்லாம்
ஆனியா மூர்ச்சை விக்கல் வாந்தியும் போகுமன்றே

நெல்லிக்காய் செய் க நெகிர் காச நேத்திர நோய் விம்மிய தோர் பித்தம் மிகப் போம் வாந்தி ரத்தம் கழிச்சலும் போகு மென்றே ஓருமே அலைதாகும் ஓங்கிய வா வாய்வு தீரும். ஓமது தேனில் கொள்ள அக்கினி மந்தந் தீரும். ஆம் வாய்வு யிருந்து மிஞ்சு அதிகாந்த வேதநூ லே. திப்பிலி மூலந்தானும் செய்திடுங் குணத்தைக் கேளீர். செப்பிய நீரில் கொள்ள சீறிய வாய்வு தீரும் உப்பிலி வேரொடுன்ன ஒருமே மூலந் தாழும் யிப்படி உலகிலுள்ளோர் யிதமுடன் அறிந்து கொள்ளே. அரத்தையின் குணத் தக் கேளீர். அ அக்கரம் சன்னி போகும். யிரைத்திடு யிருமல் மாற்றும். ஏங்கிய உதிரம் போகும். யிரைத்திடும் யிருமல் மாற்றும். ஏங்கிய உதிரம் போகும். யிரைத்திடுங் காச மெட்டு யிஞ்சி மலைபராகி சுரத்தையும் நீக்கு மென்று சொன்னது வேதந்தானே.

அக்கலாக்காரம் செய்யும் அடைவது தன்னைக் கேளீர் விக்கலும் தடிப்பு மாற்றும் மிடறுகள் பாடி விக்கும் கக்கு மரோசியங்கள் கரு நவ தோஷம் போமே. நல்ல சீரகத்தைக் குணம் நயம் பட உரைக்கக் கேளீர். மெல்லிய பித்த சுரத்தைப் போக்கும் வல்லிய வயற்றெரிச்சல் வகையுடன போகுமென்ற சொல்லிய முசுமுசுக்கை கட்டிசுழுத்திடும் பித்தம் போமே.

அரிய கத்தரி மஞ்சள் அதின் செய்கை ஆகம் தழுவிய மாத்த வாந்தி அதிசாரம் மார்கழும் தகுடல் புசார சவச்சுரம் மெய் பொலியும் பெண்களின் பங்கூறு. கருகு சன்னி காருமென்று கதித்த பெரியோருரைத்திட்டார் முருகு வாதம் பிற வலிப்பு முயலகன் குன்மம் தலை நோவு அடுத்த வாதம் தான் போமே.

இந்துப்பு பித்தமாகும் உயர்ந்த தோர் வாயு மாற்ற நம்பிய யிருமல் வாந்தி நயன ரோகங்கள் போகும். செப்பிய அதிசாரங்கள் தேனதிலருலை கோர்வை வெப்பு பாவை குன்மந் தீரும். வேண்டியே அறிந்து கொள்ளே. கருகு ரோகணி கடிய குணத்தை நீர் கேளும். படிய யிருமல் சிரங்கு சுரம் பழைய சுரங்கள திரண்ட மலம் உருண்ட மலங்கள் கனிந்திடுமே.

இஞ்சியின் குணமிதென்ற யியம்புநேருரைக்கச் சேரும் அஞ்சிடும் சன்னி எல்லாம் அமந்திடும் பித்த தோஷம் நெஞ்சினில் கோளை மாற்றும் நெகிழ்ந்திடுங் காச மெட்டும் மிஞ்சிய பஷகமென்ற விளம்பிடும் வேத நூலே. அதிமதுரத்தின் தன்மை அது குணம் செப்

படர் திரி சுரங்கள் வாந்தி பயித்திய தோஷ ரத்த விடு மல நீர்க் கடுப்பு மேவிய எலும்புருக்கி இவை வெல்லாந் தீருமென்ற யியம்பினர் முன்னுள்ளோரே.

வெங்காரங் குணமிதென்ன விதமுடனுரைக்கக் கேளு சங்கார மாகுந் தோஷந் தன்னை யேசங் கரிக்கும் முன் கனல்சுதவி யில்லார் புதரத்தில் சுரிக்குக் வாய்வு பொங்கி அங்கதை அடக்கி விக்கும் பொங்கி யிருமல் மாந்தம் போக்கிடும் நன்மை தானே.

கெந்தகத்தின் செய்கை கீள் சீதளம் போகும் சிந்த பெரும்பாடு சிரங்கு குஷ்டமுந் தின வெரிப்பு மொய் காந்திகள் தாகம் நேத்திர நோய் அனல் மூர்ச்சை போமென்றறி. இரதமே சுரங்கள் போகும் பிடிக்கிடு வாதம் போகும். கடுப்பொடு சூலை வாதங்கள் குன்மம் போகும். யிடித்தருள் காசமெட்டும் யிஞ்சியின் சாற்றில் போமே. இரதந் தனக்கு ஒன்பது தோஷம் யிருந்திடும் மலைகளே தென்னில் வியம்பவோம் கேளும். திமம் கவுங் வலியம் மியல் பதில் வாவது ரத்தம் மருவு சங்காது சண்டதத்துவம் வன்னிக்கும் ஒரு விஷ மதனால் வந்திடுந் துயரம் விளம்ப மூத்திரதால் வருந்திய சூலை நோய் பாக்கும். கருதிய கவுடில்லி யமதனால் வந்திடும் துயரம் காமாலை சூலையும் பிறந்திடும் கனத்தி யதனால் ரத்த மதற்கு நம்பிறமை கண்டிடும் சங்காத்துக்கு சருவிய எலும்பு மாங்கிஷமும் தாவியே யொன்றதாய் கடுஞ் சண்ட தத்வத்துக்குப் பரியமாய் வளர் சந்ததி யில்லாமலே போகும்.

உப்பது பித்த வாயு தப்பா யிருமல் வாந்தி நயன ரோகங்கள் போகும் செப்பிய அதிசாரங்கள் தென் வெப்பு பாவை கோவை குன்மம் போமே.

புளியது வாதத் சன்னி பொருந்தாத மருந்துக் கெல்லாம் யிதமுடன் பித்தம் ஏறிய வாயதானல் சகலமுடன் மலங்கள் கட்டு தான் குடி விட்டுப் போமே.

தின்னச்சுதம் வெட்டை சீரணமாஞ் சிக்கதிலுள்ள அன்னத்திற விஷ மறக்குமே.

நன்னயமாய் பித்த மறக்கும் பலச் சீரணம் போக்கும் உத்தமன் சீரகத்தை யுன்.

திரிகடுகு, சுக்கு, மிளகு, திப்பிலி, திரிபாலையங், கடுக்காய், நெல்லிக்காய்இ தானிக்காய், பஞ்ச மூல கசாயம், சுக்கு, திப்பிலி, திப்பிலி மூலம், செவ்வியம், சித்திரமூலம், இவை ஐந்து மாகுக் கூட பீடம் கோளி உசரம் கெசபிடம் மூள உயரம் நீ. வெருகடி மூன்று விரல் கொண்டது தேன் பிடி பெரு விரலும் சுண்டு விரல் பக்க விரல் ரண்டுலேயும் பிடி கொண்டது.

(வேறு) வாடா துடலில் குத்திருமல் வாதை சீதந் தோன்றிடும்
நாடு முயிரில் சேற்மமங்கள் அணுகா திரிய மூலிகையாம்
தேடு மருந்துங் கடைச் சரக்கு தேடி மெலிந்து திரியாதே
ஆடாதோடை யிலையந்தும் அருந்தப் பாடலிசைந்திடுமே.

குணம்:- உப்பு நீர்க் குணங்கள் தன்னை ஓதியே விளம்பக் கேளும் நப்பின்பயிருமல் வாந்தி, நயன ரோகங்கள் போகும் செப்பினேன திசாரங்கள் தேனில் அருவை கோவை வெப்பு மேல் குன்மந் தீரும் மேதினியில் விளம்புவாயே.

2. பெட்டியுப்புச் செய குன்மும் பெருகிய குன்மம் போகும்
தட்டு நீர்க் கடுப்பித்தந் தனி விலாவாதங் கோபம்
பெட்டி மேல் வீக்கம் வாடும் மேதினி தன்னிலீதங்
கெட்டியாய் தீருமென்று கிளி மொழி சொல்லுவாயே.

3. இந்துப்புச் செய்யும் குட்ச மிதின் குணமறியக் கேளும்
மூந்திய குளிர்ச்சி சீதம் மூலம் அண்ட வாதம் போகும்
சிந்தையில் கலங்கும் பித்தந் தெளிவுடன் எரிவ மத்தும்
கந்தையு மழுமான் தாங்கும் கயிலைக் காரணவன் சொன்னன்.

4. சீந்தியின் கொடிகள் போட்டுச் சீர் பெறக் கசாயங் காய்ச்சி
போந்திடக் குடித்தால் கேளும்
பொருந்திய சீதச் சன்னி பாதஞ் சேந்த தோர்விகார பித்தம் சேத்தும
சுவாசம் வீக்கம்

5. கோரைக் கிழங்கு தன்னைக் கொடுத்திடத் தாகஞ் சத்தி
வீறிய சோகை பாண்டு விகாரமும் பித்தம் கோபம்
ஆறிய அனலும் வெக்கை யகத்திடும் மூலம் போகும்
மீறிய வெட்டை தீரும் மிக்க நல்லமிர்த மென்றே.

6. புண்ணுக்குப் பூடு தன்னில் போகு மிருமல் கரப்பான் போம்
மற்றும் வலி சருவாங்கிச வாதம் பல்லறணையும் போம்
தின்னக் கொடுத்தால் சயசுவாசம் தீரும் விஷங் களிவை யெல்லாம்
என்னப் பட்டவே யிவை தீரும் மிறையோரருளிச் செய்தாரே.

7. சிறு குறிஞ்சாவும் வேரும் சீர் பெறச் சமைத்துக் கொண்டு
மருவ திப்பிலிப் பொடி வகையுடன் போட்டுக் கொள்ள
இருமலுஞ் சுவாச காசம் எலும் பற்படாகப் புல்லில்
பரிவுடன் கசாயம் வைத்துப் பசு வெண்ணெயுடன் கொடுக்க
மருவு நீர்க் கடுப்பு மாறும் வயித்தினி லெரிவும் போமே.

8. விஷ்ணு கிரந்தி செய்யும் விதந் தன்னை விளம்பக் கேளும்
மட்டிலாச் சுரங்கள் மாறல் வரும் பித்தச் சுரங்கள் போகும்
சுட்டு போல் வயிற் வலிச்சல் கொண்டிட பசறி அனல்
விட்டிடும் நிசம தாகம் விளம்புவாய் தபனி மானே.

9. பேய்ப் புடோல் கசாயம் வைத்தால் பித்தத்தின் மயக்கம் போகும்
சாப்பிட யிருமல் காச்சல் சன்னிகள் சாந்தமாகும்
வாய்ப்புடன் கொடுக்கலாகும் வகையுடன் பாய போட்டு
காச்சிட எரிச்சல் கோபம் கடும் பயம் விட்டுப் போமே.

10. சந்தனந் தன் குணத்தைச் சாற்றுவேன் கேளு மின்னே
பந்தம் போல் எரியும் அத்தம் பதட்டம் வாய் பிதற்றல் காச்சல்
கொந்திய உஷ்ணங்கள் குணமுடன் தீருமானே
விந்தை சேரமுத்த மென்று விளம்பிடும் வேத நூலே,

11. நல்லெண்ணெக் குணத்தைச் சொல்வோம் நன்மையாங் கண்ணில் நோவும்
பொல்லாத கிரந்திப் புண்கள் போதவே தீருமென்றே
தெல்லேரி வயற்றி நோவுஞ் சீய் மேகம் தேட்டி யாலும்
வல்லி சங்கப்பை மேனிச் சாறுடன் கொடுக்கத் தீரும்.

<u>காட்டு மூலிகைக் குணம்</u> :-

ஆடா தோடைக் குணத்தை யடைவுடனுரைக்கக் கேளும்
பாடாத நாவும் பாடும் பரி நவதோஷம் போகும்
வாடாது வாத பித்தம் சேற்றும ரோகம் போமே
பேய்ப் புடல் தன் குணத்தைப் பெரியவருரைக்கக் கேளும்.
கோப்புடன் குளிருங் காச்சல் குன்றிகை அக்கரங்கள்
தீர்க்கமா யரிந்து நீயுந் திடமுடன் அறிந்து கொள்ளே
கண்டங் கத்தரிக்குணத்தைக் கசாயங்கள் போட்டுக் கொள்ள
கொண்டமும் மலங்கள் போகும் ஒழித்திடும் பயித்தியஞ் சன்னி
விஞ்சிய பல புருக்கள் யிருந்திடும் யிருமல் போமே.

சீந்தியின் கொடியைத் தானே சிக்கு கஷாயங் கொள்ள
சீதமாம் சன்னி பாதம் சிறந்த தோர் விகார பித்தம்
போக்குமே சுவாச உஷ்ணம் போகுமே சிலேற்பனங்கள் வில்வத்தின் கசாயங்
கொள்ளுதில் வேருடன்னல்கள் போகும் வல்லத்த பித்த தோஷம் வாடிய மூலம்

புண்ணுக்குப் பூடு தன்னைப் பொருந்தியே சொல்வீராகில்
பொருந்திய யிருமல் கரப்பான் வந்த வலியுஞ் சருவாங்கி வாதம் போகும்

வந்த யிருமல் சிலேத்மங்கள் வகையுமான மருந்திதவே
சிறு குறிஞ்சாக் கசாயம் சேர்ந்த தோர் குணத்தைக் கேளாய்
யிருமலுஞ் சுவாச காசம் யெளிய சேத்மங்கள் போமே.
அய்ய காஞ்சொறிக் கசாயம் துலக்கமாய்க் கொள்வீராகில்
மெள்ளவே சுரங்கள் வாந்தி விடு மலபந்தம் சொல்லவே நீட சனி சுக சன்னி தீருங் கண்டாய்

சித்தாமுட்டிக் கசாயம் சேரக் குடிக்க நீர் கேளும்
பித்த சுரங்கள் அதிசாரம் பெரிய சுரங்கள் விஷ சுரம் போமே .

இலுப்பைப் பூக் குணங்கள தன்னை யியல்புடனுரைக்கக் கேளும்
களிப்புடன் சுழிச்சல் வாந்தி கட்டதிசாரம் போகும்
படுத்திடு முசுறு முட்டை பாலுடன் நசையம் பண்ண
தொடுத்த தோர் சன்னி போகும் இருப்புடன் னெரியும் பித்தம் மிவை யெல்லாம் போகு மென்றே

நீர் கடை யிருகரை நீச் செரியுஞ் காற்கடை யருகடை பெருங் களம் மாசானம்
சாத்திடை யருகிடை யருக்கு சாமம் தோற்றிய மருந்தெல்லாம் தோஷமாகுமே.

கடு நெல்லி தான்றி கனசித்திர மூலம் நடுவகு சீவதை குடி வருவளும்
கள்ளே அவளே கனங் குளலே யிம் மருந்தக் குள்ளே விஷ மென்றே யுரை
பெருவாகை பெருங் குமிள் பாதரை குரு நுன்னை குந்தொடு கூவிளை பாரில் சுக்கு
பருஞ்சதா வேரியும் நீரில் சீந்திக்கும் மேல் விஷம் செப்புமே. தேடா மருந்து
யெல்லாந் தீவினை வியாதி தீர / வாடாத வாதம் போக வடித்திடும் எட்டிலொன்றாய்
பாடிடு பித்தம் போகப் பதினறிலொன்ற தாக்கிக் கேடான சேத்மத்துக்கு கெடாத
என்னுள்கிலொன்ற வாடாத வியாதிக் கெல்லாம் வகையுடன் காச்சிக் கொள்ளே.
மனந் தனைக் குருத்தி பண்ணும் வாத பித்த முள்ளே நீக்கும் கனம் செறி காமாலை
நோய் யோற்கு மகா லோச்சலாருக்கு மாமலை போல் வயறு வீங்கி வந்தோர்க்கு
பூம் மருவு மாட்டாங் கொம்மட்டிக்காய் வந்த பலன் கொண்டார்க்குக் கெட்டோடுங்
கவுசை நோயே.
வெம்பிலா சமூரியும் மிக வருந்தவே வயற்றில், பாம்பு புகு கச்சி விழும் பார்
கிட்டெனவே கண விரணம் தீருமே வெட்டென வாதங் கூட்டம் வேண்டிய தலை நோய்
போமே. காராட்டு நீரம் வாத பித்தம் செயம் மாற் வரச்சியுடன் போதவே
தாகம் பொருந்தமே பேய் மருநீர்க் கோவை காமாலை நல் சோகை கவுசை மேல்
கொண்ட வாத குணம் விரோசனங்கள் ஒண்டாகு சீர் கொண்டு நீரறிந்த செப்பு.

(வேறு) தண்ணீர், கறிகாய், பால், நெய் குணம் என்னை தேன் ஆத்துத் தண்ணீரமு
குண்டாம் மடைத்த சினை நீர் சுசி வியாதி யில்லை வந்து குளம் நீர் வியாதியுண்டாம்
தோத் மதூ மொளிமடவீர் துலங்குந் தண்ணீர் குணமிதுவே பாசித் தண்ணீர் நோவாகும்
பகையா தோஷட தெளியுறல் நேசத் தோதல நீர் பிணியாம் நிறைந்த உளையே
குடல் வாதம் மாசித் தரல் பித்தம் வளருஞ் சுரமாஞ் சுகுறல் தேசத் தண்ணீர் தன் கு
குணத்தைத் தெளிய வுரைத்தோம் திண்ணமுமே. மாரி காலத்துத் தண்ணீர் தேவாத
சோபை தான் மாற்றம் சீறிய பனி காலத்துத் தண்ணி திரி நவ தோஷம் போக்கும்
கூறிய வெயில் காலத்து தண்ணீர் கொண்டிடப் பித்தம் போகும் காரிய மாகச்
சொல்லேன் காச்சு நீர் நமர் தோஷம் போமே.

குருந்த தண்ணீர் தன் குணந் தான் குடையுங் கழை தாறும் வரும்
நாரும் சன்னியுடனே கூடும் நயனங் கடுக்கும் வயறூதும்
வளர்ந்த உடம்பு தானிளைக்கும் மலமும் விளைய மனம் நடுங்கும்
தளருமிடை யீரரிந்திடுவீர் சங்கரனுனை தப்பாதே.
நெஞ்செரிப்பு நெற்றி வலி நங்காப் புளித் தேக்கு
வஞ்ச மிறுவாதம் வயற்று வலி மிஞ்சிய தோஷ மிருமலக் கட்டு மிக்க நோய்
சுட்ட நீராறுக்குக் கொள்ளிலரும் காய்ந்த வுற வைத்த நீர் கட்டு மலம் சத்தியாம்

வாய்ந்த அதிசார பித்தம் மாற்றி விடும் சேர்ந்து வரும் மூர்ச்சை விஷ சுரமும் மோக்காளம் உள் மயக்கம் அச்சம் பிர மேகம் போமாங்கு

உண்பதற்கு முன் தண்ணீருண்டால்/ தீபனம் போம். உண்ட பின்னீருண்டால் மத்தமாம். உண்டு பாதியில் நீர் கொள்ளத் தாது வளரும். வாளை நீர் தான் குருத்தி வன் பிலமு முண்டாகும். மோர் வயிற்றடையும் மோசமில்லை வெள் ளையிலை மின்னே ரத்த பித்தங் கிரச்சி நீரனிவு கண்ணோய் சிரங்கு போக்கான் எரும்புருக்கி போக்கும் மிளைப்பு உளலை சோம்பல் சுடர்ந்து வரும், பாண்டு ஞாழாத திரும்பும் வரம்பிருக்கு வாளை நீர் மண்டலத் தோர்க் கெல்லாம் கரும்பிருக்கு மெய் மொளியே காண் வெடித்த தோர் பழத்தை வாங்கி மெல்லிய சீலையில் கட்டி கடுக்கெனப் பிளிந்து கொண்டு கருசு நற் சீனி கட்டிக் குடித்திடத் தாகந் தீரு குருதிரு மேனி யெல்லாம் வருக் கொண்ட மேனி கன்னிருளே மாதளங் கனியின் நீரே.

தாக மாதளையின் தண்ணீரருந்தத் தாக மரம் வாத பித்த மிவை தீரும் வந்த சன்னி சுரம் பொருக்கும் சீதமாகி மெய்குளிரும் திமக்க மயக்கமது நீக்கும் வேதஞ் சொன்னார் தம் மருளால் விக்கல் சத்தி மாண்டிடுமே. மனந் தலைக நுரைத்தி பண்ணும் வாத பித்த மூளலை நீக்கும் கனஞ் செரி மலமும் நோய்கள் கண்களைக் குளிர்த்தி பண்ணும் சிறந்த அக்கினி யினைக்கு திண்மை யுண்டாகும் மெய்யில் அனல் தனை யகற்றும் பாரே அருந்தி யிளநீர் தானே.

உண்ட பின்னிள நீர் கொள்ள உறு பலவாத பித்தம் பண்டை உள் மலமும் போக்கும் பழவினை தீருந் தானே மிண்டிய நோயுமில்லை மேனியும் நலமதாகும் தீண்டிய மலமும் விட்டு தீபனம் பிறக்குந் தானே. கருத்த தோர் ஆவின் பாலே கதிரவ னொளியே யுண்டாம் சிவந்த தோர் ஆவின் பால் மெய் சிக்கென யிருக்க முண்டாம் வெளுத்த தோர் ஆவின் பாலே மெய்தனை வதை விக்கும் குறித்த தோர் குருவின் பாலே முப்பிணி தானும் போமே.

வெள்ளாவின் பால் போக்கும் பித்தத்தை மேனி சிவப்புள்ளாவின் பால் போக்கும் வாதத்தைக் கன்ன மார் காராவின் பால் போக்கும் மய்யத்தைக் கவலையின் பால் லாற்று நோய் காண். வீக்க மகோதரம் மிக்க குன்மம் பாண்டு பித்தந் தாளக்கும் மருவிய அதிசாரஞ் சினி நீக்கும். மானே திரி தோஷ பிரமிய மாம் ஆவின் மோர் தானருந்த தானே.

சத்தி பித்தந் தங்கு எருமை மலக் குடல் பிரட்டும் வற்ற குன்ம வாய்வு வயறெரிப்பு மெற்றப் பிரமியம் எரும்புருக்கி வெந்கையுட னீருவின் நெய் மேகதயின் பால் கொள்ள மீளாத வாத பித்தம் மெதப்பால் புசலிருமே அய்யம் வளரும் அசீரணம் தீபனம் போம்.

மெய்ய வினியும் புதையுமே மேதைத் தயிர் வாத பித்தம் வீக்கம் முள் வெக்கை நரும் மதிசாரம் மோருமே. மேதையின் மோர் வாத பித்த செற்மம் மகோதரம் கிரணி சயம் மீதிரைப்பு வீக்கம் விடும். எருமை வெண்ணெ நீர்க் கனிச்சல் எற்ற கன்றல் நோயும் பிறமியமும் மேல் வறச்சி சுரம்பித்தம் கிரகிரப்பு தோள் சேரும் தேமல் சொறி திவவு தான் போகும் மாதையின் முன்னே மதி.

வெள்ளாட்டுப் பால் தான் வியாதி யாம் வாதம் போம், தள்ளாடு வாத பித்தஞ் சாந்தமாக் உள்ளாடு சீத மதிசாரந் திரி தோஷம் போமே மாதே யாிவாத பித்த முண்டாம் மாருக் கிரந்தி தரும் போதப் பசியுண்டாம் போகமுண்டாம். மாதே கேள்.

அன்ன மறக்கும் மரவுறிசை யுண்டாக்கும் தெனங் காய் பாலின் குணம் கன்னிர் நோருதல் மிவை தீரும். காசல் யீளை இருமல் போம். பண்ணை மிசையும் மிகப் பாகும் பருத்த உடம்பு சிறிதாகும் உண்ணப் பாள உன்னியமாம், உறக்கஞ் சுகமு முண்டாக்கும். வன்னக் கயில் வினி மாது நல்லாய் மாற்றந் தேனின் குணமிதுவே. மாவின் காயின் குணந் தன்னை வன்மையாக உரைத்திடிலே, வாதந் தன் கிறந்தி தானுரும் வாய்த்த நாவில் புண்ணும் மாலைப் போத வன்மை காசம் வாயுவுண்டாம் செம்மதும் மாந் கண்ட நோயும் கண்ணோயும் காலில் பிளவை தானுண்டாம் பண்டு மலமுந் தான் தீரும் பச்சை மாங்காய்க் குணமிதுவே.

இறய்யினிற் குணமே தென்குல் இறப்பொடு குளிர்ச்சியுண்டாம் செய்ய கண் புருவம் நெற்றி சேர்த்திடும் வலியைப் போக்கும் மெய்யெல்லாங் குளிர்ச்சி யுண்டாம், விழியினில் ஒளியுண்டாக்கும் மெய்யும் பொன்னிறமேயாக்கும் மேனியிற் நோய்கள் போமே.

நெய் பருக கண் குளிரும். நீள் சுக்கிலம் வேண்டாம். வெய்ய பிசியில்லை. விருப்பு பித்தம். மொய் குழலே உள் வெக்கை போக்கும் உயிரை நிலை நிறுத்தும் கொள் விருத்த பா ஆம் கூற ஆமணக்கெண்ணை தன்னை அருந்திடக் குணத்தைக் கேளும், புசிடச் சந்த தோஷ பொருந்திய வாதம் போகும் சீயுடன் புண்ணும் மாறும் சிறந்தன்ன விரைய முண்டாம் தீபனந் தீர்க முண்டாஞ் சேர் முடல் வாயுவு போமே.

எள்ளெண்ணெ தன்னைக் கொண்டால் என்பது வாதம் போகும் சன்னியும் பித்தம் போ கண்ஜொலி சயநோய், காசமுதல் கடியை யாற்றும் புண்ணுள நோயை யாற்றும் பொருந்தமே வீரமுண்டாம், வன்ன மான் குழலினளே மாவிடர்க்குரையு மென்பர்.

தாக முளலை வறச்சி தீருந் தாம்பு வற்-க் கருப்பேரும் வினை சேர் கன்னிலை விளி விரும் பித்தம் ஆன பாண்டு ரோகமுடன் அதிகமான தலை நோவ கானல் வெற்கை விடாதீரு காரி மாங்காய் வற்றல் குணமிதவே.

மந்தமாம், பித்தந் தாகம் வறச்சியாய்ச் சுரமு முண்டாம்
அந்தமா யுடம்புரித்தல் வதிகமாய் வாய்வு முண்டாம்
முந்தவே சீதந் தாக்கும் முதிரவே யுண்டா மென்ற
சந்தமாம் பழத்தின் தன்மை சாற்றிடும் தரணியோர்க்கே.

விளங் கனி தன்னை விரும்பி யருந்திடில் உடலில் உஷ்ணம் உள் மலம் மறக்கும் வயம் பெ வலியுந் தீரும். தெள்ளிய தோர் தீபனமாம் விக்கல் தீரும். பொல்லாத சேற்மமம் போத வாத பித்த மகம் வில்லாய் விளாங்காய்க்குணம்.

வாத கரப்பரும் வாயுவாம் சேர்மமமாம் ஆன வயிற்றில் வரும் பேசும் அதிர்ந்து மெய்யில் நோவாகும் மேனியில் விளைந்த விளைக்கு வித்தாகும் சேராய் செறி குழலாய் பாராய் பலாக்காய்க் குணந் தானே.
மிக்க வாதங் குத மூலம் வேண்டு கிறிச்சி மிகத் தீரும்
தக்க வறச்சி கரப்பானுந் தாத சேற்மமந் தானுண்டாம்
ஒக்கச் சிரங்கு உஷ்ணமாம் ஏறுந் தாக மிகப் பெருக்குந்
தக்க மதுர மொழி மடவாய் திருமே பிலாவின் பழக் குணமே,

நிம்பக் காய் செய்கை நிகழ் காசம் நேத்திர நோய்
விம்மு பித்த வாய்வு அய்யமே தேகம் மல் பேதி ரத்தம்
காய வாய்வு பித்தம் தீஅரோசியம் நலமாகுமே தினைக்கு நல்குமே.

<u>பத்தியக் குணத்துக் கறி:-</u>

கொம்பு பாகல், செய்கை, குருத்தி தீபனம் சுகமாம். திரி தோஷ மெல்லாந் தீருமே. மிதி பாகல், திரி தோஷ மேவுமே தீபனம் போய் பித்தம் சத்திருமே வந்தலைக்குந் தான். கத்தரிக்காய் செய்கை கருது நீர்க் கட்டகலும். மிக்க சுகந் தீபனமாம் மெய் வாளை தக்கதொருமுல ரோகம் போக்கும் முத்தல் பழஞ் சன்னி சுரம் சால மிக வருமெனச் சாற்று.

சுரைக்காய் கருக்குமுத்தி சோகை *பித்தந்* தீருக் சேருமே தருக்கான கொம்முட்டிக் காய் வாயு சோகை பித்தந் தீரும். விம்மு பித்தம் வாய்வு வரும் மீண்டு. பெரு முள்ளிக்காய் செய்ன பெலம் தீபனங்கும் தரும். அய்யங் காசம் செயம் போகும் அரிய கண்டங்கத்தரிக்காய்க் குணம் பாண்டு பித்தம் மய்யம் விலக்கும் வாத மேவு நிலை புளியங்காய் வாய்வு பித்த மறக்கும் மய்யக் களிச்சல் தீபனமாக்கும் கறனைக் கிழங்கு குணம் காயம் காத்திரம் போம் மயக்கு மிக மூலங்கெட்டோடும் வரும் பிரண்டை மூல க்ஷயம் வாய கெடு முருங்கைப் பிஞ்சு கொள்ள லேபனந் திரி தோஷம் போக்குத் தீரம் நீமே
மெள்ள நெல்லிக் காயை விரும்பிய கொள்ள
கள்ளமாம் பித்தங் காசங் கண்ணினில் எரிச்சல் பித்தந்
தள்ளா மாகாதிரைச்சல் தயங்கிய கப்பு பித்தந் தள்ளிரும் ரத்த குரை தானும்.
கொள்ளிரும் வியாதிக் கெல்லாங் கட்டிடக் குணங்காமே.

<u>பத்தியத் தளம்:-</u>

கொள்ளு சாடி, மொட்டிச் காம், சோழி பன்னி செம்பிரையும்
பிள்ளை தயிறு பீக்கங் காய் பெரிய பிலாக்காய் நெல்லிக்காய்
பள்ளத் தெருந்த செப்பு கீரை பழம் சுரைக்காய் புசனிக்காய்
துள்ளப் பொரி தூதுவிளங்காய் மாயித்தலையுந் தின்னும் புளி
எள்ளத்தனை தின்பிராகில் எல்லா மருந்தும் விளந்தீரே.

கின்றுக் கீரை பிரவகத்தி கிளைத்த முருங்கையிலைச் சாறு
புள்ளிப் புடலும் புளியாரை பொன்னுங்கன்னி சிறுகீரை
அள்ளிக் கொள்ளலாந் சுரைக் கொழுந்து அரிசி பிரக்கு பரிஞ்சாவும்
வள்ளைத் துவிருஞ் சுண்டையுமாம் வகையாய் மருந்து கொள்வார்க்கே
விளவோடு கெளிறு ரவை வேண்டிய பயிறு ஆமை விரும்பிய குரவை யாகும்
இன்டிய மிறு-நெற்றலி என்றும் மீனுருந்தவாகும்.

***

<u>வல்லாதி லேகியம்:-</u> 26.9.63.

சேருங்கொட்டை சேரு.க, சித்தி கெந்தகம் பலம்.க, பறங்கிப் பட்டை சேரு.க நீர்வடி முத்து பலம்.உ, வெள்ள வெங்காயம் பலம்.உ, வாய்விளங்கம், கொத்தமல்லி க, நற்சீரகம், கருஞ்சீரகம், காட்டுச் சீரகம், வெப்பாலை யரிசி, கார்போகரிசி, வாலுளுவை யரிசி, ஓமம், சன்ன லவங்கப் பட்டை, திரிகடுகு, திரிபலையும் இது வகை ஒன்றுக்கு விராகனிடை.ஐ, எள்ளுப் படி.இ, சிறுதேக்கு, சித்திரமூலம், தேசாவரம், மஞ்சள், மரமஞ்சள், கஸ்தூரி மஞ்சள், சேருங் கொட்டை, வெட்டித் தேங்காயில் புடம் போட்டுக் கட்டவும். தேங்காய் ரெண்டு உடைத்துக் கீறிப் போட்டு இது வெல்லாம் வசுத்துப் பொடி செய்து பழைய பனைவெல்லம் பலம்.11, பாகு காய்ச்சி அதில் சூரண மெல்லாம் போட்டுப் பிசைந்து நேரம் ஒன்றுக்கு வெருகடிப் பிரமாணம் கொள்ளத் தீரும் வியாதி குலை கிரந்திப் புண், குஷ்டம், அரையாப்பு, குடைவாளை, கண்டமாலை, சகல ரணமெல்லாந் தீரும்.

<u>வல்லாதி களிம்பு:-</u>

துத்தம், வெள்ளைக் குங்கிலியம், ரசம் சமன் அமுக்கி யிலை, ஊமத்தையிலை, இந்தச் சாற்றில் கலத்தில் உரைத்து வெண்ணை போட்டு அரைத்து களிம்பு புண்ணுக்குப் போடக் கிரந்திப் புண் தீரும்.

<u>மலடுக் குறிப்பும் மருந்தும்:-</u>

மலடு யில்லாத பெண் சரீரம் யாதி யிருக்கும். மலடியானால் சரீரம் வற்றிப் போம். வயறு தடித்து யிருந்தால் பிள்ளையுண்டு. இருக்கு எட்ட கூறு வாயுவாலே பிறந்த ரோகம், அடி வயறு கல்லுப் போல் தீட்டமாம் போது நீர் விடுகிற போது வயறு சற்று நோகும்.

<u>தீட்டமாய்த் தலை முழுகின நாள் கொடுக்க மருந்து:-</u>

புளியம் வேர்ப் பட்டை, களச்சிப் பருப்பு, இந்துப்பு, சுக்கு அரைத்துக் காடியில் மூன்று நாள் கொடுக்கவும். பித்தத்தினாலே வந்தது தீட்டமானால் நீர் விடும் போது தலை சுத்தி வரும். அளலிக்கை ஆருட்ட மாயிருக்கும்.

சீந்திக் கொடி, வேப்பீர்க்கு, முத்தக்காசு சரி கூட்டி இரண்டு படி தண்ணீர் விட்டு ஒரு படியாய்க் காய்ச்சி நெய் ஒரு படி விட்டுக் குழம்பாய்க் காய்ச்சி மூன்று நாள் கொடுக்கவும். உப்பில்லாத கஞ்சி கொடுக்கவும்.

புழுவினால் வந்தது தீட்டமானால் இறைச்சி கழுவிய தண்ணீர் போலே விழும். சீந்திக் கொடி மூன்று பொன்னுங்கண்ணி வேரும் பசுவின் பாலில் ஏழு நாள் கொடுக்கவும். பாலுஞ் சோறும் உண்ணவும்.

பேயினால் வந்தது:- அடிவயறு அள்ளை பறலும் நோகும். பொன்னுங்கண்ணி வேர் எழு நாள்

ஏழு நாள் பசுவின் பாலில் கொடுக்கவும். பாலுஞ் சோறும் உண்ணவும்: ஆடாதோடை பிரமி பாகல் அமிர்த வள்ளி களச் கொட்டி குறிஞ்சா இந்தச் சாறு வகைக்கு ஒரு துட்டிடை கூட்டித் தலை முழுகின நாள் இப்படி மூன்று முறைக்குக் கொடுக்கவும் பிள்ளை யுண்டாம்.

<u>குழந்தைக் கிருமிக்கு</u>:-

கடுக்காய், களிப்பாக்கு, சுக்கு, மிளகு, காசுக்கட்டி, கருஞ்சீரகம் சரி பொடி பண்ணி நல்ல எண்ணெயில் கிளறிச் சுண்டைக் காய்ப் பிரமாணம் தயிரில் கொடுக்கவும்.

<u>பிள்ளை வியாதி குணம் மருந்து</u>:-

சுரம் வயறு மடிகுனல் சுக்குக் கசாயம் கொடுக்கவும். சன்னி வலிப்புக்குப் பெருங்காயம் பொரிந்த வேலிப் பருத்திச் சாற்றில் கொடுக்கவும்.
துவளை:- வேலிப் பருத்திச் சாறு, வெள்ள வெங்காயம், கோழி முட்டைச் செங்கருவி, கூட்டிப் பூமியில் புளியங் சிராய் எரித்துத் தள்ளிப் போட்டு அதில் விட்டுத் துவளை யிடவும். வெக்கை வெதுப்புக்கு நாக்கு வெளுறி உடம்பு காயும். தக்காளி யிலை வேலி படைஞ்சானிலையும் சாறு கொடுக்கவும்.

<u>மாந்தத்துக்கு</u>:-

வாந்தி வயறு ஓடும். சுரம் வரும். உச்சி தாழும். மிளகு, சுக்கு, பெருங்காயம், வெதுப்பிலை பொடி காட்டவரைச் சாற்றில் கொடுக்கவும்.
ஊது மாந்தம்:- சுரம் வயறு ஊதிக் கழியும். கொழுஞ்சி வெதுப்பிலை சாறும், மிளகு, சுக்கு, ஓமம், வெதுப்பிலை பொடி கூட்டிக் கொடுக்கவும்.

<u>தோஷத்துக்கு</u>:-

உச்சி தாழுங் கண் மூடியிருக்கும். உருண்டை உருளையாய் கழியும். சுரம் வரும். குன்றியிலை, மிளகு, குருத்து, மூடக் கொத்தான் துவளை யிடவும்.

<u>பசுதோஷம்</u>:-

சுரம், தண்ணீர்த் தாகம், வயறு மஞ்சள் போலே கழியும்.
மருந்து:- தண்டு வளைத் தண்ணீரில் அதிமதுரம் உரைத்துக் கொடுக்கவும். விளாந் தளை, துவளையிடவும்.

<u>புள்ளுவழி</u>:- சுரம். பச்சை கட்டி முட்டியாய்க் கழியும் கண் மயிர் அம்பு தொடுத் தாப் போலிருக்கும். கிளிவைப் பட்டைத் தளை வாய் பேசாமல் கொண்டு வந்து, வசம்பு, உள்ளி கூட்டித் தட்டி ரெண்டு பங்கு பண்ணி ஒரு பங்கு சாறு உள்ளுக்குக் கொடுத்து ஒரு பங்கு துவளையிடவும்.

<u>குழித் தோஷத்துக்கு</u>:-

சுரம் தலை நட்டுக் கொள்ளும். தாய் முகம் பாராது தாகங் கலிச்சை யடிக்கும். பிள்ளைக் குழியருகு வாய் பேசாமல் கொண்டு வந்து உள்ளி, வசம்பு கூட்டி உள்ளுக்கு சாறு கொடுத்து துவளை யிட்டு மாறு கால் மாறுகையில் கட்டவும்.
முட்டடைப்பாருக்கு:- நெஞ்சடைக்கும். மூக்கு தீக்கும்.

திப்பிலி, வசம்பு, ஓமம், உள்ளி, மிளகு, கொழுஞ்சி, குப்பை மேனி வேரு, நில விளா வேரு சரி கூட்டித் தலை மயிறு சுட்ட கரி பொருதளைச் சாற்றிலரைத்து மிளகு பிரமாணம் ஆண் பிள்ளைக்கு பெண் பிள்ளை சிறுநீரில், பெண் பிள்ளைக்கு ஆண் பிள்ளை சிறுநீரில் கொடுக்கவும்.

<u>ஏங்கல் பிளைப்புக்கு</u>:-

சுரம், இருமல், ரண்டு அள்ளை மூசிச்செடுக்கும். இஞ்சம் பால், திப்பிலி, பொடியும் வாக்கவும். மஞ்சள் பட்டை, பச்சை நெல் உமியில் வறப் போட்டு வார்க்கவும். மிளகு, சுக்கு, கடுகு, வசம்பு, ஓமம், உள்ளி கூட்டிக் குப்பை மேனிச் சாற்றிலரைத்து குன்றி பிரமாணம் பெண் பிள்ளை ஆண் பிள்ளை நீரில் கொடுக்கவும்

<u>மூட்டடைப்பாருக்குத் தவளை:-</u>

வெங்காரம், கிராம்பு, திப்பிலி, திப்பிலி மூலம்---- விட்டு அரைத்துநாக்கில் தடவின பின்பு வசம்பு நிம்பச் சாறு கூட்டி தவளையிடவும்.

<u>நெஞ்சு மாந்தம், இருமல் நெஞ்சடைக்கும்:-</u>

வஞ்சல் பட்டை சாறு ஒரு படி, பருபாகல் கிழங்கும், மாதவன் கிழங்கு நாரு விரா கன் உள்ளி, வசம்பு ஒரு படி விளக்கெண்ணை வறுத்த எண்ணை பால் வடித்து குட்டிடை கொடுக்கவும். ஒரு கட்டி வெங்காயம், மிளகு, சுக்கு, முருங்கை யிலையும் வாயிலே மென்று நசையம் விட்டு உச்சியில் தடவவும்.

<u>குளிகை சகல பிணிகளுக்கு:-</u>

மிளகு, சுக்கு, ஓமம், கடுகு, வசம்பு ஒரு உள்ளி, பெருங்காயம் கூட்டி வறுத்துக் குப்பை மேனிச் சாற்றிலரைத்து குன்றி பிரமாணம் பெண் பிள்ளை ஆண் பிள்ளை சிறு நீரில் கொடுக்கவும். வெள் பருத்தி வேர், சாறணை வேர், மிளகு தக்காளி வேர், திரிகடுகு கருஞ்சீரகம், உள்ளி, வசம்பு, கூட்டி நெய்யில் வடித்துக் கொடுக்கவும் வலிப்புத் தீரும்.

<u>மாந்தக் குளிகை:-</u>

மிளகு, சுக்கு, திப்பிலி, ஓமம், வெள்ளை வெங்காயம், வசம்பு, கடுக்காய், பெருங்காயம், ஆமையோடு சரி கூட்டி வறுத்து பொருதலைச் சா காட்டவ ரச் சாற்றில் அரைக்கவும்.

<u>கன்ன மருந்துக்கு:-</u>

கடுக்காய், பொரு செய்து பசுவின் கோமியத்தில் வேக வைத்து பசுவின் வெள்ளையி லரைத்துக் கண்ணில் போடவும். சுக்கு சாறணை வேர் காடியிலரைத்து உச்சியிலிடவும்.

<u>கெற்புக் கிரிசைக்கு எண்ணை:-</u> சித்தாமணக் கெண்ணை ஒரு படி, ஒரு உள்ளி, வசம்பு, உத் தா மணிச் சாறு வேக வைத்து முலைப் பாலில் சாரித்து வார்க்கவும்.

(வேறு)

பசுவின் நெய் ஒரு படி, சீந்திக் கொடிச் சாறு உள்ளி, வசம்பு, கூட்டி வடித்துக் காசிடை முலைப் பாலில் வார்க்கவும்.

<u>கெற்ப விப்புருதி, கெற்ப சீரிக்கு எண்ணை:-</u>

நிலையாவாரைப் பொடி பலம்.க, கடுக்காய்.3, மஞ்சள், இந்துப்பு, வசம்பு, உள்ளி, ஆமணக்கு எண்ணையில் வேக வைத்து வேப்பீர்கு கடுக்காய், கல்லுப்பு, பிறண்டைச் சாற்றிலரைத்து ஆமணக்கு எண்ணையில் வடித்துக் கொடுக்கவும்.

<u>குழந்தைக் கிணிக்கு:-</u> கடுக்காய், கலிப்பாக்கு, காசுக்கட்டி, சீரகம், கருஞ்சீரகம் பொடி பண்ணி இருப்பு,க கறண்டியில் வறுத்து நல்லெண்ணை விட்டுக் கிளறிச் சுண்டைக்காய் மாதிரி தயிரில் கொடுக்கவும்.

<u>வாதத்துக்கு மருந்து:-</u>

சுக்கிரெரு திப்பிலி தலைத்த மூலம் திக்குக் கொடி வேலியுஞ் செவ்வியமு நருக்கி ஒக்க பிரு. அக்குடி நீருண்டிடவு மன்றே. அக்கினி யெப்பி யிரும் மதில் வாத மெல்லாம் போமே.

சுக்கு, திப்பிலி, திப்பிலி மூலம், செவ்வீகம், சித்திரமூலம் அஞ்சு பஞ்ச அக்கினி சரி கூட்டி சாட்டு முருங்கைப் பட்டைச் சாற்றிலரைத்த சுண்டைக்காய் பிரமாணம் வெந்நீர் தேனில் கொள்ளச் சகல வாதந் தீரும்.

<u>பித்தத்துக்கு மருந்து:-</u>

கண்டங் காலி பிருவெலி கரிய விட்டு வாய் விளங்கம்
வண்டார் குழலே தளசி குமிழ் வரிதங் கோட்டடம் செங்கழுநீர்
அண்டங் கரிய காஞ்சரி அரியகளை செவ்வீகம்
தென்(ட) கரிய பித்தத்தை சாதிக் கசாய மிதுதானே.

கடுகுரோகணி சரி கூட்டி இள வெந்நீரில் கொடுக்கவும். பஞ்ச தாரம் யிரு களஞ்சு பருத்த மதுரம் யிரு களஞ்சு, யிஞ்சி, திப்பிலி யிரு களஞ்சு ஏலந் தானும் ஒரு களஞ்சு அஞ்சு கூட்டிப் பொடி பண்ணி ஆவின் பாலில் கொண்டிடவே யிஞ்சிய பித்தம் வெள்ளோக் காளம் உடல் நடுக்கும் அஞ்சிய பித்தம் நாற்பதும் அடவாய்த் தேடி ஓடுமே.

சேற்பமத்துக்கு மருந்து:-

கண்டங் கத்திரி யிண்டம் வேர் கடய தெத்தான் வேர் கூட்டி
மஞ்சு சுக்கு மஞ்சள் திப்பிலி மதியாய்க் கூட்டிக் கசாயத்தில்
திண்டந் தேனைத் தான் கூட்டி திரிநிடலே [illegible]
அன்ற சேர்ம யிருமலெல்லாம் அடவாய்த் தேடி ஓடுமே.

திரிகடுகு. தெசாவரம் தேனில் கொடுக்கவும்.

வாத சன்னிக்கு மருந்து:-

கண்ணும் வாயு மிசிவிக்கும் காலுங் கையும் அசைவிக்கும்
என்னும் நாக்கு சொல் தாழ்ந்த யியல் கேள் செவியுஞ் சிள்ளென்னும்
புண்ணைப் போல உடம்பு நொந்து பொல்லாக் கிறுவாய் உடல் பொருளும்
வண்ண மிவை தான் கண்டாக் கால் வாத சன்னி குணமிதுவே.

இதற்கு மருந்து:-

கடுக்காய், நெல்லி தானிக்காய், கமல த் தண்டு தேவதாரம் அடுக்கு முத்தம் விலாமிச்சம் அதுவுஞ் சந்தனங் கடுகு ரோகணி நடுக்குப் பேயின் புடல் கற்று நவரப் பெரிய வேப்பலகு படுக்கு பங்கம் பாளையின் வேர் வெற்பாலை அரிசி கொள்ளே.

க களஞ்சி ஓர் ஒன் கொண்டு நசுக்கி யிரு நாளி
அள்ளே தண்ணீர் ஒருளக்காய் யடவாய்க் காய்ச்சி யருந்திவிட
உள்ளே நின்ற சன்னி ஊாலைக் களிச்சல் அதிசாரம்
நில்லா தெவர்க்கும் யிது குணமாம் மீறுஞ் சன்னி வாதமுமே.

பித்த சன்னி மருந்து:-

பெருகு பித்தச் சன்னிக்குப் பிதத்துச் சிரிக்கும் முகஞ் சுளிக்கும்
புருவ நெரிக்கும் வாய் பிதத்தும் பேர்த வெருக்கு நாவு மேனி யெங்கும்
கரிய களிச்சலுண்டாகும் காலனிதுவே கண்டு கொண்டு
அரியும் அயனும் அரனவனும் அருளிச் செய்த அட்விதுவே.

மருந்து:- சுத்தாணைச் சருடனே கண்டங் காலி கருவேப்பந் தளை கொம்பு
முத்தங் கல்கன்று கடுகுரோகணி முந்திரிப் பருத்துடனே பிசைந்த சாறு
வத்தாத பலைப் பாகு முகந்து கூட்டி வளமாகவே வடித்துக் கொள்ளப்
பித்தமுடன் சன்னி பதினொ தோடமும் பிரகாசமுடனே பறந்து போகும்
தானே.

சேற்பம சன்னி மருந்து:-

சேற்பம சன்னிக் குணங் கேளீர் தீர்க்கமாய்க் கருத்து வீங்கும்
வேர்க்கும் அவத்தும் யிரு கண்ணுஞ் சொருகி வரும்------
சேற்பம சன்னி யென்று நீ பகருவாயே.

மருந்து:-

சூடாதோடை [illegible] தவளை அதுவுங் காஞ்சரி கண்டங்கத்திரி
ஓடா---மேவுந் திரிகடுகு மோடா பத்து ரண்டு பண்ணி
முதிர்ந்த கசாயம் வடித் தெடுத்து கேடாய் திப்பிலிப் பொடியுடனே
தேனுங் கூட்டிக் கொடுப்பீரே.

தெசாவரந் திரிகடுகு தேனில் கொடுக்கவும்.

பழைய சுரத்துக்கு, வாத தோடத்துக்கு மருந்து:- சீந்தில் தளை வாட்டிப் பிழிந்த சாற்றில் சர்க்கரை சாப்பிட வேடி கட்டிக் கொடுக்கவும்.

வயிற்றுக் கடுப்பு அசாத்தியத்த மருந்து:-

கண்டங்கத்திரி, ஆடாதோடை, கடிய தோர் சித்திரமூலம்
மஞ்சுந் திரிகடுவுடனே மஞ்சள் மரமஞ்சள் கூட்டி
பஞ்சு படியே கஷாயமிட்டுப் பருகுந் தேனுங் கூட்டருந்த
வண்டமுள வலி ஐன்ம வாந்தி சுவாச எரப்பிளைப்பு
கண்ட கை காலெரிப்பு எல்லாங் காசஞ்சமாய் விடுமே.

மிளகு.3, வெங்காரம்.3, அனிஞ்சிக் கொட்டை.8, சூரணம் பண்ணித் தேனில் கொள்ளவும்.

பயித்திய தோஷந் தீருக்கு மருந்து:-

பொன்னாங்கண்ணி தன்னி விட்டான் பெருந்தும் வள்ளிச் சாறு வகை அரைப் படியும்
தென்று தேத்தான் கொட்டை பலர் தெரியப் பசும் பால் தனிலரைத்து
நன்னு நெய்யுஞ் சக்கரையும் நன்மைக் காய்ந்த பதத்தடனே
நமக்காக கொட்டைப் பாக்களவு கொள்ள குறையும் பித்த சுரம் கொடி யிருமல்
சுவாசம் ரத்த பித்தம் நில்லா தெவர்க்குங் குணமாமே.

ஆவரை, பழச்சாறு, ஒரு படி சீரகம், மிளகு, திப்பிலி, வெங்காரஞ் சர்க்கரை
கூட்டிடை சரி கூட்டிப் பிபசுவின் நெய் விட்டு பதமாகக் காய்ச்சி விராகனிடை கொள்ளவும்.

சேற்பம தோஷ மருந்து:-

கண்டங் கத்திரி வேர் மஞ்சள் கரிய நாக வேர் பாலரிசி திரிகடுகு
கொண்ட தேனுங் கூட்டியிட கொடிய சேற்பமம் போய் விடுமே.

கொடிவேலி, வெங்காரம், நவச்சாரம், திப்பிலி, திப்பிலி மூலஞ் சரி கூட்டி தேனில்
கொள்ளவும்.

மூன்று வகை தோஷ சுவாசத்துக்கு:-

வல்லை வேர்; முந்த முதந்த கொடிவேலி, விலாமிச்சம், வெட்டி வேர் கோஷ்
டம், அதிமதுரம், தக்கோலம், கோரோசனை, கடுகுரோகணியும் கொட்டிச் சாந்து
வெங்காரங் கூட்டிச் சரியாய் மிளநீரில் மட்டுப் படியே தானரைத்து மருந்து இலந்தை விரை
யளவு மட்டாங் ஒரு மண்டலங் கொண்டிடவே வண்ட திரி தோஷம் வகையுடன் சுரம்
யிருமல், சுவாசந் தோஷ மெல்லாங் குறைந்திடுங் குணங்களாமே.

துய்ய சிறு காஞ்சரி வட்டத் திருப்பி வேர் ஆவரை நன்னாரி வேர்
ஐய்ய ஆடாதோடை சிறுவழுதிலையுடன் செய்ய கண்டங் கத்திரி வேர்
துய்ய தோர் நெல்லி முள்ளி சுக்குக் கடுக்காயுடன் தானிக்காய் கூட்டியே
உய்யவே திப்பிலி தேனுடன் உழக்கு நக்க ஓடுருந் திரிதோஷ சுரமே.

இலந்தையிலை நன்னாரி சீந்தித் தண்டு யிருவேலி விலாமிச்சம் எதில் பூகம்
கலந்த தொ பேய்ப் புடல் முத்தக்காசு கோஷ்டம் சுக்குடனே ஆடாதோடை
நலம் புகழு முலைப் பால் மிஞ்சிச் சாறு சமமசு குடிநருஞ் சரியாய்க் கூட்டி
உலந்த தோர் திப்பிலி யேற் பொடியைத் தூவி உகந்து கொள்ள விகாழ
சன்னி விஷ சுரமும் போமே.

ஆடாதோடை கண்டங்கத்திரி, பெருத்த அரத்தை கடுக்காய், இந்துப்பு,
அசமதாகம், சுக்கு, வெள்ளுள்ளி உரைத்த அக்கலாகாரம், பெருங்காயம் அரைத்த
திப்பிலி கஷாயமிட்டு தேன் வெந்த வெங்காரங் கூட்டி யிட யிரைத்த காசஞ்
சுரம், யிருமல், யீளை யிரைப்பு, போய் விடுமே.

சுரம் யிருமல் அதிசாரம்:-

நல்ல திப்பிலி சுக்குடன் வல்ல கடுக்காய் வெங்காரங் கூட்டியே
தெல்ல தேனில் குழைத்த முழுங்கிட யில்லை யில்லை யீளை யிருமலே.

பங்கஞ் சுடு மலைதாங்கி பகம் ஙிாா வேர் அதிவிடையும்
பொங்க உலையில் வெந்த தண்ணி பொருந்த அவிரி மருந்து பனவிடையும்

தங்க குடிநீர் மூன்று நாளே அங்கந் தந்த அதிசாரம் அன்றே அகலுங் கண்டாயே.

<u>வாத சுரத்துக்கு மருந்து</u>:-

ஆடாதோடை வேர் யிலையும் அதிலே ஒரு களஞ்சு கொண்டு
வாடாதிருந்த சீந்தி வளருந் தண்டு மீராறு
கோடாதிருந்த மிளகு பொடி களஞ்சு கூட்டிக் குடிப்பீராய் வாத சுரம்
போமே.

<u>வாத சுரக் கசாயம்</u>:-

கூறிய திப்பிலி நன்னாரி கன்னி தாமரை கொத்தமல்லி
மருவிய சுக்கு சமன் கூட்டி யளந்தே காய்ச்சிக் கொள்வீராய்
அருவிய வாத சுரம் குளிருக் கடவாய்க் கொன்று குடிநீரே.

<u>பித்த சுரத்துக்கு மருந்து</u>:-

நெல்லி முத்தம் நிலவேம்பு நெருக்க சந்தனங் கடுகு
வல்ல கோரோசனை முந்திரிப் பழம் சரி கூட்டி வந்த கசாயங் குடிப்பீராய்
வெந்த பித்த சுரம் போமே.

கண்டங்கத்திரி, சா தவனை, கரிய விட்டு வாய் விளங்கம் வண்டார் குழலி அளசி குயின் அடங்கரிய பித்த சுரங் குளிருந் தெசாதி கசாய மிதுதானே.

<u>சிலேத்தும சுரத்துக்கு மருந்து</u>:-

நல்ல முள்ளி அ தவனை நாடிய முத்தம் பற்படாகம்
வில்லைப் பத்திரி நன்னாரி விரிய முன்னை நிலவேம்பு
வல்ல சித்திரம் கொத்தமல்லி வகையா மிவை சீந்தியுடன்
செல்லன் திப்பிலி சுக்குடனே சேரக் காச்சிக் கொள்வீராய்
அல்ல சேத்தும சுரங் குளிருக் கடவாய்க் கொன்றுங் குடிநீரே.

<u>சேத்தும வாத சுரத்துக்கு மருந்து</u>:-

சீந்தி சுக்கு நற்சீரகம் சிறந்த விலாமிச்சம் காந்து முத்தம் அகில் கிராம்பு
-----சித்ரம் பொலி
சந்தனந் திப்பிலி கொத்தமல்லி சரியாய் காய்ச்சி கொள்வீராய்
ஆய்ந்த வாத சேத்துமத்துக் கடவாய்க் கொன்றுங் குடிநீரே.
கொத்தமல்லி மிளகு களஞ்சு கொய்த் சுக்கு மிது களஞ்சு
அத்தந் சரியாய்த் திப்பிலியும் அடவாய்க் காய்ச்சி அருந்திடவே
பித்த வாத சுரங் குளிரும் பெரிய தாகம் மிவை பேரப் போமே.

<u>சேத்தும வாத சன்னி மருந்து</u>:-

முத்தக்காசு வேப்பம் பட்டை முதிர்ந்த சிறுகாஞ் சரியும் சீந்தித் தண்டு
சுக்குத் திப்பிலி சேரக் காச்சிக் கொள்வீராய் ஆய்ந்த சேத்தும
வாத மடங்குஞ் சுரங்கள் தீர்ந்திடுமே.

<u>சேத்தும வாத பயித்திய சுரம் மருந்து</u>:-

மஞ்சள், மரமஞ்சளொடு முத்தக் காசு மகிழ்ந்த விலாமிச்சமொடு அதிமதுரங் கூட்டி கொன்றை யிலை சரியாய்க் கூட்டிக் கசாயங் கொள்ள இந்த வகை திரி தோஷ சுரங்கள் போமே.

<u>திருகு சன்னி வாதம் மருந்து</u>:-

கண்டங் காலி வட்டி வட்டத் திருப்பி கடியதோர் ஒன்று ஒன்று அரைப்பலம் கொண்ட களஞ்சு ஓமம், சுக்கு கொடிய மிளகு உள்ளி திப்பிலி அண்டா புகையுந் தொண்டை யிலை அடவாய் மீது வெங்காரம் திட்டந் தேர்ந் தான் கூட்டித் திரமான நல வயிரவனை கொண்டங் களாவிக் கூட்டியிடக் கொடிய சன்னி போய் விடுமே.

மஞ்சேசிலே எலுமிச்சஞ் சாற்றில் ஊற விட்டு எலுமிச்சஞ் சாற்றிலரைத்து சிறு பயறு பிரமாணம் உருண்டை பண்ணி இஞ்சிச் சாற்றில் ஒரு குளிகையும் வெங்காரம் அசுவி பொரித்து ஒரு பணவிடை கூட்டிக் கொடுக்கவும். ஐந்து என்னை வகைக்கு ஒரு பிடி நொச்சி தநாய் கஞ்சாங் கோரை சிறுகுதலை ஆடாதோடை வகைக்குப் படி சார அதிமதுரம் சந்தனம், பெருங்குப்பை, ஏலம், லவங்கம், நல்ல சீரகங், கருஞ்சீரகம், திரிபாலையும், அதிவிடையம், அரத்தை மரமஞ்சட்டி மஞ்சள், நாகப்பூ, நிலவேம்பு, வேப்பம் பட்டை, முட்காவளை, தேவதாரம், வசம்பு. கோஷ்டம், கடுகுரோகணி, கர்கடக சிங்கி, சிறுதேக்கு, கஸ்தூரி மஞ்சள், சங்கம் வேர் வகைக்கு விராகனிடை கூட்டி வடித்து உள்ளுங் கொடுத்து மேலும் பிடிக்கச் சகல சன்னி திரிதோஷ சன்னியுந் தீரும்.

<u>விஷ சுரம்:- கெர்ப்பிணி சுரம்</u>:- 27.9.63.

ஒரு நாள் விட்டொரு நாள் வரும். இரு நாள் விட்டொரு நாள் வரும். ஒரு நேரம் விட்டொரு நேரம் நேரம் வரும். ஒரு விடவு ... ஒரு ...டக் காயும்.

பெருகிடப் பிடியெ டென்னும் பின்னையும் வன்னத் சொல்லும்
வெருவிடப் பருதி ... விஷ சுர மென்னலாமே.

நெல்லி தான்றி வேப்பலகு நீண்ட சீந்தி கொத்தமல்லி
நல்ல முத்தக் காசுடனே நருக்கி வைத்த நீர் விட்டு
வல்ல எரித்து உமுக்காக்கி வருந்திக் குடிக்க வல்லீராய்
நில்லாதோடும் விஷ சுரம் நிலையுங் குலையுங் கண்டாயே.

ஒரு பல நெருஞ்சி வேரும், இரு படி ப...வின் பாலில் காய்ச்சிக் கொடுக்கவும். சுக்கு, மிளகு, லெங்காரம், துளசி, நொச்சி, கஞ்சாங் கோரை என்னைச் சட்டியில் கொதிக்க வைத்துக் கொடுக்கவும்.

<u>அதிசாரம் ... சுரம்</u>:-

நெரச்சி அத்திப்பட்டை சுடு வசம்புக் கசாயம் கொடுக்கவும். கருவேப்பங் கொழு மலைதாங்கி சுக்கு, சீரக கசாயங் கொடுக்கவும். இந்தக் கசாயத்தில் திப்பிலி கூட்டி செரியமத்திறல் வரும் கழிச்சலுக்கு கொடுக்கவும்.

ஆவின் பாலுடனன்புறு சீனியும், நாவில் சாத்திர வேதியும் கூட்டியே, பாவு நாற்பது நாளை தான் குடி, பாவி யுள் சுரம் ஓடிப் பதுங்குமே.

திரிகடுகு, கடுகுரோகணி, கடுக்காய் அரைத்து இள வெந்நீரில் கொடுக்கச் சுரம் விடும்.

<u>விரோசனம்</u>:-

சீந்தித் தண்டு களிப்பாக்கு சிவதை வேருங் கடுக்காயும்
காய்ந்த மிளகு சுக்கு கடுகு ரோகணி கசாயமிட்டு
காய்ந்த எந்திரியைனாள் முலைப் பாலுடனே தான் கூட்டிக் கொடுப்பீராம்
மாந்தமான சுரம் விட்டு மலமுங் கழியுங் கண்டீரே.

<u>நசையப் பொட்டணம்:- வாதத்துக்கு</u>:-

நொச்சிக் கொழுந்து உள்ளி, வசம்பு நருக்கி நசையமிடவும். வாத சோகை தீரும். பித்தத்துக்கு மஞ்சள் வெத்திலையும் நருக்கி நசையம் விடவும். பித்த சோகை தீரும். செற்பனத்துக்கு மரு சுதைங்கு நவச்சாரமும் விடவும். ... ... கூட்டி விடவும்.

<u>சேத்தும சோகை</u>:-

பெருமருந்து வேர் விரையும் பேய்ப்புடல் வேர் சரி கூட்டி வெந்நீரில் விட சுரம் சன்னி வலிப்புத் தீரும். விளக்கெண்ணை மிளகு பொடியும் விடத் தோஷந் தீரும். அகத்திப் பருப்புச் சாறு சுக்கு, திப்பிலி, சயிந்திர லவணம் கூட்டி விடக் கபால

வாய்வு, தலை நோவு, தலை யிடிப்பு, யித்தனையுந் தீரும்.

முத்தின தேங்காய் முதலுள்ள சீரகம் வெற்றி வசம்ப வேப்பெண்ணெயிடன் வைத்து சேர்த்திடவும் ஒடுஞ் சன்னியே.

பதின்மூன்று வகைச் சன்னி குணம் மருந்து:-

1. தாந்தரிக சன்னிக்கு:-

நன்னாரி பெருமருந்து சிறுபீன்றி வேரும் நற் மகிளா சிற வேரும் அவுரி வெள்வேல் பன்னுருச் சிறுகாஞ்சொறி சாரணையுங் குப்பை மேனி வெள்ளுள்ளியுடன் எட்டிலொன்றுய்க் காய்ச்சிக் கொள்

யிதமன நல்லெண்ணெயில் யிதுவே சுட்டு பதமான வடி என்னை தலை நாசி செவியில் விட்டுப் பார் உடலெல்லாம் தான் பிடிக்கத் தீரும்.

(வேறு) சித்தமல்லி பெரிய மல்லி சீந்தி சுக்கு, சிறந்த

திப்பிலியுடனே பற்படாகம் நாறுடன் வசம்பு ஓமயிச்சமொய

கண்டங்கத்தரி கய்த் தகடு குரோசாணியும் ஆடா தோடை கடுகெனவே எட்டி

லொன்றாய்க் கசாயங் கொள்ளே.

2. பிரலாப சன்னி மருந்து:-

சீரான சிறுவந்திலையும் முத்தக் காசம்

சிறந்த சிறுகாஞ் சொரியும் நிலத்தில் மேவு

பேறன பொன் முசுட்டை சரியாய்க் கூட்டி

வீராளி நீர் விட்டு உழக்காய்க் காய்ச்சி இன்பமுடன் கசாயம் இறக்கிக் கொள்ளே.

3. சித்த விரமை சன்னி மருந்து:-

சீந்தி சாரணை வேருடனே சிறந்த வெலிப் பருத்தி

வேங்குமே வந்து கொழுந்துடனே உள்ளி வசம்பு

விளக்கெண்ணெயில் வடித்த உள்ளங் கொழுத்த மேனியிடே

யிந்த மருந்து தானே கசாயம் பண்ணவும்.

சிறுகுக சன்னி மருந்து:-

சீந்தியு முத்தக் காசு சிறந்த குவளை வேர் நொச்சி

ஆய்ந்த சுக்குடன் கொத்தமல்லி சேர்ந்த பேய்ப்புடல் சித்தர் மூட்டி

சிறந்த பேராமுட்டி விலாமிச்சம் வேர் நன்னாரி கடுகு ரோகணியுங்

காய்ந்த நீ ரெட்டிலொன்றுய்ச் கசாயங் கொள்ளே.

4. ஆந்தக சன்னி மருந்து:-

ஆடாதோடை அவலை அகில் நல்ல சீரகம் முத்தம் பற்படாகம்

வாடா சித்தர் மூட்டி சிறு வழுதலை குவளை நன்னாரி

கடும் யிப்பை திரிகடுகு கொத்தமல்லி கடுகுரோகணியுங் கூட்டிக் கசாயங் கொண்டிடுமே.

5. ருக்கு வாத சன்னி மருந்து:-

முத்தக்காசு பற்படாகம் முதிர்ந்த ஆடாதோடை அவலை

சித்தர் மூட்டி சிறு வழுதலை சிறந்த சந்தனம் யிலுப்பைப் பூ

கோத்தாய் நீ ரெட்டிலொன்றாய் கட்டிக் கசாயங் கொடுப்பீரே.

6. கண்டக சன்னி மருந்து:-

ஆடாதோடை திரிகடுகு அறுகு திரியலையங் கோடு மஞ்சள் மஞ்சளுடன் கூட்டு வெண்பாலரிசி கடுகுரோகணியும் ஏடாதிருந்த நீர் தன்னில் எட்டிலொன்றாய்க் கொள்வீரே.

7. பக்கு நேத்திர சன்னி மருந்து:-

திரிகடுகு கோஷ்டம் சீரகம் மஞ்சள் கூட்டி பருகிய நீர் தனனில் பத்தொன்றாய்க் காச்சிக் கொள்ளே.

8. அபிநவ சன்னி மருந்து:-

அத்திப்பட்டை, சுக்கு, குப்பை, தேவதாரம், மஞ்சள், முத்தக்காசு கூடக் கசாயம் எட்டிலொன்றாய்க் கொடுக்கவும்.

9. ரத்த தோஷ சன்னி மருந்து:-

பூசனித் தண்டு, சுக்கு, புதிய சிறுவழுதலையும் பற்படாகம், நன்னாரி தண்டு தேசாவரம் நாட்டி லெட்டி லொன்றாய்க் காய்ச்சிக் கொடுப்பீரே. (திரிகடுகு, கோஷ்டம் மஞ்சள்).

10. சீதாங்க சன்னி மருந்து:-

அத்திப் பட்டை, சுக்கு அரிசி பெருங்குப்பை தேசாவரம், முத்தம் சந்தனம் எட்டிலொன்றாய்க் கசாயங் கொடுக்கவும்.

சுரவ சன்னிக் கசாயம்:-

சீந்தி, சுக்கு, ஆடாதோடை, சிறுவழுதலை, சித்தாமுட்டி, நெய்தல், பற்படாகந் திப்பிலி, சமமாய் கசாயம் எட்டி லொன்றும் காய்ந்த நீருங் கொள்வீராய், கலந்த சன்னிகள் ஓடிடுமே. மொசலை வேர் ஐந்து எள்ளை, வெள்ளை வெங்காயம், வசம்பு கூட்டிப் புகை போடவும்.

சகல சுரம், சகல தோஷம் நசியம்:-

சுரத்துக்கு நவச்சாரம், கோரைக் கிழங்கு தேன் கூட்டி விடவும். நாலா மாற தலைக்கு கழுதை எலும்பு சுட்டு மூத்திரத்தில் நசியம் விடவும். வலிப்புக்கு வெள்ளை வெங்காய தயிலம் இஞ்சிச் சாறு விடவும். விக்கலுக்கு இஞ்சிச் சாறு விடவும்.. திரிகு சன்னிக்கு மருக்காரைக் காய்ச் சாறைக் கொழுந்து, நல்ல வேளை, கொழுந்து வெள்ளுள்ளி, வசம்பு நசுக்கி முலைப் பாலில் வலது புறத்துக்கு இடது புறமும் மூக்கிலும் காதிலும் விடவும். முசல் வலிப்புக்கு பச்சை பழுத் தோலும் திப்பிலியும் அரைத்து உள்ளுக்கு கொடுத்து நசியம் விடவும். சுரம், சகல சன்னி, சோபம் மயக்கம்:-

வாத சன்னி சோபத்துக்கு மயக்கம். நொச்சிக் கொழுந்து வெள்ளைப் பூண்டு விடவும். பித்த சன்னி சோப மயக்கத்துக்கு மஞ்சள் பொடி வெற்றிலைச் சாறு விடவும். சேத்தும சன்னி சோப மயக்கத்துக்கு மெருகந்கிழங்கு நிலவட்சாறு விடவும். சகல சன்னிக்கு குப்பை மேனி வேர் ஒருக் கொட்டைப் பூண்டு ஆண் பிள்ளைக்கு பெண் வசம்பு கூட்டிச் சிறு நீரிலிடவும்.

வலிப்புக்கு:-

எருமை முட்டைச் பூச்சி ரத்தம் பிராவில் நடவி பொடி செய்து ஆண் பிள்ளைக்கு பெண் நீரில் விடவும்.

வாதம் உ தவாய் பேசாமலிருந்தால்:- இலுப்பைப் பூ கல்லுப்பு, வெற்றிலை முலைப் பாலில் நசியம் விடவும். நேத்திர வாய்வு கண்ணில் வியாதி தொண்ணூற்றுக்கு நசியஞ் சுக்கு, பச்சை கற்பூரம், சீனி, கல்கண்டு பலவிடை சரி கூட்டி முலைப் பாலில் மூக்கில் மூன்று நாளைக்கொருக்கால் மூன்று நசியம் விடவும். அரையாப்புக்கு நசியம் விடவும். வேளை வேர், வெள்ளைப் பூண்டு, வசம்பு, மிளகு, புழுங்கலரிசி கூட்டிச் சிறுநீரில் விடவும்.

வாத சோகை பித்த சோகை சேத்தும சோகை ஆகும் மருந்து:-

வாதசோகைக்கு நொச்சிக் கொழுந்து வெள்ளுள்ளி, வசம்பு, கூட்டி இடவும். பித்தத்துக்கு வெற்றிலையும் மஞ்சளுமிடவும். சேத்துமத்துக்கு மெருகந் கிழங்கு நவச்சாரங் கூட்டி இடவும். தொந்தத்துக்கு மூன்றுங் கூட்டி இடவும். மலை தாங்கி சீரகம், பத்திர முட்டி பஞ்ச ஆமம் மூசி மஞ்சள் கையாந்தகரை நீர்முள்ளி கசாயங் கொடுக்கவும். மூன்று வகையுந் தீரும். தேன் கூட்டி இடவும். சித்திரமூலம், திப்பிலி, பத்திரமுட்டி, சீரகம், தேவதாரம், ஏலக்காய், மேற்காட்டை மஞ்சள் மூளைத் திப்பிலி வசம்பு சரி கூட்டிச் சூரணம் நாகு விராகனிடை வெந்நீரில் கொடுக்கவும்.

காமாலைக்குச் சூரணம்:-

பழுபாகல், கீழாநெல்லி எருக்கம் பூ நின்றுச் சூரணம் பண்ணி வெருகடிப் பிரமாணம் வெள்ளாட்டுக் கோமியத்தில் கொடுக்கவும். பித்த காமாலைக்கு கொடுக்கவும். வறக் காமாலைக்கு மோரில் இருமலுக்கு தேன் திப்பிலி கூட்டவும்.

விஷவாதம் மருந்து:-

குமாரத்திப் பட்டை ஒரு பிடி, கம்பரிசி ஒரு பிடி, களிக் கிளறி மூன்று நாள் நெய் வார்த்துத் தின்னவும். உப்புப், புளி விடவும். பிடங்கு நாறிப் பட்டை குமாரத்திப் பட்டை, கய்யாந்தகரை நீர்முள்ளி, சங்கம் வேர், நீர்ப் பாலை வேர், கடுக்காய், மிளகு, கசாயம் போட்டுக் கொடுக்கவும். சங்கம் வேர் ஒரு எலுமிச்சங் காயளவு அரைத்து ஒரு பிடி, நெல்லரிசி யரைத்து ஒரு படி எருமை மோரில் குழப்பி மூன்று நாள் கொடுக்கவும். உப்பு, புளி விடவும்.

பாண்டு ரோகம்: மருந்து:-

கடுக்காய் சூரணம் வெள்ளாட்டுக் கோமியத்தில் கொடுக்கவும். நீர்முள்ளி வேர், சீந்திற் கொடி, சுக்கு, மிளகு கசாயங் கொடுக்கவும். ரச பற்பம், சொர்ண பற்பம், தாம்பிர பற்பம், சமானங் கூட்டி எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து பின்பு ரெட்டிப்பு கெந்தகங் கூட்டிப் பொன்னாங்காணிச் சாற்றிலரைத்துக் கடுக்காய் சூரணம் சர்க்கரை கூட்டிக் கொடுக்கவும்.

சேற்கும பாண்டு ரோகம்:-

காமேசுர ரசம், ரசம், கெந்தகம், கடுக்காய்.3, சித்திரமூலம்.3, பத்திர மூட்டி.6, தாளிசை பத்திரி.8, திப்பிலி.8, மிளகு.1, திப்பிலி மூலம்.1, நாகேசரம்.1, ரேணுகம்.3, பழைய வெல்லம்.5, கல்வத்தில் வைத்து ஊமத்தஞ் சாற்றிலரைத்து இலந்தைக் கொட்டைப் பிரமாணம் தேனில் கொடுக்கவும்.

தோஷ சோகை பாண்டு ரோகம்: மருந்து:-

மெருகன் கிழங்கும், மிளகு பொடியுஞ் சரி கூட்டி வெந்நீரில் கொடுக்கவும். பழைய கொள்ளங்கட்டி அறுபது பலம் வெள்ளாட்டுக் கோமியத்தில் அறுபது நாள் காய்ச்சி வைத்துச் சுத்தி பண்ணி திரிகடுகு, திரிபாலையம், திகுடை வாய் விளங்கம், மஞ்சள், மரமஞ்சள், ஆமணக்கம் வேர், சித்திரமூலம், செவ்வியம், குடைச்சீகை, விரை கடுகுரோகணி, திப்பிலி, திப்பிலிமூலம், பத்திரமூட்டி வகைக்கு ஒரு பலங் கூட்டிச் சூரணம் பண்ணி சீந்தி சாரணை கய்யாந்தகரைச் சாற்றிலரைத்து தாணிக்காய் அளவு உருண்டை பாலில் கொடுக்கச் சோகை காமாலை, விஷவாதம், பாண்டு ரோகமெல்லாந் தீரும்.

வாதம் ரோகம் மருந்து:-

நத்தைச் சூரி, குதிரை வாலி, நல்ல விடத் தேர், நாயுருவு, உத்தம தாளி வேப்பந் தோல், உள்ளி, வசம்பு எள்ளெண்ணை, பத்தியுடனே வடித்தருந்தப் பறந்து உடம்பெல்லாம் சுத்திக் கிடையும். வாதங் ஓடிப் போமே.

பாண்டு சோகை, காமாலை, விஷவாத வீக்கத்துக்கு:-

சரசெறி லோகமுக் கூட்டனே சாறுங் காந்தங் கால் கொண்டு திரிகடுகோடு திரிபாலை திறமாச் சாரணை மூலம் வேர் பொருமிந்துப்பு வெண்காரம் பொருந்த சாறு நீர் முள்ளி வரை சேர் கருப்பஞ் சாற்றிலரைத்து வண்டூர வடகம் விராகளிட கருங் காராட்டுப் பாலில் நீரில் பரிந்த தேனில் கொண்டிடவே வரை சோகை காமாலை பாண்டு வாதம் வீக்கம், விஷவாதம் போகும் வண்டூர வடகமிதே.

வெகு நாள் பட்ட நத்தத்தில் கொளாங் கட்டி எடுத்து வந்து கொல்லன் உலையில் சிவக்கச் காய்ச்சி வெள்ளாட்டுக் கோமியத்தில் முப்பது தரம் அவைத்து எடுத்துக் கொண்டு பொடி பண்ணி மோரில் ஒரு நாளூறப் போட்டுச் சுத்தி பண்ணின துக்கில் விராகனிடை.5, கொடிவேலி சீசை பூ ராசு நொச்சி பிரண்டை சாரந்தைச் சாறு, ஊர்க் கருவேம்பு, கண்டங்கத்திரி, முத்தக்காசு வகைக்கு பலம்.உ, பிடித்துச் சட்டியிலிட்டு நடுவே கொளாங் கட்டிப் பொடி தயிரில் இழைத்து வைத்து மேலும் அந்த மருந்து மூடி மேல் சட்டி மூலே சீலே மண் செய்து கெசபுடம் போட்டு எடுத்த திரிகடுகு, திரிபாலையம் வகைக்கு விராகனிடை 5, சீரகம்.5, வசம்பு.5, முந்தின கடைச் சரக்கு கட்டி கல்லுப்பு, வளையலுப்பு, வெச்சாரம், வெங்காரம் வகைக்கு விராகனிடை கூட்டி வல்லாரை நீர்முள்ளி கையாந்தகரை யிஞ்சி இந்த வகைச் சாற்றில் வகைக்கு ஒரு நாளரைத்துக் கொட்டைப் பாக்களவு உருண்டை பண்ணவும். வாத ரோகத்துக்கு கடுக்காய்ப் பொடி தேனிலிடவும். பித்தத்துக்கு சர்க்கரை யிஞ்சிச் சாற்றில் சேத்மத்துக்குக் கடுக்காய், திப்பிலி தேன் கூட்டி இடவும்.

<u>சருவாங்க வாதம் மருந்து</u>:- 30.9.63.

விடத்தேர் வேர், தேங்காயளவு தட்டெள ஒரு படி பனை வெல்லம் இரண்டு போட்டு பேய்ப்பீர்க்குப் பேயத்தி பேயமத்தை பேய்க் கரும்பு, பேய்ப்புடல், பேய்ச்சுரை, நெட்டைப் பேய் மிரட்டி, வட்டப் பேய் மிரட்டி இந்தச் சாறு கூட்டி ஐந்தெண்ணெய் கூட்டி வடித்து உள்ளுக்குக் காசிடை கொடுத்து மேலுக்கும் பிடிக்கவும். நொச்சி, தழுதாழை, ஊமத்தை எருக்கிலை வெந்நீரில் போட்டு வார்த்துக் கொள்ளவும்.

<u>திரு சன்னி வலிப்புக்கு மருந்து</u>:-

வேப்பெண்ணெய் வெள்ளை வெங்காயம் தயிலம் கோழி முட்டைத் தயிலம், குறவஞ்சி வேர், வெள்ளைக் குறவஞ்சி வகைக்கு ஒரு பிடி காய்ச்சி வடித்து உள்ளுங் கொடுத்து மேலும் பிடிக்கவும்.

<u>கண்ட கரப்பான் மருந்து</u>:-

ஊறு மோரிதன் தாமரையும் தய்ய முந்த நன்னாரி
செஞ் சாறணை திரிகடுகு உயர்ந்த கருஞ்சீரகம் வசம்புள்ளி
காது கய்யாந்தகரையுடன் கசக்கும் வேப்பந் தோல் கன்னில் நல்லெண்ணெ
கறுதி பிசவுக் கொள்வீராம் கண்ட கரப்பானது போமே.

<u>கபால சன்னி மருந்து</u>:-

கடுக்காய் கருக்கித் தூளாக்கி கதித்த இந்துப்புடனே
அடுத்த மிளகு திப்பிலி அதில் மிக்க பொடியாக்கி
நடுத்த சாத்திர வெதியுங் கூட்டவே
அடுத்த வெந்நீரில் கொண்டிட பிடிக்கும் கபால வாத சன்னியும் போகுமே.

வலம்புரிக்காய், சங்கு, வசம்பு, சுக்கு, மஞ்சள்,
நலமி பெரிய காயம் நற்கோஷ்டம் திடம் பெரிய
சுருகு பறங்கி கடல் நுரையுங் கூட்டி
வெள்ளில் லொக்க வேப்பெண்ணெயில் லெரியிட்டு நசையம். தலை தேய்க்க.

<u>கபால சன்னி கபால வாயு மருந்து</u>:-

பூங்கந் தளிர் வேப்பந் தளிர் பருத்தி விரை, எள்ளு கொள்ளு நெல்லி தான்றி முருங்கை விரை. அகத்தி விரை தேங்காய் கூட்டி நசையம் விடவும்.

<u>பீனிசம் மருந்து</u>:-

வெல்லாரை மாருச் சதை, குங்குமப்பூ, கஸ்தூரி மஞ்சள், திப்பிலி, சுக்கு; கைய்யாந்தகரைச் சாறு, தழுதாழைச் சாறு, பொன்னாங்கண்ணிச் சாறு, தும்பை விட்டான் சாறு வகைக்குப் பிடி.க; சிறுகீரை நெருஞ்சி வாரை வகைக்குச் சாறு படி.½ பசுவின் நெய்யிலெரித்து வடித்து நாசியில் விடவும். புளி தவிர்க்கவும்.

கபால சூலை மருந்து:-

பெருமரத்துப் பட்டை, நொப்பைப் பட்டை, சங்கு, சங்கங் குப்பி, கடலை நுரை சமன் தான் புகை போடவும். பசுவின் நெய் படி.1, மிளகு, சுக்கு, ஓமம்; வெள்ளுள்ளி, கருஞ்சீரகம், சாதிக்காய், பழுவன் சொல்லி, கய்யாந்தகரை, மணத் தக்காளி, நீலி, செங்கத்தாரி, மஞ்சள், புரசு இந்த வகை சாறு வகைக்கு மாகாணி கூட்டி வைத்து தலை நாசி காதில் விட்டுத் தலை முழுகவும்.

காசத்துக்கு:-

கொடிக்கள்ளி வாட்டிய புளிந்த சாறு, குப்பை மேனிச் சாறு, காட்டு முருங்கைச் சாறு வகைக்கு ஒரு பிடி, வெல்லம் போட்டுக் கிளறித் தின்னவும். கறுப்பு புளி தவிர்க்கவும்.

நண்டு ஓடு, நாணல், கழுதை லத்தி, உள்ளி, வசம்பு புகை போடவும். மஞ்சள் பட்டைச் சாறு, சிறுகுறிஞ்சா மிளகரணை, தீக நெல்லி, திரிகடுகு, உள்ளி, வசம்பு, கருஞ்சீரகம், அபினி மருந்து சரிகூட்டி மிட்டம் பால் விட்டுக் குளிகை பண்ணவும். முந்திரி பழம் விடவும்.

மூக்கு நீர்ப் பாய்ச்சல் மருந்து:-

நாயுருவி சுட்ட சாம்பலும், நவச்சாரம், சுண்ணாம்பு பொடி மூக்கில் பிடிக்கவும். மிளகு, கருங்குங்கிலியம், மஞ்சள் பொடி சீலையில் திரி பண்ணி புகை பிடிக்கவும்.

ஆதண்டை வேர்ப் பட்டை பலம்.3, மிளகு பலம்.1, ஒரு படி நல்லெண்ணெயில் வேக வைத்து நாசியில் விட்டுத் தலை முழுகவும். இடம் பால், திரிகடுகு, கர்க்கடக சிங்கி, வெங்காரம் பொரித்துப் போட்டுக் கொடுக்கவும். சுக்கு, மிளகு, திப்பிலி யுஞ் சிக்க சீந்தி சா தவசா மிக்க சமன வெங்காரம் தக்க நறு நெய் தேனில் நக்க காசம் போமே.

புக்க மந்தார காசம் மருந்து:-

சாறணைக் கிழங்கு சதாவேரி வெருள் சீந்தி வெருவிய ஆடாதோடை
மாரிய ஈ வலிசை பிரவி காதும் கரிசலாங் கண்ணி கனத்ததோர் அமுக்கிறவும்
வெறத சரியே கூட்டி வெகுறு நாளி தண்ணி ஒறுதவே கொதிக்க விட்டு மெள்ளவே காச்சி
ஊ ரி லெந்தை நாளி ஆக்கி எள்ளெண்ணை தாழும் இதனுடன் கூட்டி நாளி ஈக்கிய சரக்கு கூட்டே.
சொல்லிய திரிகடுகு இந்துப்பு நல்ல சீரகம் கற்கடக சிங்கியும்
மெல்லிய கிராம்பு வெள்ளுள்ளி மேவுங் கடுகுரோகணி
சொல்லிய நூக்கலந்து கூட்டி சொலித்திடக் காசம் போமே.

உடல் வாதம் மருந்து:-

தேத்தான் கொட்டை எலுமிச்சங் காயளவு, ஈர வெங்காயம், எலுமிச்சங் காயளவு, சீரகம், எலுமிச்சங் காயளவு மூன்று வாழைப் பழத்தில் மத்திச்சு ஏழு நாள் கொடுக்கவும். கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

ரத்த காசிச் காசி ரோகம் மருந்து:-

இந்த நோய் நின்ற நாளிலிருமலுஞ் சீயு முண்டாய்
வந்தவே அய்யம் பித்த முடுகிடக் கிளிர் வெதுப்பு
வெந்ததோர் குணங்கள் கண்டால் மயங்கிடாதே வென்குளம்
பைந் தொடி ஆவின் பாலும் கீரையும் பருகலாமே.

வெட்டு வாய் தளுக்கான பிடி ஜம் பட்டைத் தான் பிடி, நாற்பது பலகறை இருபது எலுமிச்சங் காய்ச் சாறு ஒரு படி நல்லெண்ணெயில் கிளறிச் சர்க்கரை ஒரு பிடி போட்டு ஒரு சுறண்டி கொள்ளவும்.

க்ஷயக் குளம் மருந்து:-

ரசபற்பம், அப்பிரக பற்பம், லோக பற்பம், நாவி, படிக்காரம், சரி கூட்டிச் சீந்திச் சாற்றிலே ஒரு நாளரைத்துத் திரிப் பாலைக் கசாயத்திலொரு நாளரைத்துப் பிஞ்சு பத்திலொரு பங்கு தாம்பிர பற்பங் கூட்டிச் சீந்திக் கசாயத்திலொரு நாளரைத்து குன்றுமணிப் பிரமாணம் உருண்டை பண்ணிச் சக்கரையில் தேனில் ரெண்டு நேரமும் இடவும்.

பித்த க்ஷய குளம் மருந்து:-

மிருகாங் ரசம், ரச பற்பம், சொர்ண பற்பம், முத்து பற்பம், பலகரை பற்பம் சங்கு பற்பம், கெந்தகம், வெங்காரம் இவை கூட்டிச் சித்திர மூலக் கசாயத்திலரைத்துக் கட்டியில் ரெண்டு நாளரைத்துக் குப்பியில் வைத்து ஏழு சீலை மண் செய்து சட்டியில் பாதி உப்பு விட்டு குப்பி வைத்துமேலும் உப்பு விட்டு அடுப்பில் வைத்து நாலு சாமம் மந்தாக்கினி யாய் எரித்து சாங்க சீதளமாய் எடுத்து சித்திர மூலக் கசாயத்திலொரு நாளரைத்துக் குன்றி மணிப் பிரமாணம் உருண்டை பண்ணி நேரம் நாலு உருண்டை மிளகு, திப்பிலி, தேன் சர்க்கரையில் இடவும்.

சேற்றும க்ஷயம் மருந்து:-

ரசம் உருக்கு பற்பம்.க, வங்க பற்பம்.உ, ரச பற்பம்.3, சொர்ண பற்பம்.க, ரசம், உத்திரப் பிரீதியாய் கூட்டி புள்ளடி பொரிமிலைச் சாற்றில் அரைத்து உருட்டிச் சீலையில் பொட்டலங் கட்டி ஏழு சீலை மண் செய்து குக்குட புடமிட்டு சங்க சீதமாய் எடுத்துப் பொடி பண்ணி ஒரு நாளைக்கு நாலு பணவிடை திப்பிலிப் பொடியுந் தேனுங் கூட்டிக் கொள்ளவும்.

வாத பித்த க்ஷயம் மருந்து:-

சுத்த கெற்----ாட்டலி ரசம், சங்கபற்பம்.3, நாவி.8, ரெண்டுங் கூட்டி பசுவின் பாலில் அரைத்து உலர்த்தி ரச பற்பம்.5 கெந்தகம்.15 கூட்டிக் கலசத்தி விட்டு சீலை மண் செய்து கெசபுடம் போட்டுச் சீதளமாய் எடுத்துப் பொடி பண்ணி, மிளகு, திப்பிலி சரி கூட்டி பொடி வெருகடியும் செந்நூரம் மூன்று பணவிடையும், நெய் தேனில் கொடுக்கவு

பித்த சேற்றும க்ஷய குளம்:-

ரசம்.க, அபிரத்சிக் கர்ந்தம்.3, வெங்காரம்.10 இவை கூட்டி எலுமிச்சஞ் சாற்றிலரைத்து சீலையில் முடிந்து தோலெந்திரமாய்க் கட்டி ஒரு சாமம் எரித்து சீதளமாய் எடுத்து உலர்த்தி மறுபடி கலசத்திலிட்டுச் சீலை மண் செய்து சட்டியில் ரெண்டங்குலம் உப்பு விட்டு அதில் வைத்து மேலே கலசம் மறைய உப்பு விட்டு மேலே சட்டி மூடிச் சீலை மண் செய்து கமலாக்கினியாய் எரித்து சீதமாக எடுத்துப் பொடி பண்ணி இரண்டு பணவிடை செந்நூரம், மிளகு, திப்பிலி சரிகூட்டி வெதுப்பின பொடி வெருகடி கூட்டி தேனில் கொள்ளவும்.

வாத சிலேற்கும க்ஷயம் மருந்து:-

ரச பற்பம்.[illegible], சொர்ண பற்பம்.க, தாம்பிர பற்பம்.க, மனோசிலை.க, கெந்தகம்.க, தாளகம்.க [illegible]ரி இலை வெல்லம் கூட்டிப் பொடி பண்ணி, மிளகு, திப்பிலி சரி கூட்டி வெருகடி செந்நூரம் ரெண்டு பணவிடையும் கூட்டி நெய் தேனில் குழப்பிக் கொள்ளவும்.

வாத பித்த சிலேற்கும முதலான [illegible]டின சன்னி க்ஷயம் அசாத்தியம் இவைக்கு மருந்து:-

சுத்திசெய்த ரச ரசம்.க,---சொர்ண பற்பம்.4, காந்த பற்பம்.4, தாம்பிர பற்பம்.4, முத்து பற்பம்.[illegible], லோக பற்பம்.உ, வயக்கீருந்தி பற்பம்.உ, பலகரை பற்பம்.உய, நாவி பலம்.4, வெங்காரம்.8 சுத்த ரசம்.3 இவை கூட்டி புள்ளம் புரிசை செம்புரிசை சாற்றிலரைத்து மூன்று நாள் அரைத்து உலர்த்தி எலுமிச்சஞ் சாற்றிலொரு நாள் அரைத்து உலர்த்திக் கலசத்தில் வைத்து சீலை மண் செய்து கெசபுடம் போட்டுச் சீதளமாய் எடுத்து அப்படி எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்து உலர்த்தி ஏழு புடம் ஒரு

எரிப்பும் போடவும். பாதி கெந்தகம் கால்பங்கு மிளகு பொடியுங் கூட்டி வெற்றி லைச் சாற்றிலரைத்து உருந்த பிரமாணம் உருண்டை தேனில் வெற்றிலைச் சாற்றில் கொடுக்கவும்.

ஆமிர கொழு கசாயம்:- சுக்கு, மிளகு, மிளகரனை தய்ய கண்டங்கத்திரி வேர் மிக்க கசாயம் வைத்தெடுத்து மிகுந்த தேனந் திப்பிலியும் ஒக்கக் கூட்டித் தாளுண்ண உயர்ந்த மிகுமல் மீளோடன் கக்குங் கலந்த சேரிபை அக்கினியும் மிக்க சுவாசந் தீர்ந்திருமே.

ரத்த காசிக்:-

மாதுளக்காய்ச் சார எலுமிச்சம் பழச்சாற பசுவின் பால் நெய் சரி கூட்டி சாதிக்காய் சாதிப்பத்திரி லவங்கம் பொடி கூட்டிக் கிளறித் தின்னவும்.

சிக்கு காசித்து:-

அந்திர தாமரை திரிகடுகு குளிகை பண்ணவும்.

காசி முலாந்தகன்:-

பசுவின் நெய் ஒரு படி, எருக்கம் பால் உழக்கு, கெந்தகம் விராகன்.6, சுரக்காய் கெந்தகம் விராகன்.உ, இந்துப்பு விராகன்.6, சாதிக்காய் விராகன்.[illegible], தான்றிக்காய் விராகன்.க, பாஷாணம் பணவிடை.க, நெய்யில் பொடி பண்ணிப் போட வும். சாதிலிங்கம், பொன்னரிதாரம், மனோசிலை, வெங்காரந் திரிகடுகு வகை சரி கூட்டி நாவி ஒரு வகைக்கு அரைப் பங்கு கூட்டி மிஞ்சிச் சாற்றில் மூன்று நாள் மூன்று சாமம் அரைத்த பின், புருப்பை மேனிச் சாற்றில் மூன்று சாமம் அரைத்து தூது விளங்காய் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலிலுலர்த்தி நெய் தேனிலிட எந்தக் காசியும் தீரும். புளி தவிர்க்கவும்.

கண்டங்கத்திரிக்காய், தூதுவிளங்காய், துவரைப் பருப்புக் கூட்டவும். கண்டங் கத்திரி விரை, தூதுவிளை விரை.3, சிறுகாஞ்சொறி, சிறுகுறிஞ்சா மூன்று, பொருமி பஞ்சபாகல், அப்பை வகைக்குப் பலம்.2, சன்ன லவங்கப் பட்டை, வங்கம் அவினி மருந்து வகைக்கு பலம்.2, கூட்டிச் சூரணம் பண்ணி வெருகடி காலமே நெய்யில் கொள்ளவும். முயல் கொண்டு வந்து உரிச்சுத் தலையுங் காலும் நருக்கித் தூவைத்து நாழி நீர் விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சி வடித்துக் கொண்டு ஆடாதோடை, கண்டங் கத்திரி, தூதுவளை வகைக்கு பலம்.6, கூட்டி இடித்து நாழி நீர் விட்டு நாலிலொன் றாய்க் காய்ச்சி வடிகட்டி முள்ளி நெய் விட்டு திப்பிலி, திப்பிலிமூலம், அத்தித், திப்பிலி அரத்தை, கற்கடகசிங்கி, கடுகுரோகணி, சிறுதேக்கு, செங்கழுநீர்க் கோஷ்டம், அக்கராகாரம், சீனிக்காரம், நவச்சாரம், திரிகடுகு, குளவிந்தம், மஞ்சள், நெல்லிப்பருப்பு, முந்திரிப்பழம் பேரீச்சம் பழம்---- (முடிவு அடுத்த ( ) ஏடு இல்லை.

சூடை விப்புருதி:-

திசை நெல்லிப் பட்டை, பிளகறனை, சிறுகுறிஞ்சா மூன்றும் சரி கூட்டி வேப்பம்பட்டைச் சாறு விட்டரைத்து சுண்டைக்காய் பிரமாணம் உருண்டை பண்ணி வைத்து தின்ன விளக்கெண்ணெயில் உள்ளி, உப்பு, ஈவெங்காயம் கூட்டி எரித்த கட்டிடை கொடுக்கக் கூட பறரை தீரும்.

கெற்ப விப்புருதி மருந்து:-

புளியம் பிறண்டை அப்பைக் கிழங்கு, மெருகன்கிழங்கு, முள்ளிவேர், ஆதண்டை வேர், சிற்றாமுட்டி, கொடிவேலி, முசுமுசுக்கை, அச்சப்பட்டை, பொரசம் பட்டை, ஆயப்பட்டை, பாலைப்பட்டை சரி கூட்டி இடித்து விளக்கெண்ணெயில் வடித்து காசிடை கொள்ளவும். சீர் விரும் புங்கக் பிறண்டை புளியம் பிறண்டை அப்பை மூன்றுந் தவிர்த்து நல்லெண்ணெயில் வேக வைத்துக் கொடுக்கவும்.

~~பொமொந்தம்:- மைந்தம்:-~~

பொதுமாந்தம் மருந்து :-

வெய்யம் பட்டை சீந்தி ஆடாதோடை கண்டங்கத்திரி சாரணை வகைக்கு பத்து பலம் இருநாழி நீர் விட்டு எட்டிலொன்றுய்க் காய்ச்சி வடித்துக் கொண்டு வட்டத் திருப்பி கொடிவேலி, விளாவரிசி, தேவதாரம் ஆனைத்திப்பிலி, சதகுப்பை, செவ்வீகம், கோஷ்டம் வாளுவை, வெற்பாலை, ஓமம், கடுகுரோகணி, வசம்பு, திப்பிலி மூலம், மந்திட்டி, சித்தமல்லி, டொரமல்லி, குக்குலம், நாலு எவட்சாரம், வெயகாராம் பசுவின் நெய்யில் வடிக்கவு

சுவாச காசம் மருந்து :-

பஞ்ச லவணம், ஏலம், லவங்கம், தக்கோலம், செவ்வீகம், திப்பிலி, மதுர* தும்மளாச் சாரம் கருவேப்பிலை, மஞ்சள், சந்தனம், சற்பூரம், சங்கம்வேர், துாதுவளை, சிறுநாகப்பூ, அதிமதுரம், அபினி, சரி கூட்டி இதுக்குச் சரி சித்து மூலிகை கூட்டிச் சூரணம் பண்ணி சரி சர்க்கரை கூட்டி வெருகடி வெந்நீரில் கொள்ளவும். சுவாச காசம் பாண்டு, பித்த, குன்மம், திரிதோஷம், சோபையுந் தீரும்.

அதாவாய்வு :-

ரசம், பெருங்காயம், இந்துப்பு, காசுக்கட்டி, கடுகுரோகணி, சாத்திரவேதி, கொடிவேலி, தயில் ஆறுகுன்றி, சடச்சி, கண்டங்கத்திரி, நொச்சிவேர் இதுவெல்லாம் சாரணைச் சாற்றிலரைத்துப் பச்சைப் பாககளவு உருண்டை பண்ணிக் கொள்ளவும்.

அந்திர வட்டருலை மருந்து :-

இலப்பை வேம்பு, அளிஞ்சி, செம்பிளிஞ்சு, தனித் தனியே தயிலம் வாங்கிச் சரி கூட்டிப் பாலுக்கு விட்டுக் காய்ச்சி ஒரு விராகனிடை ரசம் பனிரெண்டாய்ப் பங்கிட்டு ஒரு பங்கு பருத்திச் சாற்றில் முரிச்சு ஒரு விராகன் தயிலத்தில் கூட்டிக் கொடுக்கவும். புளி விடவும்.

பீலிகை மருந்து :-

இஞ்சி பலம்.10, துவைச்சு இரண்டு வள்ளந் தண்ணீர் விட்டு இரண்டு படியாகக் காய்ச்சிப் பழைய கருப்புக் கட்டி பலம்.5, போட்டுக் காய்ச்சி சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம் வகைக்கு பலம்.½, கற்கடகசிங்கி பலம்.½, பருத்தி விரைப் பருப்பு பலம்.½, சீரகம் பலம்.½, சன்ன லவங்கப்பட்டை பலம்.½, ஓமம் விராகனிடை.3, சதகுப்பை விராகனிடை.2, ஏலம், லவங்கம், சாதிக்காய், சாதிப்பத்திரி, குரோசாணி வகைக்கு விராகனிடை.க, சூரணம் பண்ணிப் போட்டு முன்சு கொதிக்கு மேல் அரைப்படி தேன் விட்டு எட்டு நாள் தானிய புடம் வைத்து நேரந் தட்டிடை கொடுக்கவும்.

பித்த வாய்வு மருந்து :-

சீந்திச் சாறு, நெல்லிக்காய்ச் சாறு, சாறணைச் சாறு, கையாந்தகரைச் சாறு, அதிமதுரம் பசுவின் பாலிலரைத்துக் கூட்டினது பசுவின் பாலுங் கூட்டிக் கூடினதுக்கு நாலிலொன்று நல்லெண்ணை கூட்டி வடித்து உள்ளுக்குக் கொடுத்து தலைக்கு உடம்புக்கு மிட சகல பித்தமும் போகும்.

மகோதரம் மருந்து :-

குக்குலம், சதகுப்பை, கடுகுரோகணி, கெந்தகம் ரசம் கூட்டி மீள தேனில் கொள்வீராய் ஒக்க கரப்பான் விஷவாதம் ஓடங் கூட மகோதமே.

வாய்வுக் கிரணி :-

கய்யாந்தகரைச் சாறு, நாளி, கடுகு, நெல்லி, தான்றிக்காய்,
மெய்யாம், ஓமம் திரிகடுகு, மிளமல் சரி நேர்வாளம்
அய்யா அந்தச் சாறு விட்டு அரைத்து உருண்டை கொண்டிடாவ
பொய்யாதிந் மருந்தென்று பொருந்த முனிவருரைத்தாரே.

ஓமம், சுக்கு, வெள்ள வெங்காயம் வகைக்கு பலம்.உ., மிளகு பலம்.க, திப்பிலி பலம்.½, பெருங்காயம் விராகனிடை.உ சூரணம் தேனில் கிழிறி முள்ளிக் காயளவு (கொள்ளவும்) தயிர் கூட்டவும்.

<u>சலக் கழிச்சல் மருந்து</u>:-

ஆவாரை கொன்றை நாவல் அழகிய பூவலத்தி மாவிலு மருதந் தோலே
மற்ற சூரணமுங் கூட்டி பூவிரி குழலாள் தேனில் பொருந்தியே கொள்வீராகில்
காவேரி நீரும் வற்றிக் கடல்களும் வற்றும் மன்றே

உத்தரம் கோஷ்டம், சிறதேக்கு, சாதிக்காய், பொன்னாவாரை விரை, நிகரம் கொண்டு பொடி செய்து நிதி ஒரு மண்டலம் கொள்வீராகில் காசம் போல சொரி நீரைக் கட்டி மறிக்குங் கண்டாயே.

புண்ணுக்குப் பொடியடனே ஆவாரை அத்தி நெருஞ்சி வேரும்
விஞ்சுக வெய்யில் வைத்து விரித்துணத்திப் பொடி செய்து
பண்ணை மெய் மொழியாய் பாடலொத்த தேன் கலந்து பரிந்து கய்யால்
அன்றுந்து தான் முழுங்க நீரளிவு போகுமென்று அறிந்து கொள்ளே!

படியுறக் காந்தரும் பஞ்சி சூகமும் கடுபடு யிருமபொடு கலந்த காந்தலங்கமும் பொடியது தேனதில் பொருந்திக் கொள்வீராய் அடைபடு அந்த நீர் ரத்தம் சய அம்மை ஆனையே நெரிய மலவிலையு வட்டத் துத்தி நீர்ப்பூலா வேர்ப்பட்டை சீந்தித் தண்டு வரி செருகு மறிமடல் தானரைத்து சர்க்கரை மேல் தூவிக் கொடுப் பீராகில் குறையாத ரத்தம் நீரளிதல் போல வீழ்கை சூமாகும் பிறை செருகுஞ் சடை முடி யாருலே பிறவியங்களிலே யென்று பேசலாமே.

<u>இருபத்தொரு மேகம், சன்னி, வெருமூத்திரம், இந்திரியவர்த்தனை, கல்லடைப்பு, நீர்க் கடுத்து, காமாலை, விஷவாதம் பாண்டு எல்லாந் தீர மருந்து</u>:-

ஏலம், லவங்கம், பச்சிலை, சிறநாகப்பூ, சாதிக்காய், சாதிபத்திரி, அதிமதுரம், கோஷ்டம், சாத்திரவேதி, தாமரை வளையம், கல்நாரு, குங்குமப்பூ, கல்மதம், நாகேசுரம், செண்பகப்பூ, முத்தக்காசு, திரிகடுகு, நெல்லிவற்றல், சந்தனம், கோரோசனை, கூகைநீர், நெருஞ்சி வேர், நன்னாரி, நிலப்பனை, தன்னிவிட்டான், அமுக்கிரா நீர்முள்ளி, தாமரைப்பூ, அரிசி இதவெல்லாம் வகைக்கு அட்டிடை கூட்டி கலந்து நெய்யில் வெருகடி கொள்ளவும். பளி விடவும்.

<u>உஷ்ண மேகம் என்னை</u>:-

வறத்ளத்தின சிற்றுமணக்கெண்ணை ஒரு படி மெருகன் கிழங்கு சிறுக நறுக்கினது ஒரு பிடி, ஈர வெங்காயம் நசுக்கி, சிறுக*நறுக்கினது ஒரு படி திகடை கடுகு ரோகணி, கஸ்தூரி மஞ்சள் வகைக்கு அட்டிடை போட்டு சிவக்க வெந்த பிறகு இறக்கி நேரம் அட்டிடை கொள்ளவும். புளி விடவும்.

<u>எலும்புருக்கு பெரும்பாட்டுக்கு மருந்து</u>:-

தழுதாளைச் சாறு ஒரு பிடி, செம்பிரத்தம் பூச்சாறு, ஒரு பிடி, நல்ல சீரகம் ஒ** பலம்.க, மிளகு பலம்.க, வெள்ளாட்டுக் கொழுப்பு நெய்யில் ஒரு படியில் வேகவிட்டு ஒரு கரண்டி கொள்ளவும் எலும்புருக்கி பெரும்பாடு தீரும்.

<u>பவுத்திரம் நாலு வகைக்கு</u>:-

சித்திரமூலம், பழைய சோமநாதப் பெருங்கயம் விராகன்.½, கோரோசனை, திப்பிலி, இந்துப்பு, சாதிக்காய், லவங்கம் வகைக்கு விராகன்.4, செங்கத் தாரி விராகன். இதவெல்லாம் அரைத்து மூன்று படி எள்ளெண்ணெயில் சிவக்க வேக விட்டு வடித்து தினம் கால் பிடி இருபத்தொரு நாள் கொள்ளவும். ஆவாரைக் கொழுந்து கட்டவும்.

சலக் கழிச்சலுக்கு மேலுக்கு என்னை :-

அருகு சிறுபீளை கொடுப்பை, கய்யாந்தகரை, கீள்க் கெல்வி, முடக்கொத்தான் நாயுருவி தலை, குடி வள்ளி, கருவேப்பிலை, ஊமத்தை, சிற்றுமணக்கு, எலுமிச்சை, நாரத்தை பாகல் வேம்பு, சுரை பூசனி இந்த இலைச் சாறு வகைக்கு ஒரு பிடி, எருக்கிலை வேர் குருந்தொட்டி வேர், நீள்வள்ளிக் கிழங்கு, இலவம் பிசின், அத்திப்பட்டை, அரசுப் பட்டை வேப்பம்பட்டை வகைக்கு பலம்.க, இடித்து இருநாளி நீர் விட்டு ஒரு படியாய்க் காய்ச்சி ஊறவிட்டு வடித்து மூன்று நாள் சுமலாக்கினி ஒரு பிடியாய்க் காய்ச்சி ஆவாமொட்டு விராகன்.4, அதிமதுரம்.3, சந்தனம், கார்போகம்.3, சிறுபன்னரிசி.3, விளாவரிசி.3, வாலுளுவை.3, சுக்கு, மிளகு,3, சதகுப்பை.3, கற்பூரம்.3, கெந்தகம்.3, சாத்திர வேத்தி.3, பெருங்காயம்.3 இது வெல்லாம் சூரணம் பண்ணி நல்லெண்ணை படி.க, பசுவின் நெய்படி.க, கூட்டி விஜயகருக்கு ஞாயிறுக்குப் பொங்கலிட்டுக் காய்ச்சி மெழுகு பதத்திலிறக்கி நாலு நாளைக்கு ஒரு நாள் சுறுவாங்கமும் என்னையிட்டு எருமை சாணியிட பின்பு சீயக்காய் போட்டுச் சாயங்காலம் வெந்நீர் வைத்துக் கொள்ளவும். இருபத்து நாலு சலக் தீரும். ஆவாரை அஞ்சு வகையும் அத்தி மேல் பல்லுருவி விளாம்பிசின் சரி கூட்டி சூரணம் பண்ணி காரீய்ய செந்தூரம் சரி கூட்டி தண்ணீரில் ஊறப் போட்டு தெளிய பிரத்துக் கொடுக்கவும்.

மூத்திர தோஷம், கடுப்பு, லிங்கப் பிரமியம் மருந்து :-

செவ்விள நீரில் தேத்தான் கொட்டை அரைத்து சக்கரை கூட்டிக் கொடுக்கவும். வெடியுப்பு விராகனிடைக்கு வெங்காரம் விராகனிடை 1½ பொரித்து இளநீரில் கொடுக்கவும்.

சலக் கழிச்சல் தாகத்துக்கு :-

அத்திப்பட்டை, ஆவாரம்பட்டை, வில்வப் பழம், ஊமாதளம் பழம் விரை, அல்லித் தண்டு, தாமரை தண்டு, வாழைக்கிழங்கு, தண்ணீர், இளநீர் தண்ணீர், ஏலம் பொடி போட்டு புதுப் பானையில் ஊற விட்டுக் கொடுக்கவும்.

நீருங் கடுத்துச் சலமடைத்து நின்றே எரித்து சலம் வீழ்ந்து சேரும் ரத்தஞ் சீழுண்டாய் தினமும் வழியாய் விழுந்திருக்கும் பாருங் காயம் நாள் சென்றால் பாளாய் வெற்றியுடம் பெற்றும் வாரம் சௌற மடந்தையர்கள் பேக்கஞ் செய்த்தும் பிரமியமே.

மருந்து :-

தேங்காய்ப் பிஞ்சு துவைத்து தெளித்த நீரில் தானெடுத்து பாங்காம் கண்டு சர்க்கரையும் பரிவாய்க் கூட்டிக் கொள்வீராய் வீங்காதிருந்த சீழ் ரத்தம் வேண்டிய படியே கொண்டிருக்கில் பாங்காய் மிருந்த பிரமியமும் பறந்தே போகுங் கண்டாயே. சுருக்குக*

எலும்புருக்கி மருந்து :-

பொன்னாங்கண்ணி வேர், பலா வேர், தாளியிலையும், எலுமிச்சங் காயளவு அரைத்துக் காடியில் கொடுக்கவும்.

அண்ட வாதம், அந்திர வாய்வு மருந்து :--

கழல் மணி, வெள்ளையுள்ளி, கடிய தோர் முருக்கங் கொட்டை அளவுடன் சுக்கு கொள்ளு அஞ்சு ரெண்டு நாள் கொள்ளே.

பத்து தேங்காய் பிழிந்து பால், நெய் காய்ச்சி, சாதிக்காய், விராகனிடை.4, சாதிபத்திரி விராகனிடை.4, பொடி போட்டுக் காய்ச்சிக் கொடுக்கவும். மொடக் கொத்தான் சிறுநீரில் வசைத்துக் கட்டவும். முருங்கைப் ப நாளி, வெள்ளை வெங்காயம், உரி இந்துப்பு நாலு களஞ்சு, வெடியுப்பு நாலு களஞ்சு, வசம்பு, மிரு களஞ்சு, கெந்தகம் மிருகளஞ்சு, முடக்கொத்தான் மூன்று பிடி கூட்டி அரைத்துச் சிற்றாமணக்கெண்ணெயில் அடி பற்றாமல் அளாவி உள்ளுக்கு களஞ்சு கொடுத்து வக்கத்துக்கு சீலையில் பிடித்துப் போடவும்.

தன்டுப் பிளவை தயிலம்:-

ஆகாசக் கெருடன் ஆடு தின்னாப் பாளை வேர், வெள்ளை வெங்காயம், மிளகு நல்லெண்ணெயில் கொதிக்க வைத்து உள்ளுக்கு கொடுக்கவும். எட்டிவிரை, பேய்ப்பீர்க்கு விரை நாயுருவி வேர் மஞ்சள் கூட்டித் தயிலம் வாங்கிப் புண்ணுக்கு போடவும்.

குன்மாங்கிஷம் தீருக்கு:-

கோழி முட்டை ஒரு வெங்காரம் பொரித்துச சரி கூட்டி மொட்டு மழுகி சாற்றிவிடவும்.

அரையாப்பு எண்ணை:-

நல்லெண்ணை படி.க, மிளகு பலம்.க, சித்திரமூலம் அரைப் பலன் கூட்டி எரித்து உள்ளுக்கு கொடுத்த கிரந்தி தவிர்க்கவும்.

வீக்கத்துக்கு பற்று:- தயிர் வெடிக்க வைத்து சீலையில்கட்டி கட்டியானதை எடுத்து ஒரு விராகனிடை சுண்ணாம்பு ஒரு கட்டை வெள்ளை வெங்காயம் கூட்டி கோழி முட்டை வெள்ளைக் கருவிட்டு அரைத்துப் போடவும்.

மூர்ச்சை வாய்வு நசையம்:-

ஊமத்தை வேர், வேப்பம்பட்டை, செம்பிரண்டை, புளிப்பிரண்டை, சத்தி சாரணை, இந்த வேர்ப்பட்டை வகைக்கு பலம்.க, மிளகு, திப்பிலி, ஓமம், வகைக்கு பலம்.½, சுக்கு நல்ல சீரகம், கருஞ்சீரகம், காட்டுச் சீரகம் அரத்தை வகைக்கு பலம்.½, சாதிக்காய், சாதிப்பத்திரி, லவங்கம், பெருங்காயம், வெங்காரம், அபினி மருந்து, இந்துப்பு, பொட்டிலுப்பு வகைக்கு பலம்.உ, கடுக்காய் தோல் பலம்.க, சர்க்கரை பலம்.௪, சித்தாமணக்கு எண்ணை படி.½, நல்லெண்ணை படி.½, பசுவின் நெய் படி.½, தேன் படி.½, இதில் சூரணம் போட்டுக் கிளறி மெழுகு பதத்திலிறக்கி நேரம் கடுக்காய்ப் பிரமாணம் கொள்ளவும். புளி மாங்கிஷம் அவ பத்தியமாகாது. சாதிக்காய், சாதிபத்திரி, முந்திரி பழம் கூட்டி ஒரு பிடி பசுவின் நெய்யில் வேக வைத்து நசையம் விடவும்.

ரத்த பித்தம், ரத்த பிரமியம், பெரும்பாடு ஜலக் கழிச்சல் மருந்து:-

ஆவாரை, ஐந்து நன்னாரி, அருகு, நெருஞ்சி, சீனி, கருகாரை, தேத்தான் கொட்டை, நெல்லிப்பருப்பு, ஏலம், லவங்கம், கோஷ்டம், கொத்தமல்லி, அக்கலாக்காரம், வெட்டிவேர், விலாமிச்சம் வேர், முந்திரிப்பழம், பேரீச்சம் பழம், அதிமதுரம், நெல்லம் பொரி, மாபால் நெய் பன்னீர் இந்த அநுபானத்தில் கொள்ளவும். புளி கிரந்தி தவிர்க்கவும்.

சூரை ஊறும் மருந்து:-

தேத்தான்கொட்டை பலம்.க, பசுவின் பாலில் ஊறப் போட்டு அரைத்து அமுத வள்ளி, பொன்னாங்கண்ணி, தன்னி விட்டான் பசுவின் பாலில் அரைத்து நெய் படி.க, கூட்டி வடித்துச் சர்க்கரை கூட்டிக் கொடுக்கவும். பங்கம் பாளை வேர்க் கொம்பு, பருத்த முத்தக் காசுடனே பொங்க உலை மேல் பிட்டிட்டுப் பொருந்தத் தேன் வார்த்துண்பீராய் அங்கந் தரந்த தூரை யெல்லாம் அதிசாரம் அகலுங் கண்டாயே.

தேங்காய்ப் பாலை, வாழைப்பூ, திகழும், மாதளை பத்திரியும்
பொங்க உலை மேல் புடமிட்டு பொருந்துந் தேன் வார்த்துண்பீராய்
பொங்கா தெட்டு வகை தாழம் பங்கம் படவே அங்கந் தரந்த
அதிசயம் சூரை தீரும் பாரீரே.

நெல் பொரியும், சர்க்கரையும், பாசிப் பயறு நேரிய சீரகமுடன், வில்வலை முல்லை, சுக்கு, நெல்லி முற்பமளை நீர் ரெய்டொன்றாய் காய்ச்சி முத்திய பின்னே தெத்தனை கொள்ள சொல் பெரிய சத்தி குன்மம் சுரத்திற்கு ர துயரமுடன்

கிறகிறப்பு உளலேயுள் மூச்சு பத்தர மென்றேரிமை யோரீசன் தாரம் பகுந்தரைத்தார் முன்னோர் கண்டாயே.

கொன்றை கொடுவேலியுங் கூவிளை சாரணை கடுக்காய் குன்றிய சுக்கு திப்பிலியுங் கார்மிளகு, சுருகு ரோகணியு மன்றி வசும் நேர்வாளம் வளரும் உள்ளி மிந்துப்பு ஒன்றொன்று சரிகட்டியே பின்பருடனிது களஞ்சு சரக்கு கூட்டி விதமாக வேயரைத்து அன்பான சிற்று மணக்கெண்ணை சிறப்பாகவே விட்டு பன்பான பதத்தில் வடித்துப் பருகி வர கர்ச்சுரை பறந்து போமே.

<u>ரத்த பித்தம் குறை:-</u>

ரசம், காரீயம்.உ, கூட்டி கற்பூரம், இளநீர், வெங்காரம், கூட்டிக் கொடுக்கவும். கற்பூரம், புருசு அமத்தை, பூ, நரம்பில், சரடு, விங்கத்திலிடவும். வெள்ளுள்ளிச் சாறு நாழி, விரவிய இஞ்சிச் சார் நாழி விரவிய இஞ்சிச் சார் நாளி ஒன்லிய தண்ணி விட்டான் உரை செய்ய கன்னி நெல்லி உள்ளதோர் சாறு நாளி, உரக்க ஆவின் பால் நாளி மென்மவே கசாயமுன்ன மெலிந்திடும் குரை தானே. ஆலா விருது அதிமதுரம், முந்திரிப் பழம், கடுக்காய்ச் சாறு கைக்கு ஒரு பிடி, அதிமதுரம் கால் பலம், நல்லெண்ணை படி.க, பசுவின் பால் படி.த் விட்டுக் காய்ச்சி உள்ளுக்கு கொடுத்து மேலும் பிடிக்க நாற்பது பித்தமுந் தீரும். பச்சைப் பாம்பு, கண்டங் குங்கிலியமும் பொடி பண்ணி சனியில் நெருப்புக் கொட்டி அதில் போட்டுப் புகை பிடிக்கவும்.

<u>உள்மூலம், பிறமூலம்:-</u>-----

நல்லெண்ணை படி.ஊ, முடக்கொத்தான் சாறு படி.உ, வசம்பு, உள்ளி, திரிகடுகு, சதகுப்பை, இந்துப்பு, பெருங்காயம், சித்தாவாரை தேவதாரம் கூட்டிப் பொடி பண்ணி வேகவிட்டு இறக்கி உள்ளுக்கு ஒரு கரண்டி கொள்ளவும். காட்டுக் கரணை, கறிக் கரணை காரும் பிரண்டை செம்பிறண்டை, தோட்ட மெருகு புளி நறணை சாளாய் பிடித்துச் சம குக்கி காட்டுக் குரத்தி முலைப் பாலில் கலக்க ஒரு உருண்டை தின்பீராய் கூட்டோடிருக்கும் உளமூலங் கோ கோவென்ற ஓடுமே. நரி விட்டான் கிழங்கு வரகரிசியும் இடித்து நல் லெண்ணை விட்டுக் களிக் கிளறித் தின்னவும்.

<u>பிறமூலம் மருந்து:-</u>

ஆனை வணங்கியும், கம்பரிசியும், களிக் கிளறி, நெய் விட்டு உண்ணவும். உள்ளொட்டி நெல்லரிசியில் களிக் கிளறி நெய் விட்டு உண்ணவும். பேய்ப் பீர்க்கங் காய்த் தாள் தருசு சனிக் காரம், நவச்சாரம் பொடி செய்து தேனில் குழைத்துத் தடவவும். பொன்னுங் கன்னிச் சாறின் கொட்டைத் தலையில் பிழிந்து கை தள்ளவும்.

<u>ரத்தக் கடுப்புக்கு மருந்து:-</u>

ஆவாரைப் புவரிசி, மாதளம் புவும், இலவம் பிசின் காசுக் கட்டி, கூட்டித் தயிரில் அரைத்துப் புளிச் சந்தயிரில் கொடுக்கவும். எருமைப் பால் பச்சைப் பாலில் மாதளம் பிஞ்சு குவைச்சு சாறுங் கூட்டி புளியந் சிராய் சுட்ட சாம்பல் வெருகடி போட்டுக் கொடுக்கவும்.

<u>முளை மூலத்துக்கு மருந்து:-</u>

பேய்ப் பீர்க்கங் காய், வரகம் புல்லி சுட்டுத் குவைத்துப் பிழிந்து கொண்டு மெழுகு பதமாய்க் காய்ச்சி விளக்கெண்ணை உழக்கு, நல்லெண்ணை உழக்கு விட்டு பதத்தில் வடித்து விராலுக்கு நெய் தொட்டு தயிலம் தொட்டு பவள வாயில் ஏழு நாள் வைக்க முளை கரையும்.

<u>ரத்தக் கடுப்புக்கு மருந்து:-</u>-----

வெந்தயம் பலம்.8, அரைத்துப் பாதி அரையாக பாதி தயிரில் கொடுக்கவும். வெள்ளை வெங்காயம் பாலில் வேக வைத்துத் தயிரில் கொடுக்கவும்.

<u>பெரும்பாடுக்கு:-</u>

தேத்தாங் கொட்டை காவிக் கல், எலரிசி, சீரகம், வெல்லங் கட்டி அரைத்து நெய்யில் குழப்பிக் கொடுக்கவும். சாதிக்காய், சாதிப்பத்திரி, நல்ல சீரகம், கருஞ்சீரகம், ஓமம், கடுகு, வெந்தயம், மிளகு, திப்பிலி, கிராம்பு, சீலஞ் சரி கூட்டி வறுத்துப் பொடி செய்து நெய்யில் கொள்ளவும்.

<u>சீழ்க் கிராணி வயறு நோவுக்கு:-</u>

ஆனைக் கன்னி ஒரு பிடியும், அரசம் வயிரி மிளம் பிஞ்சு கான் குதிரை மேல் தோலுங் காந்தங் கையில் களிப்பாக்கும் மானைப் பொதும் விளி மடவாய் வடுகும் நபிரங் குணமாமே.

முத்தக் காசு, மலைதாங்கி முறைந்த நத்தி நிலப்பனை வேர்
கத்த காசுக் கட்டியுடன் கருகு திருக்கன் சீரகமும்
சுத்த மிகவே சாதிக்காய் துலங்கு மிலவம் பிசின் விடையம்
வைத்தே எரித்து நெய் கொள்ள மயங்கும் வயற்றுக் கொதிப்பாறும்.

மலைதாங்கி, பெருமரத்துப் பட்டை, நெட்டைப் பேய் மிரட்டி, காசுக்கட்டி, அதிவிடையம், அபினி மருந்து, சூரணம் நாலிலொரு பங்கு சர்க்கரை கூட்டிக் கொடுக்கவுடம்.

சுக்கு, மிளகு, சீரகம், சயிந்திர லவணம், அதிவிடையம், லவங்கம், அபினி வறுத்துச் சூரணம் செய்து வென்னீர் மயிரில் கொடுக்கவும்.

நேர்வாளம். 3, கடுக்காய். உ, நெய் உழக்கு, விளக்கெண்ணெ உழக்கு வடித்துக் காசளவு உள்ளுக்கு கொடுக்கவும். பிறன்டை கம்பரிசியில் களிக் கிளறித் தின்னவும்.

<u>கிராணிக்கு தளிம்ப வடகம்:-</u>

மாதளங் காயைக் குடைந்து விரை வாங்கி சாதிக்காய், சாதிபத்திரி, லவங்கஞ் சீரகம், மிளகு, சுக்கு, அபினி சரி கூட்டிச் சீலை மண் செய்து எருப்புடம் போட்டு மலைதாங்கி சுக்கு கசாயத்திலரைத்து தயிர் தேனில் கொடுக்கவும். சகல கிராணியுந் தீரும்.

<u>வச்சிரக் கிராணி கபாடம்:-</u>

சுக்குடன், வசம்பு, ஓமம், சுகமுள சாதிக்காய் பத்திரி,
மிக்கதோர் விடையங் கிராம்பு, மிகு மிளமாங் கொட்டை தோலும்
தக்க நீர்முள்ளி விரை கஞ்சா அபினி சரியது தானே கூட்டி
மிக்க தாய்க் கிளங்கு சாற்றிலரைத்து அடை சுட்டு
மத்தம் சாற்றில் மத்திச்சு ண்டு விளங்கயிப் பிரமாணம் கட்டித் தயிரில் தான்
கொடுக்க கனத்த கிராணி அதிசாரம் மட்டுப் பன்றான் களிச்சலெல்லா மாயோ
சொன்ன மருந்தாமே.

சாதிலிங்கம் ஒரு விராகனிடை எலுமிச்சஞ் சாற்றில் சுத்தி பண்ணி வெங்காரம் ஒரு விராகனிடை மொரிச்சுக் கொண்டு திரிகடுகு, ஓமம், வசம்பு, நல்ல சீரகம் கருஞ்சீரகம், சாதிக்காய், சாதபத்திரி, லவங்கம், அதிவிடையம், காசுக்கட்டி, நீர்முள்ளி விரை, குடைபபாலை, விரை, மாதளம் விரை, செங்கொட்டை, மாங்கொட்டை, புளிய பிசின் களக் கொட்டியிலை மருந்து ரெட்டிப்புக் கூட்டி மலைதாங்கி கசாயத்திலொரு நாளரைத்து கோரைக் கிழங்குச் சாற்றிலொரு நாளரைத்து மாதளங்காய் சாற்றிலொரு நாளரைத்து வாழைக் கிழங்குச் சாற்றிலொரு நாளரைத்து சுண்டைக்காய் பிரமாணம் உருண்டை மோரிலிட சுரத்தில் களிச்சல் தீரும்.

மிளகு, மிஞ்சி சாற்றில் வாயுக் கிராணி தீரும். பெரு மரத்துப் பட்டையும், சாரம் தயிரும் கூட்டிக் கொடுக்க ரத்தக் கிராணி தீரும்.

சுக்கு, நெல்லிபட்டை, கசாயத்தில் கொடுக்கச் சீதக் கிராணி பக்கிராணி, தீரும்.

ஒரு முழங் குழி வெட்டி புளியஞ் சிராய் போட்டு நெருப்பு எரித்து ஆறவிட்டு மேலே ஆறிய கல்மேல் கல் வைத்து சுத்திச் சாணி தடவி அந்தக் குழியில் சாதிலிங்கம், சீலையில் முடிந்து போட்டு மேல்த் துவாரத்தில் பவளம் வைத்து புகை பிடிக்கவும். பெரு மரத்துப் பட்டையுந் தலையும் அவைத்து வெந்நீரில் கொடுக்க வயிறு பேதிக்கும். ஆரிய கனியும் முழுத் துவரைத் தண்ணீரியும் மூன்று நாளுண்ணவும். பிற்பாடு---சோறும், கோழிக் கறியும் தின்னவும். ￼ பூனைத் தோல் முன் சொன்ன படி புகைப் போடவும். முலைக் கரையும், கொல்லன் கோவை அமுக்கிரா பேய்க் குமட்டிக்காய், பேய்ப்பீர்க்கங் காய் இது வெல்லாம் சரியாய் பொடி பண்ணி ஈர வெங்காயம் அரிந்து போட்டு உழக்குப் பசுவின் நெய் விட்டுச் சிவக்க வைத்து உண்ருக்குக் கொள்ளவும்.

<u>பெண் மூலம் மூலக் கடுப்புக்கு</u>:- 1.10.63.

பிரண்டைக் கிழங்கு ஒரு உள்ளி, சுக்கு, மிளகு கசாயம் வைத்துக் கொடுக்கவும்.
மேவிய சாதிக்காய், கிராம்பு பத்திரியுடனே
தாவிய சுக்கு அவினியுடன் தளைந்திடு மாதள (காயி) விட்டு
காவுங் கருகப் படயிட்டுக் கஞ்சா சாற்றிலரைத்துண்டை
ஆ அவினங்காய் பிரமாணம் நாவி---யும் அரபாவம் தயிரில்
நாலா வகைக் கிருமி தீர்ந்திடுமே.

<u>பிளவை பக்கப் பிளவை</u>:-

பெரிய பிளவை முள்ளெலும்பில் பெருக்க உலைத்த நடு முதுகில்
அருமை யதுவ யாறுது அடங்காதுள உலயது வெடுக்கும்
அரிய பொன்வரை யிலையும் அதுவும் புன்னைக் காயளவு
உரிய பழைய மோரில் தான் கொடுக்க உழலைதாப மோடிவிடுமே.

முதுகிடமுள்ளந் தன்டு முத்திடுயே மாங்காய் போல பிளவையும் பல கண்ணில் மதியுறு மருந்திலும் மற்றன கருவிலும் விதியின படியே என்று வேத மாமுனிவர் சொன்னார்.

<u>காரம்</u>:-

காரம் அருகு பாஷாணம் கதித்த அளவில் குறையாமல்
சேரப் பொடியாய் வெண்ணெயுடன் திரும்ப அரைத்து சீலையுடனாத்து
விப்புண்கிழள்ளே தடவி விடப் பாரப் பிளவை கரைந்துருகி பறந்தே போகுங் கண்டாயே!
பறந்திடும் புண்ணில் காரம் பகைத்துன் திருகை மேலே
எரிந்திடும் தயிருஞ் சோறும் பிசைந்துவை மூன்று நாளும்
அரிந்து வைத்திதமாய்க் கட்டி அவிழ்த்தது வேறே பத்தி
சிறந்திடு மென்னை பண்ண தெளிந்து நீ மருந்து செய்யே.

செப்பிய என்னை வைக்கச் சேர்ந்த ஆவாரைத் தாரும்
முப்புடன் அடரி பூலா வேரொன்ற தனில் பாதியாய் பின்
கய்க்கும் பேய்ப் புடலங் கூட்டிக் காய்ந்திட என்னை வையே.

என்னையும்----லை தாளம் விப்பகல்விடாமல் போட
நன்றாம் ஆவாரை யிலை தன்னை நயம் பெற சட்டி வாட்டி
புண்ணில் வைத்துக் கட்டப் பொருந்துமாம் பிளவை தானே.

வஞ்சிக் கொடியார் முலைப் பாலில் வழிக் கிளங்கோடா வென்னை
--ஞ்சப்படியே அரைத் தொன்றில் நிரம்ப வழிந்து அகலில் வைத்து
வஞ்சப் பிளவை முகந் தன்னில் மானே பிசவுந் தான் வழித் தாலும்
நிரம்ப-வழித்து கெஞ்சுர மோடுளலை கெட்டே போகுங் கண்டாயே.

செயவிரை அன்ப நொக்க தீயவே வரத்னாத் தாளாய்
தயவிய ஆவாரை வேர் தன்னொடு மரைத்துக் கட்டி
வெவ்விய பிளவை தன்னில் விளங்கிய நெய்யைப் பூசித் தானே
னாய விட நீ மற்றுக் குறைகியே உலரும் புண்ணே.

பூலாவேரை அரைத்துப் புண்ணைச் சுத்திக் கட்டிச் சங்கைச் சுட்டு அந்தச் சாம்பல் அதில் போட்டு தண்ணீர் விட்டால் கொதிக்கும். களைச்சு வந்தால் அக்கு இட்டு ஊதித் தயிருஞ் சோறுங் கொடுக்கவும்.

பண்ணு மேலே சீலே போட்டு செயப் பொடியும் மிலந்தையிலேயும் விளக்கெண்ணெயில் வறுத்துகை கட்டவும். குகை, எறும்பு நாளி விளக்கெண்ணை நாளி, அரத்தைச் சதகுப்பை, அதிவிடையம், கம்பிளிப் பிசின், கருஞ்சீரகம், கடுக்காய், களிப்பாக்கு, கொறுக்காப்புளி, இது வெல்லாம் அரைத்து எண்ணெயில் போட்டு சீனசி, செருப்படி பொடுதலை, ஊமத்தை, உதியம்பட்டை, புங்கம்பாலும் விட்டு எரித்து வடித்து பாஷாணம் அரிதாரம் இரண்டும் பணவிடை கூடப் போட்டு புண்ணில் விட்டுப் புரைக்கெல்லாம் ஊதவும்.

பொருசங் கொளுந்து அரைத்து தயிரில் பிசைந்து கட்டவும். வாழைப்பழமும் ஆலாம் பாலும் பிசைந்து புண்ணு மேலே மெல்லிய சீலே போட்டு அந்தப் பழம் வைத்துக் கட்டப் புழு விழும்.

<u>மகா சன்னி மருந்து:-</u>

நொச்சிச் சாறு நாளுனி நொய்ய எண்ணை மிருநாளி பச்சைக் காரம், இந்துப்பு பகரும் சதகுப்பை எருக்கிலே வேர், கச்சிற் கடிய முலே மடவாய் கருதி வடித்து மேல்ப்பூசக் குத்திக்குடையும் வாதம்.

<u>வாத------ரத்திருதி மாத்திரை:-</u>

பாராகும் வயிர மெட்டு புளிங்கு கூட்டி பகரு நவரெத்தினமும் பஞ்ச லோகம்
தீரான திரிகடுகு திரிபாலையாம் நற்காந்தம் திசன்னேலம் லவங்கம் வசம்பு
களப் பருப்பு
பேரான மஞ்சள் மரமஞ்சள் பிதரோகனி சந்து கொந்தானை தேத்தான்
ராகும் விளாவரிசி மாதளம்பூ தாது ஏற்றமுள்ள காக்கிறு வெள்ளைச் சாறனை
யியற்றே.

ஏற்றமுள்ள ஊரியானை கழுதை பன்றி என் சரபி குறிசைங்கள் இவைகள் பல்லும்
தோற்றும் கடல் நுரை வெகு ஆமையோடு கொற்ற கோழி முட்டைத் தோல்
அரிதாரம் கோஷ்டம்
நாற்றமில் கற்பூரம் தரிச தத்தம் நந்தியா வட்டம் சிறுகீரை பொன்னுங்காணி
போற்று மிலை ஒரு ஒன்ற காலாய்க் கொண்டு புகழ் நெல்லி எருமிச்சை
பொருந்தாய் சாறே.

பொருந்திய கையாந்தகரை நீளாநெல்லி பூவிறைதேனி மிளநீர் எண்ணை நெய் பால் ஓது பகழ் மருந்_ ஒவ்வொரு நாளரைத்து மருவு சிறு விரல், பிரமாணம் உருண்டை செய்து திரும்ப நிம்பளச சாற்றிலரைத்துக் கண்ணிலிடத் திமிரம், படலம், புகைச்சல், எரிச்சல் தீரும் பாசம் படலம் இந்த நோய் தொன்னூறாத்தாறும் போமே.

கய்யாந்தகரை, நெல்லிக்காய், கடிய சாறு அம் நாளி
மய்யா ரெண்ணெயில் உழக்கு மதித்த பாலும் அவ்வளவும்
பொய்யா மதுர மீராறு போன்ற பதத்தில் வடித்திடவே
கண்ணு பித்தன் கண் காசம் அடைத்த காதும் வெளியாமே.

அத்த ந தருக பச்சைக் கற்பூரம், வெள்ளைக் கல் பொடி புங்கம் விரை சரி கூட்டிக் கய்யாந்தகரைச் சாற்றிலரைத்து சிறு விரல் பிரமாணம் உருண்ட பண்ணி

முலைப் பாலிலிட கண்ணோவு தீரும். வாத காசம், பித்த காசம், பாசம், படலம், திமிரம், புகைச்சல் தீரும்.

நந்தியாவட்டப் பூச்சாற்றில் பூ மாறும். எலுமிச்சம் பழச் சாற்றில் நல் மாங்கிஷம் தீரும். சுத்தம் துரிச படிக்காரம் துய்ய வெள்ளைம். ---மெத்தும் தாம்பிரப் பொடி மேலிச் சரி கூட்டி பத்தா துருசு படிக்காரம் பாங்காய் வகுத்து பொடி பெத்த எலுமிச்சம் சாற்றிலரைத்து குளிகை செய்து எலுமிச்சஞ் சார இதக்கிசைந்த சாற்றிலிட வெள்ளைப் பூவு ஜளிப் படலம் அயிரம் இவை போமே.

<u>கண் வியாதி தொன்னூ த்தாருக்கு இளநீர் குழம்பு:-</u>

சுத்தம் துரிசு வெங்காரம் துய்ய மிளகு யிந்துப்பு
அந்த கரிநீன் கருங் கொள்ளு ஆவு நெய் தேன் கற்பூரம்
பத்துங் கூட்டி அரைத்திட்டால் பாராய் பிரள சுக்கிரமும்
ஒத்த கண்ணிவுருவீராய் உமையே மிகு கை கண்டதுவே.

பொன்னாங்கண்ணி வேர், சிறுகீரை வேர் ஒரு பிலைத் தாமரை வேர், தேத்தாங் கொட்டை செங்களநீர், கோஷ்டம், ஏலம், கடுக்காய், நெல்லி வற்றல், சரி கூட்டிச் செவ்விள நீர்ப் பட்டைச் சா புளிந்து இந்த மருந்தெல்லாம் நருக்கிப் போட்டு வேக விட் எடுத்துப் பிழிந்து ரெண்டு தாம் வடிகட்டி பாகு பதமாய்க் காய்ச்சி சுத்தம் சுட்டு பற்பம் பண்ணி பச்சைக் கற்பூரமுஞ் சுத்தி பண்ணிப் போட்டு பரணியில் வைத்துக் கொண்டு முலைப் பாலில் சாரித்து படுத்துக் கொள்ளச் சொல்லிக் கண்ணில் போடவும். கண்ணில் பிறந்த வியா எல்லாந் தீரும்.

<u>வரச்சி கரப்பான் சூலை மருந்து:-</u>

நிலையாவாரை சிறுப்பான் பட்டை, நரிசுர் பொரி அரிசி எருக்கம் வேர், செங் கத்தாரி கறடு நகரிப் பட்டை, விளக்கெண்ணையில் கொதிக்க வைத்து உடம்புக்கு தடவவும் வரச்சி தீரும்.

சிவனார் வேம்பு பலம்.10, பறங்கிப் பட்டை பலம். 5, நெல்லிக்காய்க் கெந்த கம் பலம்.1½, ஆய்பட்டை, சில்லம்பட்டை, சுக்கு, திப்பிலி, மிளகு, சிறுநாகப்பூ, தாளிசை பத்திரி, சாதிக்காய், சாதிபத்திரி வகைக்கு பலம்.¼, சூரணம் பண்ணி வெருகடி வாத சரீரத்துக்குத் தேனிலும் பித்த சரீரத்துக்கு நெய்யிலும் கொள்ளவும். பத்தியம் துவரை பருப்பு, முருங்கைக்காய், கீரை புடலங்காய், பீக்கங்காய், அவரைக்காய் கூட்டவும். புளி விடவும். சகல சூலையுந் தீரும்.

<u>வாதசூலை, உடம்பு சந்து, கடுத்து வீங்கும், பித்த சூலை, உடம்பு வறச்சியும் திரவு மெருக்கும், சேற்றுமை சூலை உடம்பு தடிக்கும் மருந்து:-</u>

சித்திரமூலம், சி குறிஞ்சா சீந்திக் கொடி, கடுக்காய், ஓமம் வகைக்கு பலம்.½ வசம்பு விராகன்.¼, கூடப் போட்டு இடித்து எறாகப் பிரித்து ஏழு நாளைக்கு கொடுத் உப்பு, புளி விடவும். விளக்கெண்ணை தேய்த்து முழுகவும். சர்க்கரையும், பறங்கிப் பட்டை யும் ஏழு நாள் கொடுக்கவும். எட்டா நாள் உப்புக் கூட்டவும்.

<u>வாய் சூலைக்கு:-</u>

வேலம் பட்டை வேக வைத்துக் கொப்பளிக்கவும்.

<u>சூரணம், ரசகற்பூரம்:-</u>

ரசம் ஒரு விராகனிடை அஞ்சத் தளையில் குகை பண்ணி புதுச் சட்டியில் அரைப்ப உப்பு யிட்டு அதின் மேலே குகை வைத்து மேல் சட்டி மூடிச் சீலை மண் செய்து ஒரு சாம ஒரு விறகிலெரிக்கவும். மேல் சட்டியில் உப்பு போலிருக்கும். அதை நல்ல வெல்லம் ஒரு மாங்காயளவு பிரட்டி ஏழு உருண்டை பண்ணி ஏழு நாள் கொடுக்கவும். ஏழு நாள் உப்பு, விடவும். விளக்கெண்ணை தேய்த்து முழுகவும். ஏழு நாள் மறு பத்தியம் இருக்கவும். சகல சூலையும் தீரும்.

குலையும் தீரும்.

நல்லெண்ணை ஒரு படி பொடுதலைச் சாறு படி.½, கய்யாந்தகரைச் சாறு படி.½, வெள்ள வெங்காயம் கட்டிடை வசம்பு கட்டிடை மஞ்சள் கட்டிடை பொடி போட்டு கருகு திரள எரித்து வடித்து தினம் அரைப்பிடி ஏழு நாள் கொடுக்கவும். குளிர்ந்த தண்ணீரில் குளிக்கவும். பால், நெய், நல்லெண்ணை கூட்டவும். உப்பு, புளி விடவும். பத்தா நாள் உப்புக் கூட்டவும்.

காரீய்யம் விராகன்.உ, ரசம் விராகன்.உ, நெல்லிக்காய் கெந்தகம் விராகன்.உ, குன்றி மணிப் பருப்பு.21, கூட்டி வெத்திலைச் சாற்றில் ஒரு சாமம் அரைத்து ஊமத்தஞ் சாற்றிலொரு சாமமரைத்து ஏழு உருண்டை பண்ணி ஒரு சாண் துணி வெட்டி புளியந் சிராய் போட்டு எரித்து தணலாக விட்டு தினம் ஒரு உருண்டை போட்டுக் கல் கட்டி சுப்பட்டி முக்காடு போட்டு மூக்கில் புகை வாங்கவும். இப்படி ஏழு நாள் போடவும். பத்தியம் ஏழு நாள் மோருஞ் சோறும். உப்பு ஈர வெங்காயம் போட்டுக் குடிக்கவும். பிறகு ஏழு நாள் உப்பு விடவும். பாலு, நெய் கூட்டவும். பதினைந்தா நாள் உப்பும் வெள்ளாட்டு உப்புக் கண்டம் கூட்டவும். மண்டை குலை, கன்ன குலை, கண்டமாலை, நாசி குலை, தொண்டை குலை, நாக்கு குலை, சிரல் கண்டத்துக்கு மேல்பட்ட பட்டை வேகு வைத்துக் கொப்பளிக்கவும்.

<u>சூரணம்:-</u>

பறங்கிப்பட்டை பலம்.7, சுக்கு பலம்.3, திப்பிலி பலம்.3½, மிளகு பலம்.½, கடுக்காய் பலம்.3½, ஓமம் பலம்.3½, சிறுகுறிஞ்சா பலம்.3½, சீந்திக் கொடி பலம்.3½, சித்திரமூலம் பலம்.3, லவங்கம் பலம்.¼, சூரணம் செய்து வாத சரீரத்துக்கு தேனில் பித்த சரீரத்துக்கு நெய்யில் புளி விடவும்.

<u>களிம்பு:-</u>

சுத்தம் வெள்ளைக் குங்கிலியம் விராகன்.க, ரசம் பணவிடை.க, கலத்தில் மேல் வைத்துப் பசு வெண்ணை கூட்டிக் காலிச் செம்பிலுரைத்துப் போடவும். புளியந் தண்ணீரில் புண்ணை கழுவிப் போடவும்.

சுத்தம், துருசு படிக்காரம், சாரமன் உப்புக் கட்டி வைத்து விளக்கெண்ணையில் வெண்ணையில் குழைத்து வைத்துப் போடவும். வெகு வாய்ச் சதை வளர்ந்தால் வெற்றிலையில் சாற்றிலரைத்துச் சீலையில் பிடித்துப் போடவும்.

<u>குலை சூரணம்:-</u>

பறங்கிப் பட்டை பலம்.உ, திரிகடுகு, கண்டு பறங்கி, தேசாவரம், வாய்விளங்கம், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, வசம்பு, மஞ்சள் வகைக்கு பலம்.½, கூட்டி பொடுதலைச் சாற்றிலொரு நாளுறப் போட்டு கய்யாந்த கரைச் சாற்றிலொரு நாளுறப் போட்டு சூரணம் பண்ணி சாதிக்காய், சாதிப்பத்திரி, லவங்கம் வகைக்கு விராகனிடை.2½ கூட்டிச் சூரணம் பண்ணி வாத சரீரத்துக்கு தேனில் பித்த சரீரத்துக்கு நெய்யில் கொடுக்கவும். புளி விடவும்.

பறங்கிப் பட்டை பலம்.5, கெந்தகம் பலம்.1½, உலகு சித்தன பட்டை பலம்.10, சிவனார் வேம்பு பலம்.10, கொடிவேலி பலம்.½, வெறிசில்லாய் பட்டை பலம்.½, திரிகடுகு, சிறுநாகப்பூ, சாதிக்காய், சாதிப்பத்திரி, தாளிச பத்திரி, வகைக்கு பலம்.½ சூரணம் பண்ணி வாத சரீரத்துக்கு தேனில் பித்த சரீரத்துக்கு நெய்யில் புளி விடவும். சகல குலையுந் தீரும்.

அவரைப் பருப்பு முருங்கைக்காய், பீர்க்கங் காய், புடலங்காய், அவரைக்காய் பால் நெய் கூட்டவும்.

அரையாப்புக்கு பத்து:- வெள்ளை வெங்காயம், அமம்பு, அரைத்து பத்துப் போடவும்.

தயிரும், கஸ்தும்பு, கோழிமுட்டை, வெள்ளைக் கரு விட்டரைத்துப் பத்துப் போடவும்.

வெறி கொண்ட வாத பித்த சூரம் மருந்து:-

நல்லெண்ணை படி.½, சித்திரமூலம் பலம்.½, மிளகு பலம்.½, நல்ல வெல்லம் பலம்.க, கூட்டி வேக வைத்து தினம் ஒரு கரண்டி கொள்ளவும். உப்பு, புளி விடவும்.

வாத வெறிக்கு:-

முசுறுமுட்டை எலுமிச்சை சாறு கூட்டி கொட்டைப் பாக்களவு புருசு மரைத்து தலைச்சுத் தேய்த்து உள்ளுக்கு கொடுக்கவும்.

வாத சேற்றும வெறிக்கு:-

பேய்ப்புடல், முருங்கை முட்டை, முசுமுசுக்கைச் சாறு, எலுமிச்சை சாறு, இளநீரும் கழுதைப் பாலும் பசுவின் நெய்யும் சரி கூட்டி ஒரு பலம் அதிமதுரம் கூட்டி வடித்துக் கொடுக்கவும்.

பித்தம் வெறி யெடுத்தால்:-

எலுமிச்சம் விரை, கய்யாந்த கரைச் சாற்றிலரைத்து கண்ணில் அஞ்சனம் போடவும். நசையம்:- குப்பை மேனி வேர், சுக்கு, பெருங்காயம், சிறுநீரில் நசையம் விடவும். முசுமுசுக்கைச் சாறு, வீளாந்தலை, சுர வெங்காயம், முலைப் பாலுங் கூட்டி சித்தாமணக்கெண்ணை கூட்டி தேய்த்து எலுமிச்சை சாறு விட்டு தண்ணீர் விடவும். தலை குடோரம் ஆடி எலுமிச்சை சாறு விட்டு தண்ணீர் விடவும். புங்கு, இருப்பை வேர், சாற்றுடன் பொருந்த திரிகடுகு, திரிபாலையம், பங்கமாள், நேர்வாளம், இரமஞ்சரும், பாரில் காயம் சரியதா கூட்டியே தும்பைச் சாறு விட்டரைத்து உருட்டியே அலங்கு முலைப் பால் நீரினிலிட்டிட பங்கமான உடல் மேவு சன்னிகள் பாரமான சுரங்களும் போகுமே.

விரோசனம் சுரந் தாகம்:-

சீந்திச் சர்க்கரை.க, சாதிலிங்கம்.10, வெங்காரம்.13, நேர்வாளம்.14, இஞ்சி சாற்றிலரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி இளநீரிலிடவும். வெந்நீரிலிடவும். சுக்கு, மிளகு, திப்பிலியும் அயய கடுக்காய் இந்துப்பு மிக்க கடுநோகளியும் மீறாமல் துளஞ்சு ஒவ்வொன்று ஒக்கச் சரி கொள் நேர்வாளம் ஒன்று படவே எலுமிச்சஞ் சாற்றிலரைத்து உருண்டை தக்க சுண்டைக் காயளவு தரு வெல்லத்திருக விரோசனமே.

பொருமி வேர் தீயில் வாட்டி மேல் தோலரிச்சு திப்பிலி அஞ்சு வெருப்பிக் கூட அரைத்து வெந்நீரில் கொடுக்கவும். சாத்திர வேதி, லவங்கம் வால் மிளகு, கண்டு சர்க்கரையும், எலுமிச்சஞ் சாற்றிலரைத்து முலைப் பாலில் இஞ்சிச் சாற்றிலிடவும்.

நாசிகா பானம்: பித்தம் எடுக்க, கழிய:-

மன்றுக சுண்டை வேரும் மகிழவே நவசுடாரம்
மிண்டியே அரைத்துத் தானாய் மேவிய குளாயிலிட்டு
மண்டைக்கு நாசி தன்னில் மகிழவே குளவிலிட்டு
தண்டி ஊத்த வராக தும்மலுண்டாய்
கொண்ட தோர் சன்னி பித்தஞ் கூடிய வாய்வு போமே.

குத்தமும் விராகன் கொண்டு அலங்கிய நிம்பழத்தை
மெத்த மேலரித்து மேலிட்டுப் பொரித்து தட்டி அப்பொடி உள்
வைத்து ராத்தங்கலே உதையத்துக்கு யெத்தலே யெடுத்தால் கொள்ள
மிகு கண் பித்தம் எரியும் பித்தம் சத்தியம் தலை சுழத்தல் செ
மெத்தவே விகார பித்தம் மிகுந்த நாற்பதுவும் போமே.

சன்னி பதின்மூன்று வீரபத்திரன்:-

நாவி குதம் கெந்தகமும் நல்ல கொடிவேலி வேருடனே
மேவும் திப்பிலி மிளகு சுக்கு வீரியமான வாய்விளங்கம்

வாசமான கோரைக் கிழங்கு வன்மையான மஞ்சளுடன்
தாவுங் கடுக்காய் வேப்பிலையும் சமனே யாகத் தானெடுத்து
வேசமான வெள்ளாட்டு நீரில் வென்றி அரைத்து மூன்று
நிறை குன்றி அளவு உருண்டை நிழலில் உளர்த்தி குழலிலிட்டு
வேத வீர பத்திரனை விரைய மூலம் திப்பிலி மிளகு கசாயத்திலிட
பாய்ந்த பதிமூன் சன்னியுடன் பழைய சன்னி பாதமுடன்
வேதம் சொன்ன படி மென்று விரைய முனிவருரைத்தனரே.

நாவி சூதம் சீலை ரெண்டு நல்ல கெந்தகம் நாவு ரெண்டு
காவி இகந் காந்தம் பதினறு கலையிலோகம் ரெட்டிப்பு
லெம் முனலாள் அம்மியிலே மினங் குமரிச் சாற்றிலரைத்து
செப்பு தாலம் கொண்டு தான்மூடி தனலாய் எரியுங் கண்டரே.

கொண்டால் மிஞ்சி சாறு தன்னில் கண்டீர்
குன்மல் பீலிகை நோவு கனத்த பித்த பாண்டு போகம்
உண்டா தன்னை புளிச்சேப்பம் ஒட்டு குளிரும் உடன் சுரமும் கை கண்டோம்
கண்டோம் குவெரியக் கருதிக் கொண்டு செய்வாயே.

<u>சுயும், அக்கினி ஆனந்த வயிரவன்:-</u>

நாவியுடன் வெங்காரம் சாதிலிங்கம், நல்ல மனோசிலை சூத்தம் நமமதான்
பாரிலுள்ள கெந்தகமும் மிவைகளாறு பாங்காக நிம்பளத்தின் சாற்றிலரைடை
மேவு பயறளவு தான் உருண்டை செய்து விளக்கு பஞ்ச மூலக் கசாயத்திட்டால்
மூவி தலைத் தளர்ச்சி செய்யும் சன்னி பாதம் முதிர்த்த சுரமனைத்தும் அகலப்
போமே.

போமேதான்குவர் சுரத்துக்கு இஞ்சிச் சாற்றில் புகலரிய சன்னி தோஷம் முலைப் பால்
தன்னில், நாமேவு வயித்தியர்களறிந்து பார்த்து நலமானந்த வயிரவனை நயந்து கொள்ளே.

<u>சகல சுர நாம பானம்:-</u>

எலிப் பகையும் பொன்னரிதாரமும் -----மிதருடன் நா மத்தைச் சாற்றிலேழு
நாளிகை யரைத்து பலிப்பான பயறு பிரமாணம் உருண்டை செய்து பண்பான வெள்ளரி
லக்கிரி சுரங்கள் தீரும். சலிப்பில்லா மிஞ்சி சாற்றில் சீத சுரங்கள் தீரும். முந்திய
தோர் பசுவின் பாலில் பூமிதி சுரங்கள் தீரும். கலிப்பான கஞ்சாங் கோரைச்
சாற்றில் கடியதோர் விஷமாறல் சுரங்கள் கலங்கிப் போமே. பாவியதோர் பத்திய
மும் பசும் பயறு பசுவின் பால் கூட்ட மேவிய தோர் உப்பு, புளிரண்டுந் தருவாயே.

<u>சகல கிரனி கபாடம்:-</u>

சுக்குடன் வசம்பு ஓமம் சகருடன் சாதிக்காய் பத்திரி
மிக்கதோர் விடையங் கிராம்பு மிருமறங் கொட்டை புளியங்கொட்டைத் தோல்
தக்கதோர் நீர்முள்ளி கஞ்சா அபினி தவிராமல் சரியாய்க் கூட்டி
மிக்கதாய் கிழங்கில் சாற்றில் மிகவரைத் தடையாய்த் தட்டி தயவுடன் புடமாய் சுட்டு
பக்க வமத்தைத் சாற்றில் பரிவுடனரைத்து உருண்டை நா கலிங்காய் பிரமாணம்
உருண்டை செய்து காடியில், தயிரில் கொள்ளக் கனத்ததோர் கிரனி போமே.

<u>சந்தனாதி உருண்டை:-</u>

சந்தனம் கோஷ்டம், அதிமதுரம் சாத்திரவேதி கொத்தமல்லி இந்துப்பு கோ
ரோசனை லவங்கம் முத்தம் மிருவேலி, விலாமிச்சம் இந்த----மிளநீர் தனிலரைத்து
இலந்தைக் கொட்டை அளவு உருண்டை செய்து வந்த உளலை பித்த சுரம் அருந்த இள
நீரதிலே போமே.

<u>இச்சாபத்திய ரசம்:-</u>

கெந்தகம், ரசம், வெங்காரம், கேடு யில்லா திரிகடுகு திரிபாலையும்

சாந்தமான சயிந்திர லவணமும சரிகட்டியே
நெந்தமான நேர்வாளம் சரிகட்டியே பித்த மிஞ்சிச் சாற் றிலரைத்தண்டை
மிதமான மிளகு பிரமாணம் செய்த சாந்தியான சர்க்கரை கட்டிடச் சலிப்பில்லா பிச்சா பே
பேதி ரசமிதே.

<u>தோஷ ஆனந்தன்:-</u>

இரத மிரு நான்கு, இருநாபி ரெண்டு மியல்பிரெண்டு தாளம் தரு பாலிஞறிய கெந்தகமு பசுமையுடன் வெங்காரம் ஒரைந்தாகும் விரை செறி பொன்னுமத்தை விரை நாலாக வெண் மையுடன் சுக்கு மொரு மூன்றதாக மிதமுடனே திப்பிலியு மஞ்சள் கூட்டி இன்பமுடன் கொடிவே கசாயந்தன்னில் இரு நான்கு திமமரைத்துக் குன்றி மணிப் பிரமாணமாக மிஞ்சி பஞ்ச குலச் கசாயத்திட்டால் பதமுடனே சன்னி சுரம் தோஷமெல்லாம் பறந்திடுமே பார்க்கிற்ரீர் பனியதாமே.

<u>அமிர்த சஞ்சீவி:-</u>

மிளகொன்று காரம் ரெண்டு மிஞ்சிய ரசமு மூன்று அமுது கெந்தகமும் நாலு ஆனியாம் சுக்கும் நாலு-பழைய நேர்வாளம் பாதி பத்துக்கு அஞ்சு கூட்டி-வளமுள இஞ்சி சாற்றில் வளமையாய் உரைத்து உருண்டை மிளகு போலுண்டை செய்த மிதம் அக்கினி சுரத்துக்கு அமர்த்த சீரகத்தின் சாற்றில் நாளுந் சீத சுரத்துக் கெல்லாம் தவிராமலிஞ்சிச் சாற்றில் வேதமாம் வெல்லத்திட்டால் விரோசனமாகுந்தானே.

<u>மகா கோடா ஜடி:-</u>

ரசம், நாலிங்குலி, கெந்தகம், மனோசிலை, பொன்னரிதாரம், நவச்சாரம், சவு காரம், சீனிக்காரம், திரிகடுகு, திரிபாலையம், சீரகம், சதகுப்பை, கொத்தமல்லி, வாய்விளங்கம், வங்காளப்பச்சை, ஒரிலைத் தாமரை குதிரைக் குரப்பமு மிட்ட தூள் சரி கூட்டி விராகனுக்கு ஒரு நேர்வாளங் கூட்டி கய்யாந்த கரைச் சாற்றில் பத்து நாளரைத்து நொச்சி சாற்றில் பத்து நாளரைத்து இஞ்சிச் சாற்றில் ஆறு நாளரைத்து ஒரு பலம் பாக்கு ஒரு பலம் வெற்றிலையுங் கூட்டி இடித்து அந்தச் சாற்றில் மூன்று நாளரைத்து வெள்ளாட்டுப் பாலில் மூன்று நாளரைத்து உழுந்து பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு வாத சுரத்துக்கு நொச்சிச் சாற்றிலிடவும், பித்த சுரத்துக்குச் சுக்குக் கசாயம், சர்க்கரை யிலிடவும். சேற்றம சுரத்துக்கு திப்பிலி கசாயத்தில் தேன் கூட்டி இடவும். தாப சுரத்துக்கு சீரகச் கசாயம் சர்க்கரை முலைப் பாலிலிடவும். சீத சுரத்துக்கு நொச்சிச் சாற்றிலிடவும் உஷ்ணம், அந்தி சுரத்துக்கு புளியிலை, சீரகக் கசாயத்திலிடவும். கிரனி சுரத்துக்கு லவங் கம், அதிமதுரம், அதிவிடையும், சுக்கு, மலைதாங்கி கசாயத்திலிடவும். சலக் கழிச்சல் எடுத்த சுரத்துக்கு ஆவாரை ஐந்து வகையும் சாதிக்காய் கசாயம் தேன் கூட்டி இடவும். தாப சுரத்துக்கு சீரகக் கசாயம் சர்க்கரை முலைப் பாலிலிடவும். சீத சுரத்துக்கு நொச் சிச் சாற்றிலிடவும். உஷ்ணம் அந்தி சுரத்துக்கு புளியிலை சீரகக் கசாயத்திலிடவும். கிரனி சுரத்துக்கு லவங்கம் அதிமதுரம் அதிவிடையும், சுக்கு, மலைதாங்கி கசாயத்திலிடவும். சலக் கழிச்சல் எடுத்த சுரத்துக்கு ஆவாரை

குளிர் கூடின சுரத்துக்கு தும்பைச் சாறு சாராயத்திலிடவும். விஷ சுரம் மாறுதற்கு கஞ்சாங்கோரைச் சாற்றிலிடவும். வாத சன்னி சுரத்துக்கு நொச்சி வெள்ளுள்ளி கசாயத்தி லிடவும். பித்த சன்னி சுரத்துக்கு முசுமுசுக்கை சுக்கு, திப்பிலி கசாயத்திலிடவும். சேற்றம சன்னி சுரத்துக்குகண்டங்கத்திரி புட்டவியல் சாத்தில் திப்பிலிப் பொடி கூட்டி இடவும். விக்கல் சுரத்துக்கு முசுறு முட்டை பாலின் பாலிலிடவும். காயம் பட்ட சுரத்துக்கு பசுவின் நெய்யிலிட நடை மேல் வந்த சுரத்துக்கு திராய் பிட்டவியல் சாத்தில் கொடுக்கவும். பூத பிசாசு பிடித்த சுரத்துக்கு பஞ்சுலக் கசாயத்திலிடவும். விரமைக்கு மிஞ்சிச் சாறு தேனுங் கூட்டி இடவும். மற்ற சகல சுரத்துக்கும் சீரகம், சர்க்கரையிலிடவும். சென்ம வாரத்துக்கு முலைப் பாலிலிடவும். தனுர்வாதத்துக்கு நொச்சிச் சாற்றிலிடவும். அற்புத வாதத்துக்கு

வேப்பெண்ணெ உள்ளுக்குக் கொடுத்து மேலுக்குமிடவும். சந்து வாதத்துக்கு சாறணைச் சாத்திடவும். பத வாதத்துக்கு கொல்லையிலைச் சாத்திவிடவும். இளபடி வாதத்துக்கு முலைப் பாலிலரைத்துக் கண்ணிலிடவும். பல்லடி வாதத்துக்குச் சுக்குச் சாற்றிலிடவும். தலைவாதத்துக்கு எலுமிச்சம் பழச் சாத்திலிடவும். உள் வாதத்துக்கு துதன்டைச் சாற்றிலிடவும். சிங்க வாதத்துக்குக் களச்சிப் பருப்புப் பொடியுடனரைத்துக் கொடுக்கவும். மதிவாதத்துக்கு உவர் மண்ணுத் தண்ணீரிலிடவும். பெரிய வாதமும் போம். பிசி வாதத்துக்கு அக்கிலாக்காரம் அதிமதுரம் கசாயத்திலிடவும். நடுக்கு வாதத்துக்கு பாக்குடன் தின்று வரவும். மூடக்கு வாதத்துக்கு முருங்கைப் பட்டைச் சாறு பசுவின் பாலுங் கூட்டி இடவும். சரவாங்கி வாதத்துக்கு நொச்சிச் சாறு உள்ளித் தயிலத்திலிடவும். மேலுக்குப் பூச்சு கோஷ்டம், வசம்பு, சாதிலிங்கம், எருக்கம் பாலிலரைத்து இடவும்.

அபூர்வ சிந்தாமணி:-

ரசம், கெந்தகம், பொன்னரிதாரம், நாவி, நொறுவிஷம் மிருவி வெண் காரம், அக்கிலாக்காரம், ஓமம், திரிகடுகு, திரிபாலையம், இது வெல்லாம் சுத்தி பண்ணி சரிகூட்டி இதுக்குச் சரி நேர்வாளம் சுத்தி பண்ணிக் கூட்டிக் கய்யாந்தகரைச் சாற்றில் இருபத்தொரு நாளரைத்து உருந்து பிரமாணம் உருண்டை பண்ணி நிழலிலுலர்த்தி தானியப் புடத்தில் 90 நாள் வைத்து எடுத்து விநாயக பூசை பண்ணி வெந்நீரில் ஒரு குளிகை யிடவும். அக்கினி சுரந் தீரும். தேனில் கய்யாந்தகரைச் சாற்றிலிடச் சகல குளிர் சன்னி சுரமுந் தீரும். தாக சுரத்துக்கு வெத்திலை, சீரகம் கசாயத்திலிடவும். பூத சுரத்துக்கு திப்பாகல் சாத்திலிடவும். சந்தி சுரத்துக்கு புளியிலை சீரகம் கசாயத்திலிடவும். தலைவலிக்கு குன்னியிலைச் சாத்திலிடவும். சன்னி வாதம், பாரிச வாதத்துக்கு வ வாகைப்பட்டைச் சாத்திலிடவும். வாதத்துக்குக் கோமூத்திரத்திலிடவும். மடி வாதத்துக்கு முந்திரிகைப் பழம் குசும்பைப்பூச் சாத்திலிடவும். சந்து வாதத்துக்கு கய்யாந்தகரை நொச்சிச் சாற்றிலிடவும். சன்னி வாதத்துக்கு நொச்சிச் சாத்திலிடவும். மாலைக் கண்ணுக்கு கைய்யாந்தகரைச் சாத்திலரைத்துக் கண்ணிலிடவும். பேய் பிசாசுக்கு எலுமிச்சம் பழச் சாத்திலரைத்துக் கண்ணிலிடவும். நேத்திர வாய்வுக்கு கோமூத்திரத்திலரைத்துக் கண்ணிலிடவும். சன்னி வலிப்புக்கு பூவுந்திப் பழச் சாற்றிலிடத் தீரும். விஷ கடிக்கு காடியிலிடவும் கல்லெரிப்புக்கு வாகையிலைச் சாத்திலிடவும். வெகு மூத்திரச் சலக் கழிச்சலுக்கு கருங்காலிப் பிசின் சர்க்கரையுடன் கூட்டி இடத் தீரும். ரத்த பிரமியத்துக்கு செம்பிலி யாட்டு நெய்யிலிடவும். வெள்ளாட்டுப் பாலிலிடவும். சுக்கிலப் பிரமியத்துக்கு சர்க்கரை முந்திரிப்பழம் பேரீச்சம் பழத்திலிட 21 பிரமியந் தீரும் சாதிக்காய், சாதிப்பத்திரி, லவங்கம் பொடியிலிட மூலங்கள் தீரும். எலுமிச்சம் பழச் சாத்திலிட ரத்தக் கிராணி தீரும். பசு மோரிலிடச் சலக் கிராணி தீரும். வெள் வெங்காயம் வெள்ளாட்டுப் பாலில் வேக வைத்து அரைத்ததிலிடச் சீதக் கிராணி தீரும். சாதிக்காய், சுக்கு கூட்டி இட மலக் கட்டுத் தீரும். கிடை, கடுக்காய், மிளகு பொடியும் வெந்நீரிலிட மலக் கட்டு பேதியாம். வெள்ளாட்டுக் கோமியத்தில் கொடுக்க காமாலை சோகை அருகை ஆமைக் கட்டுத் தீரும். சர்க்கரையிலிடச் சகல பித்தமுந் தீரும். வாத பித்தம் விகாளத்து குங்குமப்பூவில் நசையபிட்டு மாத்தக்காளிச் சாறும் சர்க்கரையும் கூட்டி உள்ளுக்குக் கொடுக்கவும். வாய்வு உன்மத்துக்கு வெள்ளாட்டுக் கோமியத்தில் கொடுக்கவும். வேப்பந் தழை சீரகக் கசாயத்தில் கொடுக்கப் பித்த குன்மந் தீரும். பூசனிக் காய்ச் சாற்றில் குஷ்டரோகந் தீரும். அந்தர தாமரையிலைச் சாத்தில் பெருவியாதி தீரும். அம்மான் பச்சரிசியில் நரை மாறும்.

அர்த்த நாரி யீசுர ரசம்:-

கெந்தகம் நாவி நேர்வாளம், சரி கூட்டி இஞ்சி சாற்றிலரைத்துக் குன்றி பிரமாணம் உருண்டை பண்ணி முலைப் பாலிலிட வலது புறம் நிற்கும்.

21-வகை மேகத்துக்குச் சகல வியாதிக்கு பிரான பூபதி:-

வாளம் இது வெல்லாம் சுத்தி பண்ணி அதிமதுரம், சாதிக்காய், இந்துப்புத் துருசு மணி மூத்தககாசு, வசம்பு, மஞ்சள், வேப்பம் விரை, நொச்சி வேர், இன்பூறல், வேர் சங்கம் வேர், சித்திரமூலம் வேர், சகாதேவி வேர்ப்பட்டைகளும் சரி கூட்டி வெள்ளாட்டுக் கோமியத்தில் நாள் ஒன்றுக்கு ஒரு சாமமாக இருபத்தொரு நாளைக்கு இருபத்தொரு சாமமரைத்துக் கடலைப் பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு அக்கினி சுரத்துக்கு மோரு சீரகம் சர்க்கரையிலிடவும். சீத சுரத்துக்கு நொச்சி வெள்ளவள்ளி திரிகடுகு, கஷாயத்தில் இஞ்சி, பஞ்ச கு ல க்ஷாயத்திலிடவும். சுரம், அதிசாரம் கிராணிக்கு தயிர் இலவம் பிசினிலிடவும். உஷ்ண தோஷத்துக்கு வில்லைப் பழ அன் அதிமதுரம், சந்தனம், முலைப் பாலில் அவசர மாத்திரம் உரைத்து ஒரு குளிகையிடயிடவும். சன்னி தோஷத்துக்கு வாய் பேசாமலிருந்தால் இஞ்சிச் சாறு சாம்பல் பூசணிச் சாறு உருத்திராட்சமும் உரைத்து ஒரு குளிகையிடவும்.

அதிமதுரமும், அக்கிராக்காரம், சந்தனம் ருத்திராட்சம், வில்லைக்காய் அன் முலைப் பாலிலிட 21-தோஷமுந் தீரும். எருக்கம் பூச் சாறு, மிளகு, ஓமம் கூட்டிஇட சோகை முதல் காமாலையுந் தீரும். வெள் வெங்காயத்தி தயிலத்திட சன்னி மெல்லாந் தீரும். பாண்டு ரோகத்துக்கு நொச்சி சாறுடன் கொடிவேலி மிளகு, உள்ளி, காச்சிப் பருப்பு அவிரிச் சாறு புளிச்ச மோரில் கொடுக்கவும். பிரமியம் மூத்திரக் கிரிச்சம் ரத்த பிரமியத்துக்கு நாபி குலைக்கு நெருஞ்சி வேர் தேத்தாங் கொட்டை தேன் நெய்யிலிடவும். வெகு மூத்திரத்துக்கு ஆவாரை ஐந்து பொடியில் சர்க்கரை கூட்டி இடவும். கிரணிக்கு வில்வம் பிசின் விளாம்பிசின் ஓமம் சுக்கு தேன் தயிரிலிடவும்.

குலைக்கு அளிஞ்சி சாத்தில் காயில் உடம்பெல்லாந் தவளையிடவும். விகாள சன்னிக்கு வெள்ளாட்டுக் கோமியத்தில் நசியம் பண்ணவும். கன்ன சிலந்திக்கு நல்லெண்ணையிலிடவும். உடம்புக் குடைச்சல் குலை கெற்ப குலைக்கு தேனிலிடவும். விஷ கடிக்கு வசம்பு ருத்திராட்சம் பழுபாகல் மூன் கிழங்கு எலுமிச் சாத்திலிடவும். சகல வீக்கத்துக்கு கொட்டாங் கிழங்கும் குளிகையும் அரைத்துத் தடவவும். மண்டை குலைக்கு சிரங்கு காஞ்சொறி கருகுரோகணி வசவிளங்கம் அரைத்து நல்லெண்ணையில் எரித்து இடவும். எரிவாதத்துக்கு சிறுந்திராப் பச்சைப் பழம் எலுமிச்சை சாத்தில் தடவவும். இலுப்பை கொட்டை எலுமிச்சை சாத்திலரைத்திடக் கன்னச் சிலந்தி கண்ட மாலை, அடைவாளை விப்புருதி தீரும்.

மிளகு, சுக்கு, திரிபலை, இந்துப்பு, கெந்தகம், வகைக்கு விராகனிடை.க, நேர்வாளம் விராகன்.க, கூட்டி முலைப் பாலில் அரைத்துப் பணவிடை உருண்டை பண்ணி முலைப் பால் மிளகுமிடச் சகல சுரமுந் தீரும். பத்தியம் பழம் புளி, பசுநீர், மோரு கூட்டவும். மிளகு.க, சுக்கு.க, நேர்வாளம்.க, சித்தாமணக்கம் பருப்பு.1½, வெல்லம்.½, கூட்டி கற்றாளைச் சாற்றிலரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி முலைப் பால் சர்க்கரையில் கொடுக்க உஷ்ண சுரம், தாப சுரம், மாந்தம், மலக்கட்டு தீரும். இச்சா பத்தியம். குழந்தை பிள்ளைகளுக்கும் ஆகும்.

<u>ஆனந்த தாண்டவ அக்கினி குமார செந்தூரம்:-</u>

மிளகு, சுக்கு, திரிபலை, இந்துப்பு, கெந்தகம் வகைக்கு விராகனிடை.க, நேர்வாளம் விராகனிடை.க கூட்டி முலைப் பாலில் அரைத்துப் பணவிடை உருண்டை பண்ணி முலைப்பால் மிளகு மிடச் சகல சுரமுந் தீரும். பத்தியம் பழைய புளி, பசுநீர் மோரு கூட்டவும்.

மிளகு.க, சுக்கு.க, நேர்வாளம்.க, சித்தாமணக்கம் பருப்பு.1½, வெல்லம்.½ கூட்டி கற்றாளைச் சாற்றிலரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி முலைப்பால் சர்க்கரையில் கொடுக்க உஷ்ண சுரம், தாப சுரம், மாந்தம், மலக்கட்டு, தீரும். இச்சா பத்தியம். குழந்தை பிள்ளைகளுக்கும் ஆகும்.

ஆனந்த தாண்டவ அக்கினி குமார செந்தூரம்:-

ரச செந்தூரம் நாலுஞ் சரி கூட்டி ஏழு நாள் ஏழு சாமம் கத்தாழைச் சாற்றிலரைத்து கடலைப் பிரமாணம் உருண்டை பண்ணி வெள்ளை வெங்காயத் தயிலத்தில் மூன்று நாளிடச் சன்னியுந் தீரும். முருங்கையிலைச் சாற்றில் ஏழு நாளிட வாதம் 80-ம் தீரும்.

<u>வங்காள அக்கினி குமார செந்தூரம்:-</u>

அரப்பொடி உருக்குப் பொடி, செம்பு பொடி, பித்தளைப் பொடி, வெங்கலப் பொடி ரசம், கெந்தகம், சாதிலிங்கம், ஊசிக் காந்தம், வெங்காரம் இது வகைக்கு பலம்.க, வெள்ளி விராகன்.உ, பொன்னு விராகன்.க, இது வெல்லாங் கூட்டிக் குமரிச் சாற்றில் நாலு சாமம் அரைத்து காட்டு முருங்கைச் சாற்றில் நாலு சாமமரைத்து மறு நாள் கொவ்வேலிச் சாற்றில் நாலு சாமமரைத்து ஒரு கலசத்தில் முக்கால் மட்டு விட்டு வாய்க்கு ஒரு வில்லை மூடி ஏழு சீலை மண் செய்து காய விட்டு மாரளவு குழிவெட்டு அடியில் முழங்காலளவு எரு அடுக்கி கலத்தை வைத்து அதின் மேல் குழி மட்டு எருவடுக்கி உமிப் போட்டுத் தீ மூட்டி மூன்று நாள் எடுத்து சிவக்காமலிருந்தால் அரை வாசி புடம் மறுபடி போடவும். ஆற விட்டெடுத்துச் சுத்தி பண்ணின நாவி பலம்.க, திப்பிலி பலம்.க, தெசாவரம் பலம்.½ மூலம் பலம்.க, செந்தூரத்தோடே கூட்டி முலைப் பால் விட்டரைத்து ஒரு பணவிடை குளிகை பண்ணி நிழலிலுலர்த்தி உருண்டை ஒன்று திரிகடுகு வெப்பின பொடியுந் தேனும் நொச்சிச் சாறுங் கொள்ள 8∅-வாதம், 26 வாய்வு, 8 குன்மம் பல பித்த குன்மம் பதினெட்டுடல் வாய்வு மண்டை குலை பீனிசம் நாசிகாபடம், கபால வாய்வு, தலை யிடிப்பு, பிடரி செவி நோவு தொண்டை நோவு நெஞ்சு நோவு, முயல கண்டன் மூர்ச்சை சன்னி மூர்ச்சை அண்ட வாதம், கழல் வாதம், அந்தர வாய்வு, அந்தர வட்டில் சூலை வாய்வு மூச்சுப்பு வாய்வு, குதிரை வலிப்பு, முழங்கால் முட்டிடி, முழங்கால் கரப்பான் நடுக்கு வாதம், குஷ்ட வாதம், வாயில் கொறுப்பு, அவேத்தும் தீரும். சாராயத்தில் கொடுக்க கிரந்தி நேத்திர வாய்வு, புண்குடல் குலை 18-ம் தீரும். வெள் வெங்காயத் தயிலத்தில் மூத்திரக் கடுப்பு, மூத்திரக் கிரிச்சு, மூத்திர தோஷம் தீரும்.

ஒரு மாத்திரையுந் திப்பிலிப் பொடியுங் கூட்டி தேனில் கொள்ள பிரமியம் 18 கல்லடைப்பு 18 இந்திரிய கண்டி ஐந்து தந்த வாய்வு, பித்த ரோகம், 326-ம் உஷ்ண ரோகம் 326-ம் சேற் மந் தொண்ணூ த்தாறும் தீரும்.

மேம்மட்டிச் செந்தூரத்தில் கொள்ளச் சோகை காமாலை உள்நீர்க் கோவை, பிறநீர்க் கோவை விஷவாதம், பாண்டு ரோகம், வயத்து வியாதி 63-ம் தீரும்.

<u>அமுர்த சஞ்சீவி:-</u>

அதிமதூரம், கோரோசினை, லவங்கம், கொத்தமல்லி வகைக்கு விராகனிடை சீரகம், திப்பிலி, தம்பராஷ்டகம் வகைக்கு விராகனிடை.க, நெல்லி வத்தல் விரா கனிடை.க, கூட்டி ஒரு படி பசுவின் பாலில் வேக வைத்து அரைத்துக் கடலைப் பிரமாணம் உருண்டை பண்ணி உஷ்ண சுரம், கிராணி தாபம், பித்த சுரம் இவைகளுக்கு சீரகம், சுக்கு சர்க்கரையில் கொடுக்கவும். சீரகக் கஷாயத்தில் சர்க்கரையிலிட உஷ்ண பித்த சுரம் சுக்கு கஷாயத்தில் கிராணியும் சுரமுந் தீரும். முலைப் பாலில் தோஷ தாபந் தீரும். சர்க்கரையில் பித்த சுரம் தீரும். தம்பராஷ்டக கஷாயத்தில் இருமல் தீரும். திப்பிலிக் கஷாயத்தில் சன்னி குளிர் சுரம் தீரும். இச்சா பத்தியம்.

<u>கிராணி குடோரக் கபாடம்:-</u>

நாவி, கெந்தகம், சாதிலிங்கம், அபினி விளாம்பிசின், சரி கூட்டிக் கஞ்சா யிலைச் சாற்றில் மூன்று சாமமரைத்து உளுந்து பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு சுரத்தில் மேல் சீதக் கடுப்புக்கு தேனில் கொடுக்க. ரத்தக கடுப்புக்கு கட்டித் தயிரில் கொடுக்கவும். பத்தியம் பச்சைத் தவரை, வெந்த தண்ணீர், புளியில்லாதே காய்ச்சி வார்க்கவும். குடப் பாலைப் பட்டை, காசுக்கட்டி, அதிவிடையம், திரிகடுகு, அபினி, லவங்கம், சாதிக்காய், கருங்குங்கிலியம், வசுவாசி, கஞ்சாப் பொடி, சரி

ஒரு நாள் ஒரு வகை கசாயத்திலரைத்து அரநெல்லிக்காய்ப் பிரமாணம் குளிகை செய்து தேனிலிடக் கிரிமிக் கபாலடம் தீரும்.

அரப்பொடி, காடியிலூறப் போட்டு மறுநாள் எலுமிச்சஞ் சாற்றிலூறப் போட்டு மறுநாள் நல்வல் பட்டைச் சாற்றில் நாலு நாளூறப் போட்டு மாதளம் பட்டைச் சாற்றிலூறப் போடவும். கத்தாளஞ் சாற்றில் வேக வைக்கவும். குழிக் கல்லிட்டு பலத்துக்கு ரெண்டு விராகனிடை கெந்தகங் கூட்டிக் கத்தாளஞ் சாற்றிலரைத்துக் குகையிலிட்டு மேலும் மூடிச் சீலை மண் செய்து எருமுட்டையில் புடம் போடப் பற்பமாம். பின்பு இரண்டு விராகன் கெந்தகங் கூட்டி எலுமிச்சஞ் சாறு, மாதளம் பட்டை, நல்வல் பட்டை, ஆலம் பட்டை, அரசம் பட்டை வகைக்கு ஒரு புடம் அரைத்துக் குகையிலிட்டு இப்படி ஏழு புடம் போடச் செந்தூரமாம். சங்கம் வேர் சூரணம், திரிகடுகு சூரணம் சரி கூட்டி பணவிடை பற்பம் தேனில் கொள்ள சோகை காமாலை விடவாதம் பாண்டு வாதம், சன்னி, வீக்கம், சகல வீக்கமுந் தீரும். புளி விடவும்.

<u>தாம்பிர பற்பம்:-</u> 3.10.63.

ஒரு பலம் செம்பு தகடாய்த் தட்டி சாணி கரைத்த தகட்டைப் போட்டு வேக ஒரு சுத்தி பண்ணிக் கற்றாளைச் சாற்றில் புளியிலைச் சாற்றில் மோரில் எலுமிச்சஞ் சாறு பொன்னாங்கண்ணிச் சாறு இந்த வகைச் சாற்றில் பசுவின் பாலில் சுத்தி பண்ணி நெல்லிக் காய்க் கெந்தகம் விராகன் .2½, எருக்கம் பாலிலரைத்து தகட்டில் பூசிக் குகையிலிட்டு எருவில் புடம் போடப் பற்பமாம். கத்தாளஞ் சாற்றில் ஒரு புடம் போடப் பற்பமாம் திப்பிலிக் கசாயம் பசுவின் பாலில் வகைக்கு ஒரு புடம் போட பற்பம். வெல்லத்தி லொரு மண்டலங் கொள்ள பித்த குன்ம மெல்லாந் தீரும். இந்தப் பற்பத்தை எருக்கம் பால் செருப்படிச் சாறு ஆலம்பால், கள்ளச்சி பட்டைச் சாறு, அரசம் பட்டைச் சாறு சுண்டை வேர்க் கசாயம், இந்தச் சாறுகளில் வகைக்கு ஏழு தரம் அரைத்துப் புடம் போடச் செந்தூரமாம். இது சர்க்கரையில் பணவிடை கொடுக்க, நாற்பது பித்தமும் 18-குன்மமுந் தீரும்.

<u>வெங்கல பற்ப செந்தூரம்:-</u>

வெங்கலம் வேண்டின மாத்திரம் புளியிலைச் சாற்றில் தழுதாளைச் சாற்றில் செம்பு உலையில் சிவக்கக் காய்ச்சி வகைக்கு மூன்று தரந் தவைச்சுத் தீயாறின பின்பு ராவிப் பொடி பண்ணிச் சரி கெந்தகங் கூட்டி எருக்கம் பால் விட்டு அரைத்து வெய் யிலில் ஏழு புடம் வைத்து குகையிலிட்டுச் சீலை மண் செய்து ஏழு கெசபுடம் போடவும் பற்பமாம். பற்பத்தில் பாதி சாதிலிங்கம் இதில் பாதி, கெந்தகம் இதில் பாதி ரசம் கூட்டி அரைப்புச் செருப்படிச் சாறு ஆலம் பால் அரசம் பட்டை கருவேப்பிலை கசாயம் வகைக்கு இரண்டு சாமம் அரைத்துக் குகையிலிட்டுச் கெசபுடம் போடவும் செந்தூரமாம்.

ரசம் பலம்.3, சுத்தி பண்ணி நெல்லிக்காய்க் கெந்தகம் பலம்.க, பாலிலும் வானமுத் தழுதுச் சாற்றிலும் சுத்தி பண்ணிக் கூட்டி குப்பை மேனிச் சாற்றில் ஒரு நாள் ஒரு சாமம் நிழலுலர்த்திப் பொடி பண்ணிக் காசிக்குப்பியிலடைத்து களிப்பாக்கு வேலம் பிசின் பொன் மெழுகு ஓடைக் கல் சுண்ணாம்பு, வெல்லம் இது எல்லாங் கூட்டி கோழி முட்டை, வெள்ளைக் கருவிட்டு அரைத்துக் குப்பி வாய்க்குப் பூசி ஆறவிட்டுத் தாளியில் மணல் விட்டு அதில் புதைத்து மேல் சட்டி மூடிச் சீலை மண் செய்து அடுப்பில் வைத்து இரண்டு சாமம் எரித்து இரண்டு சாமம் ஆற விட்டு எடுத்துத் திரிகடுகு, வெதுப்பின பொடி விராகனிடை.க, செந்தூரம் பணவிடை.க, கூட்டித் தேனில் இரண்டு நேரமும் ஒரு மண்டலங் கொள்ள வாய்வு சூலை குன்மந் தீரும், திப்பிலி, வெதுப்பின பொடி விரா கனிடை செந்தூரம் பணவிடையும் கூட்டி தேனில் கொள்ளச் சன்னியன், பிரமல் ஈளை, சுவாச காசம், காசம், மந்தார காசம், எலிகடி, பிரமல் தீரும். கோழிச் சாற்றில் ஒரு பணவிடை இருபது நாள் கொள்ள வயத்துக் கடுப்பு, ஆசன கிராணியுந் தீரும்.

தீரும். பெருங்காயம் முன்று பணவிடை செந்தூரம் ஒரு பணவிடையுந் தேனில் இருபது நாள் கொள்ள வயத்து வியாதி அரபத்தாறு வாயுந் திரட்சி வாயுக் கட்டு, வெடிசூலை ஆருப் புண்ணும் ஆறும். பொன் முசுட்டை வேரும் கடலிருஞ்சிப் பட்டை, கோரைக் கிழங்கும், எலுமிச்ச வேரும் சரிபொடி விராகனிடை செந்தூரம் பணவிடை தேனில் நாற்பது நாள் கொள்ளப் பலமுண்டு. அழகுண்டு. தாது வர்த்தனையுண்டாம்.

<u>அளுவை கவுசைக்கு பற்பம்:-</u>

வெருகங் கிழங்கு முத்தி கிழங்கு நறுக்கின பொடி யிரு நாழி வரகு பொடி யிரு நாழி வயிச்சி ஒரு நாளி நத்தை நாரு கிளிஞ்சி நாழி ஒரு திப்பிலிப் பானையிலே ஒரு பிடி பத்து சாறணைக் கொழுந்து பிடி பத்து, குப்பை மேனிக் கொழுந்து படி பத்து பற்ந் தோலான் கொழுந்து பிடி பத்து, கரிசலாங் கொழுந்து பிடி பத்து, நீர்முள்ளி, செருப்படிக் கொழுந்து பிடி.20, கல்லுப்பு, இரு நாளிது வெல்லாங் கலந்து ஒரு பானையிலிட்டுச் சட்டி மூடிச் சீலை மண் செய்து அறுபது நாழிகை எரிய விட்டு பற்பமாகல் வைத்துக் கொண்டு வெருகடிப் பிரமாணம் இரண்டு நேரமும் ஒரு மண்டலம் கொள்ளவும். தீரும் வியாதி அளுவை கிருமி, கிரிசை, மேற்கவுசை, கீழ்க்கவுசை, வெப்புப் பாண்டு, பக்கக் கவுசை, பண்டு மகோதரம் நீரிழிவு, இவைகளும் இது வெல்லாந் தீரும். காரிப்பு, புளி விடவும். விஷ ஊதமானால் வறக்கனைப் பட்டை----க் கட்டிக் கொள்ளவும்.

<u>தாம்பிர பற்பம்:-</u>

ரசம், கெந்தகம், வகை ஒன்றுக்கு பலம்.10 கூட்டி வேலிப் பருத்திச் சாற்றில் மூன்று நாளரைத்து கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், சாறணைக் கொழுந்து, ----க்சாயம் வைத்து அந்தக் கஷாயத்தில் மூன்று நாளரைத்துப் பணவிடை உருண்டை பண்ணி நிழலுலர்த்தி வாத சயத்துக்கு----- -யப் பொடி சர்க்கரை கூட்டி இடவும். பித்த சுயத்துக்குச் சர்க்கரையிலிட்வும். சேத்ம சயத்துக்குத் திப்பிலிப் பொடி தேனுங் கூட்டி இடவும்.

<u>கொடிப் பவுத்திரத்துக்கு:-</u>

அரைப்பணவிடை, இரசம், முருக்கிலைச் சாத்தில் சாம்பலாக முறிச்சுப் பின்பு தேங்காய் சிரட்டையிலிட்டு நல்லெண்ணை விட்டு குத்தி ஊதப் புண்ணுள்ள இடமெல்லாம் பாயும். இந்தப்படி எட்டு நாளைக்கு ஊதவும் புண்ணாறும். இது கை கண்டது.

<u>வங்க பற்பம்:-</u>

வங்கம் வேலிப் பருத்திச் சாறு விட்டரைத்துச் சுண்ணாம்புப் பொடியில் வறக்க பற்பம். பசுவின் கோமியத்தில் சுத்தி பண்ணித் தகடு தட்டி நறுக்கி புண்ணுக்கு மஞ்சளும் பொடி பண்ணி அடுக்கடுக்கு வைத்து எருப்புடம் போடவும் பற்பம்.

காரீயம் பலம்.20, பசுவின் கோமியத்தில் மூன்று நாளூற விட்டு மறுபடி உருக்கித் தகடு தட்டி ஆவாரை வேர்ப் பட்டை, சுக்கு வேர்ப் பட்டை, கண்டங்கத்திரி வேர்ப் பட்டை போட்டு வறக்கச் செந்தூரமாம். இந்தச் செந்தூரம் வெருகடி சீனியும் வெண்ணையுங் கொள்ளத் தீரும் வியாதி மூத்திரக் கிரிச்சி 18 கல்லடைப்பு, 18 சோபம், 12 சதையடைப்பு, உஷ்ண ரோகம்320, பித்தம்.123, சலக் கழிச்சல்.20, எரும்புருக்கி.12, சுக்கிலப் பிரமேகம்.12 இந்த தீராத ரோகமுந் தீரும்.

சாதிக்காய், லவங்கம், சமுத்திராச் சோகி விரை, அதிமதுரம், முருங்கை விரை கூட்டிச் சூரணம் மூன்று பணவிடையும். காரீய பற்பம் ஒரு பணவிடையும். சர்க்கரை ஒரு பணவிடையும் கூட்டிக் கொள்ளச் சகல கழிச்சலுந் தீரும்.

<u>இரத்த நாக பற்பம்:-</u>

இரத்த நாகம் வேண்டின மாத்திரம் கத்தாழைச் சாறு விட்டு கத்தாழை வேர்த் தண்டில் தொண்ணூறு நாழிகை வறுக்கப் பற்பமாம்.

காய்ச்சி இருபது தரம் வெள்ளாட்டுப் பாலில் கவுத்துப் பின்பு சட்டியில் போட்டுச் சுக்கு ஏலம், மஞ்சள் வகைக்கு பலம்.க, வெடியுப்பு பலம்.உ, கூட்டிப் பொடி பண்ணி அந்தப் பொடியில் சிறுகச் சிறுக வறுக்கச் சிவந்த நாயுருவிச் சூரணம் போட்டு வறுக்க மாதளம் பூ நிறமாம். இந்தச் செந்தூரம் ஒரு பணவிடையும், கொடிவேலி, சூரணம் வெருகடியுங் கொள்ள அஷ்ட குன்மம், சதையடைப்புக் கல்லடைப்புச், க்ஷய ரோகம், இந்திரிய, கண்டி, சுவாச காசம், மந்தார காசம், அரிஞளல், நெஞ்சு நோவு, வாய்வுகளும் தீரும். திரிகடுகு சூரணம் வெருகடியும், பணவிடை செந்தூரமும் கொள்ள பித்த க்ஷயம்.20, சேத்தமம் தொண்ணூறு த்தாமம் தீரும்.

<u>காந்த செந்தூரம்:-</u>

ஊசிக் காந்தம் பலம்.க, நல்வல் பட்டை மருதம் பட்டை காடியில் அறுபது நாழிகை ஊற விட்டு எடுத்துக் காடி வார்த்து அரைத்து ஒரு கலசத்திலே நெல் புகையை விட்டு அதில் இரண்டு காஞ்சி ரசம் விட்டு மேலே சீலைக் கள்ளி----நதம், அந்தக் காந்தத்தை வைத்து வட்ட ஒரு கொண்டு மூடி மூன்று சீலை மண் செய்து கச்சு மட்டுக் குழி வெட்டி எருவடிக்கி நடுவே வைத்து தீமூட்டி அறுபது நாழிகை எரித்து ஆற விட்டு எடுத்து வாத சரீரத்துக்கு தேனில் பித்த சரீரத்துக்குச் சர்க்கரை நெய்யில் ஒரு பணவிடை கொள்ள உஷ்ண வாய்வு சன்னி தீரும். கய்யாந்தகரைச் சாற்றில் கொடுக்க காமாலை விஷ வாதம், பாண்டு தீரும். ஆவாரை விரையும் புத்திப் பிரமும் அரைத்து ஒரு பணவிடை செந்தூரமும் கூட்டிக் கொள்ளச் சகல கசிச்சல் தீரும். தாகமானால் ஏலப் பொடியும் தயிரும் கொடுக்கத் தீரும்.

<u>காந்த செந்தூரம்:-</u>

காந்தம் வேண்டின மாத்திரம் கொல்லு உலையில் காய்ச்சி எழு தரம் எருமைக் கோமியத்தில் போட்டு நாலுக்கொரு பங்கு கெந்தகம் கூட்டி எலுமிச்சந் சாற்றிலரைத்துக் கல்சத்திலிட்டு வட்ட ஒரு மூடி மூன்று சீலை மண் செய்து ஒரு விறகில் காடாக்கினியாய் நாலு சாமம் எரித்தால் செந்தூரமாம். முன் சொன்ன வியாதிக்கெல்லாம் அந்த அனுபானத்திலிடவும்.

<u>அரிதார பற்பம்:-</u>

பொன்னரிதாரம் சுத்தி பண்ணின பத்து விராகன். கோழி முட்டை ஒரு பத்து விராகனிடை கூட்டி எருக்கம் பாலில் அரைத்து நெல்லஞ் சோறு புத்த மண் வெங்கலப் பொடி குகை பண்ணிஅதில் விட்டு அந்தக் குகையில் அரைத்த மருந்தை அடை தட்டி வைத்து ஒரு மூடிச் சீலை மண் செய்து கெசபுடம் இடவும் பற்பமாம். இந்த பற்பம் ஒரு பணவிடை திப்பிலி, மிளகு, சீரகம், இஞ்சி தேன் கூட்டி இடச் சுவாச காசம் மந்தார காசம், பித்த பாண்டு, வெப்பு பாவை தீரும். விளக்கெண்ணை முழுகவும்.

<u>அரிதார பற்பம்:-</u>

வேண்டின மாத்திரம் அரிதாரம் சுத்தி பண்ணிச் சுண்ணாம்புத் தண்ணீரில் சாறணைச் சாற்றில் பூசணிக்காய்ச் சாற்றில் தோளாந்திரங் கட்டி வேக வைத்து மூன்று வகையில் முன்பு சுத்தி பண்ணி புரசம் பட்டைச் சாற்றில் ஒரு சாமம் அரைத்து அடை தட்டி பொரசம் பட்டை இடித்து ஒரு சட்டியில் அரைச் சட்டியிட்டு நடுவே அடை வைத்து மேலு மந்தப் பட்டை மூடி மேல்ச் சட்டி மூடி எழு சீலை மண் செய்து மூன்று நாள் மந்தாக்கினியாக எரித்து நாலா நாள் எடுக்கச் சங்கு போல் ஈயக் கட்டி போ விருக்கும். இதிலொரு பணவிடை பற்பமும் தென்னம் விளாம்பட்டை தயிலத்தில் கொள்ளச் சூலையன் விஷ கடியும் எட்டம்.16, மாலை பருதாமரை தீரும். திப்பிலிப் பொடி தேனில் கொள்ள சுளை, இருமல், சுவாச காசம், மந்தார காசம், எலிகடி; மாந்தம், உளை மாந்தம், அஜீரண மாந்தம், சுரமாந்தம் காசம் இவை வெல்லாந் தீரும்.

<u>நேர்வாள செந்தூரம்:-</u> நேர்வாளம் சாணியில் புழுக்கிப் பின்பு ஒரு வாக்கித் கத்தானைச்

சாத்தில் வேக வைத்து ஆற விட்டு எடுத்து மூன்று வாங்கி கெந்தகம் அப்பபொடி
இந்துப்புக் சரி கூட்டிக் கத்தாளைச் சாத்திலரைத்துப் புடச் சட்டியில் வைத்துக் கத்
தாளைச் சாத்திலரைத்துப்புடச் சட்டியில் வைத்துக் கத்தாளைச் சாறு நிறைய விட்டு
ஆற சாமமெரித்துச் செந்தூர மெடுத்துப் பொடி பண்ணிச் சுக்குத் திப்பிலி, கடுக்காய்,
தேத்தாங்கொட்டை சமன் பொடி பண்ணி சுக்கு*திப்பிலி; கடுக்காய்; சூரணம் வெரு
கடியும் செந்தூரம் மூன்று பணவிடையும் தேனுங் கூட்டிக் கொள்ள உள் மாந்தை, காசி
ரோகம், எரிவன்மம், வாய்வு குன்மம், சத்தி குன்மம், விஷ வாதம் தீரும்.

<u>ரச பற்பம்:-</u>

ரசம் பத்து விராகனிடை வெற்றிலைச் சாறு, ஒரு படி, புடப் பானையில்
விட்டு எட்டெரு கொண்டு மூடி ஏழு சீலை மண் செய்து ஒரு ராத்திரி பத்திர காளி
கோயிலில் வைத்து மறுநாள் எடுத்துக் கோவில் முன்னே அடுப்புக் கூட்டி அம்மைக்குப்
பூசை பண்ணி கூத்தல் விறகிலே எரித்து மேலே நெல் வைத்துப் பொரித்தால் எடுக்கப்
பற்பமாம். இந்த பற்பம், கடுக்காய், ஓமம், சிறுகுறிஞ்சா, சித்திரமூலம், சிலந்திச்
கொடி சரி சூரணங் கூட்டி ஒரு பணவிடை வெந்நீரில் ஏழு நாள் கொள்ளவும். உப்பு,
புளி விடவும். பதினைந்தாம் நாளைக்கு விரக்கெண்ணெய் தேய்த்து முழுகத் தீரும் வியாதி
சூலை 18 கன்னச் சிலந்தி, கண்டமாலை, மண்டை சூலை, நாசி சூலை, வாய்வு சூலை,
ரண மெல்லாந் தீரும்.

<u>ரச செந்தூரம்:-</u>

ரசம் மூன்று பங்கு, கெந்தகம் ஒரு பங்கு கூட்டி கத்தாழஞ் சாற்றிலரைத்துக்
காசிக் குப்பியிலிட்டு மண் பவளத்தில் வாய் மூடி ஏழு சீலை மண் செய்து ஆறவிட்டு
ஒரு சட்டியில் பாதி கடுக்காய், பொடி யிட்டு நடுவே குப்பியை வைத்து குப்பி
தெரியாமல் கடுக்காய்ப் பொடி விட்டு மேல் மணல் விட்டு மேல் சட்டி மூடி 12
சாமம் மந்தாக்கினியாய் எரிக்க ஆறவிட்டு எடுத்துப் பணவிடை அநுபானத்தில் கொடுக்
கச் சகல வியாதியுந்தீரும்.

<u>ரச பற்பம்:-</u>

ரசம் ஐந்து விராகனிடை, இருப்புக் கரண்டியிலிட்டு பசு மஞ்சள் சாறு படி.க,
முருங்கையிலைச் சாறு படி.க, கோட்டைக் கரந்தைப் பொடி படி.க் கூட்டி கரண்டியில்
வைத்து சிறுகச் சிறுக விட்டு அக்கினி பீடத்தில் வைக்க பற்பமாம். இது சுரங்களுக்கு இஞ்சிச்
சாற்றில் பணவிடை இடவும். காசி ரோகத்துக்கு தேனில் ஒரு பணவிடை இடவும்.
சூலைக்குச் சர்க்கரையில் ஒரு பணவிடை இடவும்.

<u>அப்பிரக பற்பம்:-</u>

அப்பிரகத்தை கொல்லு லையில் காய்ச்சி பசுவின் கோமியத்தில் தோய்த்து
பின்பு எருக்கிலைப் பருப்புச் சாறு விட்டரைத்து அத்தி வச்சிர கையில் வைத்து
ஊத பற்பமாம்.

அப்பிரகம் பார்வதி வயத்திலே உண்டானது அதில் நாலு விதம் உண்டு. வெள்ளை,
நீலம், பச்சை, கருப்பு, நாக அப்பிரகம் வெள்ளை வெள்ளை உலையில் ஊத உருகிச்
சிவக்கும். வாதம் போக்கும். அஸ்தூர அப்பிரகம் நீலம் உலையில் வைத்தால் வெந்து
விழும். சௌநித்தைப் போக்கும். நாக அப்பிரகம் பச்சை அது உலையில் வைத்து
ஊதப் பாம்பு போல் சீறும். உஷ்ணத்தைப் போக்கும். வச்சிர அப்பிரகம் கருப்பு.
அது உலையில் வைத்து ஊத புகைச்சுப் போம். சர்வ வியாதியும் போக்கும். இந்த
அப்பிரகத்தை மூன்று நாள் காடியிலூறப் போட்டு நாலாநாளெடுத்து உரலிலே இடித்து
திரும்பவும் காடியிலூற வைத்து அதில் பாதி நெல்லுங் கூட்டி புதுக் காழியில்
புதுச் சீலை கட்டி அந்தச் சீலை மேலே வைத்துக் காடியை விட்டு வடிகட்டி தாளியில்
விழுந்ததைத் தெளிய விட்டு வடித்து அசு*கதிர நவநீதமாயிருக்கும். அதை எடுத்துக் கல்
வத்திலிட்டு பசுவின் நெய், வெந்நீர் தண்ணீர் எருக்கம் பால், ஆலம் பால் இதில் தனித்

தனி அரைத்து வகைக்கு மூன்று கெச புடம் போடவும். காட்டுத் துளசி நாயுருவி எருக்கம்--- பிஞ்சி குடல்ப்பாலை, அரசு பொன்னாங்கண்ணி, சுகந்த பாலை, சாரணை, தன்னி விட்டான் நிலப்பனை கொட்டைக் கரந்தை நெருஞ்சி ஆடாதோடை அமுக்கிராத் தழை, சந்தி நிலக் குமிள், சங்கு, கண்டங்கத்திரி, பூவரசு, நெய்தல் கிழங்கு, நொச்சி, முருங்கை வேம்பு, ஆலாயிலை பிலைக் கள்ளி இந்த வகைச் சாறு.

(வேறு) பாலைப் பட்டை கசாயம் தனித் தனியே அரைத்து ஈத்திருவது கெசபுடம் போடச் சித்தியாம். ஆலாம் விழுது கசாயத்தில் இஞ்சிச் சாறு முத்தக் காசு சாறு, எலுமிச்சஞ் சாறு, தனித் தனியே அரைக்கு வகைக்கு பத்துக் கெசபுடம் போடவும் செந்தூரமாகும்.

வாத சுரத்துக்கு பித்த சேத்தும சுரத்துக்கு ஒரு விராகனிடை திப்பிலிப் பொடியும் சர்க்கரையுங் கூட்டிக் கால் பணவிடை பற்பமிடவும். பொரியரிசிச் சோறும் பாலுங் கூட்டி உண்ணவும். குளிர் சுரத்துக்கு பஞ்ச லவணமும் பாலுங் கால் பணவிடை பற்பமுங் கூட்டி இடவும். விஷ சுரத்துக்கு ஒரு விராகன் ஓட்டடையும் நெய்யுங் கால் பணவிடை பற்பமுங் கொடுக்கவும். ரத்த பித்தத்துக்கு கால் பணவடை பற்பம் முலைப் பாலிலிடவும். இருபத்தொரு பிரமியத்துக்கு ஆவாரை ஐந்து கூட்டிக் கால் பணவிடை பற்பமுங் கூட்டி இடவும். உள் மாந்தைக்குத் திப்பிலி விராகனிடை நாலு சீரகம் விராகனிடை நாலு கூட்டி தேனுங் கூட்டி ஒரு பணவிடை பற்பமிடவும். வறட்சி யிருமலுக்கு நெய்யிலொரு பணவிடை இடவும். மிளகு கடுக்காய்ப் பொடியில் ஒரு பணவிடை இடவும். பித்த ரோகங்களுக்கு சர்க்கரையில் பணவிடை இடவும். சேத்தும ரோகத்துக்கு திப்பிலிப் பொடியும் தேனுங் கூட்டி பணவிடை இடவும். காசி ரோகத்துக்கு அமுக்கிராங் கிழங்குச் சூரணமும் நெய்யில் ஒரு பணவிடையும் வாந்திக்கு மயிலிறகு சுட்ட சாம்பலும் எவச்சாரம் தேன் கூட்டிப் பணவிடை இடவும். மூலம் ஐந்துக்கும் பன்றிக் கோரைக் கிழங்கு, சுக்கு அரைத்துத் தயிரில் பணவிடை பற்பமிடவும். விசுவிக் கழிச்சல் செரியாக் கழிச்சலுக்கு கோரைக் கிழங்குந் தயிரும் செந்தூரம் பணவிடையும் கொடுக்கவும். குழந்தைக் கழிச்சலுக்கு முலைப் பாலிலிடவும். எட்டு வகைக் குன்மத்துக்குஞ் சேங்கொட்டைத் தயிலத்தில் பணவிடை இடவும். பாண்டு ரோகம் ஐந்துக்கும் சாரணை வேர் சுத்தி பண்ணின சூரணத்தில் சர்க்கரையுங் கூட்டி ஒரு பணவிடை இடவும். குறை நோவுக்கு பெருங்காயம், திப்பிலி, இந்துப்புச் சரி கூட்டி சூரணம் வெருகடியும் செந்தூரம் பணவிடையுங் கூட்டி இடவும். தின சோபைக்கு தாம்பிர பற்பம் எலுமிச்சஞ் சாறு கூட்டி பணவிடை செந்தூரமிடவும். கெந்தக கற்பூரம் சர்க்கரை, நெய்யுங் கூட்டிக் கொள்ள நரை மாறும்.

<u>ரச கற்பூரம்</u>:-

ரசம் பலம்.உ, கெந்தகம் பலம்.க, வெற்றிலைச் சாற்றில் ஈத்திருவது நாழிகை அரைத்து சீலையும் சேடும் அரைத்துக்குகை பண்ணிக் குகையிலிட்டு மேல் மூடி வாய்க்கு ஏழு சீலை மண் செய்து ஆறவிட்டு கலசத்திலிட்டு ஒரு கொண்டு மூடி வாய்க்கு மண் பூசி அரையளவு, குழி வெட்டி குழியில் பாதி எருவடுக்கி நடுவே வைத்து மேலும் எருவடுக்கி உமிப் போட்டு நாலு புறமுந் தீ மூட்டி மூன்று நாளைக்கு மேல் எடுக்க கற்பூரம் வெள்ளையாய் இருக்கும். இதி லொரு பணவிடை கற்பூரம் முலைப் பாலிலிடச் சகல சுரமுந் தீரும். சகல தோஷமுந் தீரும் நொச்சி சாறு, திப்பிலியிலிட சன்னி சுரமும் சன்னியுந் தீரும். ரத்த பிரமியத்துக்குச் சர்க்கரை யிலிடவும். சீப் பிரமியத்துக்கு ஒரு விராகன் ஊமத்தஞ் சாறு தயிரிலிடவும். ஆவாரை ஐந்து பொடியில் சலக் கழிச்சல் தீரும். கிரணிக்கு சீந்திச் சாற்றிலிடவும். பித்தத்துக்கு இஞ்சி சாற்றிலிடவும். காமாலை விஷ வாதத்துக்கு கய்யாந்தகரைச் சாற்றிலிடவும். வாய் சூலை குன்மத்துக்கு திரிகடுகு பெருங்காயம் எவச்சாரம் வெள்ளாட்டுக் கோமியத்தில் கொள்ளவும். முச் சன்னி வெப்புக்கு மிளகு கசாயத்திலிடவும். வயறு வலிக்கு புளியீர்க்கு மிளகு கசாயத்திலிட கொடுக்கவும். 18 குஷ்டத்துக்கு விராலி விரை தகரை விரை எள்ளு பாலிலரைத்துக் கொடுக்கவும். வாய்க் கிரந்தி நாவில் சூலை பல் பருவுக்கு சந்தனத் தண்ணீரில் கொடுக்கவு பத்தியம் உமாதத்துக்கு எலுமிச்சஞ் சாறு காராட்டுப் பாலு இதிலிடவும். மற்றப் படி இந்த அநுபானத்தில் வியாதி அறிந்து மத்தியஞ் சொல்லவும். வேப்பம் பட்டை விராகனிடை வெதுப்பி முத்தக்காசு, சுக்கு, கோஷ்டம், கோரோசனை கூட்டி இள வெந்நீரில் அரைத்துக்

கொடுக்கவும். வாதமும் வாத சுரமுந் தீரும். நெல்லிப் பட்டை விராகன் வெசப்பி திரிகடுகு சந்தனம் முந்திரிப் பழம், முத்தக்காசு, சரி கூட்டி அரைத்து வெந்நீரில் கொடுக்கவும். பித்தமும் பித்த சுரமுந் தீரும். கண்டங்கத்திரி வேர்ப் பட்டை விராகனிடை வெசப்பி திரிகடுகு தெசாவரம் சரி கூட்டி அரைத்துத் தேனில் கொடுக்கவும். சேத்துமம் சேத்தும சுரமுந் தீரும். வாத பித்த சேத்தும விரோசனம்.

தோஷத்துக்கு:-

சயிந்திர லவணம், பெருங்காயம், கடுக்காய் பொட்டிலி உப்பு படிக்காரம், கண்டு சர்க்கரை மிதியும் சரிகூட்டி எலுமிச்சஞ் சாற்றிலரைத்து குன்றிப் பிரமாணம் அத்திக் கசாயத்திலிடவும். பொருமி வேர் திப்பிலி அக்கலாக்காரம் அதிமதுரம், கருஞ் சீரகம், சீரகம், ஏலரிசி, லவங்கங் கற்பூரம், மிளகு, மான் கொம்பு சுட்டுச் சரி கூட்டி பழம் புளிச் சாற்றிலரைத்துக் குன்றிப் பிரமாணம் வெந்நீரில் முலைப் பாலில் கொடுக்கவும்.

திப்பிலி.௫, கேத்தாங் கொட்டை.௫, பச்சைக் கற்பூரம் பலவிடை.௨, தேனி லரைத்து நாக்கில் தடவவும். முந்திரிப் பழம், வால்மிளகு, கோஷ்டம், இந்துப்பு, அதி மதுரம், கண்டு சர்க்கரை சரி கூட்டி அரைத்து முலைப் பாலில் தடவத் தோஷந் தீரும்.

சகல வாதத்துக்கு வாத ராட்சதன்:-

சித்திரமூலம் பலம்.க, திப்பிலி பலம்.½, சுக்கு பலம்.½, திப்பிலி மூலம் பலம்.½, செவியம் பலம்.½, மிளகு பலம்.½ கூட்டி காட்டு முருங்கைபட்டைச் சாறு விட்டரைத்து சுண்டைக்காய் பிரமாணம் குளிகை செய்து நிழலிலுலர்த்தி தேனில் ஒரு குளிகை இட வாத சுரம் வாத சன்னி எண்பது வாதமுந் தீரும்.

(வேறு)

நெல்லி வத்தல் பலம்.க, சுக்கு பலம்.½, மிளகு பலம்.½, திப்பிலி பலம்.½, சீரகம் பலம்.௨, ஏலம் பலம்.½ இது வெல்லாங் கூட்டி தண்ணீர் விட்டு இருகக இறுக்கி அந்த தண்ணீர் விட்டரைத்து சுண்டைக்காய்ப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலிலுலர்த்தி வெந்நீரில் சர்க்கரையிலிட நாற்பது பித்த சுரமுந் தீரும்.

பொன்னாங்கண்ணி சற்பம்:-

பொன்னாங்கண்ணி பச்சைப் பாக்களவு தலையிலிட வெள்ளெழுத்துத் தீரும். தயிரில் வருத்துக் கடுப்புத் தீரும். பசுவின் வெண்ணெயில் எலி கடி தீரும். எருமை வெண்ணெயில ரத்த பிரமியம் தீரும். பெரும் பாடு தீரும். விரை வாங்கி நெல்லரிசிக் கழுநீரில் மூன்று நாளுறப் போட்டு எடுத்துச் சூரணம் பண்ணி தேனில் கொள்ள வாயு தீரும். சர்க்கரையில் ரத்த பித்தந் தீரும். வெந்நீரில் * களிக் கிளறி தயிரில் கொள்ளக் கடுப்புத் தீரும். வெள்ளாட்டுக் கோமியத்தில் சோகை காமாலை விஷ வாதந் தீரும். வெந்நீரில் விரோசனமா இஞ்சி சாற்றில் குன்மந் தீரும்.

தேத்தான் கற்பம்:-

தேத்தான் பட்டை பசுவின் கோமியத்திலூறப் போட்டு எடுத்துச் சூரணம்ம பண்ணி வெருகடி தேனில் கொள்ளச் சகல வாதந் தீரும். பசுவின் பாலில் சகல வாய்வு தீரும். வெள்ளாட்டுப் பாலில் சோகை, காமாலை விஷவாதம் பாண்டு தீரும். சிற்றா மணக்கெண்ணெயில் பாரிச வாய்வு தீரும். திப்பிலி தேன் கூட்டி இடச் சன்னி சேற்றுமந் தீரும். பசு நெய்யில் ஒன்பது மாதங் கொள்ள நரை மாறும். சக்கரையில் வருஷங் கொள்ளக் காயசித்தியாம்.

சமுத்திராப் பழத்துக் கற்பம்:-

சமுத்திராப் பழம் பாலில் வேக வைத்து நிழலில் உலர்த்தி பழஞ் சோற்றுத் தண்ணீரில் ஒருத் தலை நோவு தீரும். கய்யாந்தகரைச் சாற்றில் தலை நோவு தீரும். முலைப்பாலில் நசியம் பண்ணச் சன்னி பாதந் தீரும் நொச்சிச் சாற்றில் நசையம் பண்ண

சன்னி பாதந் தீரும். முலைப் பாலில் நசியம் பண்ணச் சன்னி பாதந் தீரும். நொச்சிச் சாற்றில் நசையம் பண்ண மண்டை குலை தீரும். முக சன்னி தீரும். நெய்யிலுரைத்திடக் கண்ணோவு தீரும். முலைப்பாலில் திப்பிலி கூட்டி உரைத்திடக் கண்ணுப் பூ மாறும். விகாளம் மேக சன்னி தீரும். சர்க்கரையில் வயறு வலி தீரும். முருங்கைப் பட்டைச் சாற்றில் ரத்த குஷ்டந் தீரும். பாலைச் சர்க்கரையில் கூட்டி இட உடம்பு பருக்கும். மைத்தில் விஷந் தீரும். சமம், சர்க்கரை கூட்டிக் கொடுக்க மகோதரந் தீரும். பசுவின் நெய்யில் வெள்ளைக் குஷ்டந் தீரும். தேனில் உடம்பு சொறி தீரும். காது கேட்கும். குரலோசையுண்டாம். இருமல் தீரும். மிளகு பொடி நெய்யில் பிரமியந் தீரும். தயிரில் கெற்பங் கெடும். திலவங்கத்தில் தம்பனமாம். சர்க்கரையில் ரத்தப் பிரமியந் தீரும். அரத்தையில் வாய்வு தீரும். இஞ்சியில் பித்தந்தீரும். திப்பிலியில் சேற்மமந் தீரும். கடுக்காய் எலுமிச்சஞ் சாற்றிலிட சிவக்கரம் கோமுத்திரத்தில் ராச வசீகரம்.

<u>கடுக்காய்ச் சூரணம்:-</u>

கடுக்காய் வேண்டின மாத்திரம் பச்சை யரிசிக் கழுநீரில் மூன்று நாளூறப் போட்டு எடுத்து பசு மோர் விட்டு மந்தாக்கினியாய் எரித்து எடுத்து நிழலிலுலர்த்தி சமம், திப்பிலி, தெசாவரம், செவ்வீகம், சித்திரமூலம், இந்துப்பு (கடுக்காய் சூரணத்துக்கு பலம்.) வகைக்கு பலம் கூட்டி சூரணம் பண்ணி எலுமிச்சம் பழச் சாற்றில் பிசறி நிழலிலுலர்த்தி வென்னீரில் நெய் தேனில் கொள்ள சூரோசியம் இருமல், அக்கினி மந்தம், ஆம்பல் பித்தம், வாந்தி, உதிர வியாதி மூலம், கிருணி காசிரோகம் குன்மம் சரவ வாத சூலை பீனிசமுந் தீரும்.

<u>தேத்தான் சூரணம்:-</u>

தேத்தாம் பட்டை தளை பிஞ்சு காய் பழம் ஐந்து சரி கூட்டி கோமுத்திரத்திலூறப் போட்டு எடுத்து நிழலுலர்த்திச் சூரணம் பண்ணியது பலம் 6, கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்கு பலம்.க, கூட்டி வென்னீரில் கொள்ள உஷ்ண உள் சுரம், பித்த வாய்வு, பித்த குன்மந் தீரும். நெய்யில் பித்தத்தில் பிறந்த ஈளை இருமல் இளைப்புக் சோகை, தேனில் சேற்ம கோழை இருமல் தீரும்.

<u>ஆவாரைச் சூரணம்:-</u>

ஆவாரை வேர்ப் பட்டை நன்னாரி பழகிய நெருஞ்சி வேரும் மேவிய சீலிக் கோரை வெட்டிவேர், விலாமிச்சம் நெல்பொரி, நெல்லிச் சட்டம், பேரீச்சம், பழம், சந்தனம், முந்திரிப் பழம், ஏலமும், லவங்கங் கோஷ்டம், மிதமல்லி, சூரணம் சரி கூட்டி சீதமாக் சர்க்கரை சிறந்தது சரி கூட்டி மேவிய தேனில் நெய்யில் மிக இளநீரில் கொள்ளத் தாவிய சுரங்கள் தீய்கள் தாக்கிய உஷ்ணம் போமே.

<u>பித்திய வாய்வுக்கு சூரணம்:-</u>

கடுக்காய் பலம்.க, நெல்லி வத்தல் பலம்.க, சுக்கு பலம்.க, திப்பிலி பலம்.க, சீரகம் பலம்.க, சூரணம் பண்ணி வென்னீரில் கொள்ளப் பயித்திய வாய்வு தீரும்.

<u>திரிகடுகு சூரணம்:-</u>

சுக்கு, திப்பிலி, மிளகு, நெல்லிப்பருப்பு, பெருநாகப்பூ, முத்தக்காசு, செண்பகப்பூ அதிமதுரங் கோஷ்டம், தாமரை வளையம், ஏலம், லவங்கம், விலாம்பிச்சம் வேர், பச்சிலை, சந்தனம், கோரோசினை, குங்குமப்பூ, கற்பூரம், சாதிக்காய், கல்நாரு, கல்மதம், சாத்திரவேதி, கூகைநீர், அமுக்கிரா நெருஞ்சி வேர், நன்னாரி தண்ணீர் விட்டான் நிலப் பனைக் கிழங்கு, தாமரைப்பூ அரிசி, நீர்முள்ளி விரை சரி கூட்டி சூரணம் பண்ணி பலத்துக்கு ஒரு விராகன் வங்க பற்பங் கூட்டி நோம் விராகனிடை வாத சரீரத்துக்கு தேனில் பித்த சரீரத்துக்கு நெய்யில் சேற்ம சரீரத்துக்குத் தேனில் தொந்த சரீரத்துக்கு வென்னீரில் கொள்ள உள்சுரம், உஷ்ண மூத்திர தோஷம், வயற்று வியாதிகள், கிருமியள் தீரும்.

<u>சாறனை கற்பம்:-</u> சாறனைக் கிழங்கு, பசு கோமியத்திலூறப் போட்டு எடுத்து நிழலிலுலர்

வஸ்திர காயம் பண்ணி கோமூத்திரத்தில் கொள்ள குஷ்டடந் தீரும். வென்னீரில் ஐந்து வகைக் குன்மந் தீரும். தேனில் திப்பிலியில் ஈளை இருமல் க்ஷயந் தீரும். மஞ்சள், அதிமதுரங் கூட்டி வாகையிலைச் சாற்றில் காமாலை விஷ வாதம், பாண்டு ரோகந் தீரும். எண்ணை வாத சூலை தீரும். நெய்யில் பித்த சூலை தீரும்.

அமுக்கிரா கற்பம்:-

அமுக்கிராங்கிழங்கு பாலில் அவித்து நிழலிலுணர்த்தி வஸ்திர காயம் பண்ணி நெய்யில் உடம்பு பருக்கும். தேனில் உடம்பு இளைக்கும். நல்லெண்ணையில் சரவ வாத சூலையுந் தீரும். வேப்பெண்ணையில் செய்யான் கடி செங்குஷ்டம் தீரும். வென்னீரில் கரப்பான் சகல வியாதியுந் தீரும்.

பஞ்ச லவண சூரணம்:-

பஞ்ச லவணம், செவ்வீகம், திப்பிலி அதிமதுரம், தம்பராட்சதம், சிறுநாகப்பூ, சந்தனம், கற்பூரம், தர்கோலம், ஏலம், லவங்கம், மஞ்சள், கருவேப்பிலை சங்கம் வேர், துவளை வேர், சரி கூட்டி சூரணம் பண்ணி இதுக்கு சமமாய் சித்து மூலிகை கூட்டி இதுக்கு சரி சர்க்கரை கூட்டி வெருகடிப் பிரமாணம் வென்னீரில் கொள்ள திரிதோஷம் சோபை பாண்டு ரோகம் வாயு குன்மம், சுவாச காசம் இது வெல்லாம் தீரும்.

சகல சூலை குன்மத்துக்குச் சூரணம்:-

சதிரக் கள்ளிக் கொழுந்து எலைக் கள்ளிக் கொழுந்து, நாயுருவி, சங்கு, புளி யிலை வகை ஒன்றுக்கு ஒரு பிடி கல்லுப்பு அரைப்படி கூட்டி வேக வைத்து பஞ்ச குலம் சுக்கு, திப்பிலி, திப்பிலி மூலம், செவிகம், சித்திரமூலம் வகைக்குத் துட்டிடை கூட்டிப் பொடி பண்ணி வெருகடிப் பிரமாணம் தேனில் கொள்ள குன்மாம். வாய்வே சூலை, வாய்வு, பக்க வாய்வு, மூல வாய்வ எல்லாந் தீரும்.

திரிகடுகு, திரிகடுகு சமம், ஒருசாணி சமம், சீரகம், கருஞ்சீரகம், திரி பாலையம், வெள்ளை வெங்காயம், பத்திரமூஷ்டி கன்டு பறங்கி, கோஷ்டம், கடுகு, ஏலம், மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், வசம்பு, அதிவிடையம், கடல் தாமரை, பெருங் காயம், கொத்தமல்லி, விலாமிச்சு வேர், சாதிபத்திரி, கல்லுப்பு, இந்துப்பு பொட்டிலுப்பு, வளையலுப்பு, சயிந்திர லவணம் வகைக்கு ஒரு பலம் சித்திரமூலம் பலம்.க, வெங்காரம் மனோசிலை லிங்கிலிக்கம் வகைக்கு பலம்.க, கூட்டிச் சூரணம் வஸ்திர காயம் பண்ணி வாத சரீரத்துக்கு நல்லெண்ணை தேன் பித்த சரீரத்துக்குப் பசுவின் நெய் சர்க்கரை கூட்டி வெருகடி கொள்ள உள் சுரம் மந்த அக்கினி வாத பித்த சூலை, இருமல், க்ஷயம் ஐந்து குன்மம், ஜந்துந் தீரும்.

ஏலாதி சூரணம்:-

ஏலம், அதிமதுரம், திரிகடுகு, நாகேசரம், கோஷ்டம், நெல்லி வற்றல், முத்தககாசு, நிலவேம்பு, கொத்தமல்லி, சடாமஞ்சள் இலுப்பைப், முந்திரிப் பழம், கருஞ்சரகம், வசம்பு, செண்பகப்பூ, சந்திச் சர்க்கரை, நெல்பொரி, செம்பிளிச்சம், செஞ்சந்தனம், நற்பாலை வேர், நிலப்பனைக் கிழங்கு, அமுக்கிராங் கிழங்கு, கஸ்தூரி மஞ்சள், முசுமுசுக்கையிலை, பூனைக்காலி விரை, நெருஞ்சி வேர், இலவம் பிசின் சரி கூட்டி வஸ்திர காயம் பண்ணிச் சரி சர்க்கரை கூட்டி துட்டிடை வென்னீரில் கொள்ள உள்சுரம், தாபம், இளைப்பு அரோசியம், வானீர் அக்கினி மந்தம், மலமந்தம், உஷ்ணம், இருமல் சுவாச காசம், இவை எல்லாந் தேனிலும் நெய்யிலும் கொள்ளவும்.

லவங்க சூரணம்:-

லவங்கம், திரிகடுகு, நெல்லி வற்றல், ஏலம், பச்சிலை, சிறுநாகப்பூ, அதி மதுரம், கோஷ்டம், நாகேசுரம், சாதிக்காய், சாதிப்பத்திரி, விலாமிச்சம் வேர், கோரோசினை செண்பகப்பூ, முத்தக்காசு, நல்ல சந்தனம், நன்னாரி வேர் அமுக்கிராங் கிழங்கு, நீர்முளளி வேர், நிலப் பனை தண்ணீர் விட்டான் கிழங்கு, நெருஞ்சி வேர்,

தாமரைப்பூ, அரிசி கூகைநீர், அப்பிரக செந்தூரம் சரி கூட்டிச் சூரணம் பண்ணி நெய் பால் தேனில் வெருகடி கொள்ள நீர்க் கட்டுக் கல்லடைப்பு, காமாலை விஷ வாதம், பாண்டுரோகம் பிரமியம் மேக மெல்லாந் தீரும்.

கெந்தக சூரணம்:-

கெந்தகம் பலம். 6, திரிகடுகு, திரி பாலையம், ஏலம், லவங்கம்,வாய் விளங் கம், சேங்கொட்டை, சனப்பம் விரை வகைக்கு பலம்.க, கூட்டிச் சூரணம் விராகனிடை வாத சரீரத்துக்கு தேனில் பித்த சரீரத்துக்கு நெய்யில் கொள்ள சன்னி 18, சூலை.3, குஷ்டம்.18, கிரானி.1 , பித்தம்.21, குன்மம்.8, அக்கினி மந்தம், தாது விரியும், ஆயிசு வர்த்தனையுண்டாம். புளிப்பு விடவும். மண்டலங் கொள்ளவும்.

கெந்தகச் சூரணம்:-

சுத்தியுடன் கெந்தகமும் பலமு மாறு சுக்குடனே திப்பிலியு மிளகு மொக்க
பத்தியுடன் திரிபலையும் வாய்விளங்கம் பத்திரியும் லவங்கப் பட்டை சதகுப்பை நகேசுரம்
சித்திர மூலம் சேர்க கூட்டி ஒரு பலமாய்க் கூட்டிச் சூரணங் கொள்ளும் வகை
சுத்த ஆவின் வெண்ணை நெய் தேன் வெல்லம் சர்க்கரை வென்னீரில் கொள்ள தரு விராகனிடை

கொடிய வியாதி தீர உள்ள ஆண் பெண்ணேற்கு கொண்ட தோர் மேகம் குன்மம் குஷ்டம் பதினெட்டுந் தாம் பண்டுள்ள சூலையைந்து பகருவர் கிரானி நாலும் கண்ட மூத்திரக் கிரிச்சி கடின செயம் சலக் கழிச்சல் ஈரெட்டு கண்டமுதிர் மாமேனி அண்டிய போகமுண்டாம் ஆயிசு வர்த்தினையுண்டாம் அண்டரு முனிவர் தாமும் அறிந்து தாமுரைத்தவாறே.

சுத்தி கெந்தகம் பலம்.6, திரிபலை, சுக்கு, திப்பிலி, மிளகு, திப்பிலி மூலம் வகைக்கு பலம்.க, சூரணம் பண்ணி நெய் தேன் வெல்லச் சர்க்கரை வென்னீரில் கொள்ளவும். மேகம்.21, குன்ம மெட்டு குஷ்டம்.13 சூலை கிரானி. 4, மூத்திரக் கிரிச்சி சலகக் களிச்சல் தீரும்.

பிரமாதி லேகியம்:-

பெருமரத்துப் பட்டை, ஆய்ப்படடை. உகாய்ப்பட்டை, மாவிலிங்கப் பட்டை, காட்டு முருங்கைப் பட்டை, சிறுகுறிஞ்சா வேர், மலை தாங்கி வேர், முள் கொறுஞ்சி வேர், குப்பை மேனி வேர், வேலிப்பருத்தி வேர், நொச்சி வேர், நாய் வேளை வேர், கண்டங்கத்திரி, தூதுவளை, கருவேப்பிலை, பேய்ப்புடல், முசுமுசுக்கை, நில வேம்பு, வெள்ளை வெங்காயம் வகைக்கு பலம்.ரு கூட்டி யிடித்து தூணை நீர் விட்டு ஒரு படியாய்க் காய்ச்சி யிறுத்து சுக்கு பலம்.2, மிளகு பலம்.உ, திப்பிலி பலம்.உ, ஏமம் பலம்.க, தும்பருஷ்டம் பலம்.க, தெசாவரம் பலம்.½, அதிமதுர ஏலம், நல்ல சீரகம், கடுகு, வாய்விளங்கம், கடுகுரோகணி,லவங்கப் பட்டை, அக்கலாக்காரம் பெருங்காயம் சயிந்திர லவணம், சாதிக்காய், சாதிப்பத்திரி, லவங்கம் வகைக்கு விரா கனிடை.உ,கூட்டி சூரணம் பண்ணி பழைய வெல்லம் பலம்.12, பாகு காய்ச்சி சூரணம் அந்தக சாயமும் கூடக் கிளறி தேன் அரைப் படி விட்டுக் கிளறி இறக்கி விலைக பதை பண்ணி பதினைந்து நாள் தானிய புடம் வைத்து எடுத்துச் சிறு புன்னைக் காயளவு இரண்டு நேரமுங் கொள்ளத் தீரும். வியாதி எட்டு வகை குன்மம், காமாலை, விஷவாதம், கவுசை பெருவயறு, பாண்டு, சோகை, வெப்பு பாவை, அருவை, கிரானியள் மூலம், மூல வாய்வு, எண்பது வாதம் நாற்பது பித்தம் சன்னி பதினெட்டு ஆமைகட்டுகள் தீரும் வாயுவான திரவியம் புளி தவிர்க்கவும். ஒரு மண்டலங் கொள்ளவும்.

வெள்ளுள்ளி லேகியம்:-

வெள்ளை வெங்காயம் பலம்.16, சுக்கு, திப்பிலி மிளகு, பெருங்காயம், இந்துப்பு, வளையலுப்பு, பொட்டிலுப்பு, கல்லுப்பு, விடர் லவணம், சத்தி சாரணை, எவசாரம் வகைக்கு விராகனிடை.2½, கோஷ்டம், கொத்தமல்லி, சதகுப்பை,

தெசாவரம் சித்திரமூலம், ஓமம், கடுகு சாதிக்காய் வகைக்கு விராகனிடை.8, சூரணம் பண்ணி வெள்ளை வெங்காயம் உரிச்சு முளை வாங்கி நல்லெண்ணெயில் சிவக்க வறுத்து அரைத்து நெய் ஒரு படி நல்லெண்ணை ஒரு படி வெல்லப் பாகு காய்ச்சி சூரணம் பொடி போட்டு கிளறிக் கடுக்காய் மாதிரி சாப்பிட குதக வாய்வு, கிருணியள் யோனி சூலை, உதிர வியாதி, மேகம், மூத்திரக் கிரிச்சியுந் தீரும்.

சுண்டி லேகியம்:-

சுக்கு பலம்.8, சதகுப்பை பலம். , கொத்தமல்லி பலம்.3, வெள்ளை போளம், கரும் போளம், சுத்தி பண்ணிக் கூட்டவும். மிளகு, திப்பிலி, வாய்விளங்கம், வாலுளுவை ஏலம், தாளிசை பத்திரி, சீரகம், லவங்கம் வகைக்கு பலம்.க, நேர்வாளம் சுத்தி பண்ணினது விராகனிடை.5கூட்டி குடப் பாலை, மலைதாங்கி, பிரண்டை வேர், வில்லை வேர், அமுக்கிலா வேர், சத்தி சாரணை வேர், மருந்து வகைக்கு பலம்.க, சுக்கு, சுண்ணாம்புத் தண்ணீர், வெள்ளாட்டுக் கோமியத்தில் சுத்தி பண்ணவும். இது கூட்டி சூரணம் பண்ணி பசுவின் பால் சர்க்கரை பலம்.12½, தயிர் படி.க, காய்ச்சி சூரணம் போட்டுக் கிளறி விநயக பூசை பண்ணி தானிய புடம் கால் மண்டலம் வைத்து கடுக்காய் பிரமாணம் பித்த சரீரம் நெய்யில் வாத சரீரத்துக்கு தேனில் கொள்ளவும். வாதம் சன்னி வாதம் சோகை, மேகம், மூத்திரக் கிரிச்சி, சூலை, உதிர சூலை.21, மேகம் குதக வாய்வு, சுரோணித வாய்வு, குன்மம், சேற்றுமம் இதில் பிறந்த வியாதி எல்லாந் தீரும். புளி, கிரந்தி தவிர்க்கவும்.

சவுபாக்கிய சுண்டி லேகியம்:-

மாச்சுக்கு பலம்.32, சுண்ணாம்பு தண்ணீரில் ஒரு நாள் ஊறவிட்டு எடுத்து எடுத்து நிழலுலர்த்தி மலைதாங்கி வில்லை வேர், சித்திரமூலம், நஞ்சுண்டான் பிரண்டை கருநொச்சி சாறணை, பெருமருந்து எருக்கு, அமுக்கிலா மிளகுரணை, மருளை, முள்ளி கண்டங்கத்திரி வகைக்கு பலம்.10, ஜனி நீர் விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி தும்பராஷ்டகம், தெசாவரம், சிறுநாகப்பூ, சடாமஞ்சி, கொத்தமல்லி, குடப் பாலை, கண்டு பரங்கி, தெசாவரம், தற்கோலம், அதிமதுரம், அகில் கட்டை, கோஷ்டம் வெற்பாலை அரிசி, அபின் கம், ஆனைத்திப்பிலி, தாளிசை பத்திரி, சோரோசணை, சாதிக்காய், அபினி மயிர் சாகுசி குக்குளம், கஸ்தூரி நீல அஞ்சனம், சவிரஞ்சனம் நிலப்பனைக் கிழங்கு இசப்பைப்பு வகைக்கு பலம்.க, சங்கு பற்பம், லோக பற்பம் வகைக்கு விராகனிடை.க, இது வெல்லாம் சூரணம் பண்ணி அந்தக் கசாயத்தில் பதி ஒரு படி பால் சர்க்கரை சேர்.52½, தயிர தண்ணீர் படி.4, விட்டுக் காய்ச்சி அதில் சூரணம் போட்டுக் கிளறி மெழுகு பதத்திலிறக்கி தானிய புடம் வைத்து விநயக பூசை பண்ணி தானி வாதிரண்டு நேரம் கொள்ள வாத பித்த வாய சன்னியள், சோபை, காமாலை, விஷவாதம், பாண்டு ரோகம், கிரணி, உதிர வியாதி, சேற்றுமு சன்னி, ஈளை, இருமல், இரைப்பு, உப்பிசம், வாய்நீர், கோழை, அரோசிகம் வாந்தி, விக்கல், இளைப்பு, சுவாச காசம், காசிரோகம், அக்கினி மந்தம், தீபனமாம். இத்தனையுந் தீரும். திகடை பச்சிலை, சடாமஞ்சள் வகைக்கு ஒரு பலங் கூட்டவும்.

இஞ்சி லேகியம்:-

இஞ்சி சாறு, வயித்தியப்படி.க, மாதளைச் சாறு ஒரு படி, பழைய வெல்லம் இரண்டு சேரு, வாய்விளங்கம், சீரகம், சித்திரமூல வேர்ப் பட்டை வகைக்கு பலம்.½, கூட்டி சூரணம் பண்ணி பாகில் போட்டுக் கிளறி அரப்பொடி அரைப்பம் சுத்தி பண்ணி கூடப் போட்டுக் கிளறி ஒரு படி தேன் விட்டு கிளறிவிநயக பூசை பண்ணி தானிய புடமிட்டு தலை முழுகி வயறு கழிய வாங்கி இரண்டு நேரம் கடுக்காய் மாதிரி சாப்பிட வாந்தி, அரோசியம் வானீர் இருமல் பித்த குன்மம், இரைப்பு, உப்பிசம்,

வாயு சோபை காமாலை, பாண்டுரோகம், உதிர வியாதி, கடுக்காய், பிரமாணம் வாத சரீரத்துக்கு தேனில் பித்த சரீரத்துக்கு நெய்யில் இரண்டு நேரமுங் கொள்ளவும். புளி கிரந்தி தவிர்க்கவும். தீரும் வியாதி வாதங்கள், சன்னி வாதம், பித்த சேற்மத்தில் பிறந்த ரோகங்கள், குதக வாய்வு, சுரோனித வாய்வு, சன்னியள், யோனி, சூலை உதிர சூலை, காமாலை, சோகை மேகம், முத்திரக் கிரிச்சி பிறமியம்.21, கி னி.4 அஷ்ட குன்மந் தீரும். 4.10.63.

வில்வவேர் மேல் புறனி சீவி இழைச்சது பலம்.50, கொஞ்சி பலம்.25, முசுமுசுக்கை பலம்.25, பச்சை பயறு படி.க, நெல்லம் பொரி நாழி கூட்டி எட்டு வள்ள நீர் விட்டு ஒரு வள்ளமாய்க் காய்ச்சி பழைய வெல்லம் பலம்.50, போட்டுக் காய்ச்சி ஓமம் சீரகம், சுக்கு, கண்டு பறங்கி, சிறுநாகபூ, வகைக்கு பலம்.2, சன்னி கூடிலுவ் திப்பிலி பலம்.உ, மிளகு பலம்.4, கருஞ்சீரகம், வாய்விளங்கம், கொத்தமல்லி, இந்துப்பு, ஏலம் வகைக்கு பலம்.க, லவங்கப்பத்திரி, லவங்கப்பட்டை, லவங்கப்பூச் சாதிக்காய், சாதிப்பத்திரி, வகைக்கு பலம்.½ கூட்டி சூரணம் பண்ணி அந்தப் பாகில் கிளறி மெழுகு பதத்திலிறக்கி பனிரெண்டு நாள் தானிய புடம் வைத்து விழுயக பூசை பண்ணி கடுக்காய் மாதிரி வில்வ வேர் பலம். 5, வாகை வேர் பலம்.7½, பேராமுட்டி.7½, சித்தாமுட்டி பலம்.5, ஓமிளம் வேர் பலம்.5, பாதிரி வேர் பலம்.5, (பாதிரியில்லாவிட்டால்) சிறுகிளா வேர் பலம்.5, முன்னை வேர் பலம்.5, முள்ளி வேர் பலம்.5, கண்டங்கத்திரி வேர் பலம். , நெருஞ்சி வேர் பலம்.5, தண்ணி வள்ளம் பனிரெண்டில் இந்த மருந்தெல்லாம் இடித்துப் போட்டு அறுபது நாழிகை தீயெரித்து ஆறு படியாக காய்ச்சி சூரணம் மிளகு பலம்.7, சுக்கு பலம்.4½, திப்பிலி பலம்.3, தெசாவரம் பலம்.3, சீரகம் பலம்.3, செவ்வீகம் பலம்.1½, சித்திரமூலம் பலம்.1½, சிறுகப்பு, லவங்கப்பத்திரி வகைக்கு பலம்.3/4, லவங்கப் பட்டை விராகனிடை.7½, கூட்டி சூரணம் பண்ணி வஸ்திர காயம் பண்ணி அந்தப் பாகில் போட்டுக் கிளறி கம்பி பதத்திலிறக்கி விழுயக பூசை பண்ணி நேரம் ஒன்றுக்கு முள்ளிக் காயளவு தின்ன அரோசியம், வாந்தி, விக்கல், இருமல் வாசுர், கோளை, இரைப்பு, உப்பிசம், அக்கினி மந்தம், தீபனம், இளைப்பு, சோபை காமாலை, விஷவாதம், பாண்டு ரோகம், சுவாச காசம், காசிரோகம்------தீரும்.உ நாள் தானிய புடம் வைக்கவம். கிரந்தி, புளி தவிர்க்கவும்.

அசுவ கெந்தாதி லேகியம்:-

அமுக்கிலாங் கிழங்கு பலம்.25, சித்தாமுட்டி நெருஞ்சி சாறணை சங்கு (மூலம் இவது பத்து வகை) செவ்வீகம், சிவதை, மிளகு, கீழாநெல்லி, தண்ணிவிட்டா சீந்தி உழுந்து, குழச்சென்னல் வகைக்கு பலம்.2½, கூட்ட பத்து படி தண்ணீர் விட்டு ஒரு படியாய் காய்ச்சி கடைச் சரக்கு திரிகடுகு, திரிபாலையம், அதிமதுரம், அரத் திப்பிலி, மூலம், தெசாவரம், மஞ்சள், வசம்பு, சித்திரமூலம், வெற்பாலை, அரே கடுரோகணி, அகில் சந்தனம், லவங்கம், விளாலரிசி, தேவசாரம், எவ்ச்சாரம், வகைக்கு பலம்.க சூரணம் பண்ணிப் போட்டு அரைப்படி தேன், நெய் அரைப்படி விட் கிளறி ஒரு மாதம் நெல்லில் புடம் வைத்து எடுத்து க்ஷயம், சுவாசகாசம், அரோசிய குன்மம் ரத்த பித்தம், பிரமேகம், எலும்புருக்கி, மூத்திர கிரிச்சி இது வெல்லாந் தீ கிரந்தி தவிர்க்கவும்.

திரிப்லாதி கிருதம்:-

கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், இது மூன்று திரிபாலையம் வேம்பு, எருமிச்சம் வேர், பேய்ப்புடல், நாறத்தை வேர், பற்படாகம், அகில கட்டை பல இது சமன் கூட்டி இடித்து பானையில் போட்டு எட்டு வள்ள நீர் விட்டு ஒரு வள்ளமாய் காய்ச்சிற போது நன்னாரி வேர் கொன்றை வேர், கடுகுரோகணி வகைக்கு கால் கூட்டி இகா முடிந்து போட்டு வெந்த கலக்கத்தை அரைத்துக் கலக்கி நெய் விட்டு ப பதத்திலே இறக்கித் தினம் இரண்டு நேரம் ஒரு கரண்டி கொள்ளக் காமாலை பாண்டு

ரோகம், வாத பயித்தியம், பித்த குன்மம், பிரமியம், சுவாசகாசம், வாதரோகம் மூத்திரக் கிரிச்சி, காசி நோவு தீரும். தானிய புடம் வைக்கவும்.

பஞ்சாக்கினி கிருதம்:-

சித்திரமூலம், ஆய்ப்பட்டை, நொச்சிவேர், காட்டு முருங்கைப் பட்டை, எகாய் வேர், மாவிலிங்கம் வேர், சாரணை வேர், வேலிப்பருத்தி வேர், சங்கம் வேர் வகைக்கு பலம்.5, கூட்டி இடித்து பதக்கு நீர் விட்டு எட்டிலொன்றாய் காய்ச்சி பசுவின் நெய் விட்டு பேய்க் குமட்டிச் சாறு உழக்கு விட்டு இந்துப்பு, விராகன்.5, கடுகுரோகணி விராகன்.5, பெருங்காயம் விராகன்.6, வெங்காரம் விராகன்.7, சவுக்காரம் விராகன்.5, நேர்வாளம் விலபகடன சுத்தி பண்ணினது 3-ம் கூட்டி சூரணம் பண்ணி அதில் போட்டு பாகு பதத்திலிறக்கி நேரம் ஒரு கரண்டி கொள்ள சன்னியள், காமாலை, விஷவாதம், பாண்டுரோகம், வாத சோகை, பெருவயறு, கவுசை வெப்பு வாவை, கிரணி தீரும்.

விருமாதி கிருதம்:-

பெருமரத்துப் பட்டை, காட்டு முருங்கைப் பட்டை, ஆய்ப் பட்டை, நாய்வேளை சாறணை, மிளகறணை சித்திரமூலம், மலைதாங்கி, வகைக்கு பலங் கூட்டி நூறு கடுக்காயும் இந்த நிறை சுக்கு கூட இடித்துப் போட்டு அரப்பொடி சுத்தி பண்ணினது உழக்குப் போட்டுக் கிளறி எடுத்து பதினைந்து நாள் தானிய புடம் வைத்து நேரம் துட்டிடை கொள்ள சகல வாதம், காமாலை, விஷவாதம், பாண்டு வாயு, கிரணி யள், பக்க சூலை, சர்வ சூலையுந் தீரும்.

மகா கலியாண கிருதம்:-

பேய்க்குமட்டி வேர், கடுக்காய் வேர், தானிக்காய் வேர், நெல்லி வேர், சித்தாமுட்டி வேர், பேராமுட்டி வேர், வெட்டிவேர், சிறுகாஞ்சொறி வேர், நன்னாரி, குவளை வேர், அதவளை வேர், மாதளை வேர், விலாம்பிச்சம் வேர், தாமரைக் கிழங்கு, அல்லிக் கிழங்கு, நெய்தல் கிழங்கு, நிலைஆவாரை வேர், வகைக்கு பத்துப் பலம் கூட்டி இடித்து அணி நீர் விட்டு அஷ்ட பாகமாக காய்ச்சி தெசாவரம், ஏலம், மஞ்சள், மரமஞ்சள், மந்திஷ்டி, லவங்கம், தாளிசை பத்திரி, மிளகு, சிறுநாகப்பூ, வாய்விளங்கம், சதகுப்பை, செங்களனிக் கோஷ்டம், சந்தனம், சாதிக்காய். சாதிபத்திரி, அதிமதுரம், சீரகம், நெருஞ்சிக் காய், முத்தக் காசு, வகைக்கு பலம்.½, கூட்டி சூரணம் பண்ணி போட்டு பனைவெல்லம் பலம்.4, சர்க்கரை பலம்.4, போட்டுத் துளாவி இளநீர் ஒருபடி விட்டு பசுவின் பால் ஒரு படி விட்டு நெய் ஒரு படி விட்டு, மெழுகு பதத்திலிறககி தானிய புடமிட்டு தினமொரு களஞ்சு கொள்ள விஷசுரம், விகாளம், க்ஷயம், காசிரோகம், தலை நடுக்கு, வலிப்புகள் பிரமியம், மூத்திரக் கிரிச்சி, கல்லெரிப்பு, பெரும்பாடு இத்தனையுந் தீரும். புளி தவிர்க்கவும்.

குக்குளம் பலம்.5, பாக்குப் போல் நருக்கி வேப்பம் பட்டை சிற்றாமுட்டி கண்டங்கத்திரி வகைக்கு இரண்டு படி தண்ணீர் விட்டு குக்குளம் கூடப் போட்டு வேகச் சுத்தியாம்.

சித்தாமுட்டி, கண்டங்கத்திரி, சங்கு சீந்தி வகைக்கு பலம்.5, இடித்து இரண்டு வள்ள தண்ணீர் விட்டு ஒரு படியாய்க் காய்ச்சி வடித்து திரிகடுகு, சீரகம், வாய்விளங்கம், திரிகாய்ச்சி*வடித்து*திரிகடுகு**சீரகம்**வாய்விளங்கம் திரிபலையம், சதகுப்பை, சிறுதேக்கு, கொத்தமல்லி, சாதிக்காய், கிராம்பு, காந்தம் வகைக்கு பலம்.½ கூட்டி சூரணம் போட்டுக் கிளறி பின்பு பசுவின் பால் படி.உ, விட்டு பின்பு நெய் படி.உ, விட்டு பாகு பதத்திலிறக்கி நேரம் ஒரு கரண்டி கொள்ள வயறு நோவு உதிர வியாதி பவுத்திர சிலந்தி மூலம் புரை புண் அரிகிரந்தி அரை சந்து கிரந்தி தீரும்.

மகா கதளி கிருதம்:- வாழைக் கிழங்கு, பூசனிக்காய், நெல்லிக்காய், கத்தாளை

தண்ணி விட்டான் தாளை விழுது, எலுமிச்சஞ் சாறு வகைக்கு படி.௧, பசுவின் பால் செவ்விளநீர், கருப்பஞ் சாறு வகைக்கு படி.௧, மாம்பட்டை, அத்திப்பட்டை, இலவம் பட்டை, நெல்லிப்பட்டை, தேத்தாம் பட்டை, ஆவாரை ஐந்து, நிலாவாரை வேர் பூலா வேர், அத்தி வேர், குமுளம் வேர், நெருஞ்சி, சிறுபூளை பொன்னுங்கண்ணி, தாளி, நன்னாரி வெள்ளறுகு, சீனிக்கோரை, பூமிச் சர்க்கரை, நிலப்பனை, முசுட்டை வாழைப்பூ, தென்னம் பாளை, கமுகம் பாளை, தாமரைப்பூ, அல்லிப்பூ, வகைக்கு ஐந்து பலங் கூட்டி பத்து வள்ள தண்ணீர் விட்டு ஒரு வள்ளமாய்க் காய்ச்சி அந்தச் சாறு கூட்டி ஒரு வள்ளமாக காய்ச்சி ஒரு வள்ள நெய் விட்டு பின்பு சரக்கு மிளகு, நெல்லி வற்றல், சீரகம், ஏலம், வெட்டி வேர், விலாம்பிச்சம் வேர், சந்தனம், அதிமதுரம், பச்சை பூலாங் கிழங்கு, கொத்தமல்லி, கற்கடசிங்கி, தேத்தாங் கொட்டை, முந்திரிப் பழம், பேரிச்சம் பழம், வகைக்கு பலம்.5, வங்க பற்பம், அப்பிரக பற்பம், சீந்தி சர்க்கரை விராகனிடை.½ முன் சாறு நெய் கூட்டி ஒரு கொதியிட்டு பிறகு சூரணம் போட் ஒரு கொதியிட்டு பின் சர்க்கரை போட்டு ஒரு கொதியிட்டு இறக்கி வங்க பற்பம் அப் பிரக பற்பம், சீந்தி சர்க்கரை போட்டு ஒரு கொதியிட்டு விஜயக பூசை பண்ணி இறக்கி மூன்று நாள் ஆற விட்டு எடுத்து நேரம் ஒரு கரண்டி கொள்ளத் தீரும் வியாதி உள்சுரம், உஷ்னம், இளைப்பு, மலபத்தம், கை காலெரிப்பு, உடல் உலர்ந்தது, கெற்பம், கெட்டது உஷ்ன ரோகம்.21, கிரணி.8, சீய்பிரமியம், ரத்தப் பெரும்பாடு, எலும் புருக்கி தீரும். உஷ்னமான திரவியம் கிரந்தி தவிர்க்கவும்.

<u>சகாதேவி கிருதம்:-</u>

சகாதேவி யிலைச் சாறு படி.௧, வெற்றிலைச் சாறு படி.௧, பசுவின் நெய் படி ௧, கூட்டி ஏலம், லவங்கம், மந்திஉஷ்டி, கடுகுரோகணி, விலாம்பிச்ச வேர், அதி மதுரம், நாககேசரம், வகைக்கு ஒரு அட்டிடை கூட்டி முன் சாறு நெய் கொதிச்ச பிறகு இந்தச் சூரணம் போட்டுக் கிளறி மெழுகு பதத்திலிறக்கி நேரம் கடுக்காய் பிரமாணம் கொள்ள காதாகம், சிரோதாகம், தாபசுரம், அஸ்திசுரம், விஷசுரம் தீரும்.

<u>கதளி கிருதம்:-</u>

சிறுபூளை வேர், நெருஞ்சி வேர், நன்னாரி வேர் வகைக்கு பலம்.100, தனித் தனியே இடித்து நாழி நீர் விட்டு நாழியாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு அமுக்கிலாங் கிழங்கு, சீந்திக் கொடியும் அந்தப்படி காய்ச்சி வடித்துக் கூட்டி தண்ணி விட்டான் நெல்லிக்காய், பூசணிக்காய், கரும்பு, இளநீர் வாழைக் கிழங்கு, வகை ஒன்றுக்கு சாறு நாழி கூட்டி நாழியாக குறுகக் காய்ச்சி லவங்கப் பத்திரி, லவங்கப் பட்டை, லவங்கம், சுக்கு, திப்பிலி, சீரகம், ஏலம், அதிமதுரம், வகைக்கு பலம்.௩, கூட்டிச் சூரணம் பண்ணி கொதிக்கு ஒருவகை விட்டுக் காய்ச்சி சரி நெய் விட்டு குக்குளம் பத்து விராகன் பொடி போட்டு பின்பு நல்ல சந்தனம், எலுமிச்சங் காயளவு, போட்டுக் கிள மெழுகு பதத்திலிறக்கி விஜயக பூசை பண்ணி எடுத்த நேரம் ஒரு கரண்டி கொள்ளத் தீரு வியாதி அஸ்தி சுரம், உஷ்னம் பிரமியம், பெரும்பாடு, வயறு எரிச்சல், நீர் எரிச்ச கை கால் எரிச்சல், உடல் உலர்ந்து போகிறது மருந்தீடு இத்தனையும் தீரும்.

<u>(வேறு) கிருதம்.</u>

சித்திரமூலம், மாவிலிங்கம் வேர், பொருசம் வேர், ஊஞ்சல் வேர் சூரணம் வகைக்கு பலம்.௧, பஞ்ச லவணம், கடுக்காய், கல்நாரு, வாய்விளங்கம், மந்திஉஷ்டி, மஞ்சள், பெருங்காயம், வகைக்கு கால் பலம் கூட்டி சூரணம் பண்ணி வெள்ளாட்டுக் கோமியம் நாலு வள்ளம் ஒரு வள்ளமாய்க் காய்ச்சி சூரணம் போட்டுக் கிளறி நாக செந்தூரம் அரைப் பலம் போட்டுக் கிளறி தேன் ஒரு படி விட்டுக் கிளறி நேரம் அட்டிடை கொள்ள சயம், சுவாச காசம், காசிநோவு, அஷ்ட குன்மந் தீரும்.

மஞ்சிஷ்டா கிருதம்:- சித்தாமுட்டி பலம்.40 இடித்து பதக்கு நீர் விட்டு நாலொன்று

காய்ச்சி வடித்து பசுவின் பால் படி.4, இளநீர் படி.4, தாளை விழுதைச் சாறு படி.4, மூன்று படி ஆக எலுமிச்சம் சாறு கூட்டிக் காய்ச்சி முத்தக்காசு, நிலப்பனைக் கிழங்கு, விலாமிச்ச வேர், கோஷ்டம், வகைக்கு மூன்று விராகன் போட்டு கிளறி நெல்லிக்காய் அளவு கொள்ளவும். உடம்பு வறட்சி தாது நஷ்டம், மேகம், பெரும்பாடு எலும்புருக்கி தீரும். பழைய வெல்லம், நெய் கூட்டவும்.

திப்பிலாதி ரசாயனம்:-

திப்பிலி பலம்.4, சுக்கு, மிளகு, திரிபாலையம், தேத்தாங் கொட்டை, கொத்தமல்லி, லவங்கம், லவங்கப்பட்டை, செண்பகப்பூ, சிறுநாகப்பூ, தாளிச பத்திரி, அக்கலாக்காரம், அதிவிடயம், தெசாவரம், செவ்வியம், சீரகம், ஏலம், கண்டுபறங்கி, விளாவரிசி, வகைக்கு பலம்.க, கூட்டி சூரணம் பண்ணிப் பசுவின் பால் ஒரு படியில் சரி சர்க்கரை போட்டு பாகு காய்ச்சி அதில் சூரணம் போட்டு பின்பு நெய் விட்டு கிளறித் தேன் விட்டுக் கிளறி விநாயக பூசை பண்ணி எடுத்து தலை முழுகி வயறு கழிய வாங்கி தானிய புடம் வைத்து நேரம் புன்னைக் காயளவு கொள்ளச் சகல கிரந்தி, அரிகிரந்தி, அரைசந்து கிரந்தி தீரும்.

கெந்தக ரசாயனம்:-

கொட்டைக் கரந்தை, சங்கு, வெள்ளறுகு, சீந்திக் கொடி, சிறுகுறிஞ்சா, அமுக்கிரா வகைக்கு பலம்.20 இடித்து எட்டு வள்ள நீர் விட்டு ஒரு வள்ளமாய்க் காய்ச்சி நல்ல சீரகம், கருஞ்சீரகம், ஓமம், கசகசா, தேத்தாங் கொட்டை, அதிவிடயம், கண்டுபறங்கி, முடவாட்டுக்கால், முந்திரிப்பழம், சாதிக்காய், சாதிப் பத்திரி, சிறுநாகப்பூ, பெருநாகப்பூ, சதகுப்பை, தாளிசை பத்திரி, அக்கலாக்காரம், பெருஞ்சரக்கு, பலம், சிறு சரக்கு பலம்.½, கூட்டி சூரணம் பண்ணி, கெந்தகம், சுத்தி பண்ணினது பலம்.6, கூட்டி முன் கசாயத்தில் சேர் சர்க்கரை போட்டுக் கிளறி நாழி நெய் விட்டுக் கிளறி விநாயக பூசை பண்ணி எடுத்துக் கடுக்காய்ப் பிரமாணம் கொள்ள உஷ்ணம், கிரந்தி, சூலை, குஷ்டந் தீரும். பெரும்பாடு கரப்பான் தினவு தீரும்.

மோர் எண்ணை:-

மோர் வள்ளம்.உ, ஒரு படியாய்க் காய்ச்சி அதிமதுரம், ஏலம், கோஷ்டம், லவங்கம், விளாவரிசி, அரத்தை, பச்சிலை, தக்கோலம், மிளகு, பெருங்குப்பை, சந்தனம், சுக்கு, மரமஞ்சள், வெட்டிவேர், விலாமிச்ச வேர், இந்துப்பு, கடுகுரோகணி தேவதாரம், கடல் நுரை வகைக்கு களஞ்சு கூட்டி நல்லெண்ணை நாழி விட்டு சூரணம் போட்டு வடித்து உள்ளுக்கு இட்டிடை கொடுத்து மேலும் பிடிக்க உள்சுரம் உடம் பெரிச்சல், குடைச்சல் தீரும்.

அரக்கு எண்ணை:-

அரக்கு தூள் படி.உ, ஒரு வள்ள தண்ணீரில் கலக்கி மூன்று நாள் வெயிலிலே வைத்து வடித்துக் கொண்டு பசுவின் தயிர் வடிகட்டின தண்ணீர் ஒரு வள்ளங் கூட விட்டு மரமஞ்சள், தெசாவரம், ரேணுகம், கோஷ்டம், கோரைக்கிழங்கு, அசுவ கெந்தாதி, சந்தனம், கடுகுரோகணி, அரத்தை, அப்பைக் கிழங்கு வகைக்கு விராகனிடை.4 அதில் போட்டு ஒரு படி நல்லெண்ணை விட்டு (அடுத்த ஏடு இல்லாததால் மேல் முடிவு இல்லை)

பூதிகா தயிலம்:-

எருக்கிலைச் சாறு படி.க, வாதமடக்குச் சாறு படி.க, காட்டு முருங்கைச் சாறு படி.க, கள்ளிப் பால் படி.½, வெள்ளாட்டு பால் படி.க, ஐந்தெண்ணை வகைக்கு படி.க, சுக்கு, திப்பிலி, ஓமம், வெள்ளை, வெங்காயம், மஞ்சள், மரமஞ்சள், திப்பிலி மூலம், தெசாவரம், செவ்வியம், சித்திரமூலம், வாய்விளங்கம், கொட்டை, சதகுப்பை வெளிச்சிப் பிசின், வலம்புரிக்காய் ...

பெருங்காய், நெல்லிக்காய்க் கெந்தகம், வெள்ளைப் பாஷாணம், கெவுரி பாஷாணம், அரிதாரம், மனோசிலை, நாவி, நெரிவிஷம், ரசம், வகைக்கு விராகனிடை. ஈ கூட்டி பொடி பண்ணி போட்டுக் காய்ச்சி வடித்து மேலுக்கு பிடித்து எருமைச் சாணி தேய்த்து வெந்நீரில் குளிக்கவும். உள்ளடி வாதம், பிறவடி வாதம், குதிவாதம், குதிரை வாதம், முழங்கால் வாதம் இடுப்பு வாதம், அண்ட வாதம், வலிமேடல், வாதம் குடல், வாதம் பாரிச வாதம், சருவாங்கி வாதம், குழ சுளிவாதம், சுரோனித வாதம், சூலைவாதம், கீரிட வாதம், கோசவாதம், கோல்வாதம், ஊடிவாதம், எரிவாதம், நடுக்கு வாதம், அபாங்க வாதம், அந்தக் கிரண வாதம், மகாவாதம், சன்னி வாதம், முடவாதம், ஊத்த வாதம், மேடைச்சல் வாதம், விச்சுளி வாதம், முருக்கு வாதம், சுவற வாதம், தலைவாதம், உள்சன்னி வாதம், பிறசன்னி வாதம், சிரங்கு வாதம், அற்புத வாதம், யோனி வாதம், தனுவாதம், பீனிச வாதம், பசுகாதா வாதம், நஷ்ட ரோக வாதம், பிக்கு வாதம், கண்ட தம்ப வாதம் என்பது வாதமுந் தீரும்.

<u>விஷக் குட்டித் தயிலம்:-</u>

எட்டி நஞ்சு பலம்.100, கொட்டை பலம்.100, வெள்ளுள்ளி பலம்.10, வசம்பு பலம்.5, நூய்பட்டை, குன்னிப் பட்டை, மாவிலிங்கப் பட்டைபுங்கம் பட்டை, இலுப்பை ப பட்டை, வேப்பம் பட்டை வகைக்கு பலம்.10, சிறுகுறிஞ்சா மிளகுருணை, பெருமருந்து, அமுக்கிரா, ஆதன்டை, சித்திரமூலம் வகைக்கு பலம்.5, குப்பை மேனி, பொடுதலை, கய்யாந்தகரை வாதமடக்கி, வரிக்கும்மட்டி, எருக்கிலை, சாரணை, வேலிப்பருத்தி, இந்தச் சாறு வகைக்கு படி.க, எருக்கிலைப் பால், கள்ளிப் பால், சதிரக் கள்ளிப் பால இலைக் கள்ளிப் பால், வகைக்கு படி.க, எலுமிச்சை சாறு படி.க, முன் சொன்ன பட்டை யெல்லாம் பதினறு வள்ளத் தண்ணீர் விட்டு ரெண்டு வள்ளமாய்க் காய்ச்சிக் கடைச் சரக்கு திப்பிலி, செவ்வியம், தெசாவரம், திப்பிலி மூலம், மஞ்சள், மரமஞ்சள், ஆனைத் திப்பிலி, ஓமம், குரசாணி ஓமம், கடுகு, கற்கடகசிங்கு, கண்டுபரங்கி, சீனிக் கடுகு, கசகசா, சதகுப்பை, பெருங்காயம், கம்பி பிசின், குங்கிலியம், சாம்பிராணி, வகைக்கு பலம்.க, வெள்ளை வெங்காயம் தேங்காய், நெய், கோழி முட்டைத் தயிலம் வகைக்கு படி.க, விளக்கெண்ணை, நல்லெண்ணை, வேப்பெண்ணை, புங்கெண்ணை, இலுப்பெண்ணை வகைக்கு ஒரு வள்ளம் விட்டு வடித்து உள்ளுக்கு விராகன் கொடுத்து மேலும் பிடிக்க சன்னி தியன் வாதம், மேடைச்சல், திருகு சன்னி, வலிப்பு, பிறவலிப்பு இத்தனையுந் தீரும்.

<u>சிரசில் பிறந்த வியாதிக்கு சித்தாமுட்டித் தயிலம்:-</u>

சித்தாமுட்டி பலம்.32½, நருக்கி நாழி நீர் விட்டு குறுணியாகக் காய்ச்சி வெள்ளாட்டுப் பால் படி.உ, பசுவின் பால் படி.உ, எலுமிச்சஞ் சாறு படி.க, ஐந்தெண்ணை வகைக்கு படி.க, சரக்கு திரிகடுகு, ஏலம், அதிமதுரம், மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், செண்பகப்பூ, கோஷ்டம், செஞ்செவ்வள்ளிக் கொடி, வாய் விளங்கம், சதகுப்பை, அரத்தை, கடுகுரோகணி, பெருங்காயம், கூகைநீ..., சாதிக் காய், பெருஞ்சரக்கு பலம்.½, சில சரக்கு விராகனிடை.3 கூட்டி வடித்து உள்ளுக்கு விராகனிடை கொடுத்து நசையம் மூக்கிலும், காதிலும் விட உடம்பு பிடிக்கவும். தலை நோவு, ஒருத்தலை நோவு, முகவாதம், வாயில் வாதம், கன்னசூலை, மண்டை சூலை, கண்ணில் விரணம், வாதகாசம், பித்த காசந் தீரும்.

<u>சிரசில் பிறந்த வியாதிக்கெல்லாம் மகா சத்தி தயிலம்:-</u>

பேய்ப்பீர்க்கஞ் சாறு, கய்யாந்தகரை, தூதுவளை, மணத்தக்காளி, வெண் ஜெச்சி, ஆடாதோடை, சங்கிலை, வெள்ளாட்டுப் பால் வகைக்கு படி.க, விளக் கெண்ணை படி.க. நல்லெண்ணை படி.க, சுக்கு பலம்.உ, அரத்தை பலம்.உ, கூட இடித்து குறுணி நீர் விட்டு நாழியாகக் காய்ச்சி திரிகடுகு, திரிபாலையம், லூய் பட்டை, புங்கம் பட்டை, கண்டங்கத்திரி, நன்னாரி, தன்னிவிட்டான், அகில்கட்டை, நல்ல சந்தனக் கட்டை, வெட்டி வேர், விலாமிச்சை வேர், மஞ்சிட்டி, கோரைக்

கிழங்கு, மஞ்சள், மரமஞ்சள், சடாமஞ்சி, கடுகு, இந்துப்பு, தெசாவரம், கற்கடக சிங்கி, நேர்வாளம், குக்குளம் வகைக்கு விராகனிடை கூட்டி பேரீச்சம் பழம் விராகன்.க, நெல்லிக்காய் இவைப்பெப்ப முன் கசாயத்தில் போட்டு எண்ணெயும் விட்டு கலக்கி முப்பது நாழிகை வெய்யிலில் வைத்து ராத்திரிக்கு நெருப்பில் அரை நாழிகை வைத்து இந்தப் படி ஏழு நாள் வைத்து எட்டா நாள் எடுத்து மூக்கிலும், காதிலும் கண்ணிலும் நசையம் விட தலைமுழுக தலை நோவு, சிரோவாய்வு, கபால குத்து, வாதரோகம், கபாலகுலை, முகவாதம், செவியடைப்பு, சகல பீனிசம், நேத்திர வாய்வு, அற்புத வாதம், தந்த வாய்வுக்கு, பல்லில் தடவவும். செவியில். நாசியில் சீய் விழுகிறது, இருமல், க்ஷயரோகம், முகம் திருகிற சன்னி, கண்டத்துக்கு மேல் பட்ட வியாதி எல்லாந் தீரும்.

சிரசில் பிறந்த நோய்களுக்கு மிரகாங்க தயிலம்:-

வேங்கை மரத்துச் சிராய் பலம்.100, தண்ணீர் வள்ளி.4, சீந்தி தண்டு பலம்.25, தண்ணீர் நாலு வள்ளம் விட்டு இரண்டு வள்ளமாய்க் காய்ச்சி சித்தாமுட்டி பலம் 100, வில்வலை வேர் பலம்.50, தண்ணீர் வள்ளி.8 இது வெல்லாம் நாலி லொன்றாய்க் காய்ச்சி பசுவின் பால் வள்ளம்.2, எள்ளெண்ணை வள்ளம்.2, ஆக படி.32 இழுக்கிலா பத்திரமுஉட்டி மஞ்சள், மரமஞ்சள், சடாமஞ்சள், கஸ்தூரி மஞ்சள், மந் திஉட்டி, சுக்கு, திரிபாலையம், அதிமதுரம், ஏலம், லவங்கம், சந்தனம், அகில் சந்தனம், சமுத்திரா பச்சை, வெட்டிவேர், விலாமிச்ச வேர், கற்பூரம், பெருஞ் சரக்கு விராகன்.3, பழமழ சரக்கு விராகன்.8, கோரோசினை குங்குமப்பூ, கஸ்தூரி பச்சைக் கற்பூரம் பணவிடை.3 பொடி பண்ணிப் போட்டு (அளாவி) இறக்கி பின்பு போடவும்). மல்லிகை மிருவாட்சி செண்பகப்பூ மாலை கட்டி உள்ளே போட்டு பனிரெண்டு நாள் தானிய புடம் வைக்கவும். தலைக்கு யிட்டு முழுகத் தலை நோவு, சிரோவாய்வு, நேத்திரவாய்வ, முகவாய்வு, கன்னரோகம், கன்னகுலை பீனிசம், கண்டத்துக்கு மேல் பட்ட வியாதி எல்லாந் தீரும்.

பறங்காதி லேகியம்:-

பறங்கிப் பட்டை லேகியம் பலம்.4, சீரகம் பலம்.க, ம்.க,
சுக்கு பலம்.$\frac{1}{2}$, திப்பிலி பலம்.$\frac{1}{2}$, மிளகு விராகன்.5, தம்ப
விலாம்பிச்சம் பலம்.$\frac{1}{2}$, சந்தனச் சிராய் பலம்.4, சாதி
சாதிபத்திரி விராகன்.3, ங்கம் விராகன்.3, லவங்
கஸ்தூரி மஞ்சள் விராக முத்தக்காசு விராக
நெய் படி.2, ஆய்பட் முருங்கைப்ப
குன்னிப் பட்டை, வே கைக்
சித்திரமூலம், பெரும
பட்டை கூடப் பேர்
அந்தக் கசாயத்தி
குப்பை மேனி வ
யும் வகைக்கு ட
ஓமம், அரத்தை
கோஷ்டம்,
கூட்டி பொ
எருக்கம் ட
தயிலம் ஒ
பிடித்து
தீரும்.

கூட்ட

படி.௧, கூட்டிக் குழம்பாய்க் காய்ச்சி தொளாங் கட்டி ஆட்டு கோமியத்தில் சுத்தி பண்ணினதுபலம்.௧, பொட்டிலுப்பு பலம்.½ பொடி போட்டு கிளறி திரண்ட பின்பு களச்சிக் காய் பிரமாணம் உருண்டை பண்ணி ரெண்டு நேரமும் ஒரு உருண்டை கொடுக்க வயத்தில் நொங்கு போல் விழும். கொமட்டிக்காய் சாறு ஒரு படி ஈர வெங்காயச் சாறு ஒரு படி எலுமிச்சை சாறு படி.௧, விளக்கெண்ணெ ஒரு படி கூட்டி எளாவி வேகிற போது பொட்டிலு உப்புக் கால் பலம் போட்டு எண்ணெ வடித்து தட்டிடை கொடுக்கவும்.

விஷத்துக்குக்_கொம்மட்டிக்_குழம்பு:-

கொம்மட்டிச் சாறு ஒரு படி, குழம்பாய்க் காய்ச்சி ஒரு விராகன் துத்தம் ஒரு விராகன் சுத்தி பண்ணின நேர்வாளம் பொடி பண்ணிப் போட்டுக் கெட்டியாய்க் காய்ச்சி எந்த விஷத்துக்கும் இரண்டு பணவிடை நாக்கில் தடவி வென்னீர் கொடுக்கத் தீரும்.

குதிரை_வாதம்,_சந்து_வாதத்துக்கு:-

புளியம் பிரண்டைக் கிழங்கு, ஆயப் பட்டை, வேப்பம் பட்டை, மாவிலிங்கப் பட்டை, புங்கம் பட்டை, நொச்சிவேர், சிறகுறிஞ்சா வேர், செங்கத்தாரி வேர், தழுதாளை வேர், மிளகு, சுக்கு, திப்பிலி, ஓமம், வசம்பு, வெள்ளை வெங்காயம், வாய்விளங்கம், தெசாவரம், தும்பருஉட்டகம், கல்லுப்பு, பெருங்காயம் கூட்டிச் சூரணம் பண்ணி நல்லெண்ணெயில் பிசறிக் கவளம் போடவும். குதிரை வாதம் சந்து வாதம் தீரும்.

சகல_கிருமிக்கு_மாத்திரை:-

கோரோசினை, மஞ்சளிலை, தலைச்சாரம், இந்துப்பு, முள்ளிப் பழம், எருக்கம் பாலிலரைத்து வீக்கத்துக்கு தடவவும். நொச்சித் தழை, வசம்பு ஒரு கொட்டைப் புடு நசையம் விடவும். மாம்பட்டை அத்திப் பட்டை, ஆலம் பட்டை, அரசம் பட்டை, பீச் சிப் பட்டை, நவ்வல் பட்டை, ஆவாரம் பட்டை, கிலுவம் பட்டை, இலவம் பட்டை, குடப்பாலைப் பட்டை, பீமரப்பட்டை, தென்னம் வேர், மலைதாங்கி வேர், காரைப் பட்டை, இலந்தைப் பட்டை, மாதளம் பட்டையுங் காயும் உதியம் பட்டை, கொன்னைப் பட்டை, பூமரத்திப் பட்டை, மருதம் பட்டை, நன்னாரி வேர், கோரைக் கிழங்கு, முள் ளுக் கொறுஞ்சி, ஆக இருவத்தி மூன்று பட்டை தளிர் காய் பிஞ்சு சமன் கொண்டு இடித்து வத்தப் பானையில் போட்டு மூன்று வள்ள நீர் விட்டு இரண்டு படியாகக் காய்ச்சி இறுத்து இரண்டு படியும் தயிலம் போலே காய்ச்சி கடைத் திரவியம் தாளிச பத் திரி, சாதிக்காய், சாதிபத்திரி, லவங்கம், லவங்கப்பட்டை, குராசாணி ஓமம், கசகசா, காசுக்கட்டி, சீரகம், ஏலம், சுக்கு, ஓமம், சாதிலிங்கம், நாவி குடப்பாலை, விரை, தெசாவரம், அதிவிடையம், இலை மருந்து மாங்கொட்டை சுட்ட பருப்பு புளியங் கொட்டை, மாதளம் பிஞ்சு ஆக கடைத் திரவியம்.21 வகைக்கு விராகனிடை.௨ வறுத்துப் பொடி பண்ணி முன் பட்டைத் தயிலம் விட்டு அரைத்து அடை தட்டி-கீழும் மேலும் ஆலாயிலையில் வைத்து புடம் போட்டு அரைத்து அரசிலை கட்டு வாழைப்பூச் சாத்திலரைத்து தட்டி மாவிலையில் வைத்துப் புடம் போட்டு தென் னம் பாளைச் சாத்திலரைத்துத் தட்டி நவ்விலையில் வைத்து புடம் போட்டு அரைத்து ஊமத்தஞ் சாத்திலரைத்து அத்தியிலையில் புடம் போட்டு அரைத்து (சுரக்காய்) பிரமாணம் குளிகை பண்ணி வென்னீர் தயிர் தேன் இதுகளில் ஒரு குளிகை கொடுக்கவும்.

வேது_புகை:-

மாட்டுக் கொம்பு வேர், ஓமம், ஈர வெங்காயம், துரலி மாவட்டை, இது பொடி பண்ணி உரலில் இருப்படி நெருப்பில் புகை பிடிக்கவும். பத்தியம் வாழைக் கச்சல், கத்திரிப்பிஞ்சு, துவரைப்பருப்பு, பயத்தம் பருப்புக் கூட்டவும். 20 நாள்குளிகை கொள்ளவும். தீரும் வியாதி சகல கிருமி பெண்ணைப் பட்டதுந் தீரும். உப்புக் கூட்டிக் கடுகு விடவும். அதிமதுரம், இஞ்சி, ஏலம், சீனிச் சர்க்கரை இது சூரணம் பண்ணி பசுவின் பாலில் வெருகடிப் பிரமாணம் கொள்ளவும். பித்தஅரோசிகம் வெள்ளோக்காளம் இவை தீரும். இது கை கண்டது.

வெள்ளோக்காளம்: நிலாவாரைச் சூரணம்:-

சுக்குடன், நிலவாவாரை, சூரணம் பண்ணித் தின்ன மிக்க
மிக்கதோர் வாயு குன்மம் மேகங்கள் அண்டவாயு
தக்கதோர் கபால சூலை சயமுடன் அனேகம் ரோகம்
யிக்கணந் தீருமென்று யிறைவருரைத்த தாமே.

திரிகடுகு, திரிபாலையம், லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, ஏலம், இது சரி சமன் சூரணம் பண்ணி ஏழு புடம் கஞ்சா சரி பங்கு இது கூடின மாத்திரம் சர்க்கரை போட்டு தேன் நெய்யில் மத்திசசுக் கொள்ளவும். ~~கடுப்புக் கழி, ரத்தம்,~~
~~சீதம்; *தண்ணி* தாகத்துக்கு~~

கடுப்புக் கழி, ரத்தம் சீதம் தண்ணீர் தாகத்துக்கு மருந்து:-

நெலி மரத்துப் பட்டை உள் பட்டை அரைத்து எலுமிச்சங் காய் பிரமாணம் கீழும் மேலும் தயிரும் வைத்து முழுகவும்.

இதுவும்:- நல்ல சீரகம் காசிடை, சீலையில் பொட்டணம் பிடித்து நல்லெண்ணையில் தோய்த்து விளக்கில் காய்ச்சி----பண்ணி வென்னீரிலரைத்துக் கொடுக்கவும். கடுப்புக் கழி ரத்தம் சீதந் தீரும்.

தாளிச சூரணம் அருவைக்கு:-

சுக்கு, மிளகு, திப்பிலியும், துய்ய லவங்கப் பட்டையுடன்
தக்க லவங்கம் கூகைநீர் தாழி தக் சமன் ரெண்டேலம்
ஒக்கச் சூரணம் சர்க்கரையம் உத்த வென்னீர் தனிற் கொள்ள
மிக்க விருமலெலு மூச்சு விரமி வாந்தி பாண்டுவும் போம்.

பிரண்டை கணுத் தள்ளி அரிந்தது படி.3, அரைப்படி கல்லுப்புப் போட்டுக் கரியாக வறுத்து இடித்து வஸ்திர காயம் பண்ணிக் கொண்டு இதுக்கு சரக்கு ஓமம் பலம்.3, சுக்கு, திப்பிலி, மிளகு, தெசாவரம் வகைக்கு பலம்.உ, பெருங்காயம் விராகனிடை.5, வெடியுப்பு வளையலுப்பு, படாலவணம், இந்துப்பு இது வகைக்கு விராகனிடை.5, வெடியப்பு, பறம்பாய் எடுத்து வைத்து உப்புங் கடைச் சரக்கும் வறுத்து சூரணம் வஸ்திர காயம் பண்ணி பிரண்டைச் சூரணமுங் கடைச் சரக்குஞ் சூரணமும் ஒன்றாய்க் கலந்து புதுச் சட்டியில் போட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு மாப் போலே பிசைந்து கழச்சிக்காய் மாதிரி உருட்டி வைத்துக் கொண்டு அந்தி சந்தி இரண்டு நேரமுங் கொள்ளத் தீரும் வியாதி அருவை, கெண்டை, கவுசை, காமாலை சுரந்தீரும். தீபனம் உண்டாயிருக்கும். சரீரம் ஆரோக்கியமாம். பத்தியமில்லை. எலும்புருக்கிக்கு கரிப்பாலை வேர்ப்பட்டை, குருவை நெல்லரிசி, படி பசுவின் பால் வார்த்தரைத்து நெய் கூட்டி உண்ணவும். கை கண்டது.

திருகு சன்னிக்கு நசையம்:-

இஞ்சி யிறையள்வு நருக்கி முலைப் பாலும், தேனும் கூட்டி பொட்டணங் கட்டி நசையம் விடவும். சங்கு உரைத்து முலைப் பாலில் நல்லெண்ணை கூட்டி நசையம் விடவும். இது கை கண்டது.

(வேறு)

பிடங்கு, நாரித் தளையும், கடுக்காய், ஈரவெங்காயம் குவைத்து மூன்று நாள் வெள்ளாட்டுப் பாலில் கொடுக்கவும். உப்பு, புளி பத்தியங் கட்டவும்.

விடத் தேரிலை நல்லெண்ணையில் மிளகு பொடி போட்டு வேக வைத்து தினம் ஒரு கறண்டி ஏழு நாள் கொள்ள வியாதி தீரும். உப்பு, புளி விடவும்.

வாத குன்மத்துக்கு:-

இஞ்சி பலம்.3, இந்துப்பு பலம்.1½, வெள்ளுள்ளி பலம்.½, கோரைக் கிழங்கு பலம்.க, சிவதை பலம்.க, நேர்வாளம்.30 கூட்டி சாரணை கொடிவேலி கொன்றை பாலை முருங்கை, வாகை வகைக்கு பலம்.க கூட்டி நாலு

படி தண்ணீர் விட்டு ஒரு படியாகக் காய்ச்சி சூரணம் போட்டு மிளகு, சுக்கு, வெள்ளுள்ளி, திப்பிலி, இந்துப்பு, பெருங்காயம், வெங்காரம் பலம்.க, கூட்டி கள்ளிப் பால் பலம்.க, நெய் ஒரு படி விட்டுக் காய்ச்சி தினம் ஒரு கரண்டி கொள்ளவும்.

(வேறு) குலேகிசு:-

அமுக்கிரா சங்கு, சங்கங் குப்பி கருங் வெள்ளறுகு, கொடிவேலி, எழுள்ளு மலைதாங்கி, பப்பை மேனி வேர் வகைக்கு பலம்.1½, கொடிவேலி பலம்.க, சுக்கு, மிளகு, வெள்ளை வெங்காயம், சிமம் வகைக்கு பலம்.க, நல் லண்ணெ படி.3, நல்ல வெல்லம் கூட்டி லேகியம் பண்ணவும். இருபத்து நாலு நாள் கொள்ளவும். புளி விடவும்.

அரையாப்பு, மூலம், பவுத்திரம் இவைகளுக்குப் புகை:-

சவுக்காரம், கொட்டைப் பாக்களவு சுண்ணம்பு இரண்டு பங்கு எலுமிச்சஞ் சாற்றி லரைத்துப் பசவும். வெள்ளை வெங்காயம், சுண்ணம்பு அரைத்துப் பசவும். பூமியில் சாண் குளி வெட்டி புளியஞ் சிராய் போட்டு எரித்து தணலில் பேய்ப்பீர்க்கு விரையும் கூட சுவானத்தின் மாங்கிஷ பொடி போட்டு புகை போகாமல் பிடிக்கவும். புழு விழும். சுவானத்தின் மாங்கிஷ பல்லு எட்டிக் கொழுந்து ஆவாரங் கொழுந்து அரைத்துக் கட்ட வும். மூக்கிலும்

மூக்கிலும், வாயிலும், ரத்தம் கன்னேவு ரத்த நாசி மருந்து:-

செங்குருவி வேர், எலுமிச்சை சாறு வார்த்து எலுமிச்சங் காயளவு அரைத்து மூன்று நாள் முழுங்க நிற்கும். செம்புப் பொடி விராகன்.16, சங்கு எட்டு பணவிடை கந்தம் இரண்டு பணவிடை துருசு இரண்டு பணவிடை ஈயம் நாலு பணவிடை, ரசம் ஒரு பணவிடை, திப்பிலி ஐந்து பணவிடை, திரிபாலைக் கஷாயத்தில் அரைத்து சிறுவிரல் பிர மாணம் உருண்டை முலைப் பாலிலிட கன்னேவு பூ மாறும்.

(வேறு)

பிரான் பட்டை அரைத்து எலுமிச்சங் காயளவு வெள்ளாட்டுப் பால் ஒரு படி கருஞ்சீரகம் விராகனிடை .க அரைத்துக் கலந்து ஞாயிற்றுக் கிழமை முதல் கொண்டு மூன்று நாள் கொடுக்கவும்.

மூல மாறல், நாலா மாறலுக்கு மலசலக் கட்டுக்கு:-

சங்கங் குப்பி கொழுந்து, மிளகு, வெள்ளை வெங்காயம் அரைத்துக் கொடுக்க வும். கருமத்தைச் சாறு மூன்று குளி காடியில் கொடுக்கவும். தேத்தான் கொட்டை சீரகமும் அரைத்துக் காடியில் எழு தரம் வடிகட்டி சர்க்கரை கூட்டிக் கொடுக்கவும். வெங்காயங் கூட்டி இடவும்.

நாச விரோசனம்:-

நேர்வாளம்.10 கடுக்காய் சுத்தி ரெண்டும் பொடி பண்ணி பேய்ப்பீர்க்கங் காயிலடைத்து எடுத்து பச்சைக் கற்பூரம் புனுகு கட்டி எலுமிச்சம் பழத்தில் தடவி முத்தக்காசுத் தளை தீரத்துக்கு விரோசிக்கும்.

எரிகுன்மத்துக்கு:- இரண்டு களஞ்சி கெந்தகம் எட்டுக் களஞ்சி பொன்னரிதாரம், பொடி பண்ணி சத்தி சாரணைச் சாறு புளிரெண்டு களஞ்சு விட்டு பிசறி இரண்டு களஞ்சு ரசம் கூட்டி சட்டியில் எருவில் புடம் பண்ணிறது நெல்லிடை வாழைப் பழத்தில் கொடுக்கவும். வண்டு கடிக்கு உய்ய சோறு:-

வெற்பாலைத் தளை, ரெண்டு பிடி இடிச்சு பிசைபிறது. பசு மோரில் வடி கொண்டு உலை வைத்து அரைப்படி தினை அரிசி போட்டு இப்படி மூன்று நாள் கொடுக்கவும். பசு நெய், பனைவெல்லம் கூட்டிச் சாப்பிடவும். பத்தியம் பசு நெய் மோரும் உப்புக் கூட்டவும்.

ஒடி முளிகை:-

சிறு தரத்தி வேர், முள்ளி வேர், ஊதவளை வேர், சிறுபூளை வேர், அரைத்து

காடியில் உள்ளுக்கு கொடுத்து மேலும் அவலை இடவும். செங்குன்றி கருங்குன்றி, செவ்வசலை, விலாமிச்ச வேர், *செங்குன்றி* *கருங்குன்றி* அப்பைக் கிழங்கு, கணம் புல்லு வேர், புன்னைக்குப் பூடு, மிளகு, சுக்கு, ஓமம், வசம்பு, கருஞ்சீரகம், வெள்ள வெங்காயம், பெருங்காயம், வென்னீரிலரைத்து சுண்டைக்காய்ப் பிரமாணம் வென்னீரில் கொடுக்கவும்.

அண்ட வாதம் அரையாப்புக்கு:-

முள்ளி வேர் அரைத்து முள்ளிக்காய் பிரமாணம் உழக்கு பசுவின் பாலில் கொடுக்கவும். நத்தைச் சூரி வேர், எலுமிச்சங் காய் மாதிரி அரைப்படி பசுவின் பாலில் கொடுக்கவும். நெல்லி வற்றல், சீரகம் அரைத்து எருமைத் தயிரில் கொடுக்க வும்.

உஷ்ண வாய்வு மலக் கட்டுக்கு:-

முடக் கொத்தான் இலை, அரைத்து எலுமிச்சங் காய் பிரமாணம் பழம் புளி பழைய கருப்புக் கட்டி நெய்யுங் கலந்து கொடுக்கவும். முடக் கொத்தான் எலுமிச் சங்காய் மாதிரி அரைத்து பழைய புளி, பனைவெல்லம், ஈரவெங்காயம், விளக் கெண்ணையில் குழப்பிக் கொடுக்கவும்.

கல்லடைப்புக்கு:-

நல்லெண்ணை ஒரு படி ஈர வெங்காயச் சாறு ஒரு பிடி, புளச் சுண்ணம்பு, புளியங் கொட்டைப் பிரமாணம் கூட்டிச் சாரித்துக் கொடுக்கவும். தவசி முருங்கை தழையை அரைத்து முள்ளிக்காய் மாதிரி பசு வெண்ணையில் மூன்று நாள் கொடுக்கவும்.

சுரம், தாகம், மூளை மாறல், நாளா மாறல்:-

ஈசுர வேர். வடக்கே போற வேர் வெட்டி வந்து புளியங் கொட்டைப் பிரமாணம் வென்னீரில் கொடுக்கவும். வேலையாணை ஏழு கொழுந்து தின்னக் கொடுக் கவும். அந்த வேர் கையில் துளிச மாடிக் கட்டவும்.

கிராணிக் கழிச்சல், உள் மூலத்துக்கு:-

நல்ல சீரகம், பொடி தேனில் கொடுக்கவும். ரத்தக் கழிச்சல் கோழி முட்டை வெள்ளைக் கரு கறண்டி யிலிட்டு வெள்ளைக் குங்கிலியம் பொடி போட்டு சர்க்கரை கூட்டிக் கிளறிக் கொடுக்கவும்.

சீதத்துக்கு: கருங்குங்கிலியம் கட்டு கொடி ஜவைச்சு எருமைத் தயிரில் கொடுக்கவும். வெள்ளெலிச் சதையும் அரிசும் அரைத்து நல்லெண்ணையில் பணியாரஞ் சுட்டு கொடுக் கவும். பிரண்டைச் சாற்றில் உலை வைத்து கருங் குறுவை மாப் போட்டுக் கிளறி களியாக்கி நல்லெண்ணையில் கருப்புக் கட்டி கூட்டவும். பேய்ப்பீர்க்கம் விரை பொடி செய்து நல்லெண்ணையில் கொதிக்க வைத்து சீலையில் திரிபண்ணி பவன வாய்க்கு வைக்க வும்.

பேய்நாய் கடி:-

தட்டேள்ளு படி.உ, பனைவெல்லம்.4, போட்டு யிடிச்சு கரு ஊமத்தை தளை மூன்று கூட யிடித்துக் கொடுக்க வெறி தெளிம்பும். தலைக்கு தண்ணீர் விட்டு மோருஞ் சோறுங் கொடுக்கவும்.

நாளா மாறல் பெரும்பாடு:-

மிதிபாகல் சாறு பசுவின் பால், வெல்லங் கொடுக்கவும். நற்பாலை வேர் நிலப்பனைக் கிழங்கு பூனைக் காலி விரை காராட்டுப் பாலில் கொடுக்கவும்.

முலை சுரக்க வயிற்றில் செத்த பிள்ளை விழ:-

கருஞ்சீரகம் அரைத்துப் பாலில் கொடுக்கவும். கோழி யெச்சம் மாடப்புறா எச்சம் பாலில் தடவவும். நல்லெண்ணை ஒரு சேரை பச்சை திரை சாறு ஒரு சேரை முருங்கையிலை அரைச்சது களச்சிக்காய்ப் பிரமாணம் கலந்து கொடுத்து நெஞ்சில்

தொப்புளில் இறங்கத் தடவவும்.

<u>கல்லெரிப்பு, மடிவாதம், வயிற் விப்புருதி, மூட்டு முட்டுக்கு:-</u> 5.10.63.

பலகரை பத்து, எட்டு எலுமிச்சஞ் சாறு உழக்கால் போட்டுக் கொடுக்கவும். அன்மாங்கிஉடன் கரைந்து கல்லுடைந்து விழும். எரிப்பு எடுத்து ரத்தம் சீய் விழுந்தால் கம்பரிசி மாவு, விளாங்காயளவு, ஈர வெங்காயச் சாறும், பனை வெல்லங் கூட்டி காடியில் கொடுக்கவும். ஆடாதோடை சிறுகுறிஞ்சா யிலை, சிலைதைப் பிரண்டை வகை ஒரு பிடி அவைச்சு பசுவின் பாலில் மூன்று நாள் கொடுக்கவும்.

<u>ஈளை இருமலுக்கு:-</u>

கடல் நுரை.3, வெங்காரம்.3, நீலங்குங்கிலியம்.6, கடுக்காய் அரைத்தை கூட்டி நல்லெண்ணையில் வேக வைத்து ஒரு கரண்டி நாற்பது நாள் கொடுக்கவும். பத்தியம் துவரைப் பருப்பு, வெள்ளாட்டு உப்புக் கண்டம் கூட்டவும். புளி விடவும்

<u>பேய் நாய் கடிக்கு:-</u>

அமத்தைச் செடி வலது கைக்குள்ளாக சுத்தி வந்து சூரிய நமஸ்காரம் பண்ணி சூரியன் எதிரே மூன்று இலை பரித்துப் போட்டு பின்பு மூன்று இலை பரித்து வந்து பட்டை வேர் மூன்று வகைக்கு ஒரு பாக்களவு கூட்டி அரைத்து முன்னே பழஞ் சோறும் பாலுங் கொடுத்து பிறகு பசுவின் பாலில் பாதி மருந்து கொடுக்கவும். பாதி வெல்லம் கூட்ட கொடுக்கவும். வெறி எழும்பு. பிறகு எழு பானை தண்ணீர் தலைக்கு விட்டுப் பதனமாய் கட்டி வைத்து எழு நாளும் ஈர வெங்காயம் மோருஞ் சோறுங் கொடுக்கவும். பத்தா நாள் விளக்கெண்ணை தேய்த்து முழுகவும். மாற்றுப் பெருங்காயம் எலுமிச்சை சாறு கொடுக்கவும். வெறிசில்லா பட்டை சீரகம், கசாயம் பண்ணிக் கொடுக்கவும்.

<u>சூலைக்கு:-</u>

பறங்கிப்பட்டை.4, வாய்விளங்கம், சுக்கு.6, மிளகு.6, ஓமம்.6, திப்பிலி.6 நல்லசீரகம். , கருஞ்சீரகம்.4, நொச்சித் தழை, வேப்பட்டை பலம்.4, சங்கம் வேர் பட்டை பலம்.8 ஆக இவை யெல்லாங் கூட்டி சூரணம் பண்ணி வெந்நீர், பசும் பால் நெய்யில், கொள்ளவும். சகல சூலையுந் தீரும். பத்தியம் துவரைப் பருப்பு, வெள்ளாட்டுப்புக் கண்டம் கூட்டவும்.

<u>பீனிசம், நீரேற்றுவை:-</u>

லவங்கம், குங்குமப்பூ, கோரோசனை, அதிமதுரம், வகைக்கு ஒரு விராகன் கூட்டி ஒரு மான் நெய்யில் ஆக்கி நாசிக்கு விட்டுத் தலைக்கு தேய்த்து முழுகவும். உகாய் வடக்கே போற வேரை காராட்டு பாலில் நல்ல----கூட்டிக் கொடுக்கவும். சாறணை வேர் அருகை அரிசி மாவில் களி மூன்று நாள் கொடுக்கவும். சங்கம் வேர் ஆரிய மாவும் எருமை மோரில் கூழாக்கிக் கொடுக்கவும்.

<u>ரத்தம் சீதக் கடுப்புக்கு:-</u>

கழச்சிப் பருப்பு விரை மூளை வாங்கி சுக்கு சரி கூட்டி வெதுப்பி எலுமிச்சஞ் சாற்றிலரைத்து கட்டித் தயிரில் கொடுக்கவும். ஆடாதோடை உள்ளொட்டி ஆனை வணங்கி வெங்காரம், நல்லெண்ணையில் தலைக்கு தேய்க்கவும். வெற்றிலைக் கொடிச் சாறு உழக்கு, எலுமிச்சஞ் சாறு உழக்கு கலந்து மூன்று நாள் கொடுக்கவும்.

சலக் கழிச்சல்:- எலுமிச்சஞ் சாறு உழக்கு, பூவரசங்காய் சாறு உழக்கு மூன்று நாள் கொடுக்க சிறுநீரில் ரசம் விழும். ஒட்டிப் பிடிச்சுப் பார்க்கவும். அவளையிடவும். ஆகாச கெருடன் கிழங்கு பொடி பெரும்பூளை வேர்ப் பொடி, களிப்பாக்குப் பொடி, வகைக்கு பலம்.க, காசுக் கட்டி விராகன்.4 இது வெல்லாம் சூரணம் பண்ணி நல்லெண்ணையில் வேக விட்டு இளகச் சாப்பிடவும்.

<u>விக்கல் கன்று மூடு தலையில் பிள்ளை:-</u>

தவசி முருங்கை புண்ணுக்கு கூட்டி வேக வைத்து உண்ணவும். சீந்தி பட்டை

அரைத்து பசுவின் வெண்ணெயில் கொடுக்கவும். ரசம் பணவிடை, சாதிலிங்கம் பணவிடை கய்யாந்தகரைச் சாறு, பொன்னாங்கண்ணிச் சாற்றிலரைத்து ஊசி, நொச்சி செருப்படிச் சாற்றிலரைத்து சீலையில் தடவி பத்தி வைத்து மூக்கில் புகை பிடிக்கவும். கண்ணுக்கு பாலாவி பிடிக்கவும். உப்பு, புளி தவிர்க்கவும்.

பெரும்பாடு சீப் பிரமியம்:- மாம்பட்டைச் சாறு, எலுமிச்சை சாறு ஏழு நாள் கொடுக்கவும்.

கண்ணுக்கு பூ வெள்ளைக்கு:-

வெள்ளைச் சாறணை, வெள்ளைக் காக்கரட்டான் நந்தியா வட்டம் இந்த வேர் நத்தை பலக்கறை சங்கு பன்றிக் கொம்பு சரி கூட்டிச் சுட்ட சாம்பல் வெள்ளைக் குன்றி மணி சேந்தாங் கொட்டை கடுக்காய், சுத்தம், துரிசு, திப்பிலி, இந்துப்பு, இந்துப்பு சரி கூட்டி சுத்தம் துரிசு சுட்டுப் போட்டு கய்யாந்தகரைச் சாறு கூட்டி தக்காளிச் சாறு, எலுமிச்சைச் சாறு, வெள்ளாட்டுக் கோமியத்திலரைத்து உருண்டை பண்ணி நிழலிலுலர்த்தி முலைப்பால் நந்திப் பூச் சாறு எலுமிச்சஞ் சாற்றிலிடவும். எந்தப் பூவுந் தீரும்.

சருவாங்கி வாத சூலை:-

சூதண்டை செருப்படி, எருக்கிலை, தேள் குருஞ்சி வகைக்கு இரண்டு பலம், பட்டை சமம் பலம்.க, வெள்ளை வெங்காயம்.10, கடுகு, சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்கு அரைப்பலங் கூட்டி வெள்ளாட்டுக் கோமியத்தினாறப் போட்டு இடித்துக் களச்சிக்காய் பிரமாணம் கொளுஞ்சிச் சாற்றில் இரண்டு நேரங் கொடுக்கவும். உப்பு, மிளகு கூட்டவும். புளி விடவும். பூசணிக்காயத்தினை பண்ணிக் கறியிடவும்.

விஷத்துக்கு நசையம்: செய்யான் கடிக்கு மருந்து:-

ஜடாதோடை வடக்கே போற வேர் ஞாயிற்றுக் கிழமை பிடுங்கி துளிச மாடிக் கட்டப் பாம்பு கடியாது. அளிஞ்சி வடக்கே போற வேரை பிடுங்கி வந்து அரைத்து பச்சைக் காயளவு வென்னீரில் கொடுக்கவும். முருங்கைப் பட்டை சிறுநீரில் வாத்துக் கட்டவும்.

நாக வகைத் பவுத்திரத்துக்கு:-

சித்திரமூலம் பலம்.4, செங்கத்தாரிப் பட்டை பலம்.4, சோமநாதப் பெருங்காயம் விராகனிடை.5, கோரோசனை விராகனிடை.4, திப்பிலி விராகனிடை 4. சாதிக்காய் விராகனிடை.4, லவங்கம் விராகனிடை .4 இது வெல்லா மரத்து ஒரு படி எண்ணெயில் காய்ச்சி வடித்து தினம் ஒரு கரண்டி உள்ளுக்கு கொடுக்கவும்.

கண்ணோவுக்கு:-

எட்டிப் பட்டை ஆலாம் பால், கருஞ்சீரகம், ஆழாக்கு பசுவின் பாலில் வேக வைத்து சீலையில் பிடித்து போடவும். ஆவாரந் தழை கட்டவும்.

(வேறு)

வேலிப் பருத்தி வேர், நொச்சி சாற்றில் உரைத்து தடவவும். பூ மாசம். நெய்யிலுரைத்திட மாலைக் கண் தீரும்.

காதுப் புழு, காது கோளாதுக்கு:-

நாய் வேளை, நல்ல வேளை, பெருங்காயம், வசம்பு நசுக்கிக் காதில் சாறு விடவும். (வேறு)

பேய்ச் சுரைக்காய்ச் சாறு யிந்துப்பு, நல்லெண்ணெயில் கொதிக்க வைத்து விடவும். மலங் கிளுவைப் பட்டை வெள்ளாட்டுப் பாலில் ஏழு நாள் கொடுக்கவும். மயிர் மாணிக்கம் பச்சரிசியில் இடித்துச் சர்க்கரை கூட்டிக் கொடுக்கவும்.

அக்கினி குமாரன், தீபாக்கினி குமாரன்:-

தாரம், சூதம், தாம்பூரம், தக்க வரிய உருக் கிம்பு வீர காந்தம்

கெந்தகமும் விதமாய்ச் சுக்கு திப்பிலியும் குரமுள நற்சீரி சுருதி முதலே நற்பாம்பு அரிதாரஞ் சுணங்கள் கிடாய்ப் பிச்சு நேக வரைத்துக் குப்பி தனில் நீடிய இஞ்சி சாறதனல் சுகமாய்க் குன்றியிடை கூட்டிச் சூரிய தேனிற் கொள்வீராய் தாக மோகம் அதிசாரந் தருண சுரமும் நீங்கிடுமே. நா வாதங் குளிர் காச்சல் நவலோகாக்கினி குமாரினிதே.

இரதம் நாபி மயில் பிச்சு யிரிய மேஊடு மீன் பிச்சு
பறிமாய்க் தனியே குளி செய்து பன்னூ மிஞ்சிச் சாறுடனே
சதமா மிளகு பிரமாணம் சடுகறஞ் சன்னி கூஷயரோகம்
திதமாம் பயித்தியம் வாத குன்மம் தீருந் தீபாக்கினி குமாரனிதே.

<u>சன்னி வாத குலாந்தகன்</u>:-

சூதம் நாபி எருக்கம் பால் சுகமாயரைத்துச் சரி சமமாய்
பதமாய் குன்றியிடை சேர்த்து பரிவாய் சன்னி முகரோகம்
நாதம் மந்த சேற்றமமும் நயன வலியுங் கண்டிப்புஞ்
சதா கோடி வியாதி யறும் சன்னி வாத குலாந்தகமிதே.

கெந்தகம் ரசம் கொடிவேலி கெவுனத்துடலே சரி செய்து
அந்த விஞ்சிச் சாறதனல் அரைத்தே மாத்திரை குளிகை செய்து
சந்தப்பனலல் விரியாளே தருண சுரமும் பயித்தியமும்
குந்த சீதள சுரம் மாறல் குஞ்சக்கேசரி யிது தானே.

எருக்கம் பவுத் துளுடன் யிதமாயரைத்துச் சரி பன்னி
மருக்கஞ் சாறும் புடமிட்டு மலறு யிஞ்சிச் சாறே கொள்
பருக்குன் குன்றியிடை செய்து பன்னிய வாதங் குளிர் மாறல்
பரவ சன்னி முகரோகம் புமவ மொத்த மொழியாளே பூபதி ரசமிதுதானே.

<u>விரமாதி ரசம்</u>:-

இரசங் காந்தம் அப்பிரகம் இனிய சுக்குத் திப்பிலியும்
பதம மிஞ்சி யரைத்துண்டைச் சாறும் புடமிட்டு
சதமாம் நெல்லியிடை சகல ரோகந் தீருமிவை
விதமாய்க் குன்றிப் பிரமாணம் விரமாதி ரசமிது தானே.

<u>மகா சூசிகா பரணம்</u>:-

காந்தக் சூதமரிதாரம் கரிய கெந்தங் காரீயம்
பாய்ந்த சீலைபு மப்பிரகம் பரிய உருக் நிமளை சங்கும்
ஆய்ந்த நாபி வெங்காரம் அரிய பஞ்சுக் கல் நாரும்
வீந்த பாலனும் வெள்ளி யிவை வேறே யிஞ்சிச் சாறரைத்துண்டை
ஆடு மயிரங் கீரியிலை அரிய முதளை மீன் பிச்சு அரைத்தே எந்திர புடமிட்டு எடுத்த உருண்டை யிருப்புச் சிமிழ்க் கெந்தி ய குளிகை தானிடவே சுட்ட வாதம் சுக சன்னி சூசிகா பரணமிது தானே.

<u>அக்கினி குமாரன்</u>:-

நாபி சூதங் கெந்தகமும் நலமாந் தாம்பிர மிளகு சுக்கு
பாவிய சாரம் அவச்சாரம் பஞ்ச லவணம் சரி செய்து
கூவிய இஞ்சிச் சாறதனல் குக்கிட புடமு மிக விட்டு
தாவிய உருண்டை குளிகை செய்து தருண சுரமும் நவ சுரமும்
பித்த பிணிய மிவை போகும் பிரதாபாக்கினி குமாரனிதே.

<u>கோடா சூசி மாத்திரை</u>:-

பஞ்ச லவணம் வெங்காரம் பயசிற திரிகடுகு திரிபாலையம்
விஞ்சிய கெந்தக மரிதாரம் விருகன் காந்த மனோசிலையும்
அஞ்சிய இரசம் அவட்சாரம் அடுக்கிய கோஉஷ்டம் மரமஞ்சள்
கஞ்சிய கரப்பன் சாறு விட்டே கலந்த நேர்வாளம் சரி கூட்டி

கடுகி அரைத்துக் குன்றியிட கோடா கோடி வியாதி யெம் லோடா ஜூரியிது தானே.

சந்திர சேகர ரசம்:-

இரதம் கெந்தகம் வெண்காரம் இதமாம் மிளகு இந்துப்புப்
பதமாம் மீசம் பிரப் பிச்சுப் பண்ணி அரைச்சுப் புடம் வைத்து
சதமாக் குன்றிப் பிரமாணம் சரியே மிஞ்சிச் சாறுடனே
விதமாஞ் சன்னி தீரமிவை சந்தி சேகர மிது தானே.

திரி மூர்த்தி ரசம்:-

காரீய்யம் லிங்கம் வெங்காரம் களச்சு கூட்டிச் சரி செய்து
பாரிய மிஞ்சிச் சாறதனல் பரிவாயரைத்துக் குன்றியிட
வீரிய தேனும் விஷசுரமும் விட்டே போகும் முலைப்பாலில்
தீராதுவாத சேற்றமமும் திரி மூர்த்தி ரச்மிது தானே.

நீலகண்ட ரசம்:-

சாஸ்திர வேதி நேர்வாளம் சரியே வெள்ளை கெவுரி யிது
நேத்திர மத்தஞ் சாறு விட்டு நேகு அரைத்து உருண்டை பண்ணி
குத்திர விஞ்சி நீர் மோரில் குளக்குளிகை சுக சன்னி
நேத்திர சன்னி தீரு மிது நீலகண்ட ரசமிது தானே.

தங்கச் சூதம் கெந்தகமும் சரியாய்க் குமரிச் சாறு விட்டு
பொங்கு சாதட்ட படிதிழை பொருந்தக் குப்பி தனிலிட்டு
அங்கு சமாத்திரை குளி செய்து அரிய தேனில் கொள்வீராய்
புங்கு வரிய குளிகை யிடப் பூரண சந்தி ரோதயமிது தானே.

விஷத்துக்கு கலிக்க குளிகை:-

தின்று தின்று சிறுகீரை தீராமை மாவாசிர் கெடா பொன்னுங்கண்ணி கரி
கூட்டார் பசார் பதம் நெய் கொண்டு முன்னுய் குருடரா யிருப்பார் முனிவர் சொன்ன
மொழி யிதுவே.

(வேறு)

சீலைத் தூளி சுட்டு கலத்தில் வைக்கத் தயிலம் விழும். அதை எடுத்துக் கண்ணிலி
டவும். குப்பை மேனி மலைதாங்கி குறித்த பேய்ப்பீர்க்கு வேருடனே ஒப்பாய்
சரியாய் ஒரு பிடியாய் உரைத்த புங்கம் விரை புரியும் செப்புக்கூடனே பாகலிலை
சிறந்த சாகம் விட்டரைத்து கற்பமிளகளவுண்டை செய்து சுயரால் சேர்த்துக் குடிநீரில்
மெய்ப் பாயிட்டால் விஷந் தீரும். மீளாவிஷமு மீண்டிடுமே.

கரந்தை கற்பம்:-

சீரும் பிராய் உள் கொண்டு சிறந்த ஞானம் பாடமுமாம்
ஊருமேனி மாந்தளிர் போல் ஒளிவு மெத்த வடிவுண்டாந்
தீரும் ரோகந் தனை யகற்றிச் செல்வமாகுந் திருவரிய
நாளுங் கரந்தைக் கற்பத்தை நல்ல தேனிற் கொள்வோர்க்கே.

இருக்கு கடைச் சரக்கு:-

சுக்கு, திப்பிலி, மிளகு, இந்துப்பு, சீரகம், கருஞ்சீரகம், நீர் பசரிக்
கொழுந்து வாசுருவை யரிசி, சாதிக்காய், வசம்பு, ஏலம், லவங்கம், மிளவறையாக
வறுத்துச் சூரணம் பண்ணி அந்த கற்பத்துக்கு சரி பங்கு கூட்டி இரண்டுக்கும் சரி சமன்
சர்க்கரை கலந்து வெந்நீரில் கொள்ளவும்.

கிருமிக்கு கிருதம்:-

நாயுருவி பலம்.50, சாறணை வேர் பலம்.10, சித்திரமூலம் பலம்.10,
குடப்பா---பலம்.10, வெற்பாலை பலம்.10, காட்டாமணக்கு வேர் பலம்.10,

சிவதை வேர் பலம்.10, சிறுகாஞ்சொறி பலம்.10, ஆய்பட்டை, புங்கம் பட்டை, தானிப்பட்டை, மலைமிஞ்சி வேர், புளியம் பிரண்டை, மெருகங் கிழங்கு, காட்டுக் கருணை, கரிக் கருணை பிரண்டை வகைக்கு பலம்.5 இடித்துக் கசாயம் வைத்து எட்டு வள்ளம் ஒரு வள்ளமாகக் காய்ச்சி வெள்ளாட்டு நெய் படி.3, பால் படி.3, பஞ்ச லவணம், சத்தி சாரம், எவச்சாரம், நவச்சாரம், திரிகடுகு, மலைதாங்கி, சி கடுகு, வெள்ளை வெங் காயம் வகைக்கு பலம்.½, ட்டின் சூரணம் போட்டு பதத்திலிறக்கி இரண்டு நேரமும் கட்டிடை கொள்ள உள்மூலம், பிறமூலம், ரத்த மூலம், சீழ் மூலம்------

(வேறு)

<u>மூலத்துக்கு மருந்து:-</u>

ஏலம் பலம்.½, சீரகம் பலம்.க, தேங்காய்.உ, ஈர வெங்காயம் படி.க, சர்க்கரை பலம்.4, மச்சி உள் சதை பலம். , பசுவின் நெய் படி.½, இவ வெல்லாம் வறுத்துப் பொடி பண்ணி நெய்யில் போட்டுக் கொள்ள மூல முளை கரையுங் குணமாம்.

<u>ரத்த பிரமியத்துக்கு மருந்து:-</u>

சாதிப்பு யிலையைத் துவைச்சு சாறு பிழிந்து ஒரு படி பால் நெய் படி.க, ஏலம் பலம்.½, சர்க்கரை பலம்.க, லேகியம் பண்ணித் தின்ன ரத்தப் பிரமியந் தீரும்.

<u>கசாயம்:-</u>

முருங்கைக் கிழங்கு, சாறணை வேர் முளகோடுள்ளி இந்துப்பு
நெருஞ்சு பெருங்காயம் சம்போமம் நெருப்புத் தோளன் அனல் மூலம்
ஓரங்கக் காய்ச்சி எட்டொன்றுயிக்கி அதிக்கடிக்க வல்லீராய்
மருங்கச் சுளற நோக்காடும் வயிற்று வலியும் வாராதே.

<u>இதுவும்:-</u>

சமம், குராசானி, லவங்கப்பட்டை, சீரகம், இந்துப்பு, சுக்கு, மிளகு, திப் பிலி, மூலம், வாய்விளங்கம், ஈசுர வேர், கண்டங்கத்திரி வேர். (யக) கசாயம் கொடுக்க மாரடைப்பு வாசந் தணித் தண்ணி கொடுக்கவும்.

நெல்லிக்காய்ச் சாறுந் தயிருங் கொடுக்கவும். அருகம் வேர் துவைச்சு சாறு பிழிந்து சர்க்கரை போட்டுக் கொடுக்கவும். முருங்கை யீர்க்கும் மலரும் வறுத்துக் கசாயங் கொடுக்கவும். இலந்தைக் கொழுந்து தயிரிலரைத்துத் தொண்டை மார்பு தொப்புள் யிதில் பூசவும். பருத்திக் கொட்டை வறுத்து யிடித்துப் பருப்பு எடுத்துச் சர்க்கரை கலந்து சப்பிரிக்கவும். பருத்திக் கொட்டை வறுத்து இடித்துப் பொட்டணங் கட்டி முகரவும். இதுகளால்----பிரந்தி, வாந்தி அரோசியமிது குணமாம்.

(வேறு)

பளியிலை துவைச்சு சும்மஞ் சோறு தண்ணீரில் பிசைந்து ஒரு பிடி பிழிந்து நல் லெண்ணை ஒரு பிடி சாரித்து மூன்று நாள் கொடுக்கவும். பத்தியம் உப்பு, புளி விடவும். ம பத்தியம் மூன்று நாள் காக்கவும். கள்ளுக் கொழுந்து நாலுக்கு நாள் எச்சாகக் கொள்ளச் சீ விழுகிறது நிற்கும். மோருஞ் சோறுங் குடிக்கவும். பத்தியத்தும் புளி விடவும்.

<u>சித்திர புஷ்பாதிர் ரசாயனம்:-</u>

முருங்கைப்பூ, ஆவரைப் பூ, வராகிக் கிழங்கு, பூமி சர்க்கரைக் கிழங்கு, நிலப்பனைக் கிழங்கு, சத்தி சாரணைக் கிழங்கு, புருஷாறனம், சிவதை வேர், நற் பாலை வேர், சிறுநெருஞ்சி வேர், அதிம் காய் விரை, சிறுகீரை வேர், முத்தக்காசு பூனைக்காலி விரை, முருங்கைப் பிஞ்சு விரை, அமிர்தவள்ளி சர்க்கரை, வெள்ளைத் தாமரைக் கிழங்கு, அல்லிக் கிழங்கு, ரச வாழைக் கிழங்கு, அமுக்கிலாங் கிழங்கு, பூ வரசம் விரை இலவம் விரையும் பிசின் நீர்முளி விரை முசுட்டை விரை ஆக வகை 26 உலர்த்திச் சூரணம் பண்ணிக் கடைத் திரவியம் அதிமதுரம், செங்கழுநீர் கோஷ்டம், சமுத்திரா சோகி விரை, சிறுசெருப்படி, ஏலம், சர்க்கரை லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி லவங்கம் சாதிக்காய், சாதிபத்திரி, முந்திரிப்பழம், பேரீச்சம் பழம, குரோசானி

ஓமம், காமப்பூ, நல்ல சீரகம், கருஞ்சீரகம், தெசாவரம், சதகுப்பை விரை, தாளிச பத்திரி, பூலாங்கிழங்கு, விலாமிச்ச வேர், கர்கடக சிங்கி, மாசக்காய், நெல்லி*விளாமிச்ச*ஊண* விரை, கடலை, கோதும்பை உளுந்து, கொத்தமல்லி விரை ஆக சரக்கு 27 (மேல் முடிவுக்கு அடுத்துள்ள ஏடுகள் இல்லை)

<u>பெரு மரக் கிருதம்: சித்திர மூலக் கிருதம்:-</u>

பெருமரப்பட்டை பலம்.50 இடித்து இரு நாழி நீர் விட்டு எட்டொன்றாகக் காய்ச்சி வடித்து இதில் நல்ல வெல்லம் பலம்.4 போட்டுக் காய்ச்சி சித்திரத்தை பலம்.க, ஏலம், கிராம்பு, ஓமம், சாதிக்காய், இது பலம்.ஜ அதிவிடையம் பலம்.ஜ, இலவம் பிசின் பலம்.ஊ இது இடித்து வஸ்திர காயம் பண்ணி வில்வப் பழம் இடித்து அந்தப் பாகில் தூவிக் கிளறி ஆற விட்டு அரைப்படி தேன் விட்டுக் கிளறி பாக்களவு கொள்ளத் தீரும் வியாதி மூலக் கிரகணி, கடுப்பு, அதிசாரம், அசீரணம், சூலைவாய்வு, உஷ்ணம், எரிகுன்மம் இவை தீரும்.

சித்திர மூலம், சமூலம் பத்துப் பலம் இடித்து நாழு வள்ளத் தண்ணீர் விட்டு ஒரு படியாகக் காய்ச்சி வடித்து திரிகடுகு, திரிபாலையம், விளாவரிசி, தேவதாரம் கொத்தமல்லி, வசம்பு, நெருஞ்சி வேருங் காயும் அத்தி மரத்துக் கனான் முத்தக்காசு பச்சி திப்பிலி, மூலம் சீரகம், பெருங்காயம், இந்துப்பு, கடுகுரோகணி; கடுகு இது வெல்லாம் விராகனிடை.10, பறங்கிப் பட்டை பலம்.உ இது வஸ்திர காயம் பண்ணி அந்தக் கசாயத்தில் தூவிக் கிளறி அரைப்படி சர்க்கரை போட்டுக் கிளறி அரைப்படி தேன் விட்டுக் கிளற புன்னைக் காயளவு கொள்ளத் தீரும் வியாதி உள்மூலம், பாண்டு சாமாலை, வஷபாகம், ஈளை, இருமல், மேலிளைப்பு, பதினெட்டு குஷ்டம், அஷ்ட குன்மம், மகோதரம், பவுத்திரம், மூத்திரக் கிறச்சி வாதசூலை, மேல்வீக்கம், வாய்வு பொருமல் இவை யெல்லாந் தீரும்.

<u>தோஷத்துக்கு கண்ட அவிழ்தம்: தாகத்துக்கு கசாயம்:-</u>

தங்க முத்தொடு வெள்ளி திப்பிலி தருகிறம்பொடு கோஷ்டமும் தாழ்வு கானகம் வாழுமே கலை தவ மனிந்திடு மலிகமும் அங்க மாற்றெடு பவழ கவிளை அக்கிலாக்காரமதூரமும் ஆனகார் முகா பக மேகலை அங்கமு முலைப் பாலுரைத்திட மங்கை வயத் திட நாவளித்திட வாத தோஷ சுரங்களும் அதிசாரந் தாகமுந் தீருமே.

<u>பித்த தோஷத்துக்கு:-</u>

இசுருப்படியீர்க்கு, சிறுகீரை வேர், கமுகும் பட்டை, ஆவாரஞ் சருகு, நல்ல சீரகம், வில்வ இலையோடு, கொத்தமல்லி இந்த ஏழு வகையுங் கசாயம் பண்ணிக் கொடுக்கப் பித்த தோஷம் முறியும்.

கொத்தமல்லி நெற்பொரி, குருந்தமுட்டி, ஆவரை
வத்த விடு சர்க்கரை அதிமதூரங் கூட்டியே
ஒத்த படி நீருவிட்டு உழக்கதாகக் காய்ச்சியே
சத்தியாக நீர் குடித்த வலமது நிற்குமே.
தாகமும் விக்கலுந் தந்திரி நித்திரை
வாகுடன் வயத்தினில் வாந்தியாகிடும்
மீகுடன் வாய வந்திறங்கு நீர் சிவந்தாகுடன்
பயித்திய சுரமென்றோது வார்.

<u>இதற்கு மருந்து:-</u>

சிவந்த நண்டு வளைத் தண்ணீர் செவியஞ் சுக்கு, விலாமிச்சை சந்தனம், ஏலம் அதிமதூரம், சரியாக் கொத்தமல்லி வில்வம் போந்த அநுபானமுடன் பொடியாய்க் காய்ச்சி நீர் கொள்ள வாந்தி விக்கல் சுரந் தீரும். வடிவேல் விழியீர் பாரீரே.

பாசம்.6.20, கெந்தகம்.630, வெங்காரம்60, ரசத்திரை குழிக்கல்லில் வைத்து கெந்தகமும் வெங்காரமும் மேலே வைத்து குழவி கொண்டு நய்யத் தட்டி

தகடு போல் ஆகும். அந்த ரசம் சேக்கு மட்டும் ஒன்றாய் ஒரு பாத்திரத்தில் மூடி ரசம் ரேகிச்ச பின் அதை எடுத்து சீலையை இரண்டு மடிப்பு பண்ணி அதிலே அவிழ்தம் ஒரு கொட்டைப் பாக்களவு குழியாகக் கட்டி ஒரு பானையில் அரைப் பானை மணல் விட்டு அதிலே அந்த மருந்தைப் பதிச்சு அதின் பேரிலே பானை நிரம்ப மணல் விட்டு வட்டோடுரைத்து மூடி மண்ணிட்டு கணைக் கால் மட்டும் பானை யளவாகக் குழி வெட்டி குழிக்குள்ளே பானை கவுந்து வைத்து ஆவி முட்டியிலே பொதிந்து கெசபுடமாக மூடி விக்கினேசுர பூசை பண்ணித் தீப தூபங் கொடுத்து நன்றாக எரியிட்டு பண்ணி மறு நாள் வயிரவ பூசை பண்ணி ஆறவிட்டு பானை மணலை மெள்ள வாங்கி நன்றாக வெந்து குமிழம் பழம் போல் சிவந்து கரப்படசி யிருக்கும். அதை எடுத்துப் பதனம் பண்ணிக் கொண்டு அதுக்கு அனுபானம் திரிகடுகு வெதுப்பிப் பொடி செய்து ஒரு பணவிடை செந்தூரம் இட்டு தேனில் குழைத்துக் கொள்ளவும். இப்படி அரை மண்டலங் கொள்ள சூலை.17, வாய்வு,26, குன்மம்.1 ஈளை இருமல் எலி கடி மந்தார காசம் காயசுவாசம், சுவாச காசம், ஊண்மாந்தை, சுரமாந்தை, காமாலை, யோனிச் சூலை, கண்டவிப்புருதி, கூடு விப்புருதி இவை எல்லாந் தீரும்.

சாதிக்காய், சாதிபத்திரி, லவங்கம், அதிவிடையம் இவை யெல்லாம் வெதுப்பிப் பொடி செய்து ஒரு பணவிடை செந்தூரமுந் தேனில் மத்தித்து இரண்டு நேரமும் அரை மண்டலங் கொள்ள கிரகணி.6, அதிசாரம். 2, வகையுந் தீரும்.

காட்டுக் கருணைக் கிழங்கு, மருள மஞ்சிக் கிழங்கு, நிழலுலர்த்திப் பொடி பண்ணி சுக்குத் திப்பிலி கூட்டி வெருகடிப் பிரமாணத்தில் பணவிடை செந்தூரம் தேனில் இரு பொழுது அரை மண்டலங் கொள்ள மூல ரோகம்.9, அந்திர வாதம்.20-ம் தீரும்.

ஆவாரைத் தயிலத்தில் பணவிடை செந்தூரம் இரு பொழுது அரை மண்டலங் கொள்ள சதை அடைப்பான்.18, நீரழிவு.20, சோமரோகம்.10, கல்லடைப்பான்.5, மூத்திரப் பானை.6, எலும்புருக்கி.12, புற்று வகை24, முள்ளக் கரம்.8, முள்ளுஉட்டணம்.6 தீரும்.

அளிஞ்சித் தயிலத்தில் பணவிடை செந்தூரம் இரு பொழுது அரை மண்டலங் கொள்ள வயிற்றில் வியாதி.60, வாயு வகை.32, விப்புருதியுந் தீரும்.

எருக்கம் பழுப்பு வாட்டிப் பிழிந்த நீரில் உழக்கில் பணவிடை செந்தூரம் கூட்டிக் கொடுக்க வயறு பேதியாம். மாற்று மோருஞ் சோறும். இந்தப் படி எண்ணை விட்டு ஒரு நாள் கால் மண்டலங் கொள்ள விஷபாக வகையும் சோகையுள்ளதும் பயித்தியம் பாண்டு சோகை காமாலை, பிறநீர் கோவை தீரும். பத்தியம் சார்ப்பு, புளி கிரந்திப் பண்டம், வர்ச்சிக்கவும்.

(வேறு)

பெருங்குறிஞ்சா யிலை, கொட்டை முள்ளுத் தழை, சின்னித் தழை, பறத்தேள் தழை, நிலக் கொழுந்து விடத் தேரான தழை, சுக்கடைத் தழை, முன்னித் தழை, துரத்தித் தழை, ஊசித் துரத்தியிலை, பட்டை குப்பை மேனித் தழை, காட்டு முருங் கைப்பட்டை, சொருந்தி, எழு முள்ளுப் பட்டையுங் கொழுந்தும் விடர் வெள்ளி வேர் உகாய் வேர் கொழுந்து ஆதண்டை யிலை வேளையிலை, ஈசங்கம் வேர், சித்திர மூலம், வேர், பிரண்டை வேர், ஆய்ப்பட்டை, பெருங்கரும்பங், கடுகு, மிளகு, உள்ளி, சுக்கு, திப்பிலி, தெசாவரம், வசம்பு, ஓமம் வகைக்கு பலம் இது வெல்லாம் ஆட்டுக் கல் லிலாட்டி அரைத்து வில்லை பண்ணி உலத்தி ஒரு வில்லை வெந்நீரில் கொடுக்க சிறுநீரில் கொடுக்கவும். 40 நாள் கொடுக்கவும். அந்த வில்லை நசியம் பண்ணவும். அஞ்சனம் போடவும். வலிப்புகளெல்லாந் தீரும். கை கண்டது.

வறச்சி காமாலைக்கு :-

இசங்கம் பலம்.50, கண்டங்கத்திரி பலம்.25, செவியம் பலம்.25, வில்லை வேர் பலம்.25, பெருங்குமுள் வேர் பலம்.25, சிறுவழுதலை பலம்.25, கீழாநெல்லி பலம்.25, சிறுதேக்கு பலம்.25, திப்பிலி மூலம் பலம்.20, கொடி

வேலி பலம்.20, இத்தனையு மிடிச்சு மேல் பொடி திப்பிலி பலம்.20, கூமைநீர் பலம்.4, ஏலம், லவங்கம், சாதிக்காய், சீரகம், பெருங்காயம்; ஓரோன்று பலம்.3 சிறுதேக்கு, கற்கடக சிங்கு இது இரண்டும் பலம்..--- மிளகு பலம்.4, சுக்கு பலம்.8, அரப்பொடி பலம்.3/4 இதுவெல்லாம் பொடித்து மேல் பொடி தூவி பிறகு தேன் களஞ்சி விட்டுக் கிளறி லேகிய பாகத்திலே இறக்கித் தினங் கொள்ளக் கசாயம், சுவாசம், உள்வறட்சி, சூலை, குரலிடை விழுந்தது அக்கினி மந்தம், இதை ரோகம், விக்கல், வாதரோகம், கடுப்பு, உதிரவியாதி, விளனி அருட்சி இது வெல்லாந் தீரும்.

<u>சுவாசா சாரத் தயிலம்:-</u>

கரிசிலாங் கண்ணி, தூதுவளை, ஆடாதோடை, கண்டங்கத்திரி, தேள்க் கடை சாறனை, பொடுதலை நொச்சி, பேராமுட்டி, கீழாநெல்லி, இசங்கு, பொருமி, இது ஓரோன்று சாறு நாழி நல்லெண்ணெய் நாழி, திப்பிலி கொடிவேலி வசம்பு, கற்கோலம், திப்பிலிமூலம், முத்தக்காசு, சுக்கு, ஏலம், அதிவிடையம், குந்திருக்கம், செவியம், மிளகு, கடுகு, சீரகம், சிறுதேக்கு, பெருங்குரும்பை, பெருமரத்தப் பட்டை, சாதிக்காய், அசமோதகம், வெண் கடுகு பெருங்காயம், கடுகுரோகணி, வாய்விளங்கம், ஓரோன்று இரு களஞ்சு அரைத்துப் பதத்தில் வடித்து மேலும் பூசி உள்ளுங் கொள்ளப் பஞ்ச காசம், சுவாசம், சளி, அருட்சி வாய்வு, இரத்த ரோகம், வீக்கம், பீலிகை, உதிர வியாதி கிருமி, பக்க சூலை வாய்வுக் கட்டு, கிறுணி, அக்கினி மந்தம் இது வெல்லாந் தீரும்.

<u>கரப்பான் குணம்: சூரணம்:-</u>

வாறு கொடிவேலி குறிஞ்சா வறகனை யறுகுங்
கூற கருவேம்பு குடப் பாலை சீறுஞ் சிவனார் பெருமருந்து ப்சங்கத்தாரி
பிரகிலை மேற்கு கொள்ளக் கரப்பானேகும்.

எருக் கருநொச்சி வேரளத்தி சாறுக்கி யாருங் கரந்தை சென்னி ஆனைக்கும் பாகம் வடியூர் வசம்புள்ளி வாகை கடுகுரோகணியிற் கூடிப்பீராய் சீர் கரப்பான் கூகும்.

<u>பித்தம் விக்கல் சத்திக்கு:-</u>

பாரிசைந்த நெல்லி முள்ளி பாரியதோர் கூவளையும்
சீரிசைந்த சீரகமும் சேர்ந்த சுக்கும்
வேரிசைந்த சிற்றாமுட்டி நெற் பொரியுஞ் சேரக்
கசாயமிடில் பித்தம் விட்டுப் போமிதனைப் பேசு.

விரும்புகின்ற சீரகமும் மேன்மை நெல்லி முள்ளி, பொரும்பு சுக்கு மேல் பொடி சரியாய், நிரம்படவே சர்க்கரையந் தேனந் தனைக் குழைத்துண்ணச், சொக்கர் திருவானை பித்தஞ் சோம்பும், பண்ணும் பருத்தி விரை பாரிவள்ள நெற் பொரியும் மெண்ணைந் சிறு திப்பிலியு மேலமுடன் உண்ணும் பொடி சக்கரையுந் தேனுந் தனைக் குழைத்துண்ண விக்கல் சத்தி போகும் விரும்பு.

<u>சகல கிரந்தி புண்ணுக்கு தயிலம்:-</u>

இருத்தம் கெந்தகம், மனோசிலை, தாளகம், இரதம், வெடியுப்பு, அரிதாரம், துத்தம், துரிசு சமன் கொண்டு சதிரக் கள்ளிப் பால், வெற்றிலைச் சாறு பாகலிலைச் சாறு விட்டு அரைத்துச் சீலையில் தடவி உலர்த்தி விளக்கெண்ணெயில் திரிக் கொளுத்தித் தயிலந் சகல கிரந்திப் புண்ணும் போம், ஆறும்.

<u>உள்ள பூமணக்கெண்ணை பண்ணும்படி:-</u>

உள்ளி ஆமணக்கெண்ணைய உகந்து வள்ளிதாக வைத்துடன் கறவாள்,
உள்ள வெள்ளுள்ளி ஓவன் சாறடை வேர் தெள்ளிய சிவதை வேர் புறு

முருங்கை வேர் நற்கொடி நவின்ற தன் வேரும் கொப்பென தரித்து மருந்தோர் பதின் பலம் வகை பெறக் கொண்டு திருந்திய நீர் குறுணியிற் சேர்த்து முன்றென்கிய் காய்ச்சி முயன்ற கசாயந் தோன்ற வரைக்கச் சொல்லு மருந்து களத்தித் திப்பிலி அழகிய திரி கடுகு ஒத்த அசமோதகமுடன் ஒன்றந்த என்படு விளால் வெட்பாலை யரிசியும் தின்படுஞ் சாறடை திரிமூலகமும் செவ்விய மொறுகஞ் சதகுப்பை செச்விய மிந்து .ப்பொடு சுமலேலம் இம் மருந்தே என்டொன்றிரு களஞ்சு தக்கமுடன் கசாயந்தான் வாத்தரைத்து சிற்றுமணக் கெண்ணை சிறந்தொரு நாளி மற்ற தின ரியும் மாண்புறப்பு கட்டிச் சதிரக் கள்ளிப்பால் தாளுளாக்கும் முதிரப் புகட்டி முன்னுளரித்து நலம்பெற வடித்து நாளொன்றுக்குத் துலங்கிய என்னை சொன்ன முக்களஞ்சு நக்கிய பின்பு நன்னுதல் மடவாய் மிக்க மகோதரம் மிருதருகுலை குன்மங் காமாலை உடலுறு வாத குன்மத்துடனே அகவை பீலிகை யடை நீராமை சிகை யொன்றிலாமல் சிக்கெனப் போமெனத் தகை பெருமெண்ணையைச் சாற்றினனிறையே என்றது :-

உள்ளி, சாறணை வேர், சிவதை வேர், புன்முருங்கை வேர், சித்திர மூலவேர் இதுக்கு வகைக்கு பலம்.10, சி கத் தறித்துத் அவைச்சுக் குறுணி நீர் விட்டுப் பிசைந்து வடித்து மூன்றென்ருகக் காய்ச்சி சரக்கு ஆனைத் திப்பிலி, ஓமம், விளாம்பட்டை, வெட் பாலை யரிசி, சாறடை வேர், திரிமூலகம், செவியம், சதகுப்பை, இந்துப்பு, ஏலம் இது வகை ஒன்னுக்கு களஞ்சு.உ, அந்தக் கசாயம் வார்த்தரைத்து இதுக்கு சிற்றுமணக் கெண்ணை நாழி உரி வார்த்து அதின் பிறகு சதிரக் கள்ளிப் பால் விட்டு இது வெல்லாம் மூன் நாள் காய்ச்சி தயிலமான பதத்தால் வடித்துக் கொண்டு நாளொன்றுக்கு முக் களஞ்சு தயிலம் உள்ளுக்கு வாங்கவும். தீரும் வியாதி மகோதரம், சூலை குன்மம், காமா வாதம், அகவை பீலிகை நீரடைப்பு, ஆமை சிகை இது முதலான வியாதியுந் தீரும. கார்ப்பு, புளி விடவும்.

(வேறு)

ரசம், கெவுரி பாஷாணம், அரிதாரம், துத்தம், துரிசு இந்த ஆறும் சரியாய் நிறுத்து ஊமத்தஞ் சாறு விட்டரைத்து பயறளவு உருட்டி நிழலிலுணத்தி எடுத்துக் கொண்டு குளிர் காச்சலுக்கு வென்னீரில் ஒரு குளிகை கொடுககவும். தாப சுரத்துக்கு முலைப் பாலில் கொடுக்கவும். பத்தியம் சுடு கஞ்சி கொடுக்கவும். சீத சுரத்துக்கு பதினொரு மிளகு அரைப்படி தண்ணீரிலே போட்டுக் கால் படியாக காய்ச்சி அந்த மிளகும் ஒரு குளிகையு மரைத்துக் கசாயத்தில் கொடுக்கவும்.

<u>பல சுரத்துக்குக் குடிநீர் :-</u>

சுருகுரு வங்கம் வேர் பலம்.10, சுரம்டக்கி பலம்.5, சுக்கு பலம்.½, இது வெ லா நொருங்க இடித்து முன்குளி தண்ணீர் வார்த்து நாழி உரியாக காய்ச்சி இறக்கி குளிர ஆறவிட்டு அதுவே மூன்று நாள் இரண்டு நேரங் குளிகை உரைத்துக் கொடுக்கவும். பத்தியம் பளவரிசிக் கஞ்சி கொடுக்கவும். சுரமெல்லாங் குணமாம்.

ஒரு மாதம் சட்டி தாளியாமல் புளி, நெய் பால், மோர் கூட்டாமல் பத்தியத் துடனே துடனே வரவும். வெள்ளைப் பாஷாணம், கெவுரி பாஷாணம், அரிதாரம் சாதிலிங்கம் இது சரியாக நிறுத்து இது 4-ம் நின்ற நிறைக்கு கள்ளிப் பால் சட்டியில் வரத்து 4 மருந்தையும் போட்டு பால் சுண்ட வறுத்து வென்னீர் விட்டு அரைத்துப் பயறளவு உருண்டை பண்ணி உலத்தி வைத்துக் கொண்டு ஒரு குளிகை வென்னீரில் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். பத்தியம் ஊர்க் குருவி யாகிலும், துவரைப் பருப்புத் தண்ணீராகிலும், புளியிடாமல் சட்டி தாளியாமல் (சாப்பிடவும்)

<u>வில்வ வேர் தயிலம் : பஞ்ச கல்ப்பம் :-</u>

வில்வ வேர் பலம் பத்து இடித்து எட்டுப் படி தண்ணீர் விட்டு ஒரு படியாகக் காய்ச்சி எள்ளென்ணை படி.க, விட்டு சந்தனம் பலம் ஒன்று போட்டு மெழுகு பதத்தில் இறத்துக் கொண்டு தலை முழுகவும். உதிர் காங்கை தணியும். கடுக்காய், மஞ்சள், மிளகு, வேப்பம் பருப்பு, நெல்லி வற்றல் வகைக்கு பலம்.க முழுகவும்.

பேதிக்கு மருந்து :- கத்தாளஞ் சோறு எடுத்து வைத்துக் கொண்டு அந்தச் சோத்தில்

கடுக்காய்ப் பொடி போடத் தண்ணீராகும். அந்தத் தண்ணீரில் கடுகுரோகனி ஒன்றைச் சுட்டு அரைத்துக் கொடுக்கவும். கல்நார்*பற்

<u>கல்நார் பற்பம் பண்ணுகிற விதம்:-</u>

கல்நார் கல்வத்தில் போட்டு கோழிமுட்டடைவென் கரு விட்டுஅரைத்து வில்லை தட்டிக் காய விட்டு முழப்புடம் போடவும்.

<u>இதுவும் முறை:-</u>

முசுமுசுக்கைச் சாறு, கல்நாருங் கூட விட்டு அரைத்து வில்லை தட்டிக் காய விட்டு முழப்புடம் போடவும் பற்பமாம்.

<u>காரீய்ய பற்பம்:-</u>

நொச்சியிலை கொண்டு வந்து காரீயத்தை பொடியாய் வெட்டிக் கொண்டு சீலையில் இலையைப் பரப்பி அதில் இந்தப் பொடியைப் பரப்பி சுருட்டிக் கெசபுடத்தில் போடப் பற்பமாம்.

<u>குளிகை:-</u>

திருகு கள்ளி வெள்ளெருக்கம் வேர், குளிகை காரீய்யம் உருக்கி விளக்கெண்ணெயில் ஒரு தரம் நல்லெண்ணெயில் ஒரு தரம் வேப்பெண்ணெயில் ஒரு தரம் உருக்கி சுத்திக் கொண்டு சதிரக் கள்ளிப் பால் கொடிக் கள்ளிப் பாலில் ஊற வைத்து நல்லெண்ணெயில் உருக்கி மூகையில் விட்டுக் கிளறிக் குளிகை செய்யவும். கற்பூர சிலாசித்து வட்டப் பேய் மிரட்டிச் சாறு விட்டு அரைச்சு மூகையின் மேல் மூயும் பண்ணி காய வைத்து அந்தக்மூகைக்கு கருஊமத்தைச் சாறு காரீயத்துக்கு ஒரு சாமம் சுருக்குக் கொடுத்து அதின் பிறகு அந்த ஈயமும் இலையுஞ் சட்டியில் போட்டு வறக்கப் பற்பமாம்.

அந்தப் பற்பம் உருகக உருகும். ஊசிக் காந்தம் பலம்.௧, காகை நிமிளை பலம்.௧ ரசம் பலம்.௧, கெந்தகம் பலம்.1½, லோகம் பலம்.½ இது வெல்லாங் மூமரிச் சாறு விட்டு ஒரு சாமம் அரைக்கப் பத்திக் கொள்ளும். உடனே காய்ச்சி செம்பிலே அடைத்து நெல்லுப் பானைக்குள்ளே பதிச்சு ஏழு நாளைக்கும் பிறகு எடுத்து மூமரிச் சாறு விட்டு அரைத்து வில்லைதட்டி காயப் போட்டு எடுத்து வைத்துக் கொள்ளவும். சத்தி சாறணைக் கிழங்கு அரைச்சு மூடிக் கெசபுடத்தில் போட பற்பமாம். முடக் கொத்தானிடிச்சு மூடிக் கெசபுடமிடவ் பற்பமாம்.

<u>பித்த வாய்வுக்கு:-</u>

சுக்கு பலம்.௧, ஓமம் பலம்.௧, சித்தரத்தை பலம்.௧, திப்பிலி பலம்.௧, செவ்வீகம் பலம்.½, இந்துப்பு பலம்.½, கல்லுப்பு பலம்.½, அதிமதுரம் பலம்.½, கொத்தமல்லி பலம்.½, பறங்கிப்பட்டை பலம்.½, சடாமஞ்சி பலம்.½, கிராம்பு விராகனிடை.௧, ஏலம் விராகன்.௧, சிறநாகப்பூ விராகன்.௧, கோஷ்டம் விராகன். இதுவெல்லாம் இடித்து வஸ்திர காயம் பண்ணி வைத்துக் கொண்டு வெந்நீரில் கொள்ளவும்.

<u>உஷ்ணத்துக்கு ஏலாதி லேகியம்:-</u>

சுக்கு பலம்.½, சீரகம் பலம்.௧, கிராம்பு விராகனிடை.௧, ஏலம் விராகனிடை.௧, சாதிக்காய் விராகனிடை.௧, சாதிபத்திரி விராகனிடை.௧, கசகசா விராகனிடை.௧, கருஞ்சீரகம் விராகனிடை.௧, வாய்விளங்கம் விராகனிடை.௧, கொத்தமல்லி விராகனிடை.௧, விலாமிச்ச வேர் விராகனிடை.௧, பசுவின் நெய் படி.5/8, கடைத் திரவியம் வஸ்திர காயம் பண்ணி நெய்யில் அடுப்பில் வைத்து சூரணம் போட்டுக் கிளறிச் சர்க்கரை போட்டுக் கிளறி (முடிவு இல்லை)

<u>க்ஷயரோக மருந்து:-</u>

கய்யாந்தகரைச் சாறு படி.௧, கத்தாளஞ் சோறு பலம்.௧, ஈர வெங்காயம் பலம்.௧, விளக்கெண்ணெ படி.⅛ இது வெல்லாம் மெழுகு பதமாய்க் காய்ச்சி உள்ளுக்கு வாங்கவும்.

உஉஷ்ணத்துக்கு வயற்று வலிக்கு மருந்து :-

வெள்ளைப் பூண்டு, மிளகு, உப்பு, சானி, செம்மண் வகைக்கு விராகனிடை.உ, இந்த ஐந்தும் அம்மியில் அரைத்து பூண்டு மேல் கவசம் கட்டி நெல்லுமியில் புடம் போடவும். இதை எடுத்து பனைவெல்லம் சமன் கூட்டி அரைத்து களச்சி மாதிரி உருண்டை பண்ணித் தின்னவம்.

நெய்_ஊற்றித்_தயிலம்_தலை_முழுகும்படி :-

நொச்சிச் சாறு படி.உ, எள்ளெண்ணை படி.க, இதுக்கு கடைச் சரக்கு ஆனைத் திப்பிலி விராகன்.க, ஓமம் பலம்.½, கார்போகரிசி பலம்.½, கஸ்தூரி மஞ்சள் பலம்.½ கோரோசனை பணவிடை.உ, மிளகு பலம்.க, வால்மிளகு பலம்.½, வசம்பு பலம்.½ பூண்டு பலம்.க----

தயிலம் :-

என்ன வென்று யின்னமொரு தயிலமுண்டு யினிதான வேம்பிட பட்டை வாங்கி
புன்னை வென்று கால்த் துலாம் யிடித்துப் போட்டு வுகு ஊணி நீர்விட்டு ஊனிக் காய்ந்து
சொன்னதென்று மெட்டொன்றுய் வடித்து வாங்கிச் சுருதி பெரி யெண்ணை யிருநாளி விட்டு
நன்னயமாய் ஏலமது பலந்தான் ரெண்டு நலமான கிசயாத்திலரைத்துப் போடே.

அரைத்தடனே காச்சியே மெழுகதாகுல் ஆத்தியே வடித்தடனே முழுகும் போதும்
நிரைத்திட்ட வாதமெல்லா மெங்கே போக்சு நிசமான சூலையொடு குஉஷ்டரோகம்
திரைத்திட்ட தழுதளையு மேல்க் கடுப்புஞ் செங்கரப்பான் புண் புரைகள் சேரப் போகும்
உரைத்திட்ட தயிலத்திலறுதி மெத்த உத்தமனே தயிலமொன்று உரைக்கிறேனே.

கொடிவேலித்_தயிலம் :-

உரைக்கிறேன் குறுஞ் தொட்டி வேருதனைக் கேளு
உரை முரையாய்க் கால்த் துலா மிடித்துப் போட்டு
நிரைக்கிறேன் ஊணி நீரெட்டொன்றுக்கி நேரான யெண்ணை யிருநாழி விட்டு
கரைக்கிறேன் கசாயத்திலரைத்து மை போல் கசகசா யிரு பலந்தான் கண்டு கொள்ளு
நரைக்கிறேன் என்பதென்ற வாதமெல்லாம் நடுங்கியே ஓடுமடா நயந்து காணே.

நயமான கொடிவேர் பலந்தான் பத்து நன்றாக யிடித்திட்டுப் பதக்கு நீரில்
வயமாகக் காய்ந்து வத்தி யெட்டொன்றுக்கி நீ/ வளமான நல்லெண்ணை நாளி விட்டு
நயமான வெண்ணை பன்னைக் காயளவு போட்டு நிலையான நற்சீரம் பலந்தானென்று
செயமான அரைத்ததனைப் பாகிற் சேர்த்து சீரான மெழுகு பதமான வாறே.

ஆன தயிலம் வடித்து முழுகும் போது ஆனந்த வாயுவுடன் அந்தர வாய்வு
தேன மருங்குமுலாள் கேள் வாதமெல்லாஞ் சிறு செவியுந் தினவு முதல் சிரங்கு குஉஷ்டம்
போனதொரு அரையாப்பு கிரந்தி சூலை புண் புரைகளோடு கொடிப்பிளவை வீக்கம்
தானென்னவே வந்ததே பித்தனையுந் தீரும் நல்லதொரு தயிலமிது நாடிப் பாரே.

சாத்த யின்ன வகை கேளு நீளா நெல்லி சலமாய்க் கால்த் துலா மிடித்துப் போட்டு
ஆத்த நீர் ஊணி விட்டுக் கசாயஞ் செய்து அப்பனே யெட்டொன்றுய் வடித்து வாங்கி
வாத்திடுவாய் எள்ளெண்ணை படிதான் ரெண்டு வளமான சர்க்கரை தான் பலந்தானத்து
ஏத்தியே காச்சிடுவாய் மெழுகதாக இயல்பாக முழுகி வரத் தீரும் நோய் கேளே.

கோடா பித்த மென்ற தெல்லாந் தீரும் கிறுகிறப்புத் தலை சுழத்தல் வாய் நீறல்
நாளடா ரெத்த பித்தம் வெரித்த பித்தம் நலமான எம்ப் பிளைப்புப் பித்த ரோகஞ்
சூளடா மஞ்சள் நீர் ரெத்த மூத்திரம் சுளத்தலுடன் உஷ்ணங்கள் சூடதெல்லாம்
வேளடா மேலெரிவு கை கால் காந்தல் வெளுத்த சிடம் கப்பாகும் விதத்தைப் பாரே.

நிசமெல்லா மேகத்தின் தயிலங் கேள் நிசமான சந்தனமும் விலாமிச்சோடு
வகையான ஆவரையின் பட்டையோடு வகையாகப் பத்துப் பலமாக வாங்கியே தான்
பிசகாமல் ஊணி நரெட்டொன்றுக்கி பெருமை யொத்த கசயாத்தை வாங்கியே தான்
நசுக்காமல் எள்ளெண்ணை நாளி கூட்டி நறுநீண்டவேர் பலந்தான்
ரைத்துப் போட்டு

போட்டதனைக் காச்சியே மெழுகதாகல் பகட்டியே வடித்திடுவாய் பூசக் கேளு
நாட்டதனை முழுகி வர மேகந் தீரும் நளினமாய் தேகமது மிரளும் பாரு
பூட்டதனை மேகநீர் போக வேண்டி புனிதமா மருந்தொன்று புகலக் கேளு
சாட்டதனை முன் சொன்ன பற்பந் தன்னை சார்வாகக் கொடுத்து விடு சாந்தமாமே.

வெட்டி வேர் தயிலம்:-

போக்கான சேதி யொன்று புகலக் கேளு புகழான வெட்டி வேர் பலந்தான் பத்து
நோக்காகப் பதக்கு நீரெட்டொன்றாக்கி நணுக்கமாய் வடித்ததனில் என்ணெ நாளி
வாக்கான அதிமதுரம் பலந்தானென்று மைந்தனே கசாயத்தில் மை போலாட்டி
தாக்கான யென்ணெக்குள் கரைத்துக் கொண்டு சாதகமாய் மெழுகு பதந் தன்னில் வாங்கே.

வாங்கியே முழுகி வர வரிசை கேளு மாநிலத்தில் மனிதருக்கு மண்டை சூலை
யோங்கியே குட்டமொடு பிறநீர்க் கோர்வை யொளி மஞருங் கண் புகைச்சல் காது மந்தம்
யேங்கியே யெய்ப் பிளைப்பு மெய் கால் நோவு யியல் கெட்ட தாது செய் மெரிச்சல் காந்தல்
நீங்கியே போவதற்கு மண்டலந்தான் நேரான யொன்றை விட்டு ஒரு நாளென்னே.

அமுக்கிலாத் தயிலம்:-

அரங்கு வாயின்ன மொரு தயிலங் கேளு அமுக்கிலா பலம் பத்து வாகாய் வாங்கே
வாங்கியே யிடித்ததனைப் பதக்கு நீரில் வடி கொண்டு என்ணெ படி அதனில் சேர்த்து
ஓங்கியதோர் எலுமிச்சம் பழச் சாறு நாளி ஒக்க விட்டு மெழுகு பதம் உருட்டிப் பார்த்து
தேங்கியே வடித்து வைத்துக் கொண்டு திரமாக முழுகி வரச்சுரக்கைச் சொல்வேன்
பாங்கியே பீனிசங்கள் பரிந்து போகும் பாரிலுள்ள மண்டை (சூலை) பரிந்து போமே.

இஞ்சித் தயிலம்:-

பார்ப்பதற்கு யின்னமொரு தயிலமுண்டு பச்சை யிஞ்சி கால்த் துலாம் பரிந்திடித்து
சீப்புடனே புளிந்து வடி கொண்டு வாங்கித் தெளிவான என்ணெயதில் படிதானென்று
உரைப்பான பசுவின் பால் படி தான் சேர்த்து உகதியாய் மெழுகு பதமாக வாங்கி
சிறப்புடனே முழுகி வரப் பருவமாகத் திடமாகத் தீரும் நோய் நிகழ்த்துறேனே.
நிகழ்த்துறேன் மண்டை யிடி சூலை வாதம் நிலை கெட்ட பீனிசங்கள் யெய்ப் பிளைப்புக்
களைத்துறேன் சூலையொடு வாதம் வாய்வு கால் கடுப்பு நெஞ்செரிப்பு மெய் நோவெல்லாம்
செகத்திலே நாடாமலோடிப் போகுமே.

கறண்டிய வயிற்றுக் கடுப்புக்கு மருந்து:-

கறண்டியில் நல்லென்ணெ விட்டு அதில் கோழி முட்டை வெள்ளைக் கருவிட்டு அத்திப் பால் விட்டுக் கிண்டிச் சாப்பிடவும். உடனே நிற்கும்.

வில்வாதி லேகியம்:-

வில்வவேர் பலம்.20, சித்தாமுட்டி வேர் பலம்.க, பேராமுட்டி வேர் பலம்.க, விஷ்ணு காந்தி பலம்.க, முக்காவளை பலம்.க, பற்படாகம் பலம்.க, சீந்திக் கொடி பலம்.க, கண்டங்கத்திரி பலம்.க, இது வெல்லாம் நாலு வள்ளத் தண்ணீரில் கசாயம் வைத்து நாலு படியாக இறக்கி நல்ல வெல்லம் பலம்.12, இஞ்சி பலம்.8 நருக்கிப் பிளிந்து கொண்டு நாரத்தம் பழச சாறு படி.½ இது வெல்லாங் கசாயமா தண்ணீரில் விட்டு பதனம் பண்ணி தேன் படி.க, விட்டுக் கிண்டவும்.

கடைச் சரக்கு:-

தாளிசை பத்திரி, செவியங், கொடிவேலி, மிளகு, கொத்தமல்லி, வாய்விளங்கம், அதிமதுரம், அரத்தை, லவங்கப்பட்டை, ஓமம், சீரகம், கருஞ்சீரகம் இது வெல்லாம் வகை ஒன்றுக்கு விராகன்.10 கிராம்பு விராகன்.3, சாதிக்காய் விராகன்.3, சாதி பத்திரி விராகன்.3, ஏலம் விராகன்.3, சுக்கு விராகன்.20, திப்பிலி விராகன்.20, கிராம்பு, சாதிபத்திரி, பிறம்பாகச் சூரணம் பண்ணிக் கூட்டிக் கொள்ளவும். அமுக்கிராங்

கிழங்கு, நன்னாரி, கடுக்காய், நெல்லிமுள்ளி, தானிக்காய் இதுவெல்லாம் வகைக்கு பலம்.5 சூரணம் பண்ணிமுந்தின சூரணமும் இதுவும் ஒன்றாகக் கூட்டித் தண்ணீர் தெளிச்சுப் பதனம் பண்ணி அந்தக் கசாயம் பக்குவத்தில் சூரணம் போட்டுக் கிண்டவும். பதத்திலிறக்கிக் கொள்ளவும். 7.10.63.

வாத ராட்சத மாத்திரை விராகன்.4, ரசிதம் வங்க பற்பம் விராகன்.4, துரிசு விராகன்.க, கூடப் போட்டுக் கிண்டவும். இதுவும் நாளொன்றுக்கு இரண்டு நேரமும் எலுமிச்சங் காயளவு கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி உஷ்னம், அக்கினி மந்தம், உள்க் காச்சல், உடம்பு, மேக சன்னி, இருமல், இளைப்புக், காது மந்தம், அரோசிகம், வாந்தி, விக்க', சத்தி, வயத்திலுண்டான சலவைகள், சிலேற்று மத்துக் கட்டி நெஞ்சுக் கட்டி, நெஞ்சு வலி, மேகத்திலுண்டான உஷ்னங்கள், பயித்தியங், கை காலெரிப்புகள், காந்தல், நீர்க்கடுப்பு, வேர்வைகள் கை காலசதி, இது முதலான ரோகங்களெல்லாந் தீரும். தீவன முண்டாகும். சரீரம் புஷ்டியாகும். வாய்வு முதலான தெல்லாம் போக்கும். திருஷ்டி உண்டாம். வீரிய வற்த்தனை உண்டாம்.

இருமலுக்கு:-

தூதுவளை சமூலமும், சிறுவழுதலை வேர், ஆடாதோண்ட இலை வகைக்கு பலம்.க இடித்துச் சூரணம் பண்ணி வெருகடி தேனில் கொள்ளவும். சுவாசம், இருமல், உள்மாந்தை சகலத்தையும் போக்கும். கை கண்டது.

கருங் கோழி கற்பம்:-

கார்போகரிசி, கருஞ்சீரகம், பெருங்காயம், இந்துப்பு, நற்சீரகம், கடுகு, வெங்காயம், சுக்கு, மிளகு, திப்பிலி, லவங்கப்பட்டை, வெள்ளை வெங்காயம், சுக்கு, கள்ளிப் பால் இந்த மருந்தெல்லாம் ஒரொன்று முக்களஞ்சு அரைத்துக் காடியில் போட்டுக் கோழிக்குடல் போக்கி அதுக்குள்ளே இந்த மருந்தெல்லாம் வைத்துத் தைத்து வெந்து குழம்பாக வரச்சே இறக்கி எலும்பு பொறுக்கிப் போட்டு வேக வைத்து நெய்ப் பதத்திலே இறக்கித் தினம் ஒரு களஞ்சு கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி விபுருவயறு, மகோதரம், பாண்டு, காமாலை, கிறுகிறுப்பு, கவுசை, யெல்லாந் தீரும். கடும் பத்தியம்.

ரத்த பீனிசம், சார பீனிசம், நீர்ப் பீனிசம், வறப்பீனிசம் தயிலம்:-

காட்டகத்திச் சாறு படி.க, நல்லெண்ணை படி.க இரண்டும் காய்ச்சி பதத்துக்கு வருகிற போது உலக்கைச் சத்தங் கேளாத விடத்திலே இருக்கிற ஆதண்டையிலை நெட்டைப் பேய் மிரட்டி யிலை வெத்திலை இது மூன்றும் ஆழாக்குச் சாறுக்கு விட்டு மெழுகு பதமாய் வடித்து நாளு நாளைக் கொருக்கால் முழுகவும். புளி, புகை தள்ளவும். காதில் மூக்கில் ஆக்கிராணம் பண்ணவும். எட்டு நாள் பட முழுகவும் தீரும்.

தேளுக்கு மருந்து:-

எட்டி வேர் பலம்.க, சிறுகாஞ்சொறி பலம்.க, பாகல் வேர் பலம்.க, வெங்காரம் விராகனிடை.க, அவினி விராகன்.க இது வெல்லாம் எருக்கம் பால் விட்டு அரைத்து உருண்டை பண்ணி உலர்த்தி வைத்துக் கொண்டு எருக்கம் பழுப்புச் சாறுவது குப்ப மேனிச் சாறுவது வெத்திலைச் சாறுவது விட்டு உரைத்துக் கொட்டு வாயில போடவும்.

சாதிக்காய் நல்ல காய் துளைத்து அதிலே அபினி விராகன்.க வைத்து அந்தப் பொடியிலே மூடி எள்ளுச் சாத்தில் ஊறப் போட்டு அந்தச் சாறு தானே விட்டரைத்து உருண்டை துவரை போலே உருட்டி வைத்துக் கொண்டு ராத்திரிக்கு ஒரு உருண்டை போட்டுக் கொள்ளவும். மாற்று சுத்த ஜலம்.

தாம்பிர பற்பம்:-

சத்தி சாறளைக் கிழங்கு அரைத்து மூடிச் கெசபுடத்தில் போடப் பற்பமாம்.

கொத்தானிடித்து மூடிக் கெசபுடத்தில் போட பற்பமாம்.

விஷத்துக்கு நசையம்:- மிளகு வெத்திலை, உப்பு, மூன்றையும் நசுக்கிப் பொட்டணங் கட்டி மூக்கிலே நசையம் பண்ணவும்.

இதுவும் ஒரு நசையம்:-

குப்பை மேனி, நொச்சி, பூண்டு, வசம்பு, மிளகு இது ஐந்தும் கூட்டி நசையம் சன்னிக்கு மருந்து கை கண்டது.

கண்டதொரு சேதியொன்று சொல்லக் கேளு காதிலுள்ளவியாதி யெல்லாங் கட்டாத் தீர
விண்டபடி முருகு முட்டை பூகந்தான் வெத்தியுள்ள நண்டிறச்சி வெள்ளையுள்ளி
கொண்டபடி கோழி முட்டை வசம்பு, சுக்கு குணமாக வகை களஞ்சு கூட்டியேதான்
பண்டருள் வேப்பெண்ணை தன்னில் வெந்து பதமாகவே வடித்துக் காதில் பாய்ச்சே.

பாச்சியே யடைத்திடுவாய் பத்து நாளில் பளிச்சென்று செவி கேட்கும்
வாச்சுதே யின்னமொரு வரிசை கேளு வாயிலுள்ள வியாதி யெல்லா மகன்று போகும்
பாச்சையாம் புச்சிதனை பாகில் கட்டி பச்சையாய்த் தின்றொதுக்கப் பல் குத்துப் போமே.

நெல்லிக்காய் லேகியம்:-

பாரினில் நெல்லிக்காயின் கசாயத்தைப் பரிந்து தானிளி பலமறக்கு தானது தூணி நீரில்
வாரினி பெட்படான்றுக்கி வடித்து நீ கட்டி வார்த்து சீரினி மருந்து கேளு திப்பிலி
மிளகு சுக்கே.

சுக்கொடு ஓமம் மூலம் கிரும்பு கச்சோல மேலம்
குக்கிலும் வாய் விளங்கம் சீரகம் கொத்தமல்லி
உக்கிற கூகை நீறத்த மதுரம் மொன்று
சர்க்கரை பலமும் பத்துத் தனைது கரைத்துக் கொள்ளே.

கரைத்திடு மருந்தை யெல்லாம் கிசயாத்தில் கரைத்துக் காய்ச்சி
உரைத்திடும் பாகு சேரி லொருடி நெய்யை விட்டு
திரைத்திடும் கிண்டிக் கிண்டி தேற மெழுகென்ன வாங்கி
பரைத்திடு பதனம் பண்ணிப் பாக்களவாகப் பாரே.

பாக்களவாகக் கொள்ள மண்டல மறையிற் பாரு
ஊக்குள்ள மேகத்தி சுரமது உளலை காந்தல்
போக்குள்ள கிரணி வாய்வு பொருமலும் யிருமலோடு
நீக்குள்ள க்ஷயமும் ஈளை சேற்றுமம் நிகள்ந்து போமே.

மஞ்சக் காமாலைக்கு மருந்து:-

கீழாநெல்லி அரைத்துக் கொட்டைப் பாக்களவு கொள்ளவும் காமாலை தீரும். நாயுருவிச் சாந்து விளாங்காயளவு ஈர வெங்காயச் சாந்து, விளாங்காயளவு பசுவின் வெண்ணை இரண்டு விளாங்காயளவு இது மூன்றும் மத்திச்சுக் கொள்ளக் கிருனி தீரும்.

எலி கடிக்கு மருந்து:-

முசுமுசுக்கை வேர் அரைத்துக் கொட்டைப் பாக்களவு வெந்நீரில் கொள்ளவும். கடிவாயில் சாந்து பூசவும். எலி கடி தீரும்.

நெஞ்சு வலிக்கு மருந்து:-

ஆவாரம் விரை வறுத்துப் பொடி பண்ணி வாயில் போட்டுக் கொண்டு வெந்நீர் கொப்பளித்து முழுங்கவும். உடனே நெஞ்சு வலி விடும்.

மோகப் பருவுக்கு மருந்து:-

கோவையிலைச் சாறும் நல்லெண்ணையும் சமன் கூட்டி உள்ளி, வசம்பு பொடி பண்ணிப் போட்டுப் பருவுக்குப் பூசத் தீரும். கை கண்டது.

—அகஸ்தியர்

அகஸ்தியர் குழம்பு:-

பருவதந் தன்னில் வாழும் பரமகுருவருளினாலே
பெருமையால் உலகில் வாழும் புண்ணிய ஜனங்களுக்கு
உறபல வியாதி வந்தால் உண்மையாய்த் தீருமென்று
பிரபல முனிவன் தானும் பேசிய மருந்து கேளே.

பேசிய மருந்து கேளும் பெருங்காயங் கடுகிந்துப்பு
வீசிய ரசம் பொரிகாரம் விஷ மஞ்சளிலையுங் கூட்டி
ஆசில்லாத் திப்பிலியும் அரிதாரத் தகடதாகும்
மாசில்லாக் கருஞ்சீரகமும் வகை வகை களஞ்சி வாங்கே.

வாங்கியே களஞ்சிக் கொப்பாய் வாளமும் வரத்தப் பாதி
தாங்கிய பச்சை பாதி சமன் முளை போக்கி நீக்கி
நீங்கிலா மருந்தி பத்தஞ் சேரவே அரைக் காந்தலொடுங்கிடும்
மோருஞ் சோறும் உண்டு நீ யரைத்துக் கூட்டே.

கூட்டு மருந்தின் பேரு அகஸ்தியர் குழம்பதாகும்
மீட்டிய சுரமே சுக்கு பிரமலே கடுக்காய்ச் சாறு
வாட்டிய சுரங்கள் வகை சுக்கில் மிளகில் கொள்ளு
பாட்டியே ரத்த மூலம் நோய்தனில் மேதைப் பாலே.

பாலினிலேயாயும் பாண்டு மகோதரம் பெருவயறு
மேலு நீராம்பல் சுகை மிளகு தாள் வெங்காயம்
சாலவே சன்னிக் கெல்லாம் தேனிஞ்சிச் சாத்தில் போகும்
யேலவே திலை கட்கெல்லா மிடு வேப்பெண்ணெயில் கண்ணுக்கிடே.

இடுகண்ணில் கடுகில் பாதி வங்கில் கத்தாளஞ் சாறு
வடு தீந்தயிர் சந்தனங்கள் வைத்து நீர் கட்ட மாமம்
மடு பெரும் பிளவை வாளை பக்கரையாப்புப் புண்கள்
விடு பெருஞ் சிலந்தியாகில் உமி நீரில் பிசவும் நீபூசே.

பூசிடு முலைக் கெத்தக்கும் புண்ணுக் கிதவே யாகும்
குசிகா வலி குன்மங்கள் கொண்டிடு நொச்சிச் சாத்தில்
பாசமாம் வாயுவான பல பல குத்துக்கெல்லாம்
சேசமாம் நொச்சி சுக்கில் கேசமாய்ச் செய்து பாரே.

8. பாராய் கபால வலி முதலாயுள்ள பிசாசு பிக்குந் திரிப் புகையில்
அகு நீரெடுக்கும் நீர் செருப்புக் கல்லடைப்பு தன் விருகில்
தீபாப் பறங்கிரந்தி முதல் தீர்க்கும் குப்பிச் சாறதினில்
தீரா வாம்பல் விஷங்கள் தீரும் தீரும் புகை பிடியே.

9. பிடிக்குந் திரிக்கிலம்பி தன்னில் பிரட்டி யுருட்டித் திரியதனை
பிடிக்கும் வலிக்குத் தருவாதம் பிளைத்தே ஓடும்
புகை காட்டில் கொடுக்கக் கசாயம் வெங்காயம்
கொடிய களஞ்சி முசுமுசுக்கை நொச்சி அடிக்குஞ் சன்னி பதினெட்டும் அநுபானம் பார்
செய்தால் விதியே.

10. விதியால் மருந்தி இது வல்லால் வேறே மருந்து வேண்டாங் காண்
பதியா நாலாயிரத்துடனே பகரும் வியாதி யிது வெல்லாம்
மதியாய் யிதற்கு குறிப்பறிந்து வகையாய் அநுபானங்கள் செய்து
துகையாய்த் தீருமென்று சொல்லிச் சொன்னார் மாமுனி சொன்னரே.

11. சொன்னார் மடவார் தங்களுக்கு சுகமாய் கெற்பம் வரும்படி கேள்
மின்னே அறுகங் கொழுந்து தனை மிகவே ஆவின் பால் விட்டரைத்து

முன்ஞேர் குழம்பில் பணவிடை தான் மூட்டி மூன்று நாள் கொடுக்க.
பொன்னே புதல்வருண்டாகும் புவியோர்க் குறுதி கண்டீரே.

12. கண்டீர் நவ்வல் பட்டை தனை கறந் தாட்டுப் பாலில் காய்ச்சிக்
கொண்டிட சீரகம் பொடி கூட்டிக் குளம்பில் பணவிடை தாரண்டால்
சுகந்தில் வரு முயர்ந்த வாய்வுமுடனே தீரும்
வண்டார் குழல் சேர் மட மானே மலை சேர் முனிதான் வகுத்ததுவே.

13. வகுத்த பிரமன் வகையாலே வருங் குதக வாய்வுடன் திரட்சி
மிகுத்த வலியுந் தீரு மென முன்ன சொன்ன விரவுடனே
பருத்த நொச்சிச் சாறதனில் பருதனைஞ் சாறணை வேறு மிட்டு சுக்கு
மதாகுத்தே குளம்பில் பணவிடை தான் கொள்வீர் சொன்னேன் கொள்வீரே.

14. கொள்ளும் பிற வீச்சது தனக்கு கொடுக்க மருந்து வகை கேளாய்
உள்ளி முருங்கைப் பட்டையுடன் உயர்ந்த பங்கம் எருக்கிலை வேர்
விள்ளரி தானதிருகு கள்ளி விசை சேரிஞ்சி சுரசமதில்
தெள்ளுங் குளம்பில் பணவிடை தான் சேர்த்துக் கொடுக்க வல்லீரே.

15. வல்லீல் நெஞ்சு வலி தனக்கு வகையா மருந்து தான் கேளீர்
வெல்லும் லவங்கப் பத்திரியும் சிறந்த ஆவின் வெண்ணையுடன்
நல்லே தீர்க்குங் குளம்பு பணமளவே கூட்டி யருந்திடுவீர்.

16. அருந்தும் தாளியிலை ஆவின் வெண்ணை யதுவுடனே
பொருந்துங் குளம்ப ரெண்டு பணம் போலே சேர்த்துக் கொடுப்பீரே
பொருந்துந் தீவினையாம் விரியன் விஷம் போந்துந் திரும்பும் பெரியோரே
வருந்தாதை யுமி நீரில் வழ மருந்தில் வலியே சொன்னேன் மறிவீரே.

17. மறிவீர் நாவல் கொழுந்து தனை வாய்த்த மிளகு விராகன் ரெண்டு
முறையா யருந்தும் வெள்ளிலை தான் மூன்று குளம்பு பணவிடை தான்
பரியா தெல்லா மொன்றாகப் பரிந்து சேர்த்துக் கொடுப்பீராம்
பிறவா நாகக் கடி விஷமும் பிணியுடந தீரும் பெரியோரே.

18. தீருந் தேளின் விஷந் தனக்கு தெளியாச் குதத்துளிரிலையில்
சேருங் குளம்போர் பணவிடை தான் திறமாய்ச் சேர்த்துக் கொடுத்து விடு
ஊரில் வாக்கிருமி நீரில் ஊட்டிப் பூச விஷம் போகும்
வாருங் குயிலே மடமானே வளலை கடிக்கு மருந்தினிக் கேள்.

19. கேளா ய வெல்லப் புகை யூறல் கிளியே மிளகு பேய்ப் பீர்க்கில்
நாளே சென்ற விரை மூன்று நடனாய்க் குப்பை மேனியின்
பாலாலே வாத்து அரைத்து முன்னே யன்பாய்க் குளம்பு பணவிடையும்
வேளே கொடுக்க வல்லீரால் விடுமே வளலை விஷந்தானே.

20. தானே நெஞ்சுவலி தனக்கு சாற்று மருந்து தனைக் கேளாய்
மானே பழைய புளி வெல்லம் வகையாய் சித்திர மூலமுடன்
தேனே குப்பை மேனியில் பால் திறமாய் விட்டுச் சேர்த்தரைத்து
வாஞேர் குளம்பில் பணவிடை தான் வகையாய்க் கொடுக்க வலி போமே.

21. வலியே செய்யு நீர்க் கட்டு மாற மருந்து தனைக் கேளாய்
நலியாய் மீரம் பொரிகாரம் நன்றாய்ப் பொரித்துக் கண்டுடனே
மெலியா ரெண்டு விராகன் பொடி மெய்யாய் ஆவின் நெய்யதனில்
புலியாம் குளம்ப பணவிடை தான் புகழ்ந்தே கொடுக்கப் பிணி போமே.

22. பிணியாம் விஷ பாகத்துடனே பின்னும் வீக்கந்தான் தீரும்
அணியாம் நொச்சிச் சாறுடனே சொல்லுந் திரிகடுகுடன் கூட்டி
மணியாங் குளம்பு பணவிடையும் வாகாய்ச் சேர்த்துக் கொள்வீரே

23. கேளா யிந்த வகைக் கெல்லாம் கிரியே பேதி மிகவுண்டாம்
மாளே மயங்க வசம்பு தட்டி பாக்காய் கசாயம் வைத்ததினில்
சூள வெள்ளை பாக்களவு கருக்காய்ப் போட்டுக் கொடுப்பீராம்
மீளாப் பேதியுள்ள தெல்லாம் மின்னே தீரு மெய்யிதுவே.

முசுமுசுக்கைக் கசாயம்:-

24. இன்னமொரு கசாயங் கேள் தாங்கிய முசுமுசுக்கை விஷ்ணு மூலி
தன்னுடனே நிலவேம்பு சக்கங் குப்பி பழுமப்பி யொடு வகைக்கு யொரு பிடியதாக
குணமாக இது அரிந்து சட்டி மீதில் செப்பமுடன் வைத்த வித்தைப் புரிந்து கொண்டு
சேர்க்கிற மருந்தையெனச் செப்பக் கேளும் ஒப்பமுடன் சீரகமுஞ் சுக்குமாக உடன்
வறுத்துச் சூரவித்து மேலே அவி யிப்புவியில் தேன் கூட்டி உண்பீராகில் இஷ்டமுடன்
வந்த சுர மிடைந்து போமே.

நீதிடவே யின்னமொரு கசாயஞ் சொல்வேன் யியலான நிலவேருயிஞ்சி உள்ளி
மடந்தையரே கொத்தாசும் வேப்ப நெட்டு வளமான நொச்சியிலை வகைகள் பிடியுங்
கொண்டு
யிடந்த தொரு மருந்தெல்லாங் கஷ்சி வீதம் கெவாக வெவித்து யிடித்து வாங்கி
சிடந் தனக்குத் தேன் கூட்டிக் கொள்வீராகில் செம் சுரம், சன்னி சுரம், சிலேற்பும
வாதம் வாதமொரு சன்னி முதலகன்று போ

வஞ்சகங் களில்லாமல் பரிந்து சொல்வேன் போதமுடன் கண்டவனே நல்லோகுசிய
பொய்யென்று சொன்னவன் தான் பொல்லாப் பாவி வேதமுடினயின்ற நால் வெளியாய்
சொன்னேன் வித்தையிலே வகுத்ததே யேக வித்தை காத மல்லத் தூர யிர மாரிப் பிர செ
செய்து கனதை பெத்த யீப்பரனிருக்கலாமே

மருந்துகவல்:-

திருமகள் வீட்டில் செல்வேள் நாட்டில் அரசர்களாகும் அவுடிதங் கேளும்
கொக்கறப்பிட்டை கொடி மூக்கறட்டை காரை நெருஞ்சி கழுகடி யிஞ்சி
சித்தாமுட்டி தேத்தாவெட்டி கத்தாளை மடல் கருவ ளைப்புடல்
வில்ல மகத்தி வேலிப் பருத்தி நெல்லிப் பருப்பு நீர் மெல் நெருப்பு கடுக்காய்
தனக்கு காட்டா மணக்கு திடப் புல்லூரி சிறுகாஞ்சொறி சதிரக் கள்ளி தன்னீர் முள்ளி
மதிள் மேல்ச் சுரை மலை பாரைச் செங்கத்தாரி திகச்னெருரி புங்கு கொளிஞ்சி புத்திலமு
பாதிரை பிரசு பனை மேலரச மாதிரை கொண்டு மருந்து மருந்து கிரங்கும் மருக்
காளத்தி மருக் கூளாத்தி எருக்காலிச்சி யிலைக் கள்ளி நொச்சி ஆவீன வஞ்சி யரகுப்பி
வாங்கி ஆபேன் காச்சி பவிழ்வாச்சி சிறுமலைச் செம்பு சிவுசுர் வேம்பு வெறு மலைச்
சீந்தி விஷ்ணு கிராந்தி வெற்பதனையும் விரைக் கொடிக் குழையும் நீலா உலத்தி
நிழலதனல்லத்தி சூரணம் பண்ணிச் சுக்குடன் எண்ணிச் சீரகம் ஏலம் சித்திர மூலம் வாயுவிளங்
கம் மஞ்சள், லவங்கம், பேயத்திப்பு, பேய்ப்புடலப்பு திப்பிலி பொட்டு செண்பக
மொட்டு கொப்பரைத் தேங்காய் கொள்ளொரு சிரங்காய் வெந்தயம் தாளம் வி ர
நேர்வாளம் கெந்தக நாதன் கிட்ட லோகம் துத்தம் அரிசு சுனைப் பில்லரிசி,
சொத்தைப் பாக்குச் சுரைப்புன்க்கு பருத்திக் கொட்டை பறங்கிப்பட்டை சரக்குடன்
நிறுத்துச் சரிவர வறுத்து பொடியர் யிடிச்சுப் பொங்கெண்ணை வடிச்சு சுடுநீர் மீட்டுச்
சூரணம் போட்டு புதைச் சாம்பிராணிப் பொடி மாகாணி அதக்கோர் பாதி அரவி
விபூதி கடுகொடு பிடியுங் கூஞ்---புத்தில் புதைத்து எருக்கம் சாளி யிடு மருதாணி
மருளுமத்தை பல குள நத்தைச் சாறு வார்த்துச் சர்க்கரை சேர்த்து ஆறப் பொறுத்து
அதனையு மெத்த நரையான ஒரி நாயப் பிள்ளைக் கீரி குறிபாடாந்தை குயில் வென்றுநீ
யிருந்த வருகம் எலி புலி நாகம் வலியான் சாரைக் கோட்டாருரை விரியன் விலாங்கு சே
த் தேவாங்கு கெருடன் வல்லாறு கிளி மூஞ்சூறு நரிக்கி நொரிக்கி நசுக்கிப் பொசுக்கி
அமத்து வறுத்து அவிச்சுக் குவிச்சு பிச்சுகளெடுத்துப் பெய்த தண்ணீர் கொடுத்து வெஞ்சனஞ்
காச்சி மினி மினிப் பூச்சி மற்கட வாட்டை மூவற வட்டை குக்குடன் குக்குடனைச் சங்
கோட்டானெச்சம் குளி நரி நத்தங் குதிரை சுரத்தம் புருகின் சட்டம் போட்டொரு

வட்டம் நெய்யா லெரித்து நெரி விடீ ருரித்து கையால் பிசறி கர்த்தார விசறி எலிப் பாஷாணம் எள்ப் பிரமாணம் முலைப் பால் விட்டு முன் சொன்ன மட்டு பொனப் புன் யோமம் போட்டொரு சாமமுந் தனித் தனி யரைத்துச் சட்டியில் மறைத்து வளித்ததை முழுதும் வகை வகை விழுதும் வெளிப் படு பொழுது வே ளையில் தொழுது உள மன்னில் பிரட்டி யொன்றுய்த் திரட்டி குளிகையளாக்கிக் குமர னை நோக்கி தெய்வத்துக்குப் படைத்துச் சமிதுக்குள்ள டைத்து நிமித்தியங் கொடுத்து நித்திரை யிலெடுத்து வனிதை மீது மனதாம் போது தின மொன்றைப் போட்டு சிறுநீர் விட்டு உருண்டையைக் குறைத்து உயிரும் விழுத்த மண்டையில் தேய்ச்சு வகையா யேச்சுப் பாலிலே யொரு நாள் பழத்திலே மறுநாள் மாலையில் சோத்தியில் மதியத்தில் சாத்தில் வெத்திலை மடிப்பில் விரகத் தொடுப்பில் ஒத்தியே யிட்டா லெனே பிரியாரே

(பின்னிணைப்பு விடுபட்ட ஓலைகள்)

<u>முசல் வலிப்பு நசியம்:-</u>

ஜடாதோடை, நொச்சி, தும்பை, துளசி ஒரு உள்ளி வசம்பு, பூண்டு பெண்ணீரில் மகிழம் விரை முலைப் பாலில் அஞ்சனம் போடவும். தும்பைச் சாறு வேலிப்பருத்திச் சாறு மனத்தக்காளிச் சாறு வகைக்கு படி.௩, முசல் ரத்தம் வரிக் கோழிச் சாறு ரத்தம் வேப்பெண்ணெ படி.௨, கோழிமுட்டை தயிலம் படி.௧, வெள்ள வெங்காயத் தயிலம் படி.௧, வசம்பு அதிமதுரம், தேசாவரம், திப்பிலி, சதகுப்பை, வகைக்கு பலம்.௩ கூட்டி வடித்து உள்ளுங் கொடுத்து மேலும் பிடிக்க சகல வலிப்புந் தீரும்.

<u>மயிர் வெருக்க:-</u>

எலுமிச்சம் பழத்துள்ளே கள்ளிப் பால், உத்தம தாளிப் பால், பிரண்டைச் சாறு விட்டு (கள்ளி மறந் தோன்றி) எட்டு நாள் புதைத்து வைத்து எடுத்து அரைத்து அரப்புடன் தேய்க்க வெருக்கும். மாற்று எருமைச் சாணி தேய்த்து முழுகக் கறுக்கும்.

<u>நீர்க்கடுப்பு, பெரும்பாடு, ரத்தப் பிரமியம், சீய்ப் பிரமியம்:-</u>

நல்ல பாலைத் தண்டுடனே நலந்து சுக்கு மரமஞ்சள்
கொல்லன் கொத்தமல்லியுடன் கூடவே பாலைக் கூட்டி
வல்ல வக்கமது தானும் வைத்த மருந்து ஒரு களஞ்சு
நல்ல நீரு யிருநாளி நயமாய்க் காய்ச்சி உழக்காகு
வெல்லுந் தேனு மிருகளஞ்சு வீசிக் கொடுக்க ஓடுமே.

சீனிக் கோரை ரெண்டு படி ஊள் சர்க்கரை பலம்.௧, சந்தனம் அரைப்பலம், அதிமதுரம் பலம்.௩, தண்ணீரில் ஊறப் போட்டு ஐந்து நாள் கொடுக்கவும். ஆறும் ந நாள் உப்புக் கூட்டவும். வாழைக் கிழங்கு சாற்றில் கால் பலம் மிளகு பொடி போட்டுக் காய்ச்சி வெங்காரம் பொரித்துக் கூட்டிக் கொடுக்கவும்.

பிரமியம், நீரடைப்பு, நீரளிவு, சலக களிச்சல், உஷ்ணநீர்க் கடுப்பு, மூத்திரக் கிரிச்சி, வாழைக் கிழங்கு அவைச்சு வேக வைத்துப் புளிந்து கொண்டு நிலப்பனைச் சாறு தண்ணீர் விட்டான் சாறு, நெல்லிக்காய்ச் சாறு, கருப்பன் சாறு ஆலம் விழுதுச் சாறு, செவ்விள நீர்ப் பட்டைச் சாறு இது வெல்லாங் வகைக்கு ஒரு படி பசுவின் பால், நெய் படி.௧, திரிபாலையம் சடாமஞ்சள், ஏலம், அகில் சந்தனம், வகைக்கு பலம்.௩ பொடி போட்டுக் கிளரி தினம் ஒரு கரண்டி கொடுக்கவும்.

கூழை நீர், முந்திரிப்பழம், பேரீச்சம் பழம், கோஷ்டம், அதிமதுரம், சன்ன லவங்கப்பட்டை, சரி கூட்டி தண்ணி விட்டான் சாறு பிழிந்து எட்டிலொன்றாய்க் காய்ச்சி மூன்று பங்கு நெய் விட்டு மருந்தும் போட்டு வேக வைத்திரண்டு நேரங் கொள்ளவும். புளி விடவும்.

<u>அரக்கு எண்ணை:-</u>

அரக்கு ஊள் படி.௨, ஒரு வள்ள தண்ணீரில் கலக்கி மூன்று நாள் வெய்யிலிலே வைத்து வடித்துக் கொண்டு பசுவின் தயிர் வடிகட்டின தண்ணீர் ஒரு வள்ளங் கூட விட்டு

மரமஞ்சள், தெசாவரம், ரேணுகம், கோஷ்டம், கோரைக் கிழங்கு, அசுவ கெந்தாதி சந்தனம், கடுகுரோகணி, அரத்தை; பாப்பைக் கிழங்கு வகைக்கு விராகன்.4, அதில்

போட்டு ஒரு படி நல்லெண்ணெய் விட்டு மூன்று நாள் நெருப்புக் கெடாமல் மந்தாக்கினியாய் எரித்து மெழுகு பதத்திலிறக்கித் தயிலம் வடித்து உள்ளுக்கு ஒரு விராகன் கொடுத்து மேலும் பிடிக்க சர்வ சுரம் அஸ்தி சுரம், விஷ சுரம், கெற்பிணி சுரம், மேல் சுவாசம் இத்தனையுந் தீரும்.

<u>கரப்பான் எண்ணெய்:-</u>

விளக்கெண்ணெய் ஒரு படி, கொரட்டைக் கிழங்கு, ஆகாசக் கெருடன் நொச்சி தழுதாழை, வெள்ளருகு சங்கங்குப்பி இலைச் சாறு, சங்கிலைச் சாறு, புங்கிலைச் சாறு, விராலிலை, பருத்தி முருக்குச் சித்தாவாரை, கோழியவரை கழச்சி வகைக்கு ஒரு பிடி சாறு கூட்டி மூன்று நாள் வெய்யிலே வைத்துக் கருக்காய், திப்பிலிக் கஸ்தூரி மஞ்சள், வாய்விளங்கம், சுக்குப் பொடி பண்ணி வேக விட்டு வடித்து உள்ளுக்கு கொடுத்து மேலும் பிடிக்கச் சகல கரப்பான் தீரும்.

<u>சன்னி வலிப்பு சகல வாதத்துக்கு எண்ணெய்:-</u>

சிவனார் வேம்பு பலம்.25, வள்ளம்.2 நீர் விட்டு ஒரு படியாய்க் காய்ச்சி சித்தமல்லி, பேராமல்லி, சிறுவரி சுவணை, பெருவாகை, பெருங்குமிள், கருங் கொன்றை, ரெண்டு படி கூடப் போட்டு இரண்டு வள்ளத் தண்ணீர் விட்டு ஒரு படியாய் காய்ச்சி வடித்து தெசாவரம், மந்திஷ்டி, லவங்கம், சிறு சல மேதை, காரபோள சிரசார கொள்ளி, நன்னாரி, கோஷ்டம், விலாம்பிச்சம், கபிலோசம், வசம்பு, அகில், நாகப்பூ, அதிமதுரம், சடச்சி வேர், சதகுப்பை, திரிப உலயம், மிளகு, அமுக்கிறாத், தக்கோலம், பச்சிலை, சதகாரம், கம்பி பிசின், குங்கிலியம், அஞ்சனம் கத்தி* சாத்திர வேதி, பிருவேலி, சந்தனம், வாதமடக்கிச் சாறு, சாதிலிங்கம், நெ நொச்சி, ஒரிலைத் தாமரை இந்த வகைச் சாறு வகைக்கு ஒரு பிடி தேங்காய் நெய் கோழி முட்டைத் தயிலம், சித்தாமணக்கெண்ணெய் நல்லெண்ணெய் வகைக்கு பிடி.க, கூட்டிக் காய்ச்சி வடித்து உள்ளுக்குத் தட்டிடை கொடுத்து மேலும் பிடிக்கவும்.

<u>எண்புறு வாதத்துக்கு எண்ணெய்:-</u>

ஆய்ப்பட்டை பலம்.10, பெருமருந்து பலம்.க, சுக்கு, திப்பிலி, மிளகு வகைக்கு பலம்.க, ரெண்டு வள்ளத் தண்ணீர் விட்டு ஒரு படியாய் காய்ச்சி எருக்கம் பால் ஒரு பிடி, நொச்சிச் சாறு ஒரு பிடி, கூட்டி நந்தெண்ணெய் வகைக்கு ஒரு பிடி கூட்டி வடித்து உள்ளுக்கு ஒரு விராகனிடை மேலும் பிடிக்கச் சகல சன்னியும் எண்புறு வாதமுந் தீரும்.

<u>மெழுகெண்ணெய்:-</u>

மெருகன் கிழங்கு மேல் புறணி சீவி நருக்கினது பலம்.32, பதக்கு காடியும் பதக்குத் தண்ணீரும் விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சினது படி.உ, சுக்கு, திப்பிலி மிளகுமுத்தக்காசு, தெசாவரம், சாதிக்காய், கசாயத்துக்கு படி.க, வகைக்கு மூன்று களஞ்சு கூட்டி பசுவின் படி.உ, நல்லெண்ணெய் படி.உ, விட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து மூக்கில் நசியம் விட்டு உடம்பொன்றும் பிடிக்க வாத சுரம், சீதசுரம், பித்த சுரம், கெற்பிணி சுரம், விஷசுரம், பித்தனையுந் தீரும்.

<u>மாதவனுக்கு எண்ணெய்:-</u>

மாதவன் கிழங்கு பனங் கோவை, அப்ப கோவை, ஆகாசக் கெருடன், பழு பாகல், செங்கத்தாரி, சேபாரபட்டையும், மிளகு, வெள்ளை வெங்காயம், வசம்பு கூட்டி நெய் விளக்கெண்ணெயிலும் எரிக்கவும்.

<u>நிக்குண்டி தயிலம்:-</u>

சுக்கு மட்டு.க, மிளகு.உ, திப்பிலி.உ, மஞ்சள்.5, வெங்காயம்.4, அவினி விராகன்.க, கம்பி பிசின் விராகன்.க, அந்தப் பாலிலரைத்து அதில் விட்டு மென்று அக்கினி எரித்து தானிய புடமிட்டு உள்ளுக்கு விராகனிடை கொடுத்து மேலும் பிடிக்க வாதம் சன்னி வாதம், அமிர் வாதம், முகவாதம், ஒத்து வாதம், தோல் வாதம், பாரிச வாதம் சருவாங்க வாதம், எரிவாதம், நடுக்கு வாதம் முடி வாதம், முடக்கு வாதம் என்பது வாதமுந் தீரும்.

<u>நாராயணத் தயிலம்:-</u>

ஆய்ப் பட்டை, மாவிலிங்கம் பட்டை வாகைப்பட்டை, செங்கத்தாரிப் பட்டை, எருக்கம் பட்டை, முருவிலிப்பட்டை வகைக்கு பலம்.உ, நாக்கி பதக்கு நீர்விட்டு இரண்டு படியாய் காய்ச்சி வாதமடக்கிச் சாறு, அளசிச் சாறு, தன்னி விட்டான் சாறு, எருக்கிலைப் பால், வெள்ளாட்டுப் பால், வெள்ளாட்டுக் கோமியம் வகைக்கு படி.க, நல் லண்ணை படி.உ, விட்டுக் காய்ச்சி மிளகு, திப்பிலி, தெசாவரம், அம்பராஉட்டம், ஓமம், வெள்ளை வெங்காரம், வசம்பு, மஞ்சள், விளாவரிசி, வெப்பாலை அரிசி, கார்போகரிசி, சீரகம், ஏலம், வேப்பம் பிசின், வகைக்கு பலம்.½ கூட்டி வடித்து உள்ளுக்கு கொடுத்து மேலும் பூசச் சகல சன்னி வாதமுந் தீரும்.

<u>உஷ்ண வாயு குடை மருந்து:-</u>

முத்தமொடு திப்பிலி, கொடாத்த மிரு சக்கு முன் கடுகுரோகனி கொள்சீரகம் மோஇடலம்
பெய்து இருவேலி மிளு ஒத்த விலாமிச்சம் மோதுதவு கோலமுடன் ஒது மெலவங்கம்
கொத்தமல்லி யொத்தொரு கோரோசனையுங் கோஉட்டம் கொண்டு மினநீரில்
மண்டியிலரைத்தே
யித்தை மினநீரில் மிசைந்து கொள்ளலாகும் ஒத்த பரிதாப சுரம் உஷ்ண மேல் சுரம்
ஒருமைதானே.

தேங்காய்ப் பிஞ்சு கசுவத்து தெளிந்த நீரைத் தானெடுத்து
பாங்காக் கண்டு சர்க்கரையும் பரிவாய்க் கூட்டி
வீங்காதிருந்து சீப் விழுகும் வேண்டியபடியே கொண்டிடவே
பாங்கா யிருந்த பிரமியமும் பறந்தே போகுங் கண்டிரே.

<u>விஷங்காதி தயிலம்:-</u>

கய்யாந்தகரைச் சாறு குறுனி பெருமரத்துப் பட்டை கொடி ப்ங்கம் பாலை, நாய் வேளை வகைக்கு பலம்.5, திரிகடுகு, ஓமம், சீரகம், செவ்வியம், சிறுதேக்கு, அத்திக் திப்பிலி வகைக்கு பலம்.க, ஏலம், அதிமதுரம் விளாலரிசி, பெருங்காயம் வெற்பாலை அரிசி வகைக்கு பலம்.½, கூட்டி சூரணம் பண்ணிப் போட்டு 3 படி நல்லெண்ணை விட்டுக் காய்ச்சி மெழுகு கடுகுரோகனி பதத்தில் வடித்து உள்ளுக்கு விராகனிடை கொடுத்தால் சுரம், குறை காசி, சுவாச காசம், செற்கம குன்மம் மூலம், கிருமி தோஉசம், பிரந்தி, குலை யெல்லாந் தீரும். ரெத்த ரோகம் பிரமியந் கிருமியுந் தீரும்.

<u>பேய் விகாரம் வலிப்பு சருவாங்கத் தயிலம்:-</u>

பேய்க் குமட்டி, பேய்த் தும்மட்டி, பேய்ச் சுரை, பேய்பீர்க்கு, பேய் அத்தி பேயுமத்தை, பேய்க் கரும்பு, பேய்ப்புடல், பேய்ச்சுரை, நெட்டைப் பேய் மிரட்டி, குட்டைப் பேய் மிரட்டி இது வெல்லாம் சாறு வகைக்கு ஒரு படி ஐந்தெண்ணை வகைக்கு படி.க, கூட்டி வடித்து மேலுக்குப் பூசவும்.

<u>அசுவ கெந்தி சூரணம்:-</u>

அமுக்கிலாங் கிழங்கு சத்தி பலம்.10, நிலப்பனைக் கிழங்கு, நெருஞ்சி வேர், குமிள் வேர், தன்னி விட்டான், பூமி சர்க்கரை, துல்லி பொன்னாங்கண்ணி, பொன்முசுட்டை பூனைக்காலி வகைக்கு பலம்.½, ஏலம், கோஷ்டம், நல்ல சீரகம், தக்கோலம்

ஓமம், சாதிக்காய் வகைக்கு பலம்.½ கூட்டிச் சரி சர்க்கரை கூட்டி சூரணம் பண்ணி வாத சரீரத்துக்கு தேனில் பித்த சரீரத்துக்கு நெய்யில் கொள்ள சேற்றம சரீரத்துக்கு தேனில் கொள்ள வெந்நீரில் கொள்ளவும். உள்சுரம், அஸ்தி சுரம், வாந்தி, அரோசிகம், அக்கினி மந்தம், உஷ்ண சூலை, கிறுனி, காமாலை, விஷவாதம், பித்த பாண்டு ரோகம், சன்னி இருமல், சேற்றம ரோகம் தீரும். இளைத்த உடம்பு பருக்கும். கிரந்திப் பண்டந் தளிர்க்கவும்.

<u>உஷ்ணத்துக்கு சற்காதி சூரணம்:-</u>

வெட்டிவேர், பொன்னாங்காணி விரும்பிய சிறுபூளை குமிழ் நெருஞ்சி, சிறுகீரை சுவ கெந்தம், சிறு தேவதாரி, பிஞ்சு வேர் திட்டமாங் கோரை தண்ணீர் விட்டான் செங்கழிநீர் கொழுந்து, கருங்காலி தோல் நல்ல சந்தனம், வாழைப்பூ, இலுப்பைப் பூ, தாளிசபத்திரி, கோஷ்டம் திட்டமாய் சூரணம் தேன், நெய் பசுவின் பாலில் கொள்ளே.

அறுகஞ் சாறு நாழி அதிமதுரம் எண் கழஞ்சு
நறு நெய் நாழி பால் நாழி நல்ல பாலை முன்னரைத்துக்
கூசு வெந்த நெய் கொள்ள கோடா கோடி உஷ்ணங்கள்
வெறுமை கண்ட வேசியர் போல் விட்டே கெடி விட்டோடிடுமே.

பொன்னாங்கண்ணி, முசுமுசுக்கை பூமி தக்காளி பழம் பர்சி
நன்று புலாயிலைச் சாறும் நற்சித்த முட்டி சீதேவி
முன்னும் தாளை விழுதுச் சாறும் முந்தப் பாறும் யிளநீரும்
மன்னும் கோஷ்டம் அதிமதுரம் வகு நற்சீரகம் நெல்லியுடன்
கொத்தமல்லி செண்பகப்பூ மஞ்சிட்டி தேத்தாங் கொட்டை நன்னாரி முதக் காசு
யிருவேலி முக்கவழ்சொடொக்க நெய் கூட்டி சீனியுடவே சாஞ் கொள்ள சேர்ந்த
உஷ்ணம் போய் விடுமே.

<u>குளிகை லேகியம் சீய் விழுகிற மேக ஜலம்:-</u>

வெள்ளைக் குன்றி மணிப் பருப்புஆவாரை விரை, விளாம் விரை, பருத்தி விரை, திரிபாலையம், கல்நாரு, புளியங் கொட்டைத் தோல் காரங் பற்பம், விளாந்தளைச் சாறு விட்டரைத்துக் குன்றிப் பிரமாணம் குளிகை பண்ணி பசுவின் மோரில் கொடுக்க மேகந் தீரும்.

திரிகடுகு, திப்பிலி மூலம், சிறுதேக்கு, வெந்தயம், சதகுப்பை, கருஞ்சீரகம் இந்துப்பு, பெருங்காயம், வெள்ள வெங்காயம். அரத்தை, கிராம்பு, சாதிக்காய், ஏலம், ஓமம், ஜாசாளி ஓமம் கூட்டிச் சூரணம் பண் நல்ல வெல்லம் பாகு காய்ச்சிக் கிளறி சிறு சாறு நாலிலொரு பங்கு கூட்டவும். பழைய காரை யிடித்த அரி புலம்.௯, ஏலம் பலம்.௯, கூட்டிச் சூரணம் பண்ணி காலபடி நல்லெண்ணெயும் ஒரு எலுமிச்சம் பழச் சாறு விட்டு வெருகடி சூரணம் போட்டுக் கிளறி ஏழு நாள் கொடுக்க சீய விழுகிறது சகலமும் தீரும்.

<u>உள் மூலத்துக்கு கல்லெரிப்புக்கு:-</u>

பிறண்டைச் சாறு ஒரு படி தேங்காய்ப் பால் ஒரு படி காய்ச்சிக் களியான பின்பு முள்ளிக் காய்த் தூளை கொள்ளவும்.

(வேறு)

வாழைக் கிழங்குச் சாறு கால் படி மிளகு பொடி பண்ணிப் போட்டு வெங்காரம் பொரித்துப் போட்டுக் கொடுக்க கல் விழும்.

<u>கூவுசை பெருவயறு மகோதரம் வெம்பாவை:-</u>

அரிதாரம், நாகு களஞ்சு தருக விராகனிடை.௯, திருகு கள்ளிப் பால் உரி செவ்வாழைக் கொட்டை உரி, சிற்றாமணக்கு உரி கூட்டி அரைத்து கலத்திலப்பி வெய்யிலில் வைக்கத் தயிலம் இறங்கும் வெற்றிலையில் தடவி விராகனிடை கொடுக்கவும்.

பிரமியத்துக்கு:- ரசம் களிஞ்சு காந்தம் களஞ்சு நாகம் ஆம களஞ்சு மோரில் அரைத்து தொன்னூறு குளிகை பண்ணி குளிகை ஒன்னுக்கு ஆம களஞ்சு அவிரி விரைப் பொடி கூட்டிப் பசுவின் மோரில் கொடுக்கவும்.

அசுவ கெந்தாதி சூரணம்:-

அமுக்கிலாக் கிழங்கு பசுவின் பாலில் சுத்தி பண்ணினது விராகனிடை.120, தாதுருசமாவதி காட்டாத்தி பூ விராகனிடை.60, சுக்கு விராகன்.32, திப்பிலி விராகன்.16, மிளகு விராகன்.8, ஏலம் விராகன்.4, சிறு நாகப்பூ விராகனிடை.2, லவங்கம் விராகன்.க இது எல்லா இடித்து வஸ்திர காயம் பண்ணி சரி சர்க்கரை கூட்டி வெந்நீர் நெய்யில் கொள்ள உஷ்ணம், அஸ்தி சுரம், உஷ்ண சூலை, கிராணி, காமாலை, விஷவாதம், பித்தம் பாண்டு ரோகம், வாந்தி, அரோசிகம், அக்கினி மந்தம், அஸ்தியுடல், பருக்கும் தேனில் கொள்ள சன்னி இருமல் சேற்றுமம் தீரும்.

கூஷ்ப பாண்ட சூரணம்:-

பூசணிக்காய் விரை வாங்கித் தகடா யறுத்து உலர்த்தித் தூள் பண்ணி கடைச் சரக்கு சுக்கு பலம்.க, திப்பிலி பலம்.க, ஏலம் பலம்.க, சீரகம் பலம்.க, மிளகு பலம்.க, லவங்கப்பட்டை பலம்.க, பச்சிலை அதிவிடையம், அதிமதுரம், கொத்தமல்லி, தேசாவரம், கோஷ்டம், கூகைநீர், நிலவேம்பு வகைக்கு பலம்.உ கூட்டி ஆக கடைச் சரக்கு பலம்.8 சூரணம் பண்ணி இதுக்கு சரி பூசணிக்காய் சூரணம் பசுவின் நெய்யில் ஒரு படி விட்டுச் சிவக்க வறுத்துக் கடைச் சரக்குச் சரி கூட்டிக் கலந்து நேரம் விராகனிடை கொள்ள உடம்பெரிப்பு நீரோட்டம், இருமல், உன்மாந்தை, வி விக்கல், சுவாசகாசம், ரத்த பித்தம், மேல் மிரைப்பு, உப்பிசம், சோபை, காமாலை, பயித்தியம், சுரமாலை, பாண்டுரோகம், மூலம் அக்கரம், உள்காச்சல் மயக்கம் தலைவலி கன்மம், அஸ்தி சுரம், தாகம், கிராணி, சூலை பிரமியம், பெரும்பாடு எல்லாந் தீரும், இளைத்த உடம்பு பருக்கும்.

தாளீச பத்திரி சூரணம்:-

தாளீச பத்திரி, மிளகு, திப்பிலி, தேசாவரம், செவ்வியம், கண்டு பரங்கி, கற்கடக சிங்கி, லவங்கப் பத்திரி, பட்டை, நாககேசரம், விலாம்பிச்சி வேர், மூலைத்திப்பிலி, கூகைநீர், ஏலம், லவங்கம் வகைக்கு பலம்.க, சுக்கு பலம்.6 கூட்டி சூரணம் பண்ணி சரி சர்க்கரை கூட்டி நேரம் திரிகடி வெந்நீரில் கொள்ளப் பழைய சுரம், விஷசுரம், அஸ்தி சுரம், உஷ்ண வாவீர் கோவை, வாந்தி, அ[illegible]ாசியம், காமாலை, பாண்டு ரோகம், விஷவாதம், சகல சுரப்பான் இருமல் இரைப்பு, அக்கினி மந்தம், மருந்தீடு குன்மம், சகல வாயும் தீரும். சுக்கு வெதுப்பிப் போடக் கிராணி தீரும்.

கற்பூர சூரணம்:-

கற்பூரம், கற்பூர சிலாசித்து, அரக்கு, கோஷ்டம், மஞ்சள், சடாமஞ்சள், கெந்தகம், கொத்தமல்லி, நாககேசரம், குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், லவங்கம் கீழாநெல்லி வேர், சிறுபூளை வேர், நெருஞ்சி வேர், சீனிக் கோரைக் கிழங்கு, பன்றி கோரைக் கிழங்கு நிலப்பனைக் கிழங்கு அல்லிக் கிழங்கு அமுக்கிலாக் கிழங்கு முன்[illegible], மருக்கம்பட்டை, வெள்ளறுகு, விரை காஞ்சொறி விரை, நாயுருவி விரை, ஆவாரை விரை, மெழுகு பீக்கம் விரை, திருநீற்று பச்சை விரை இது சரி கூட்டி வஸ்திர காயம் பண்ணி பலம் ஒன்னுக்கு ஒரு விராகன் அப்பிரக செந்தூரங் கூட்டி நெய்யில் சர்க்கரை தேனில் கொள்ள இருபத்தொரு பிரமியம் மூத்திரக் கிரிச்சி வெகு மூத்திரம், கல்லடைப்பு, நீர்க் கட்டு, காமாலை, விஷவாதம், பாண்டு ரோகம் மேகமெல்லாந் தீரும். இந்திரிய வர்த்தியுமுண்டாம்.

சகல வலிப்புக்கு. புகை. கலிலம்:-

சகல வலிப்புக்கு புகை தயிலம்:- 8.10.63.

எட்டிக் கொட்டை இரண்டு வள்ளம் அண்டாமூ நாக்கி சிறுகீழா வேர் பலம் பத்து நருக்கிக் கூடப் போட்டு பானையில் இட ஒரு சட்டி, ஒரு பல முகலம் அவார மிட்டு பானைக்கு மூடி மண் பூச குழி வெட்டி எருவடிக்கி சட்டி கீழாக வைத்து பானைக்கு மேல் எருவடிக்கி தீப் மூட்டித் தயிலம் வாங்கி உள்ளுக்கு மேலும் பிடிக்கவும்.

சொரன் கொட்டைத் தயிலம்:-

சொரான் கொட்டை இரண்டாய் வெட்டினது வள்ளம்.௨, ஒரு பானையில் போட்டு மூடிச் சட்டி அவாரமிட்டுக் குழி வெட்டி சட்டிக்குங் கீழே கலையம் வைத்து மேலே எரு வடிக்கி தீமூட்டி தயிலம் வாங்கி கெந்தகம் பொடி போட்டு நல்லெண்ணை சரி கூட்டி உள்ளுக்குக் கொடுத்து மேலும் பிடிக்கச் சகல குஷ்டமும் தீரும்.

பதினெட்டு வகை குஷ்டத்துக்கு புகை, தயிலம்:-

[illegible]சடைச்சி வேர் பலம்.20, வேப்பம் பட்டை பலம்.20, கொன்றை வேர் பலம்.20, சந்தனக்கட்டை பலம்.20, சித்திரமூலம் பலம்.20, பெருங் குறந்த பலம்.20, பேய்ப்புடல் பலம்.20, சிவனார் வேம்பு, நிலவேம்பு, பற்படாகம் வகைக்கு பலம்.20, கூட்டி பானையில் யிட்டுச் சட்டி மூடி சட்டிக் குத் அவார மிட்டு குழி வெட்டி சட்டி கீழாக கலையம் வைத்து எருவடிக்கித் தீய் மூட்டி ஆறவிட்டு எடுத்து மஞ்சள், திப்பிலி, அதிவிடையம், வெற்பாலை அரிசி, விளாலரிசி, கடுகுரோகணி, மஞ்சிலை, கெந்தகம், ரசம் சரி கூட்டி பொடி தயிலத்தில் போட்டுச் சரி வேப் பெண்ணை விட்டுக் காய்ச்சி வடித்து ஒரு விராகனிடை கொள்ளவும். கிரந்தி தவிர்க்கவும். சகல குஷ்டமுந் தீரும்.

உள்மூலம், விஷம் சகலத்துக்கும்:-

உதியம் பட்டைச் சாறு தயிரில் கொடுக்கவும். பசும் நாளு, நாவி நாளு, நேர்வாளம் இரண்டு, அத்தி பல்லிக் கூட்டி முதிய தேங்காய் அரைத்து வெயிலிலே வைத்துத் தயிலம் வாங்கி அந்த நெய் விட்டு அரைத்து சிமிழிலடைத்து எந்த விஷத்துக்குந் அவரைப் பிரமாணம் நாக்கில் தடவி வென்னீர் தண்ணீர் வார்க்கவும்.

விஷத்துக்கு, உள் மூலம், காரம்:-

எட்டி சொன பருக்கை கடிவாய்க்கு சிறுநீரில் வைத்துக் கட்டவும். கோழி ஆடு, பாம்பு கடிக்க விட்டு சோதினை பார்க்கலாம்.

ரசம் விராகனிடை.10, பழைய கருப்புட்டி.20, கூட்டி தேங்காய்ப் பால் வார்த்து அரைத்து சிமிழிலடைத்து நாக்கில் தடவி வென்னீர் வார்க்கவும். கருவிடைக் கோழி எச்சம், குன்றிப் பருப்பு, திப்பிலி, வெக்காரம், சிறுகீரை வேர், சுட்ட சாம்பல் கூட்டி வெள்ளாட்டுக் கோமியத்திலரைத்து பவன வாயில் விரலால் தடவவும். பெரும்பாட்டுக்கு தேத்தான் கொட்டை அரைத்து வாழைப் பழத்தில் கொடுக்கவும். முசுட்டைக் கொழுந்து உத்தாமணிக் கொழுந்து அத்திக் கொழுந்து வால் விடாத கொழுந்து விஷ்ணு காந்தி சுருமூலம், மிளகு, ஏழு வகையும் செம்பில் போட்டு படம் வலக்கை உள்ளாக வாய் பேசாமல் சுற்றி வந்து வாசல் படியில் புதைக்கவும்.

எலும்புருக்கிக்கு:-

எருமைப் பால் நாழி, தேங்காய்ப் பால் நாளி, உழுவின எள்ளுப் பொடி குறுவை நெல் மாவு பருத்திக் கொட்டை மாவு உளுந்து மாவு வகைக்கு உழக்கு, அதி மதுரம் விராகனிடை.௧, பொடி போட்டுக் கோழி முட்டை, வெள்ளைக் கரு இரண்டு விட்டு நல்ல வெல்லம் போட்டுக் கிண்டி ஏழு நாள் சாப்பிடவும்.

கெற்ப வாய்வு ஊதும் நெய் வகை:-

ஆடாதோடை இலைச் சாறு படி.௧, ஆத்திப் பசறியிலைச் சாறு படி.௧,

நத்தைப் பசறியிலைச் சாறு படி.க, சித்தி யிலைச் சாறு படி.க, விழிம்பியிலைச் சாறு படி.க, கலைச்சி யிலைச் சாறு படி.க, வேப்பிலைச் சாறு படி.க, சங்கிலைச் சாறு படி.க, பாகலிலைச் சாறு படி.க, வதக்கினத்தில எண்ணை ஒரு படி, கடுக்காய், மஞ்சள், இந்துப்பு, கருவு வெள்ளை வெங்காயம், வெண்காயம் முத்தின ஆயன்க்கும் வேர், நிலாவாரை வேர் இலை எட்டும் அட்டனை எட்டுந் நாள் பண்ணி எண்ணையில் போட்டு கொடிக் கள்ளிப் பால் கலந்து விட்டுக் காய்ச்சி வடித்துச் சாதகமான மூன்று நாள்முழுகி மடியுடுத்திச் சூரியனைக் கும்பிட்டு ஒரு கரண்டி வாங்கவும். இப்படிக் கால் மண்டலம் வாங்கப் பலனுண்டாம்.

செற்ப வாய்வு. மடிவாதம், குதசு கட்டுந் தீரும்.

<u>வண்டு கடி, சிரங்கு, புண், புழுக்கை:-</u>

விளாம் பட்டை, புங்கம் பட்டை, இலுப்பைப் பட்டை, வேப்பம் பட்டை, வண்டு, கொல்லிப் பட்டை, கடப்பம் பட்டை, வகை சரி கூட்டிப் பானையிலிட்டுச் சட்டி மூடி மண் பூசி சட்டி வாரமிட்டு இருப்பளவு குழி வெட்டி கீழ் கலையம் வைத்த சட்டி வாரம் அதில் மேல் கவிக்க வைத்து எருவடுக்கித் தீமூட்டி ஆறவிட்டு எடுத்து உள்ளுக்கு ஒரு விராகன் பொரி மாவில் பிரட்டித் தின்னவும். மேலும் பூச சகல வண்டு கடிப், பண்ணும் ஆறும். .

முத்தின தேங்காய் தண்ணீர் இருக்கச்சே கண் திறந்து அதில் இந்துப்பு, பலம்.க, பெருங்காயம் விராகன்.3, எருக்கிலம் வடக்கு வேர் பட்டை விராகன்.உ, கழச்சிப் பருப்பு விராகன்.2, ஆக 4-ம் தேங்காயிலடைத்துச் செம்மண் சீலை சுத்திப் புடம் போட்டு உடைத்துக் கீறிச் சிறக நறுக்கி உலர்த்தி தின்று வரவும்.

சுழி சொறாங் கொட்டை நல்லெண்ணெயில் வறுத்து காறெள்ளு ஒரு படி போட்டுக் கூட இடித்த பின்பு பழைய வெல்லம் ஐந்து பலம் போட்டு இடித்து நேரம் ஒரு முன்னிக் காயளவு கொள்ள எட்டு நாளைக் கொரு தரம் தலை முழுகவும். தலை கிரந்தி, விஷகடி, வெள்ளைக் குஷ்டம் தீரும்.

வெகு நாள் சென்ற கோளாங் கட்டி கொன்று வந்த வேண்டிய மாத்திரம் பலம்.10, கொல்லன் உலையில் காய்ச்சி வெள்ளாட்டுக் கோமியத்தில் முப்பத்திரெண்டு தரம் அவைத்துக் காடியிலொரு நாழுற விட்டு சாறனைச் சாற்றிலொரு நாழுற விட்டு கரிசலாங் கண்ணிச் சாற்றில் அரைத்து திரிகடுகு திரிபாலையம், தெசாவரம், வாய் விளங்கம் மஞ்சள், மரமஞ்சள், செல்வீகம், டெப்பாலை, கோரோசினை, திப்பிலி, கோரைக் கிழங்கு, அதிவிடையம், நாய்வேளை விரை, சீந்தித் தண்டு, சித்திரமூலம், சிறுதாமரைக்கு வேர், காட்டாமணக்கு வேர் வகைக்கு ஒரு விராகன் கூட்டி சூரணம் பண்ணிக் கட்டிக் கரப்பான் சாற்றிலரைத்து ஒரு புடமிட்டு மெழுகு கடுக்காய், மிளகு, இந்துப்பு சூரணம் பண்ணி இந்தச் சூரணம் ஒரு சட்டிடையும் வண்டுரம் விராகன் கூட்டி வெள்ளாட்டுக் கோமியத்தில் கொள்ளச் சோகை, காமாலை, விஷவாதம், பாண்டு ரோகம் உப்பிசம், பெரு வயறு மூலப் புழுக்கடி தீரும். புளி, கிரந்தி தவிர்க்கவும்.

<u>உள்நீர்க் கோவை, புறநீர்க் கோவை:-</u>

எண்ணை பஞ்ச லவணம் படிக்காரம், வெங்காரம், நவச்சாரம், எவச்சாரம் என்னும் சக்கை, உப்பு, நாயுருவி, சுட்ட உப்பு, சங்கு சுட்ட நீர், திப்பிலி, திப்பிலி மூலம், கருகுபோகணி, கண்டச திப்பிலி, திரிகடுகு, வகைக்கு கழஞ்சு உ, கடுகு பலம்.உ, வசம்பு பலம்.க, ஓமம் பலம்.க, பனிரெண்டு வள்ளம் பிடிக்கிற பானையில் போட்டு எட்டு வள்ள தண்ணீர் விட்டு இரண்டு படி பிடிக்கிற கலையம் உரி கட்டி உள்ளே விட்டு மேல் கலசம் வைத்து சும்பு மாவில் மெத்திட்டு மேல் கலசத்தில் தண்ணீர் விட்டு மூன்று சாமம் தீய் எரித்து எடுத்தால் கலசத்தில் தண்ணீர் இருக்கும். அந்த தண்ணீர் காசிக் குப்பியிலடைத்து நேரம் கலந்து கொள்ள கொண்டை

கவுசை, வன்நீர்க் கோர்வை, பிறநீர்க் கோர்வை, சத்தி குன்மந் தீரும்.

<u>வாத_குன்மத்துக்கு_மருந்து</u>:-

எருக்கம் பூ, ஒரு பிடி, கல்லுப்பு ஒரு பிடி, எலுமிச்சை சாற்றில் வேக வைத்து பெருங்காயம் நாலு விராகன் கூட்டி அரைத்துக் களச்சிப் பிரமாணம் இரண்டு நேரமுங் கொள்ளவும்.

<u>அஷ்ட_குன்மத்துக்கு_மருந்து</u>:-

செந்தகம் பலம்.க, பெருங்காயம் பலம்.க, இந்துப்பு பலம்.க, கூட்டி நாலு வள்ளம் வடிக்கிற பானையில் போட்டு இரண்டு வள்ளம் உகாய்ச் சாறு விட்டு மேல் சட்டி மூடி சீலை மண் செய்து பனிரெண்டு சாமம் மந்தாக்கினியாய் எரித்து ஆற விட்டு எடுத்து சூரணம் பண்ணி விராகனிடை தேனில் கொள்ள வாயுகுன்மந் தீரும். சர்க்கரையில் பித்த குன்மந் தீரும். வாழைப் பழத்தில் எரிகுன்மந் தீரும். வெள்ளாட்டுப் பாலில் சத்தி குன்மந் தீரும்.

<u>வாயு குன்மம், வாத குன்மம், வலி_குன்மம், பித்த_குன்மத்துக்கு_மருந்து</u>:-

மிளகு, சுக்கு, திப்பிலி, சீரகம், கருஞ்சீரகம், ஓமம், வசம்பு, வெங்காரம், கொத்தமல்லி வகைக்கு பலம்.க, கல்லுப்பு படி.க, சதிரக் கள்ளி பாக்குப் போல் நறுக்கினது படி.க, மயில் அத்தம் விராகனிடை.3, பெருங்காயம் விராகன்.3, அபினி மருந்து விராகன்.3, இந்துப்பு விராகன்.3, சாதிக்காய் விராகன்.க, இதுவெல்லாம் கூடுக வறுத்து பற்பம் பண்ணி ஒரு விரலிலெரித்து அரைத்து வஸ்திர காயம் பண்ணி கட்டுடை தேனில் கொள்ள வாத குன்மந் தீரும். வெந்நீரில் கொள்ள வாயு குன்மந் தீரும். மோரில் வலி குன்மந் தீரும், எலுமிச்சந் சாற்றில் பித்த குன்மந் தீரும்.

<u>எரி_குன்மம்</u>:-

அரைப்படி பச்சைப் பயறு வேகப் போட்டு அதில் ஒரு தேங்காய் திருகிப் போட்டுச் சீரகம் பலம்.உ, சர்க்கரை பலம்.க, கூடப் போட்டுக் கிளறி நெல்லிக்காய்ப் பிரமாணம் கொள்ளவும்.-

வலிகுன்மம்:- சதிரக் கள்ளி அண்டம், அண்டமாக அறுத்து பானையில் போட்டு வேடு கட்டி பஞ்ச லவணம் அதின் மேலே வைத்துச் சட்டி மூடிச் சீலை மண் செய்து வெந்த பிறகு எடுத்து பானையில் கிட்டம் பிடித்து இருக்கும். அதை எடுத்து அன்ன பேதி கூட்டி வெருகடி வெந்நீரில் கொள்ள அஷ்ட குன்மந் தீரும்.

****

முற்றும்

****

உ.ச:8.10.63.

123